விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

# தமிழ்த்தந்தி

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

விளம்பரங்கள்
வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 06 தந்தி 50 ஞாயிற்றுக்கிழமை 11.11.2018 Sunday 11th November 2018 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

# இலங்கையின் அரசியலமைப்பு தமிழர்களுக்கு உரித்தானதா?



**13ஆவது திருத்தச் சட்டத்தில் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் வழங்காமலிருப்பது அரசியலமைப்புக்கு முரண் இல்லையா?**

**பாராளுமன்றக் கலைப்பிற்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சியும் அது சார்ந்த சிவில் சமூகம் மற்றும் சட்டவல்லுநர்களும் தனித்தனியாக ஐந்திற்கு மேற்பட்ட வழக்குகளை உச்சநீதிமன்றத்தில் தொடுப்பதற்கு தயாராகி வருகின்றனர்**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பிரதம மந்திரியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை பதவி விலக்கி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிய வுடன் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் இது அரசியலமைப்புக்கு முரண் என்ற கருத்தினை முன்வைத்திருந்தன.

இக் கருத்துகளின் பின்னணியில் பதவி விலக்கப்பட்ட ரணில் விக்கிரமசி ங்கவோ அல்லது புதிதாக நியமிக்கப் பட்ட பிரதம மந்திரி அவர்களோ மீண்டும் பதவி மாற்றம் செய்யப்படவில்லை. ஜனாதிபதியவர்கள் தொடர்ந்தும் தான் அரசியலமைப்புக்கு முரணில்லாத வகை யில்தான் இந்த மாற்றத்தை செய்ததாகக் கூறியிருந்தார். உண்மையில் அன்றுதான் சர்வதேசத்திற்கும் இலங்கைக்கும் தெரிய வந்தது இலங்கையில் இரண்டு அரசிய லமைப்பு இருக்கின்றதென்று. ஆங்கிலத் தில் ஒரு விடயமும் சிங்களத்தில் ஒரு விடயமும் தமிழில் ஒரு விடயமுமாக அந்த அரசியலமைப்புக் காணப்படுகின் றது.

அமெரிக்காவில் ஐம்பத்தியொரு அரசியலமைப்புகள் இருக்கின்ற பொழுதிலும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு அரசியலமைப்புக் காணப்ப டுகின்றது. ஆனால் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலே ஒரேயொரு அரசி யலமைப்புத்தான் காணப்படுகின்றது. துரதிர்ஷ்டவசமாக இலங்கையிலே 19ஆவது திருத்தச் சட்டம் வந்ததன் பொழுது அதில் சிங்களத்தில் ஒரு அரசிய லமைப்பும், ஆங்கிலத்தில் ஒரு அரசிய லமைப்பும் காணப்படுகின்றது. இந்த விடயம் சர்வதேசத்தின் கண்களுக்கு இந்த மாற்றம் ஏற்படும் வரை தெரியவர வில்லை.

ஆனால் இலங்கையின் சட்டப்படி சி ங்களத்தில் இருக்கின்ற எந்தஒரு விட யமும்தான் சட்டத்தின் முன் நீதியாகக் கருதப்படும். ஆங்கிலத்தில் இருப்பதோ, தமிழில் இருப்பதோ சட்டத்தின் முன் நீ தியாகக் கருதப்படுவதில்லை. அந்த வகையில்தான் புதிய பிரதம மந்திரி யினை நியமித்தல் என்ற விடயத்திலே ஜனாதிபதியவர்களுக்கு சிங்களத்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதே நேரம் ஆங்கிலத்தில் புதிய பிரதம மந்திரியை நியமித்தல் என்பது குறிப்பி டப்படவில்லை. இந்த வகையில்தான் இந்தியாவும், அமெரிக்காவும் இந்த நியமனத்தில் பிழை என்பதையும், ஜனா திபதியவர்கள் தான் செய்தது சரியென்ற கருத்தினையும் கூறி தமது நியமனத் தினை மறுபரிசீலனை செய்வதை தவிர்த்து வந்துள்ளார்.

தற்பொழுது இலங்கையின் பாரா ளுமன்றத்தைக் கலைத்துள்ள ஜனா திபதியவர்களுக்கு 19ஆவது திருத் தச்சட்டத்தின்படி அதிகாரமில்லை. பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு நான்கரை வருடங்கள் தேவை. எனவே நான்கரை வருடங்கள் என்பது 2020 பெப்ரவரி மாதம்தான் அந்த நான்கரை வருடங்கள் முடிவடைகின்றது. ஆனால் ஜனாதிபதியின் காலம் 2020 ஜனவரியில் முடிவடைகின்றது. ஜனாதிபதியின் பத விக்காலம் முடிந்த பின்பு பாராளுமன்றத் தேர்தலை நடக்க வேண்டும் என்பதற்கா கவும் ஆதவரற்ற ஜனாதிபதி வேட்பாளர் என்பதை முடக்குவதற்கு என்பதற்கா கத்தான் ரணில் விக்கிரமசிங்க அவர் கள் தனது தந்திரோபாயமாக 19ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதி காரம் நான்கரை வருடங்களுக்குப் பின்பு என்பதை உள்வாங்கியிருந்தார்.

ஆனால் தற்பொழுது அந்த 19ஆ வது திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்டது போலன்றி பாராளுமன்றம் கலைக்கப்பட் டுள்ளது. இதற்கு எதிராக உச்சநீதிமன்றத் திற்கு செல்ல வேண்டுமென்று தேர்தல் ஆணையாளரும் இந்தியா போன்ற நாடுகளும் கூறி வருகின்றன. இதற்குத் தயாராக ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய தேசிய கட்சி சார்ந்த சிவில் சமூகங்க ளும், ஐக்கிய தேசிய கட்சி சார்ந்த சட்ட வல்லுனர்களும் தனித்தனியாக ஐந்திற்கு மேற்பட்ட வழக்குகளை உச்சநீதிமன் றத்திலே தொடுப்பதற்குத் தயாராகி வருகின்றார்கள்.

இந்தத் தீர்ப்பின் ஊடாக இலங் கையிலே உச்சநீதிமன்றம் எந்த வகை யில் செயற்படுகின்றது என்பதனை எடுத்துக் காட்டப் போகின்றது.

இலங்கையிலே யுத்த காலத்தில் பல கற்பழிப்பு வழக்குகள் நடந்தாலும் அவற்றில் தண்டிக்கப்பட்ட பல இரா ணுவச் சிப்பாய்கள் மீண்டும் விடுதலை செய்யப்படுவதும் கிருஷாந்தி கற்பழிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்ட இராணுவ வீரர்கள் மாத்திரம் தொடர்ந்தும் சிறையில் இருப்பதும் யாவரும் அறிந்த விடயம்.

02ஆம் பக்கம் பார்க்க



## தமிழ் மக்களின் பிரச்சினைகளை விட ரணிலின் பிரச்சினையே முக்கியம்

### கூட்டமைப்பின் வேடத்தை துகிலுரிக்கும் அனந்தி

கடந்த அரசாங்கங் களுக்கு கூட்ட மைப்பு தமது அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தவறியமையே தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படா மல் இன்னும் இழுத்தடித்துக் கொண்டு செல்வதற்குக் காரணம் என முன்னாள் வடமாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

தமிழ்த்தந்திக்குக் கருத்துத் தெரி விக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றிருந்தார். அதன் மூலம் தமிழ் மக்க ளுக்கு எந்தவிதமான பிரயோசனங்களும் ஏற்படவில்லை. அந்தப் பதவியை தனது

02ஆம் பக்கம் பார்க்க

## பாராளுமன்றத்தைக் கலைத்தது சட்டவிரோதமானது;



பாராளுமன்றத்தை கலைத்தமையானது சட்ட விரோதமான செயல் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

நாட்டை ஒரு பேரழிவுக்குள் தள்ளும் செயற் பாடாகவே தாம் இதனைப் பார்ப்பதாகவும் அதனால் எத்தகைய தடைகள் வந்தாலும் அதற் காக போராடுவேன் என்றும் கூறிய ராஜித சே னாரத்தன,

அடக்குமுறையை எதிர்கொண்டு ஜனநாயகத்தை வெற்றியடையச் செய்வதற்காக அர்ப்பணிப்பு செய்வேன் என்றும் தெரிவித்தார்.

## அனைத்து உதவிகளும் நிறுத்தப்படும்!

ஜனாதிபதி , தனது நடவ டிக்கைகளின் மூலம் அமெரிக்க உதவிகளிற்கு பாதிப்பை ஏற்படுத் துகின்றார் என அமெரிக்காவின் செ னற் பிரதிநிதிகள் சபையின் வெளி விவகார குழுவின் தலைவராக பதவி வகிக்கவுள்ள எலியட் ஏஞ்சல் எச்சரித்துள்ளார்

இது தொடர்பில் எலியட் ஏஞ் சல் ஜனாதிபதி மைத்திரிபால சி றிசேனவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்

அமெரிக்க செனற்பிரதிநிதிகள் ச பையின் மூன்று பிரதிநிதிகள் இந்த கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறும் தற்போதைய நெருக்க டிக்கு ஜனநாயக வழிமுறைகள்

02ஆம் பக்கம் பார்க்க

## உச்ச நீதிமன்றத்தின் கருத்து முக்கியம்



உச்ச நீதிமன்றின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளாது பொது தேர் தலை நடத்த முடியாது என தேர்தல் கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரி வித்துள்ளார்.

நாடாளு மன்றம் நேற்று முன்தினம் நள்ளி ரவுடன் கலைக்கப் படுவதாக ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில், நாடாளுமன்ற தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாதம் ஐந்தாம் திகதி இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் உச்ச நீதிமன்றின் அபிப்பிரா யத்தை அறிந்துகொள்ளாது பொது தேர்தலை நடத்த முடியாது என தேர்தல்கள் ஆணைக்கு ழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித் துள்ளார்.

## விக்கியுடன் திருமா சந்திப்பு



வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சீ.வீ.விக்னேஸ்வரனை இந்தியாவின் விடுத லைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் நேரில் சென்று சந்தித்துக் கலந் துரையாடியுள்ளார்.

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற் பாட்டில் யாழில் நடைபெறவுள்ள

02ஆம் பக்கம் பார்க்க

## காணியைக் கேட்ட பொலிஸார் தரமறுத்த நகரசபை தலைவர்

### வவுனியாவில் சுவாரசியம்

**க.மதி**

வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள நகரசபைக்கு சொந்தமான காணியில் நீண்ட காலமாக பொலிஸார் குடியமர்ந்து வரு கின்ற நிலையில் குறித்த காணியை பொலிஸ் திணைக்களத்திற்கு எழுத்தித்தருமாறு கோரி நகரசபைக்கு வந்த பொலிஸாரை வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் திருப்பிய னுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக் கையில்,

வவுனியா நகரசபைக்கு சொந்தமான காணி யில் நீண்ட காலமாக வவுனியா பொலிஸ் நிலையம் இயங்கி வருகின்றது. இதனை

02ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீல.சு.கஅணியில் பலர் பொதுஜன பெரமுனவில் போட்டி

ஸ்ரீல.சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பலர் மகிந்த ராஜபக் ஷவின் பொதுஜன பெரமுனவில் இணைந்து போட்டியி டவுள்ளனர். இதனடிப்படையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இணை வதாக தெரிவித்துள்ளார். தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார். எதிர் வரும் பொதுத் தேர்தலில் களமிறங்குவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும்

02ஆம் பக்கம் பார்க்க

## இன்றுமுதல் மழை குறையும்

இலங்கைக்கு தென்மேற்காக காணப் பட்ட குறைந்த அழுத்தப் பிரதேசம் தற்போது இலங்கையை விட்டு விலகிச் சென்று கொண்டுள்ளது. எனவே நாட் டின் வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில்

காணப்படும் மழையுடன் கூடிய நிலைமை இன்றிலிருந்து குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் பெரும்பாலான பிரதேச ங்களில் அவ்வப்போது மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது

மேல், தென், சப்ரகமுவ, மத்திய மற் றும் ஊவா மாகாணங்களில் சில இடங் களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, மற்றும் வடமத்திய மாகா ணங்களில் ஓரளவு குளிரான வானிலை எதிர்பார்க்கப்படுகின்றது

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை

02ஆம் பக்கம் பார்க்க

## ஜனநாயகப் படுகொலை!

### ஸ்டாலின் கண்டனம்



இலங்கை யில் மோசமான அரசியல் சட்ட நெருக்கடியை உருவாக்கி இலங் கைத் தமிழர்க ளின் நலனுக்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அதிபர் சிறிசேனா நாடாளுமன்றை கலைத்திருப்பது ஜனநாயகப் படுகொலை என தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன நாடாளுமன்றை கலைத்து பொதுத்தேர்தலிற்கு அழைப்பு விடுத்ததையடுத்து பலரும் தங் களது கருத்துக்ளை வெளிபடுத்தி

02ஆம் பக்கம் பார்க்க

## ஆற்றில் மூழ்கி மூவர் உயிரிழப்பு

பலாங்கொடை - பெலிஹுல் ஓயாவில் குளிக்கச் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் மூன்று பேர் நீரில் மூழ்கி உயிரிழந் துள்ளனர்.

பெலிஹுல் ஓயாவில் பஹன்குடா குழி என்ற பகுதியில் மூழ்கி மாணவர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித் தது.

நீரில் மூழ்கிய மாணவர்களை மீட்டு வைத்திய சாலையில் அனுமதித்த பின்னர் நேற்று முற்பகல் 10.30 அளவில் அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த மாணவர்கள் மூன்று பேரும்

02ஆம் பக்கம் பார்க்க

# கிழக்கு ஆளுநர் தலைமையில் அனர்த்த முகாமைத்துவ குழு விசேட கூட்டம்

**கிண்ணியா நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக மக்களுக்கு உதவும் முகமாக அனர்த்த முகாமைத்துவ குழு விசேட கூட்டமானது நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கிழக்கு மாகாண ஆளுனர் ரோஹிதபோகொல்லாகம தலைமையில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலான அரச அதிகாரிகளினால் நடவடிக்கு உடனடியாக கொண்டு வருமாறு கிழக்கு ஆளுனர் உரிய அரச அதிகாரிகளை பணித்தார்.

அனர்த்தங்கள் தொடர்பில் முன்னாயத்தம் செய்தல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவிரணங்கள் வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட மதிப்பீட்டு நடவடிக்கைள் போன்ற விடயங்களும் இதன் போது ஆராயப்பட்டன.



கடந்த வாரம் கிழக்கு ஆளுனர் ரோஹிதோபொகொல்லாகமவினால் கிழக்கு மாகாணத்தை தழுவிய வகையில் உருவாக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவினால் இவ் நடவடிக்கைகள் திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் அதிரடி நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் அனர்த்த முகாமைத்துவ குழுவின் விசேட உயர் குழு தலைவராக மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் யு.எல்.ஏ.அஸீஸ் தலைமை வகிப்பதுடன் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு.மணிவண்ணண் தலைமையின் கீழ் கண்காணிக்கப்படுகிறது.

இதில் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், மாகாண திணைக்களங்களின் செயலாளர்கள் முப்படைகளின் உயரதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார் என பலர் பங்கேற்றனர்.

## ஸ்ரீல.சு...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணி ஒன்றை ஏற்படுத்த உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் வெற்றிக்காக பல கட்சிகள் இணைந்து இந்த கூட்டணி அமையவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## ஆற்றில்...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவர்கள் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மூன்றாம் வருடத்தில் கல்வி பயின்ற மாணவர்கள் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஜனநாயக...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

வருகின்றனர்.

அந்த வகையில் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இனியும் மோடி அரசு மௌனம் காக்காமல் தமிழர்கள் நலன் காக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## இன்று...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

வேளையில் பனிமூட்டம் காணப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## காணியை...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

விடுவிக்குமாறு பல தடைவ நகர சபையினால் கோரிக்கை விடப்பட்ட போதிலும் இதுவரை பொலிஸார் குறித்த காணியை விடுவிக்காது அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

இந் நிலையில் நேற்றைய தினம் நகர சபைக்கு வருகை தந்த இரு பொலிஸார் குறித்த காணியை பொலிஸ் திணைக் களத்திற்கு எழுதி தருமாறும் பாரிய பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு தமக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையினால் அதற்காகவே காணியை கோருவதாகவும் தெரிவித்தனர்.

எனினும் குறித்த காணியை எக் காரணம் கொண்டும் பொலிஸாருக்கு தரமுடியாது என நான் தெரிவித்துடன் வவுனியா மக்கள் குறித்த காணியை நகரசபை பெற்று அபிவிருத்தி பணியை மேற்கொள்ள வேண்டும் என கோரி நிற்கும் போது இவ்வாறான செயலை செய்து மக்களுக்க துரோகம் செய்ய முடியாது என தெரிவித்து திருப்பியனுப்பிவிட்டேன் என தெரிவித்தார்.

## விக்கியுடன்...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

மலர்க் கண்காட்சி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக திருமாவளவன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

இதனையடுத்து நேற்று காலை கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் மரங்கள் நாட்டும் நிகழ்வில் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் இணைந்து மரங்களை நாட்டி வைத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ் கோவில் வீதியில் அமைந்துள்ள முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் வாசஸ்தலம் சென்று அவரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது திருமாவளவனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து நினைவுப் பரிசொன்றையும் விக்னேஸ்வரன் வழங்கியிருந்தார்.

# காபந்து அரசாங்கம் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சனைக்கு தீர்வு

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு காபந்து அரசாங்கம் செயல்பட்ட போதிலும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப்பிரச்சனைக்கு விரைவாக தீர்வு காணப்படும் என்று நீதியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து நேற்றுக் காலை பிரதமர் அலுவலகத்தில் செய்தியாளர் மகா நாடு நடைபெற்றது.

இதனைத்தொடர்ந்து நீண்டநாட்களாக தீர்வு காணப்படாத நிலையிலுள்ள தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சனைக்கு இன்றைய சூழ்நிலையில் தீர்வு காணப்படுமா என்று கேட்டபோதே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனை தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சனை தோட்டங்களை நிருவகிக்கும் தோட்ட கம்பனிகளின் தோட்ட முதலாளிமார் சம்மேளத்திற்கு உட்பட்டது.

இருந்த போதிலும் இதற்கு தீர்வு காண்பதற்கான பங்களிப்பை அரசாங்கம் வழங்கியுள்ளது. தற்போது இதுதொடர்பான பேச்சுவார்தை நடைபெற்றுவருகிறது.

விரைவில் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நம்பிக்கை வெளியிட்டார்.

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றம் செல்வோம்



பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றம் செல்ல எதிர்பார்ப்பதாக மக்கள் விடுதலை முன்னணி கூறியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ஆரம்பம் முதலே அரசியலமைப்பை மீறி வருவதாக அவர் கூறியுள்ளார்.

அந்தத் தேர்தலில் அவரது அரச அதிகாரத்தை உச்ச அளவில் பயன்படுத்தும் நோக்கிலேயே அமைச்சரவை செல்லுபடியாகும் என்று ஜனாதிபதி கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்படாத அதிகாரத்தின் மூலம் பாராளுமன்றத்தை மைத்திரிபால சிறிசேன கலைத்துள்ளதாக, அவர் கூறியுள்ளார்.

இது முற்றாக அரசியலமைப்புக்கு விரோதமானது என்று அநுரகுமார திசாநாயக்க கூறியுள்ளார்.

## அனைத்து...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

ஊடாக தீர்வை காணுமாறும் நாங்கள் உங்களை கேட்டுக்கொள்கின்றோம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்

மேலும் உங்கள் நாட்டின் பாராளுமன்றத்தை இடைநிறுத்தி பிரதமரை அரசமைப்பிற்கு முரணான விதத்தில நீக்கிய உங்கள் நடவடிக்கை குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம் என அவர்கள் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

2015 இல் நீங்கள் தெரிவு செய்யப்பட்டமை இலங்கையில் ஜனநாயக சீர்திருத்தம் பொறுப்புக்கூறப்படுதல் மற்றும் நல்லிணக்கம் குறித்த புதிய நம்பிக்கைகளை ஏற்படுத்தியது என அமெரிக்க செனற்பிரதிநிதிகள் சபையின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

நல்லிணக்க செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான உங்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் இலங்கையில் ஜனநாயக ஆட்சிக்கான புதிய சமிக்ஞையை வெளிப்படுத்தின என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் துரதிஸ்டவசமாக சமீபத்தைய நடவடிக்கைகள் சரிசெய்யப்படாவிட்டால் உங்கள் நாட்டின் ஜனநாயக அபிவிருத்தி மற்றும் சமீபத்தைய வருடங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என நாங்கள் அச்சமடைந்துள்ளோம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளிற்கு பதிலாக அமெரிக்கா இலங்கையுடனான உறவுகளில் முதலீடு செய்வதற்கான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சமீபத்தியை நடவடிக்கைகள் இலங்கையில் அரசியல் நெருக்கடியை உண்டுபண்ணியுள்ளன சபாநாயகர் கருஜெயசூரிய இரத்தக்களறி ஏற்படும் அபாயம் உள்ளதாக எச்சரித்துள்ளார். இலங்கையில் சமீபத்தில் இடம்பெற்றுள்ள விடயங்கள் எம்சிசி திட்டத்திற்கும் அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிக்கும் அமெரிக்காவின் ஏனைய திட்டங்கள் மற்றும் ஈடுபாடுகளிற்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை அமெரிக்க உறவுகள் நல்லாட்சி ஜனநாயக விழுமியங்களிற்கான அர்ப்பணிப்பு என்ற பகிரப்பட்ட இலக்குகளில் கட்டியெழுப்ப பட்டுள்ளன.இதன் காரணமாக பாராளுமன்றம் தலையீடுகள் இன்றி தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு அனுமதிப்பதன் மூலம் இந்த விழுமியங்களிற்கான உங்கள் அர்ப்பணிப்பினை வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அமெரிக்க செனற்பிரதிநிதிகள் சபையின் பிரதிநிதிகள் தங்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

## அரசியல்...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

சுகபோகத்திற்கு மட்டுமே பயன்படுத்திக் கொண்டார். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு, அவர்களின் அரசியல் தீர்வுக்கு எந்தவிதமான அழுத்தங்களையும் அரசிற்குப் பிரயோகிக்காமல் நல்லபிள்ளையாக நடந்து கொண்டதுதான் மிச்சம்.

மே 2009இற்குப் பின்னர் யுத்தம் முடிந்த பின்னால் இன்றுவரை தமிழ் மக்கள் எந்தவித முன்னேற்றங்களையோ அல்லது அபிவிருத்திகளையோ காணவில்லை. மாறாக அவர்கள் இன்னும் பின்தள்ளப்பட்டே வந்துள்ளார்கள். உண்மையில் தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வைத்துக் கொண்டும் தனது கட்சி உறுப்பினர்கள் மூலமாகவும் கடந்த அரசாங்கத்திற்கு தங்களின் பலத்தை நிரூபித்திருக்க முடியும். ஆனால் தங்களின் சுயநல அரசியலுக்காக தமிழ் மக்களை காட்டிக் கொடுக்கத் துணிந்தார்கள்.

தமிழ் மக்களின் தீர்வு தீபாவளிக்குள் வரும் என்று வார்த்தை ஜாலங்கள் காட்டினார். ஆனால் பல தீபாவளிகள் கடந்தது போனதைத்தவிர வேறொன்றுமின்லை.

இந்தப் பாராளுமன்றக் கலைவிற்குப் பின்னர் எங்களின் மத்திய குழுக் கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது. ஏனென்றால் எங்களின் அரசியல் மாகாணத்தைத் தாண்டியும் தேசிய மட்டத்தில் விரிவுபடுத்த வேண்டிய தேவையுள்ளது. அதன் மூலமே எங்களின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரந்துபட்ட வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும்.

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் மூலம் எங்களின் கட்சி தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலக்கும். அதன் மூலம் பாராளுமன்றத்தில் எங்களின் பிரச்சினைகள் பேசக்கூடியதாகஇருக்கும். பாராளுமன்றப் பொதுத்தேர்தல் காரணமாக மாகாணசபைத் தேர்தல்கள் பின்தள்ளப்படக்கூடிய சூழ்நிலைகள் காணப்படுகின்றன. ஆனாலும் எங்களின் தற்போதைய குறிக்கோள் பாராளுமன்றப் பொதுத்தேர்தலே. அதன் மூலம் எங்களின் எல்லைகளை விரிவுபடுத்துவோம்.

எங்களின் வடமாகாண சபை குழப்பங்களுக்கெல்லாம் பிரதான காரணம் தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமே. அந்தக் கட்சியின் உறுப்பினர்களாலோயே சபை பலமுறை குழப்பப்பட்டது. என்மீதும் முதலமைச்சர் மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. என்னை கட்சியை விட்டும் நீக்கினார்கள். ஆனால் அதன் மூலம் அவர்கள் சாதித்தது என்ன? ஒன்றுமில்லை. மாறாக, மக்களுக்கான எந்தவித அபிவிருத்திகளையும் மேற்கொள்ள முடியாமல் முட்டுக்கட்டை போட்டார்கள்.

குறிப்பாக சம்பந்தன் அவர்கள் தேசிய அரசியலில் இருந்த அதேவேளை, மாகாண சபைக்குரிய அதிகாரங்களை பெற்றுத் தந்திருக்கலாம். குறிப்பாக நிதிப் பற்றாக்குறை காரணமாக பல வேலைத் திட்டங்கள் முடங்கியிருந்தன. அவற்றைப் பெற்றுத் தருவதற்கு சம்பந்தரால் முடிந்திருக்கும். ஆனால் அதற்கு அவர் விரும்பவில்லை. தன்னுடைய கட்சிக்காரர்களைக் கொண்டு அரசுக்கு அழுத்தம் கொடுத்திருக்கலாம். ஆனால் முயலவில்லை. எதிரிக்கு சகுனப்பிழை என்று மூக்கை அறுத்த கதையாக அரசாங்கத்திற்கு அவ்வளவு விசுவாசமாக நடந்து கொண்டிருந்தார்.

தமிழ் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனோ அல்லது மாவை சேனாதி ராஜாவோ வடமாகாண சபைக்கு இன்ன இன்ன அதிகாரங்கள் உண்டு. அவற்றை கொடுங்கள் என்றோ அல்லது மாகாண சபைக்கு போதிய நிதிகளை வழங்குங்கள் என்றோ என்றாவது மத்திய அரசைக் கேட்டுள்ளார்களா. குறைந்த பட்ச அழுத்தத்தையாவது கொடுத்தார்களா என்றால் இல்லை. ஆனால் முதலமைச்சர் தங்கள் மீது வீண்பழி சுமத்துகிறார் என்ற குற்றச்சாட்டை மட்டும் முன்னிலைப்படுத்த தவறவில்லை.

கடந்த ஒன்றை வருடங்களாக நான் கூட்டுறவுத்துறை அமைச்சராக மாகாண சபையில் இருந்துள்ளேன். எனக்கு ஒதுக்கப்பட்ட துறைக்கு போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் எவ்வளவோ இருந்தன. அதற்கான நிதிப் பற்றாக்குறை இருந்தது. அவர்கள் இந்தத் துறைக்கு எவ்வளவு நிதி தேவை, அதற்கான அழுத்தங்களை மத்திய அரசாங்கத்திடம் கொடுத்திருந்தால் அவர்கள் நிச்சயமாக எங்கள் துறைக்கான நிதியை விடுவித்திருப்பார்கள். அதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்தையும் செய்திருக்கலாம். ஆனால் அதற்கு அவர்களுக்கு விருப்பமில்லை.

தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் நலன்களைப் பார்த்தார்களேயொழிய மக்களின் நலனில் அக்கறை காட்டவில்லை என்பதே உண்மை. தங்களுக்குள் யார் அதிக வாக்கு வங்கியைப் பெற்று தொடர்ந்தும் அரசியலில் நிற்கலாம் என்ற எண்ணம் மட்டுமே அவர்களிடமிருந்தது. மக்களின் நலன்களில் துளியும் அக்கறையில்லை. எங்களின் மாகாண சபையால் நாங்கள் குறைந்தளவு நிதியுடன் செய்த வேலைத் திட்டங்களைக் கூட மத்திய அரசிடம் கூறி அதை தடுப்பதற்கான முயற்சிகளிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீண்டும் வந்தால் தங்களின் உண்மையான முகத்திரை கிழிக்கப்பட்டு விடும் என்ற அச்ச உணர்வே காணாமல் ஆக்கப்பட்டவர்களை, சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் அதீத அக்கறையை கூட்டமைப்பு எடுக்காமைக்கு காரணம்.

கூட்டமைப்பு தங்களின் எதிர் கால அரசியலுக்கு அவர்களின் விடுதலை இடைஞ்சலாக இருக்கும் என்ற நினைப்பே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு முட்டுக்கட்டையாக உள்ளது.

அரசியல் கைதிகளை வைத்து தாங்கள் அரசியல் பிழைப்பு நடத்த வேண்டும் என்று நினைக்கின்றார்களே ஒழிய அவர்கள் விடுதலை பெற்று வரவேண்டும் என்று கூட்டமைப்பு இதயசுத்தியுடன் நினைக்கவில்லை. மாறாக அவர்களின் விடுதலையை தாமதப்படுத்துவதிலேயே கவனத்தை செலுத்தி வருகின்றது என்றார்.

## இலங்கையின்...

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

ஏனையவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். பாராளுமன்றத்தில் கூட ஒரு உறுப்பினர் கூறியிருந்தார், கிருஷாந்தி வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் செம்மணியில் நூறு பேரை வெட்டி புதைத்தோம் என்று சாட்சி சொன்னதால் தான் அவர்கள் தொடர்ந்தும் சிறையில் இருப்பதாகவும் ஏனையவர்கள் விடுதலை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

போர்க்குற்ற விசாரணையில் கூட சர்வதேச விசாரணை வேண்டும், இலங்கையில் உள்ளூர் நீதிமன்றங்களில் விசாரணை நடத்துவதனால் எந்தவிதப் பயன்களும் இல்லையென்று ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வருவதற்கு சம்பந்தன் ஐயா தான் எதிர்க்கட்சித் தலைவராக வருவதற்கு முன் கூறியிருந்தார். ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்பு சர்வதேச விசாரணை, போர்க்குற்ற விசாரணை, சர்வதேச நீதிமன்றம் எல்லாம் தேவையில்லை என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூடி மௌனிகளா இருந்தார்கள்.

இருந்த போதும் தற்பொழுதுள்ள இலங்கை நடைமுறையின்படி அரசியலமைப்பிலே தமிழர்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கின்ற பொழுது அல்லது நீதிமன்றங்களிலே தீர்ப்பு வருகின்ற பொழுது தமிழர்களுக்கு எந்த வகையில் சாதகமாக அமையும் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது என்பதினை நடைமுறையிலே இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக அமையும்.

19ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப் படாததினால் சம்பந்தன், சுமந்திரன், ஆனால் தமிழர்களுக்கு இவ்வளவு காலமும் அரசியலமைப்பில் இருக்கின்ற அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை என்று சம்பந்தனோ, சுமந்திரனோ இந்தியாவிடமோ, சர்வதேசத்திடமோ சென்று முறையிடவில்லை. தற்பொழுது தமக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கிய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதவி பறிபோனதும் சம்பந்தனும் சுமந்திரனும் இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளை சந்திக்கிறார்கள். அமெரிக்க அதிகாரிகளை சந்திக்கிறார்கள். ஆகாசத்திற்கும் பூமிக்குமாக எகிறிக் குதிக்கின்றார்கள். ஆனால் தமிழரின் இனப்பிரச்சினை. அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலோ எவ்வித கரிசனமும் இவர்கள் இதுநாள் வரையில் காட்டவில்லை. தமிழர்களுக்கு பிரச்சினை வருகின்ற பொழுது எந்தவிதமான உணர்வுகளும் வருவதில்லை என்பது தமிழர்களின் ஏக்கமாக இருக்கிறது.

மகிந்த அரசாங்கத்தை இந்தியா வெறுப்பதற்குக் காரணம் அவர் சீன சார்புடையவர் என்பதே. பூகோள ரீதியாக இந்தியா எதிர்நோக்கும் பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கு இலங்கையில் அதிகரிக்கும் சீனாவின் பிரசன்னம் ஆபத்தானதாகப் பார்க்கப்படுகின்றது.

ஆனால் இதே அரசியலமைப்பில் பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் இதே அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கின்றது. அதை 87 ஆம் ஆண்டிலிருந்து வழங்காமல் ஜே.ஆர். ஜயவர்த்தனா, பிரேதமதாசா, சந்திரிக்கா, மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க இருக்கின்ற பொழுது அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இந்தியாவோ அல்லது ஏனைய நாடுகளோ இது அரசியலமைப்புக்கு முரண் என்ற கருத்தினை முன்வைக்கவில்லை.

எனவே அரசியலமைப்பு முரண் தமிழர்களுக்கு உரித்தல்ல. தமிழர்களுக்கு எதிராக அரசியலமைப்பு பயன்படுகின்ற பொழுது அதைப்பற்றி வாய்திறக்காத இந்தியாவும், சுமந்திரனும் தற்பொழுது அது தெற்கிலே சிங்களவர்களுக்கு எதிராகப் பயன்படுகின்ற பொழுது இது அரசியலமைப்புக்கு முரண் என்று கூறுவதும், இலங்கை அரசியலமைப்புக்கும் தமிழர்களுக்கும் எந்தவித தொடர்புகளும் இல்லை என்பதினை எடுத்துக் காட்டுகின்றதா என்ற ஐயம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தில் இருப்பவற்றை பல ஜனாதிபதிகள் கொடுக்காமலிருக்கின்ற பொழுது அதில் கைச்சாத்திட்ட இந்தியா கண்டும் காணாமல் இருந்தது. இதற்கு எதிராக நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குத் தொடர்ந்திருந்தாலே அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கும். ஆனால் சட்டவல்லநர் சம்பந்தன், சட்ட வல்லுநர் சுமந்திரன் போன்றோர் வாய்மூடி மௌனிகளாக இருந்து வருகின்றார்கள்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் பதவி பறிபோனதும் சுமந்திரன் ஆத்திரமடைகின்றார். தான் என்ன வார்த்தை பேசுகின்றோம் என்று அறியாமல் கோபமடைகின்றார். சம்பந்தன் ஐயாவிற்கு அரசியல் முரண் என்று தெரிகின்றது. பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பொழுது அதுவும் முரண் என்று தெரிகின்றது. ஆனால் தமிழர்களுக்கு இப்படியான அரசியல் முரண்பாடுகள் ஏற்படுகின்ற பொழுது அதைத் தெரிந்தும் தெரியாதவர்களாக, புரிந்தும் புரியாதவர்களாக எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் தமிழ்த் தலைமைகள் இருந்து வருகின்றன.

இந்த சந்தர்ப்பத்தில் கூட சர்வதேசமயப்படுத்த முடியும். இந்த அரசியலமைப்பில் வருகின்ற திருத்தங்கள் சிறுபான்மையினரைப் பாதுகாப்பதில்லை. அரசியல் தலைமைகள் தாங்கள் நினைத்ததைத்தான் செய்து வருகின்றார்கள். ஜனாதிபதியோ பிரதம மந்திரியோ தமக்கு வேண்டியவற்றைச் செய்து வருகின்றார்களே ஒழிய அரசியலமைப்பிலுள்ளவற்றை கையாள்வதில்லை என்பதனை உலக நாடுகளுக்கு எடுத்துக் கூறுவதற்கு இது அரிய சந்தர்ப்பம். இதைத் தவறவிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு மாத்திரம் பேசி வருவது இவர்கள் தமிழர்களின் பாராளுமன்ற உறுப்பினர்களா அல்லது ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற உறுப்பினர்களா என்ற கேள்வி மக்கள் மத்தியிலே எழுந்துள்ளது.

# சீரற்ற காலநிலையினால் படுவான்கரை பொதுமக்கள் அசௌகரியம்

**துறைநீலாவணை நிருபர்**

சீரற்ற காலநிலையினால் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள பெருமளவான தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி வருவதுடன் வழிந்தோடும் நிலையும் காணப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடைமழையினால் மட்டு மாவட்டத்தின் படுவான்கரைக்கான போக்குவரத்து மார்க்கம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.





களுவாஞ்சிகுடியிலிருந்து பட்டிருப்பு பாலம் ஊடாக வெல்லாவெளி, பழுகாமம், பட்டிப்பளை, மண்டூர் மற்றும் காக்காச்சிவட்டை ஆகியவற்றின் பிரதான பாதைகளில் வெள்ளம் பாய்வதனால் போக்குவரத்தில் பெரும் சிரமங்களுக்குள் உள்ளாவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் மட்டு முகத்துவார ஆற்றுவாய் வெட்டப்பட்டதினால் ஆறு குளங்களிலுள்ள வெள்ளநீர் கடலுக்குள் செல்வதுடன் வெள்ளம் படிப்படியாக குறைந்து வருவதனை காணமுடிகின்றது.

இந்நிலையில் போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பட்டாபுரம், பெரியபோரதீவு, கோயில்போரதீவுமேற்கு, கோயில்போரதீவு போன்ற கிராமங்களில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுவதுடன் இக்கிராமங்களிலுள்ள 250 குடும்பங்களை சேர்ந்த 755 பொதுமக்கள் உறவினர்களின் வீடுகளிலும் பொது இடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளதுடன் இவர்களுக்கான சமைத்த உணவுகள் பிரதேச செயலாளரின் வேண்டுதலுக்கு அமைவாக செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புகளால் வழங்கப்பட்டு வருகின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

# வாகன தடுப்பு வேலியை அகற்றுமாறு கோரிக்கை

கல்முனை கடற்கரை பள்ளி வீதியில் அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்திற்கு முன்பாக பல மாதங்களாக கவனிப்பாரற்று காணப்படும் வாகன தடுப்பு வேலியினால் அவ் வீதியின் போக்குவரத்திற்கும் பாதசாரிகளுக்கும் இடைஞ்சலை ஏற்படுத்திவருவதாக பிரதேச மக்கள் முறையிடுகின்றனர்.

கல்முனையில் காணப்படும் உள் வீதிகளில் பிரபலமானதும் பெரிய வாகனங்களின் போக்குவரத்து அதிகமாகவும் உள்ள கல்முனை கடற்கரை பள்ளி வீதியிலேயே இக்குறித்த இரும்பினால் ஆன வாகன தடுப்பு வேலி இடப்பட்டுள்ளது.

வாகன போக்குவரத்திற்கும் பாதசாரிகளுக்கும் இடைஞ்சலை ஏட்படுத்திவரும் வாகன தடுப்பு வேலியினை அகற்றுவதற்கு கல்முனை மாநகர முதல்வர் முன்வர வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகின்றனர்.

# ஹெல்பொட தோட்டத்திற்கு தார் பாதை இடுவதற்கு இ.தொ.கா நடவடிக்கை

**பூண்டுலோயா நிருபர்**

இன்றைய சூழ்நிலையில் எல்லாத்தோட்டங்களிலுமே பாதை பிரச்சனை பெரும் பிரச்சனையாக காணப்படுகின்றது.ஒரு அவசரத்திற்கு கூட பாதையினால் அசௌகரியங்களை சந்திக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.புதிய வீடமைப்பு திட்டத்தில் கூட பாதை பிரச்சனை காணப்படுகின்றது.

அந்தவகையில் கொத்மலை பிரதேச சபைக்கு உட்பட்ட ஹெல்பொட பிரதேசத்திற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானின் ஆலோசனையில் முன்னால் மத்தியமாகாண அமைச்சர் மருதபாண்டி இராமேஸ்வரனின் வேண்டுகோளிற்கு அமைய மனிதவள நிதியத்தின் தலைவர் அருள்சாமியின் தீர்மானத்தில் ஹெல்பொட புதிய வீடமைப்பு திட்டத்திற்கான தார் பாதை இடுவதற்கான நடவடிக்கை இன்று மேற்கொள்ளப்பட்டது.6 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கும் இத்திட்டத்தில் 1.2 கிலோமீற்றர் தூரத்திற்கான தார் பாதை போடப்படுவதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் கொத்மலை பிரதேச சபை உறுப்பினர் செல்வமதன் மற்றும் கண்டி பிராந்திய மனிதவள முகாமையாளர் மற்றும் ஹெல்பொட தோட்ட முகாமையாளர்களும் கலந்துக்கொண்டனர்.

# திருக்கோவில் பிரதேசத்தில் இயந்திர வயல் நாற்று நடுகை விழா



**திருக்கோவில் நிருபர்**

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் திருக்கோவில் பிரதேச செயலகம், தம்பிலுவில் கமநல சேவைகள் திணைக்களத்தின் எற்பாட்டில் கோம்பக்கரச்சி கீழ் கண்டம் விவசாய அமைப்பின் அனுசரனையுடன் இயந்திரம் மூலமாக வயல் நாற்றுகள் நடும் விழா இடம் பெற்றது.

இந்நிகழ்வு அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பளார் எம்.எஸ்.ஏ.கலீம் அவர்களின் தலைமையில் காஞ்சிரம்குடா வயல் பகுதியில் வைபவ ரீதியாக இடம்பெற்றது.

இதன்போது திருக்கோவில் பிரதேசத்தில் முதல் தடவையாக முளைக்க வைக்கப்பட்ட நாற்றுக்களை இயத்திரத்தின் உதவியுடன் வயலில் நடுகை செய்யப்பட்டதுடன் விவசாயிகளுக்கு இவ் முறையின் நன்மைகள் தொடர்பாக விரிவான தெளிவூட்டல்களும் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இயந்திரத்திற்கான அனுமதிப்பத்திரம் மற்றும் விவசாயிகளுக்கான சான்றிதழ் பத்திரங்களும் மாவட்ட விவசாயப் பணிப்பளார் எம்.எஸ்.ஏ.கலீம் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் பிரமத அதிதியாக கலந்து கொண்டதுடன் நிகழ்வில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீம், உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.தேவராணி, தொழில் நுட்ப உதவியாளர் கே.சமரசிங்க விவசாய போதனாசிரியர் கே.கங்காதரன், பாடவிதான உத்தியோகத்தர் எஸ்.தவநேசன் திருக்கோவில் பிரதேச செயலக விவசாய பிரிவுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய அமைப்புக்களின் தலைவர்கள் விவசாயிகள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டு இருந்தனர்.

# தோப்பூர் அல் ஸாஹிர் வித்தியாலயத்திற்கு செல்கின்ற வீதி செப்பனிட்டு தருமாறு கோரிக்கை



**கந்தளாய் நிருபர்**

மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட தோப்பூர் அல் ஸாஹிர் வித்தியாலயத்திற்கு செல்கின்ற வீதி பள்ளமும் குழியுமாக காணப்படுவதினாலும் மழை காலங்களில் இவ்வீதியில் நீர் தேங்கி காணப்படுவதினாலும் இவ் வீதியூடாக குறித்த பாடசாலைக்குச் செல்கின்ற மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலைக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

போக்குவரத்துக்கு இடைஞலாக காணப்படும் இவ் வீதியை பாடசாலை மாணவர்கள் சிரமமின்றி பயனிக்கும் வகையில் செப்பனிட்டு தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளை பிரதேச மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

# வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக பாவற்குளத்தின் நீர்மட்டம் உயர்வு

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக பாவற்குளத்தின் நீர்மட்டம் சடுதியாக உயர்வடைந்துள்ளது என பிரதேச நீர்ரபாசன பொறியியலாளர் ரி.சுகந்தலிங்கம் தெரிவித்துள்ளார்.




வவுனியாவில் கடந்த ஐந்து நட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக தாழ் நிலப்பகுதிகளில் நீர் தேங்கியுள்ளதுடன், குளத்து நீர்மட்டமும் சடுதியாக உயர்வடைந்துள்ளது.

அந்தவகையில் மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் காணப்படும் வவுனியா, பாவற்குளத்தின் நீர்மட்டம் 15.6 அடியாக உயர்வடைந்துள்ளது. அத்துடன் ஈரப்பெரியகுளம் 14.11 அடியாகவும், இராசேந்திரங்குளம் 9.6 அடியகவும் உயர்வடைந்துள்ளது. தொடர்ச்சியாக மழை பெய்யும் பட்சத்தில் சில நட்களில் இவை வான் பாயக் கூடிய நிலை உள்ளது.

மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள வவுனியா வடக்கு மருதமடு குளம் 11.2 அடியாகவும், செட்டிகுளம் முகத்தான்குளம் 11.2 அடியாகவும் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதால் அவை தற்போது வான் பாய்ந்து வருகின்றன.

கடந்த வரும் வரட்சி காரணமாக குளங்கள் நீர்மட்டம் குறைவாகவே காணப்பட்டன. ஆனால் தற்போது சில நாட்களாக பெய்த மழையினால் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

இருப்பினும் மக்களுக்கோ, பயிர்ச்செய்கைக்கோ எந்தவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

# மாவட்டத்தில் நிலவிய சீரற்ற கால நிலை வழமைக்கு திரும்பியது

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக நிலவி வந்த சீரற்ற கால நிலை வழமைக்கு திரும்பி இயல்பு நிலை ஏற்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார்

முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்போதை நிலை தொடர்பில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அவர்களை தொடடர்பு கொண்டு கேட்ட போது கடந்த இரண்டு மூன்று நாட்களாக பெய்துவந்த மழை காரணமாக ஆறு வரையான சிறிய குளங்கள் உடைப்பெடுத்திருந்தன

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் 202 குடும்பங்களை சேர்ந்த 647 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

வெலி ஓயா பிரதேசத்தில் மாத்திரம் இரண்டு குடும்பங்கள் பாதிக்க பட்ட நிலையில் தற்காலிக இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவுமாவட்டத்தில் அனர்த்தத்தில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக இலங்கை இரானுவத்தினர் விமானப்படையினர் கடற்படையினர் பொதுமக்கள் அதிகாரிகளின் உதவியுடன் மக்களை காக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டன

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, ஆண்டான் குளம் பகுதிக்கு அடுத்துள்ள நித்தகைக்குளம் நேற்று முன்தினம் உடைப்பெடுத்திருந்தது.

இதன்போது ஆறு பேர் காணமல்போயிருந்தனர்.மேலும் அனர்த்த முகாமைத்துவக் குழுவினர், முப்படையினர், காவற்றுறையினர் மற்றும் ஊர் மக்கள் என அனைவரும் இணைந்து காணாமல் போன குடும்பத்தை தேடுதல் மேற்கொண்டனர்.

இந் நிலையில் காணாமல் போயிருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் மற்றும் ஏனைய மூன்றுபேரும் இன்று(09-11-2018) காலை 07.00 மணியளவில் விமானப்படையினர் மற்றும் இரானுவத்தினரின் உதவியுடன் பாதுகாபாக மீட்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்

மாவட்டத்தில் நிலவிய சீரற்ற கால நிலை வழமைக்கு திரும்பியதுடன் வெள்ளம் நிரம்பிக்கானப்பட்ட தழ் நிலங்களில் வெள்ளம் குறைவடைந்து இயல்பு நிலை ஏற்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன்



அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்-

# உடைந்து விழும் அபாய நிலையில் மூதூர் அரபா நகர் பாலம்

**கந்தளாய் நிருபர்**

மூதூரில் பெய்து வரும் அடைமழை காரணமாக மூதூரின் பெரும்பாலான பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. மூதூரின் அரபா

நகரை மூதூரோடு இணைக்கும் பாலம் அதன் இரு மருங்குகளும் ஆபத்தான நிலையில் உள்ளது,பாலத்தின் அருகிலுள்ள மணல் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதால் பாலத்தின் ஒரு பகுதி உடைந்து விழும் நிலையிலுள்ளது.

குளத்தில் அடைத்திருந்த சல்மீனியா தாவரத்தின் தடங்களால் பிரதான வடிகானாகிய இந்த பாலத்தின் கீழ்ப்பகுதி ஒட்டு மொத்த நீரோட்டத்தையும் தடுத்து. இதன் விளைவாக தேக்கமடைந்த நீர் ஊர்பகுதிகளுக்குள் வடிந்தோட ஆரம்பித்துள்ளது.

இப்பாலத்தின் ஒரு பகுதி உடைந்து விழும் பட்சத்தில் மக்களின் போக்குவரத்து தடைப்படும்,மற்றும் அரபா நகர் கிராமமே நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படும் விளைவுகள் ஏற்பட முன்னார் மூதூர் பிரதேச சீர் செய்ய வேண்டும்.

கடும் மழை காரணமாக பிரதான வீதிகளில் சீர் வழிந்தோடி வருவதால் பாடசாலை மாணவர்கள்,தொழிக்குச் செல்வோர் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இப்பகுதி மக்கள் அச்சமான சூழ் நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.திருகோணமலை மாவட்டத்தின் தொடர்ச்சியாக நான்கு நான்கு நாட்களாக இடைவிடாத அடை மழை பெய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.




# அனர்த்த மதிப்பீடுகளை மேற்கொள்ள விசேட கலந்துரையாடல்

கிழக்கு மாகாண ஆளுனர் தலைமையின் கீழான உருவாக்கப்பட்ட விசேட மாகாண அனர்த்த முகாமைத்துவ குழுவின் கூட்டம் திருகோணமலையில் உள்ள மாகாண உள்ளூராட்சி முதலமைச்சின் செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவ குழுவின் தலைமையதிகாரியும் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருமான யு.எல்.ஏ.அஸீஸ் தலைமையில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் சீரற்ற கால நிலை காரணமாக வெள்ள அபாய நிலை தொடர்ந்தும் அதிகரித்து காணப்படுகிறது.

இது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ குழுவின் அதிரடி நடவடிக்கையாக அனர்த்த முற்காப்பு நடவடிக்கை, வெள்ள நீரை வெளியேற்ற உதவுதல், குடியிருப்பு அமைத்து கொடுத்தல், மருத்துவ சேவைகள், முதலுதவி, உணவு தயார் செய்தல் உட்பட பல முன் ஏற்பாடுகள் தொடர்பான மதிப்பீடுகள் ஆரம்பகட்ட நடவடிக்கையாக உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் இதன் போது வழங்கப்பட்டன.



உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படும் பாவனையில் உள்ள அனைத்து வகை பெகோ கனரக இயந்திரங்களும் உடனடியாக உரிய பகுதிகள் அண்மையில் உள்ள பகுதிகளுக்கு சென்று வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொளுமாறும் அனர்த்தங்களில் இருந்து மக்களை பாதுகாக்க நடவடிக்கைகளை துரிதமாக்குமாறும் பேசப்பட்டது. உள்ளூராட்சி திணைக்கள மாகாண ஆணையாளரின் கண்காணிப்பில் இவ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கூறப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மாகாண திணைக்களங்களின் செயலாளர்கள் உட்பட உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# விவாகரத்துக்கு ஒப்புக்கொள்ளும் வரை வீடு திரும்ப மாட்டேன்; லாலு மகன் அடம்



திருமணமான 6 மாதங்களில் விவாகரத்து கோரி நீதிமன்றத்தை அணுகியுள்ள லாலு பிரசாத் யாதவின் மூத்த மகன் தேஜ் பிரதாப் யாதவ், தற்போது ஹரித்துவாரில் ஆசிரமத்தில் தங்கியுள்ளார். தனது முடிவுக்கு குடும்பத்தார் ஒப்புக்கொள்ளும் வரை வீடு திரும்ப போவதில்லை என அவர் அறிவித்துள்ளார்.

ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியின் தலைவரும், பிஹார் மாநில முன்னாள் முதல்வருமான லாலு பிரசாத் யாதவின் மூத்த மகன் தேஜ் பிரதாப் யாதவ், மாநிலத்தின் முன்னாள் முதல்வரான தராகோ ராயின் பேத்தி ஐஸ்வர்யா ராயை திருமணம் செய்து கொண்டார்.

பாட்னாவில் உள்ள நோட்ரி டேம் அகாடெமியில் பள்ளிப்படிப்பை முடித்த ஐஸ்வர்யா ராய் டெல்லியில் எம்.பி.ஏ பயின்றவர். இவர்கள் திருமணம் கடந்த மே 12-ம் தேதி பாட்னாவில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மிக பிரம்மாண்டமாக நடைபெற்ற திருமணத்தில் பல்வேறு கட்சிதலைவர்கள், பிரபலங்கள் பங்கேற்றனர்.

திருமணம் முடிந்து 6 மாதங்கள் கூட ஆகாத நிலையில் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவுவதாகவும், பிரிந்து வாழ விரும்புவதாகவும் தகவல்கள் வெளியாகின.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் விவாகரத்து கோரி நான் மனுத்தாக்கல் செய்துள்ளது உண்மைதான். துயரத்துடன் வாழ்வதில் எந்த அர்த்தமும் இல்லை என தேஜ் பிரதாப் பேட்டியளித்தார்.

ஆனால் அவரின் முடிவுக்கு தாய் ராப்ரி தேவி உட்பட குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் வீட்டை விட்டு வெளியேறிய அவர் எங்கு இருக்கிறார் என்ற விவரத்தையும் வெளியிடவில்லை. தீபாவளிக்கும் வீடு திரும்பாததால் குடும்பத்தினர் பதற்றம் அடைந்தனர்.

இந்தநிலையில் தேஜ் பிரதாபின் தம்பியும், லாலு பிரசாத்தின் இளைய மகனுமான தேஜஸ்வியின் பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. டெல்லியில் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் நடைபெறகிறது. இதையொட்டி தனது சகோதரர் தேஜஸ்விக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறிய தேஜ் பிரதாப், தனக்கு விவாகரத்து கிடைக்கும் வரை வீடு திரும்பப் போவதில்லை என தெரிவித்துள்ளார்.

ஹரித்துவாரில் ஒரு ஆசிரமத்தில் தான் தங்கி இருப்பதாகவும் தனக்கு விவாகரத்து பெற்றுத்தர குடும்பத்தினர் ஒப்புக் கொள்ளும் வரை வீடு திரும்ப வாய்ப்பில்லை எனவும் தெரிவித்துள்ளார். பிஹார் உள்ளூர் தொலைக்காட்சியிலும் தேஜ் பிரதாப் யாதவின் தொலைபேசி உரையாடல் ஒளிபரப்பாகியது.

# பதவி இழந்த எம்எல்ஏக்கள் சிறையில் சசிகலாவுடன் ஆலோசனை



பெங்களூரு சிறையில் உள்ள அமமுக பொதுச்செயலாளர் சசிகலாவை பதவி நீக்கம் செய்யப்பட்ட எம்எல்ஏக்கள் டிடிவி தினகரனுடன் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேல் முறையீட்டு வழக்கில் தண்டிக்கப் பட் டுள்ள அமமுக பொதுச்செயலாளர் சசிகலா பெங்களூருவில் உள்ள பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். 15 நாட்கள் பரோலில் வெளியே வந்த இளவரசி சிறைக்கு திரும்பினார்.

இந்நிலையில் அமமுக துணைப் பொதுச்செயலாளரும், எம்எல்ஏவு மான டிடிவி தினகரன் தலைமையில் ஆதரவு எம்எல்ஏக்கள் கலைச்செல்வன், ரத்தினசபாபதி, பிரபு ஆகியோரும் பதவி இழந்த எம்எல்ஏக்கள் பழனியப்பன், செந்தில் பாலாஜி, வெற்றிவேல், முத்தையா, சுந்தரராஜன், ஜெயந்தி பத்மநாபன், முருகன், கர்நாடக மாநில செயலாளர் புகழேந்தி உள்ளிட்ட 12 பேர் சசிகலாவை சிறையில் சந்தித்தனர். இளவரசியின் மகன் விவேக், மருமகள் கீர்த்தனா, வழக்கறிஞர் அசோகன் ஆகியோர் இளவரசியை சந்தித்து பேசியதாகக் கூறப்படுகிறது.

டிடிவி தினகரன், ஆதரவு எம்எல்ஏக்கள், பதவி இழந்த எம்எல்ஏக்களுடன் சசிகலா சுமார் 2 மணி நேரம் ஆலோசனை நடத்தினார். அப்போது தகுதி நீக்க வழக்கு, இடைத்தேர்தல், தமிழக அரசியல் நிலவரம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது. பின்னர் சசிகலா டிடிவி தினகரன், இளவரசியின் மகன் விவேக் ஆகியோரிடம் தனியாக சுமார் 30 நிமிடங்கள் ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது.

இந்த சந்திப்புக்கு பின் டிடிவி தினகரன் கூறியதாவது:

நீண்ட இடைவேளைக்கு பிறகு கட்சியின் முக்கிய நிர்வாகிகளுடன் சசிகலாவை சந்தித்து ஆலோ சனை நடத்தினோம். தகுதி நீக்க வழக்கில் மேல்முறையீடு செய்வ தில்லை என்ற எங்களது முடிவை சசிகலாவிடம் தெரிவித்தோம். அதனை ஏற்றுக் கொண்ட அவர் மிக சிறந்த முடிவை எடுத்திருப்ப தாக கூறினார். இடைத்தேர்தல் மூலம் மக்களை சந்திப்பது தான் சரியான முடிவு. அதற்கு தயாராக இருக்குமாறு கூறினார். இதே கருத்தை வலியுறுத்தி பொதுமக்கள் அவருக்கு ஏராளமாக கடிதங்கள் எழுதியதாக தெரிவித்தார். சசிகலாவின் ஆலோசனையின்படி நாங்கள் இடைத்தேர்தலில் போட்டியிட தயா ராக உள்ளோம். அதில் அனைத்து இடங்களிலும் வெல்வது உறுதி என்பதை அவரிடம் தெரிவித்தோம்.

பன்றிக் காய்ச்சலால் ஏராளமா னோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ‘சர்க்கார்’ திரைப்படத்தை எதிர்த்து அமைச்சர்கள் பேசிவரு வது தேவையற்றது. அந்த படத் துக்கு ஆளும்கட்சியினர் இலவச விளம்பரம் செய்துவருகின்றனர்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பாஜக அரசுக்கு எதிராக தேசிய அளவில் மெகா கூட்டணி உருவாக்கும் முயற்சியில் இறங்கி யுள்ளார். நாங்கள் வளர்ந்துவரும் கட்சி என்பதால் எங்களை அவர் சந்திக்கவில்லை. திமுக பங் கேற்கும் கூட்டணியில் அமமுக இணையாது. விரைவில் இடைத்தேர்தல் நடைபெறும் 20 தொகுதிகளுக்கும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு, தேர்தல் பணி தொடங்கப்படும் என்றார்.

# 3.35 லட்சம் தீபங்களை ஏற்றி கின்னஸில் இடம் பெற்றது அயோத்தி



தீபாவளியின் தீப உற்சவத்தில் 3.35 லட்சம் தீபங்களை ஏற்றி கின்னஸில் இடம் பெற்றது அயோத்தி. இதன்மூலம், 3.015 லட்சம் தீபங்கள் ஏற்றி இதற்குமுன் செய்யப்பட்ட சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது

உ.பி.யின் அயோத்தியில் இரண்டாவது வருடமாக உ.பி. அரசால் தீபாவளி கொண்டாடப்பட்டது. இதன் முதல் நாளில் உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத், சரயூ நதிக்கரையில் முதல் விளக்கை ஏற்றி கொண்டாட்டத்தைத் தொடங்கி வைத்தார். இதைத் தொடர்ந்து, அதன் இருகரைகளிலும் 3.35 லட்சம் தீபங்கள் ஏற்றப்பட்டன. இது கின்னஸ் உலக சாதனையாக ஏற்கப்பட்டுள்ளது.

இது குறித்து உ.பி.யின் கூடுதல் தலைமைச் செயலாளரான அவனிஷ் அவஸ்தி கூறும்போது, ஒரே இடத்தில் ஒரே முறையாக அதிகமாக 3.35 லட்சம் தீபங்கள் அயோத்தியில் ஏற்றப்பட்டது உலக சாதனையாக ஏற்கப்பட்டு கின்னஸில் இடம் பெற்றுள்ளது. அதன் விதிகளின்படி குறைந்தபட்சம் 45 நிமிடங்களுக்காக அனைத்து விளக்குகளும் எரியும்படி தன்னார்வலர்கள் பார்த்துக் கொண்டனர். இதற்காக கின்னஸில் இருந்து அதன் லுவலர்கள் நேரில் வந்திருந்து கண்காணித்திருந்தனர் எனத் தெரிவித்தார்.

இதேபோல், கடந்த வருடம் அக்டோபர் 18-ல் தீபாவளி தீப உற்சவத்தில், உ.பி. அரசு சார்பில் 1.71 லட்சம் தீபங்கள் ஏற்றி கின்னஸுக்கு முயற்சிக்கப்பட்டது. ஆனால், அது விதிமுறைகளின்படி இல்லை என கின்னஸ் ஏற்க மறுத்து விட்டது. இந்தக் குறைகளைச் சரிசெய்து இந்த வருடம் கின்னஸ் சாதனை நடத்தப்பட்டுள்ளது.

கடந்த திங்கள்கிழமை நடைபெற்ற அந்நிகழ்ச்சியில் உ.பி.யின் ஆளுநர் ராம்நாயக் மற்றும் மாநில அமைச்சர்கள் கலந்து கொண்டனர். இதன் சிறப்பு விருந்தினராக தென் கொரியாவின் முதல் பெண்மணியும், அந்நாட்டு அதிபர் மூன் ஜொய் இன்னின் மனைவியுமான கிம் ஜங் சூக் கலந்து கொண்டார்.

இதற்காக, அயோத்தியின் சரயூ நதிக்கரையில் பிரம்மாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

# சபரிமலை மகரவிளக்கு பூஜையைக் காண 550க்கும் மேற்பட்ட இளம் பெண்கள் முன்பதிவு



சபரிமலையில் ஆண்டுதோறும் நடைபெறும் மகரவிளக்குப் பூஜையை இந்த ஆண்டு காண்பதற்காக 550க்கும் மேற்பட்ட இளம் பெண்கள் ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு 10 வயது முதல் 50 வயது வரை உள்ள பெண்கள் செல்ல நூற்றாண்டுகளாகத் தடை இருந்தது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம் அனைத்து வயதுப் பெண்களும் சபரிமலைக்குச் சென்று சாமி தரிசனம் செய்ய அனுமதி வழங்கியது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக கேரள மாநிலம் முழுவதும் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாகத் தொடர் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடந்து வந்தன.

சமீபத்தில் மாதாந்திர பூஜைக்காக சபரிமலை திறக்கப்பட்டபோது, அங்கு சாமி தரிசனத்துக்கு வந்த 50 வயதுக்குட்பட்ட பெண்களை போராட்டக்காரர்கள் திருப்பி அனுப்பியதால், பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்தும் முயற்சியில் கேரள அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. பெண்களுக்கு முழுமையாகப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.

இந்நிலையில், சபரிமலையில் ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்து டிக்கெட் பெற்ற தரிசனம் செய்யும் வசதியைக் கடந்த மாதம் இறுதியில் கேரள அரசு அறிமுகம் செய்தது. குச்ஞச்ஞூடிட்ச்டுச்ஞு.ஞிணிட் என்ற இணையதள முகவரி மூலம் பக்தர்கள் முன்பதிவு செய்து டிக்கெட் பெற்று தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதன்படி, முன்பதிவு செய்யும் பக்தர்களுக்கு சாமி தரிசனம் செய்யும் தேதி, நேரம் ஆகியவை ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் நிலக்கலில் இருந்து பல்வேறு நகரங்களுக்குச் செல்ல பஸ் டிக்கெட் முன்பதிவு செய்யும் வசதியையும் இந்த இணையதளத்தில் அறிமுகம் செய்துள்ளது.

ஆன்லைனில் முன்பதிவு செய்யும்போது பக்தர்கள் தங்களின் புகைப்படம், முகவரி அடையாளச் சான்று, தனிப்பட்ட விவரங்கள், செல்போன் எண் ஆகியவற்றைத் தெரிவிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு முன்பதிவு செய்யும் பக்தர்களுக்கு சாமி தரிசனம் செய்யும் தேதி, நேரம் ஆகியவை ஒதுக்கப்பட்டு அனுமதிச் சீட்டு வழங்கப்படும்.

இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை வரை ஆன்லைன் மூலம் ஏறக்குறைய 3.50 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனத்துக்காக முன்பதிவு செய்துள்ளதாக போலீஸ் தகவல் நுட்பப் பிரிவு, போலீஸ் டிஜிபிக்கு அளித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 550க்கும் மேற்பட்ட இளம் பெண்கள் மகரவிளக்கு பூஜையைக் காண்பதற்காக ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்துள்ளனர்.

# கொள்ளையடிக்கப்பட்ட 6 கோடியையும் செலவழித்த திருடர்கள்; பொலிஸ் அதிர்ச்சி

ரயிலில் கொள்ளையடிக்கப்பட்ட ரிசர்வ் வங்கிப்பணம் 5.78 கோடி ரூபாயை செலவழித்து விட்டதாக ரயில் கொள்ளையர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

கடந்த 2016-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ம் தேதி சேலத்திலிருந்து சென்னை வந்த ரயிலில் சேலம், நாமக்கல் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் சேகரிக்கப்பட்ட ரூ.323 கோடி பழைய, கிழிந்த 1000 ரூபாய், 500 ரூபாய் நோட்டுகள் சென்னை ரிசர்வ் வங்கிக்கு கொண்டுவரப்பட்டது.

எழும்பூர் வந்த ரயில் பெட்டியின் மேற்கூரையில் துளையிட்டு ரூ.5 கோடியே 78 லட்சத்தை மர்ம ஆசாமிகள் கொள்ளையடித்தது தெரிந்தது. இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ரயில்வே போலீஸார் விசாரணை நடத்தி துப்பு துலங்காத நிலையில் சிபிசிஐடி போலீஸாருக்கு வழக்கு விசாரணை மாற்றப்பட்டது. போலீஸாரின் தீவிர விசாரணையில் மோஹர்சிங்கின் கூட்டாளிகள் ரயில் கொள்ளையில் ஈடுபட்ட மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த தினேஷ் (38), ரோஹன் பார்த்தி (29) இருவரும் கடந்த அக்டோபர் 12 அன்று சென்னையில் கைது செய்யப்பட்டனர். ஏற்கெனவே 2 பேர் சென்னையில் கைது செய்யப்பட்ட நிலையில் 1. மோஹர் சிங், 2. ருசி பார்தி, 3. கலியா (எ) கிருஷ்ணா, 4. மஹேஷ் பார்தி, 5. பில்தியா (எ) ப்ரஜ் மோகன் ஆகிய 5 பேரை போலீஸார் கைது செய்தனர். அவர்கள் 5 பேரும் வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு மத்தியப் பிரதேச சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களை தனிப்படை கைது செய்தது. ஏழு பேரை சிபிசிஐடி போலீஸார் பிடித்து விட்டாலும் கொள்ளைக்கான சந்தர்ப்ப சாட்சியங்களைத் தயார் செய்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய தகுந்த ஆதாரங்கள் வேண்டும்.

அதற்காகத்தான் 14 நாட்கள் போலீஸ் காவல் கேட்டு அனைவரையும் விசாரணைக்கு அழைத்து வந்தனர். ஆனால் விசாரணையில் கொள்ளைக்கு தமிழ்நாட்டில் அவர்களுக்கு துப்புக்கொடுத்தது யார்? கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை என்ன செய்தார்கள் என்பது குறித்து வாய் திறக்க மறுக்கின்றனர்.

கொள்ளையடிக்கப்பட்ட ரூ.5.78 கோடி பழைய 1000 மற்றும் 500 ரூபாய் ஆகும். அவற்றைக் கொள்ளையடித்த ஆகஸ்ட் 8 2016-ம் ஆண்டு அன்று பணமதிப்பு நீக்க நடவடிக்கை வரவில்லை. ஆனால் சரியாக 90 நாளில் பணமதிப்பு நீக்க நடவடிக்கை கொண்டுவரப்பட்டது.

இடைப்பட்ட 3 மாதங்களில் பணத்தை அவர்கள் செலவழித்திருக்க வாய்ப்பில்லை, அல்லது சொத்து நகைகள், வாகனம் என வாங்கியிருக்க வேண்டும். ஆனால் கொள்ளையர்கள் தாங்கள் கொள்ளையடித்த பணம் அத்தனையும் செலவாகிவிட்டது என்று தெரிவித்தாலும் எப்படி செலவழித்தோம் என்று சொல்ல மறுக்கின்றனர்.

இதனால் அடுத்தகட்ட நகர்வுக்குச் செல்ல முடியாமல் போலீஸார் இக்கட்டில் சிக்கியுள்ளனர். மோஹர் சிங் தலைமையிலான இந்தக் குழு பார்த்தி என்று அழைக்கப்படும் பயங்கரமான கொள்ளைக் கும்பலாகும். இவர்கள் ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், டெல்லி, குஜராத், மஹாராஷ்டிரா, ஹரியாணா மாநிலங்களில் பரவி இருப்பவர்கள் ஆவர். அவர்களுக்கு இந்தி தெரிந்தாலும் தங்களுக்குள் பார்த்தி மொழியில்தான் பேசிக்கொள்கின்றனர். அது அவர்களுக்குள் பேசப்படும் ஒரு மொழி. இவர்கள் பயங்கரமான கொள்ளையர்கள், முகமூடிக் கொள்ளை, வீட்டின் பூட்டை உடைத்து திருடுவது, கவனத்தை திசை திருப்பி பணம், நகை பறிப்பது, வழிப்பறி, செல்போன் பறிப்பு போன்ற அனைத்துக் குற்றங்களிலும் ஈடுபடுபவர்கள்.

பார்த்தி இனத்தைச் சேர்ந்த இவர்கள் தொழிலே கொள்ளை அடிப்பதுதான். அந்தக் கொள்ளையில் ஈடுபட்டவர்களில் 2 பேர் ரயில் கொள்ளையிலும் சம்பந்தப்பட்டுள்ளனர். கொள்ளையர்கள் 7 பேர் தவிர இன்னும் கைது செய்யப்படவேண்டியவர்கள் ஏராளமானோர் உள்ளதாக சிபிசிஐடி தரப்பில் கூறப்படுகிறது. கொள்ளையர்கள் 5.78 கோடி ரூபாயை மூன்று மாதத்தில் செலவழிக்க வாய்ப்பில்லை. ஊரில் சொத்து, தங்க நகைகள் வாங்கியிருப்பார்கள் என்பதால் அதை விசாரணை நடத்திக் கைப்பற்ற தனிப்படை ம.பி.க்குச் சென்றுள்ளது.

தற்போது கொள்ளையர்கள் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் சொத்துகள், நகை ஏதாவது வாங்கியிருந்தால் அதைக் கைப்பற்றுவதன் மூலம் குற்றத்தை நிரூபிக்க முடியும். இல்லாவிட்டால் சிபிசிஐடி போலீஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதில் சிக்கல் உருவாகும்.

# உலகிலேயே முதல் முறை: செய்தி வாசிப்பாளர் ஆன ரோபோக்கள்; சீனா அறிமுகம்



உலகத்திலேயே முதல் முறையாக சீனாவில் செய்தி வாசிக்கும் செயற்கை நுண்ணறிவு ரோபோக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

செய்திகள் வாசிக்கும் ஏஐ ரோபாக்களை சின்ஹுவா செய்தி நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. சீன செய்தி வாசிப்பாளர்களின் தோற்றத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஏஐ ரோபோக்கள், திரையில் ஓடும் எழுத்துகளைப் படிக்கும். செய்திகளுக்கு ஏற்றவாறு தொடர்ந்து அவற்றின் வாய் அசையும் வகையில் ரோபோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆங்கிலம் மற்றும் சீன மொழி என இரு மொழிகளில் செய்திகளை வாசிக்க தனித்தனியாக இரண்டு ஏஐ ரோபோக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேடுதல் பொறிகள் மற்றும் குரலைக் கண்டுணர்தல் தொழில்நுட்பங்களின் மூலம் இவை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஏஐ ரோபோக்கள் 24 மணி நேரமும் அயர்வின்றித் தொடர்ந்து வேலை செய்யும். முக்கியச் செய்திகளை விரைந்து தடுமாற்றமில்லாமல் வாசிக்கும். இவை நிஜ ஏஐ ரோபோக்களைப் போல சுயமான சிந்தித்து முடிவெடுக்காமல், செய்தியைப் படிக்க மட்டுமே செய்யும் என்று சின்ஹூவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நவ.7 அன்று சீனா நடத்திய உலக இணைய மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த ரோபோக்கள் எப்போது தினசரிப் பயன்பாட்டுக்கு வரும் என்பது இன்னும் தெரியவில்லை.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட உயரிய தொழில்நுட்பங்களில் உலகளாவிய அளவில் முதலிடத்தைப் பிடிக்கத் துடிக்கிறது சீனா. அமெரிக்காவுடனான வர்த்தகப் போர் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது. ஏற்கெனவே அமெரிக்கத் தொழில்நுட்பங்களைச் சீனா திருடுவதாக டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டியது குறிப்பிடத்தக்கது.

# 2,000 ஆண்டுகள் பழமையான சீன மது!

மத்திய சீனாவின் ஹெனான் மாகாணத்திலுள்ள பண்டைய கல்லறையிலிருந்து சுமார் 2,000 ஆண்டுப் பழமையான 3.5 லிட்டர் மது கண்டறியப்பட்டிருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தோண்டியெடுத்த வெண்கலப் பானைக்குள் இந்த மது இருந்தது. முதற்கட்ட ஆய்வில் இது அரிசியில் தயாரிக்கப்பட்டிருப்பது தெரியவந்திருக்கிறது. இதற்கு முன்பு கண்டெடுக்கப்பட்ட மது வகைகளும்கூட அரிசி, சோள தானியங்களால் தயாரிக்கப்பட்டவையே.

விதவிதமான வண்ணம் பூசப்பட்ட களிமண் பானைகளும், வெண்கலக் கலைப்பொருட்களும் கிடைத்திருக்கின்றன. காட்டு வாத்து வடிவிலான விளக்கு, ஆராய்ச்சியாளர்களை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது. 2,000 ஆண்டுகளுக்கு முன்பான பண்டைய சீனர்களின் இறுதிச் சடங்குகள் எந்தவிதமாக இருந்திருக்கும் என்பதை அறியும்பொருட்டு, இந்த ஆராய்ச்சியில் தீவிரம் காட்டிவருகிறார்கள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள்!

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

ஞாயிற்றுக்கிழமை 11.11.2018
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

# தவறுகளை நேர் செய்யும் நேரமிது

இலங்கையின் பாராளுமன்றத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் கலைத்துள்ளார். இதற்கான உத்தியோகபூர்வ வர்த்தமான அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. இதனால் நாடு மீண்டும் ஒரு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. குறிப்பாக இதை சர்வதேசமும் சரி உள்நாட்டு மக்களும் சரி எதிர்பார்க்கவில்லை என்றே தோன்றுகிறது. 19ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் நான்கரை வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது என்ற போதிலும் அரசியலமைப்பின் 33 (2) (அ) பிரிவின் கீழும் அரசியலமைப்பின் இரண்டாவது பிரிவின் 62ஆவது ஷரத்தின் கீழும் 1981 முதலாம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் பிரிவு 10இன் கீழும் தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி பாராளுமன்றத்தைக் கலைத்துள்ளார். அதன் மூலம் எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதி தேர்தல் நடத்துவதாகவும் ஜனவரி 17ஆம் திகதி புதிய பாராளுமன்றம் கூடும் எனவும் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. முன்னதாக எதிர்வாரும் 14ஆம் திகதி பாராளுமன்றம் கூடுவதாக இருந்தது. அதன்போது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்திருந்தது. இந்த நிலையிலேயே பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பாராளுமன்றத்தை ஒரு வருடத்திற்குப் பின்னர் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருந்தது. ஆனால் அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் பிரகாரம் நான்கரை வருடங்களுக்குப் பின்னரே பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கலாம். எனினும் அதற்கு முன்னர் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டாலோ அல்லது சபையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவோடு ஒருபிரேரணையை கொண்டு வந்தால் அதன் மூலம் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம். அதனை விடவும் நாட்டில் அரசியல் நெருக்கடி நிலை ஏற்பட்டால் அதனைக் காரணம் காட்டியும் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் என்றும் கடந்த சில நாட்களாக பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. எது எப்படியோ இந்த விடயங்களைக் கருத்திற் கொண்டே ஜனாதிபதி தனது அதிகாரத்தின் மூலம் பாராளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

கடந்த அக்டோபர் மாதம் 26ஆம் திகதி பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார். இதனையடுத்து பாராளுமன்றத்தையும் 16ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். எனினும் புதிய பிரதமரின் நியமனம் சட்ட விரோதமானது என்று தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தானே இன்னும் பிரதமர் என்றும் அலரிமாளிகையை விட்டு வெளியேற மாட்டேன் எனவும் கூறி அங்கேயே தங்கியிருந்தார். இந்நிலையில் பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளுக்கு அமைவாக பாராளுமன்றத்தை எதிர்வரும் 14ஆம் திகதி கூட்டுவதற்கான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி விடுத்திருந்தார். எனினும் அன்றைய தினமே பெரும்பான்மை பலத்தை நிரூபிப்பதற்கான நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி என்பன கோரிக்கை விடுத்திருந்தன. சர்வதேசமும் இதே கருத்தையே வலியுறுத்தியிருந்தது. இந்நிலையிலேயே ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைக் கோரி பெரும்பான்மையை நிரூபிக்கலாம் என்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கனவுக்கு சிறுபான்மைக் கட்சிகள் முட்டுக்கட்டையாக இருந்ததால் அவர்களின் பெரும்பான்மைக் கனவு நிறைவேறாமல் போனது. அதைவிடவும் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்தும் அவர்களால் போதுமானளவு உறுப்பினர்களை பிரித்தெடுக்கும் முயற்சியும் தோல்வியில் முடிந்தமையே பாராளுமன்றக் கலைப்புக்கு மூல காரணம்.

எதிர்வரும் தேர்தலில் எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் சிறுபான்மை கட்சிகளின் ஆதரவும் தேவைப்படும். இதன் மூலம் குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு கடந்த அரசாங்கத்தில் இருந்து தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் தங்களின் சுயநலத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டது. அது இனிவரும் காலங்களிலும் தொடராமல் தசாப்த காலங்களாக பல அழிவுகளைச் சந்தித்த மக்களுக்கு இனிவரும் காலத்திலாவது தங்களின் இதயசுத்தியுடனான தீர்வைப் பெற்று அவர்களின் வாழ்வை விளங்கச் செய்ய வேண்டும். இதுவே எமது மக்களின் எதிர்பார்ப்பு. இந்தச் சந்தர்ப்பத்தையாவது வீணடிக்காமல் தாங்கள் விட்ட தவறுகளை நேர் செய்து கொள்ள கூட்டமைப்புக்கு பொன்னான தருணமிது.

பொறுத்திருந்து பார்ப்போம் செய்வார்களா என்று!

# பாராளுமன்றத்தைக் கலைக்கமுடியுமா? முடியாதா?

19வது திருத்தத்திற்குமுன் பொதுத்தேர்தல் நடைபெற்று முதல் ஒரு வருடத்திற்குள் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது. அதன்பின் வேண்டியநேரம் கலைக்கலாம். இந்த அடிப்படையில்தான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக குமாரதுங்க அவரது ஆட்சியில் இரு தடவைகள் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

19வது திருத்தத்தின் பின் முதல் 4 1/2 வருடங்களுக்குள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 2/3 பெரும்பான்மையால் பாராளுமன்றில் பிரேரணை நிறைவேற்றுவதன்மூலம் கோரிக்கை விடுத்தாலேயொழிய கலைக்க முடியாது.

### இதன் சட்டத்தன்மையும் வாதப்பிரதிவாதங்களும்

அரசியலமைப்பின் சரத்து 33 ஜனாதிபதியின் கடமை, அதிகாரம் மற்றும் தொழிற்பாடு தொடர்பாக குறிப்பிடுகின்றது. இதில் சரத்து 33(2)(ஞி) ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு, ஒத்திவைப்பதற்கு, கலைப்பதற்கு அதிகாரம் இருக்கின்றது; என்று கூறுகின்றது.

சரத்து 70(1) ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கூட்டலாம், ஒத்திவைக்கலாம், கலைக்கலாம். என்று கூறிவிட்டு அதற்கு ஒரு கட்டுப்பாட்டை விதிக்கிறது. அதுதான்

முதல் 4 1/2 வருடங்களுக்கு பாராளுமன்றத்தைக் கலைக்கக்கூடாது; என்பதாகும்.

இங்கு புரிந்துகொள்ள வேண்டியது 33(2)(C) ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரம் இருக்கின்றது; என்பதை அடையாளப்படுத்துகின்றது.

70(1) ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கலாம். ஆனால் முதல் 41/2 வருடங்களுக்கு இந்த அதிகாரத்தைப் பாவிக்கக்கூடாது என்று கட்டுப்படுத்துகிறது.

அதாவது உங்களுக்கு அதிகாரம் இருக்கின்றது. ஆனால் முதல் 4 1/2 வருடம் பாவிக்க முடியாது என்று கட்டுப்பாடு இடுகின்றது. இங்கு பாவிக்கப்படுகின்ற சொல் shall not அதாவது கலைக்கவே கூடாது. என்பதாகும்.

இந்தக் கட்டுப்பாட்டை மீறி எவ்வாறு ஜனாதிபதி கலைக்க முடியும்? ஆனால் இந்தக்கட்டுப்பாட்டிற்கு ஒரு விதிவிலக்கு உண்டு: அதுதான் 2/3 பெரும்பான்மையால் வேண்டுகோள் விடுத்தால் அந்தக்கட்டுப்பாடு தளர்த்தப்படுகின்றது என்பதாகும்.

அதிகாரத்தை அடையாளப்படுத்துகின்ற 33(2)(C) அதனைக்கட்டுப்படுத்துகின்ற 70(1)ஐ எவ்வாறு மேவமுடியும். எனவே, மேவமுடியும் என்பது பிழையான வாதம்.

பிழையான ஆலோசனைகளைக் கேட்டு ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டால் என்ன செய்வது?

### நீதிமன்றம் செல்லமுடியுமா?

19வது திருத்தத்திற்குமுன் ஜனாதிபதிக்கெதிராக நீதிமன்றம் செல்லமுடியாது. ஆனால் ஜனாதிபதியின்கீழ் வருகின்ற அமைச்சுகளைப் பொறுத்தவரை அவர் அவற்றிற்கான அமைச்சர் என்றவகையில் பிழைகள் நடக்கும்போது அவருக்கு எதிராக நீதிமன்றம் செல்லமுடியும். ஆனால் ஜனாதிபதிக்குப் பதிலாக சட்டமாஅதிபரை பிரதிவாதியாக குறிப்பிடவேண்டும்.

19இற்குப் பின் ஜனாதிபதிக்கெதிராக, நேரடியாக சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் தொடுக்க முடியாது. அதைத்தவிர ஜனாதிபதிக்கெதிராக அடிப்படை உரிமைமீறல் மனு கொண்டுவரலாம். அதில் பிரதிவாதியாக சட்டமாஅதிபர் குறிப்பிடப்படுவார். எனவே, தாராளமாக வழக்குத் தாக்கல் செய்யமுடியும்.

### முன்னாள் பிரதம நீதியரசரின் வாதம்

2002 ம் ஆண்டு கொண்டுவர முயற்சிக்கப்பட்ட அரசியலமைப்புத் திருத்தத்தில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி அதனை பாராளுமன்றத்தின் வேண்டுகோளின்பேரில் செய்வதற்கான ஒரு திருத்தத்தை கொண்டுவர அரசாங்கம் முயற்சித்தபோது மக்கள் நிறைவேற்றுத்துறைக்கு பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு வழங்கிய அதிகாரத்தை மக்களின் அனுமதியின்றி பாராளுமன்றத்திற்கு வழங்கமுடியாது; என்ற நீதிமன்றத் தீர்ப்பின்படி இப்பொழுது பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை 41/2 வருடங்களுக்கு கட்டுப்படுத்தி அதனை பாராளுமன்றத்தின் 2/3 பங்கின் அனுமதியுடன் செய்வது நிறைவேற்றதிகாரத்தை சட்டவாக்கத் துறைக்கு மாற்றுவதாகும்.

அது சர்வஜன வாக்கெடுப்பின்றி செல்லுபடியாகாது. எனவே, ஜனாதிபதியின் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இன்னும் ஜனாதிபதிக்கு இருக்கின்றது என்பதாகும். ஆனால் இலங்கையில் ஒரு சட்டத்தை ஆக்கியதன்பின் அதனை நீதிமன்றில் கேள்விக்குட்படுத்தமுடியாது. எனவே, திரு சரத் என் செல்வாவின் வாதம் எவ்வளவு வலுவானதாக இருந்தாலும் இப்பொழுது சட்டம் கலைக்க முடியாது; என்று கூறும்போது கலைக்க முடியும் என்று வாதிடமுடியாது.

எனவே, பாராளுமன்றத்தைக் கலைக்கமுடியாது.

**சட்டமுதுமாணி வை.எல்.எஸ்.ஹமீட்**

# இலங்கை அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் தோட்டத் தொழிற்சங்கங்கள் சம்பளப் போராட்டத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன

இலங்கையின் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள், நாட்டின் ஆளும் உயரடுக்கிற்குள் மேலோங்கி இருக்கும் கசப்பான மோதல்களில் வெவ்வேறு அரசியல் கன்னைகளுடன் தங்களை இணைத்துக் கொண்டுள்ளதுடன் இப்பொழுது தங்களது தினசரி ஊதியத்தை 100 சதவிகிதம் அதிகரிக்கக்கோரி தோட்டத் தொழிலாளர்கள் முன்னெடுத்து வரும் போராட்டத்தை நசுக்க முயற்சிக்கின்றன.

அக்டோபர் 26 அன்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த இராஜபக்ஷவை அந்த பதவியில் இருத்தினார். பாராளுமன்ற உறுப்பினரான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா.) தலைவர் ஆறுமுகம் தொண்டமான், உடனடியாக இராஜபக்ஷவுக்கு ஆதரவளித்ததோடு அவர் மலையக புதிய கிராமங்கள் மற்றும் உள் கட்டுமான அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சி கட்டுப்பாட்டில் உள்ள லங்கா ஜாதிகா தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் (LJEWU) முன்னாள் செயலாளர் வடிவேல் சுரேஷ், கட்சியில் இருந்து விலகி, இராஜபக்ஷவுடன் சேர்ந்தார். அவருக்கு வெகுமதியாக ஒரு முக்கிய பதவி கொடுக்கப்பட்டு, பெருந்தோட்டத் தொழிற்துறை இராஜாங்க அமைச்சராக அமர்த்தப்பட்டுள்ளார்.

தங்களது நாசகார அரசியல் நகர்வுகள் சம்பந்தமாக தொழிலாளர்கள் மத்தியில் வளரும் கோபத்தை திசை திருப்பும் முயற்சியில், தோட்டத் தொழிலாளர்களின் தினசரி ஊதியத்தை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக (2,994 டாலர்) உயர்த்துவதாக இராஜபக்ஷ வாக்குறுதியளித்துள்ளார் என தொண்டமானும் வடிவேலும் கூறிக்கொண்டனர்.

மற்ற பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களான பி திகாம்பரத்தின் தேசிய தொழிலாளர் சங்கம், மனோ கனேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் பி. ராதாகிருஷ்ணனின் மலையக மக்கள் முன்னணியும் பதவி நீக்கப்பட்ட பிரதமர் விக்கிரமசிங்கவை ஆதரிக்கின்றன.

விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த மூன்று தொழிற்சங்க அதிகாரிகளும், அதிகாரத்தை மீட்பதற்கான விக்கிரமசிங்கவின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் தாங்கள் இழந்த சலுகைகளை மீண்டும் பெற முண்டியடிக்கின்றனர்.

இந்த சூழ்ச்சிகள் ஒருபுறம் இருக்க, ஊதிய உயர்வு கோரி செப்டம்பர் மாதத்தில் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்த தோட்டத் தொழிலாளர்கள், தங்கள் போராட்டத்தை தொடர்கின்றனர்.

மத்திய மலையகப் பகுதியில் நோர்வுட், ஐரவி, நல்லத்தண்ணி மற்றும் ஹப்புகஸ்தென்னே தோட்டங்களில் இருந்து நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் ஊதிய உயர்வைக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டங்களின் போது தொழிலாளர்கள் தொண்டமான் மற்றும் வடிவேல் சுரேஷை கண்டனம் செய்தனர். சம்பளப் போராட்டத்தை காட்டிக் கொடுப்பதற்காக தொழிற்சங்க அதிகாரிகளுக்கு அமைச்சரவை பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். கொழும்பிற்கு தெற்கில் களுத்துறை மாவட்ட நகரான மத்துகமவிலும் சுமார் 100 தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நீண்டகாலமாக இடம்பெற்று வரும் தோட்டத் தொழிலாளர்கள் போராட்டத்துக்கு இளைஞர்களதும் இலங்கை தொழிலாள வர்க்கத்தின் ஏனைய பிரிவினர்களதும் பலம்வாய்ந்த ஆதரவு கிடைத்து வருகின்றது.

உதாரணமாக, அக்டோபர் 26 அன்று, கேகாலை மாவட்டத்தில் தெரணிகல மற்றும் தெஹியோவிட தோட்டங்களில் இருந்து சுமார் 1,000 பாடசாலை ஆசிரியர்களும் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலையில் நூற்றுக்கணக்கான பயிற்சி ஆசிரியர்களும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக அணிதிரண்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய் பயிற்சி கல்லூரி ஆசிரியர்களும் கைத்தாடி மருத்துவ கல்லூரி மாணவர்களும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக அதே தினம் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஒரு கோப்பாய் பயிற்சி கல்லூரி ஆசிரியர் ஊடகங்களுக்கு பேட்டியளித்த போது, 'எங்களுடன் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் தோட்டத் தொழிலாளர்களாக இருக்கின்றனர். அவர்களது படிப்பை தொடர, தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் 1,000 ரூபாய்க்கு செலுத்தப்பட வேண்டும், எனவே தான் நாங்கள் அவர்களின் போராட்டத்தை ஆதரிக்கிறோம்' எனத் தெரிவித்தார்.

சிறிசேனவின் அரசியல் சதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அக்டோபர் 24, தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்புத் தெரிவித்தது, மத்திய கொழும்பில் காலி முகத் திடலில், கொழும்பிலும் அதன் புறநகர் பகுதியிலும் இருந்து வந்திருந்த தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம்களுமாக சுமார் 5,000 இளம் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். முதல் தடவையாக, இலங்கை ஆளும் உயரடுக்கிற்கு அதிர்ச்சி ஏற்படுத்தும் வகையில், இந்த ஆர்ப்பாட்டம் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

உண்மையில், சிறிசேன மற்றும் விக்கிரமசிங்க நிர்வாகத்தின் நெருக்கடியைத் தூண்டிய பிரதான காரணி, சமூக உரிமைகள் மற்றும் வாழ்க்கை நிலைமைகளை சீரழிக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கன நடவடிக்கை திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தியதற்கு எதிரான வெகுஜன எதிர்ப்பே ஆகும். தோட்டத் தொழிலாளர்கள் ஊதிய போராட்டம் இந்த வளர்ந்து வரும் வெகுஜன இயக்கத்தில் ஒரு முக்கிய அங்கம் ஆகும். அதனாலேயே தொழிற்சங்கங்கள் இந்த போராட்டத்தை நிறுத்த முற்படுகின்றன.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படும் என அவர்கள் வாக்குறுதி அளித்ததால்த்தான் அமைச்சர் பதவிகளை ஏற்றுக் கொண்டோம் என தொண்டமானும் வடிவேலும் கூறிக்கொள்ளும் அதேவேளை, பிரச்சினையை திறைசேரி அதிகாரிகளுடன் கலந்துரையாட வேண்டும் என இராஜபக்ஷவிடம் கூறியுள்ளதாக தெரிய வருகின்றது.

ஆனால், நவம்பர் 5 அன்று திறைசேரி அதிகாரிகளோடு நடந்த பேச்சுவராத்தையில், தோட்ட உரிமையாளர் சங்கமானது மீண்டும் தொழிலாளர்களின் 100 சதவிகித ஊதிய உயர்வுக்கான கோரிக்கைகளை நிராகரித்துள்ளது. தோட்ட உரிமையாளர் சங்கம், தோட்டத் தொழிலாளர்களுக்கு 20 சதவிகித அல்லது 100 ரூபாய் அதிகரிப்பை மட்டுமே கொடுக்கும் என்று மீண்டும் கூறியதுடன், உற்பத்தித் திறனுடன் பிணைக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் மூலம் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 400 ரூபாய்களை சம்பாதிக்க முடியும் என்று மேலும் அறிவித்துள்ளது.

தோட்டத் உரிமையாளர் சங்கம், வருடாந்த தீபாவளி பண்டிகைக்காக 10,000 ரூபா போனஸ் கொடுப்பதையும் கூட நிராகரித்ததுடன், பெருந்தோட்டக் கம்பனிகள் நஷ்டத்தில் இயங்குவதால் நாளொன்றுக்கு 1000 ரூபா சம்பளம் கொடுப்பது என்பது 'முற்றிலும் யதார்த்தமற்றது' என்று வலியுறுத்தியுள்ளது.

தேயிலை தொழிற்சாலை உரிமையாளர் சங்கமும், 1000 ரூபா தினசரி ஊதியம் கொடுப்பது தொழில்துறைக்கு 'பேரழிவு' தரும் என்றும் எந்தவொரு ஊதிய உயர்வும் 'உற்பத்தித் திறன் மற்றும் வருகையுடன் இணைக்கப்பட வேண்டும்' என்றும் தெரிவித்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் இலங்கை தொழிலாள வர்க்கத்தின் மிக வறிய பகுதியைச் சேர்ந்தவர்கள். 150 ஆண்டுகளுக்கு முன்னர் காலனித்துவ ஆட்சி காலத்தில் பிரிட்டிஷ் தோட்ட உரிமையாளர்களால் தென் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட பெருந்தோட்டத் தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் இன்றும் சிறிய வரிசை வீடுகளிலேயே, அடிப்படை வசதிகள் இல்லாமல், ஆரோக்கியமற்ற மற்றும் கல்வி வசதிகள் இல்லாத நிலையில் வாழ்கின்றனர். அவர்களின் தற்போதைய தினசரி ஊதியம் அடிப்படை உணவு தேவைகளுக்கு கூட போதுமானதல்ல.

கண்டியில் சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் சமீபத்திய அறிக்கையில், 4.5 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு, தோட்டத் தொழிலாளர்களின் சராசரி வாழ்க்கை ஊதியமாக ஒரு மாதத்திற்கு 44,711 ரூபா தேவை என குறிப்பிட்டுள்ளது.

கடந்த மாத அரசியல் சதிக்கு முன்னதாக, பெருந்தோட்ட அமைச்சர் நவீன் திஸாநாயக்க, தொழிலாளர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ள முடியாதது மற்றும் அதைக் கொடுத்தால் தொழில்துறை 'சிதைந்து போகும்' என்று கம்பனிகளுடன் சேர்ந்து அறிவித்தார். இராஜபக்ஷ முகாமினதும் நிலைப்பாடு இதுவே ஆகும்.

முதலாளித்துவ அரசியல்வாதிகளான தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள், தோட்டத் தொழிலாளர்களைப் பாதுகாக்கவில்லை, மாறாக கம்பனிகளுக்கும் அரசாங்கத்திற்கும் ஒரு தொழிற்துறை பொலிஸ்காரனாக செயல்படுகின்றன.

ஆளும் உயரடுக்கின் போட்டி கன்னைகளுடன் தோட்டத் தொழிற்சங்கங்கள் அணிதிரண்டிருப்பது, இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடியுடன் அல்லது தோட்டத் தொழிற்துறையுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. ஏனைய தொழிற்சங்கங்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் அல்லது சிறிசேனவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளன.

இலங்கை முதலாளித்துவத்தின் எந்த கன்னை அல்லது அரசியல் கூட்டணி இறுதியில் அதிகாரத்தைக் கைப்பற்றினாலும், புதிய அரசாங்கம் பெருவணிக மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களின் இலாப கோரிக்கைகளை கொடூரமாக செயல்படுத்தும். தொழிற்சங்கங்கள் மற்றும் போலி இடது அமைப்புக்களின் உதவியுடன், அது தொழிலாள வர்க்கத்தினது அனைத்து எதிர்ப்புகளையும் ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்.

அதனால்தான், பெரிய தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள், மற்றும் நாடு முழுவதும் உள்ள வேலைத் தளங்களிலும், அயல் பிரதேசங்களிலும் இருக்கும் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் இருந்தும் முதலாளித்துவத்தின் அனைத்துப் பிரிவுகளில் இருந்தும் சுயாதீனமான நடவடிக்கை குழுக்களை உருவாக்கவும், சோசலிசக் கொள்கைகளுக்காகவும் தொழிலாளர்-விவசாயிகளின் அரசாங்கத்துக்காகவும் போராட முன்வர வேண்டும்.

**நன்றி: WSWS**

# தமது கட்சி உறுப்பினர்களை தக்க வைத்துக்கொள்ள போராடும்

# தமிழ்–முஸ்லிம் கட்சிகள்



இலங்கையில் பிரதான கட்சிகளுக்கு தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை தங்களுடன் வைத்து கட்டிக்காப்பது என்பதே இப்போது பெரும்பாடாகி விட்டது.

ஜே.வி.பி கட்சியை தவிர ஏனைய அனைத்துக் கட்சிகளும் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

தமக்கு ஆதரவாக 120 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாக கூறியே மகிந்த ராசபக்சவை பிரதமராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா நியமித்ததாக கூறப்படுகிறது. ஆனால் மைத்திரிபால சிறிசேனா எதிர்பார்த்தது போல 120 அல்ல 113 உறுப்பினர்களை கூட தம் பக்கம் இழுக்க அவரால் முடியாமல் இருக்கிறது.

இதன் கோபாவேசத்தை கடந்த வியாழக்கிழமை சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பேசிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் உரையில் காண முடிந்தது.

என்னை சீண்டாதீர் என ரணில் விக்கிரமசிங்காவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா கடும் தொனியில் எச்சரித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நாங்கள் நிரூபிப்போம்.. இதனை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.. பல்வேறு வித்தைகளை காட்டி ஆட்சியை கைப்பற்ற நினைக்கிறார் ரணில். நான் அதற்கு கடைசி வரை இடமளிக்க மாட்டேன்.. என்னிடம் பல அஸ்திரங்கள் கைவசம் உள்ளன.. அவற்றை பயன்படுத்தி அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க வேண்டுமானால் அதையும்

**இரா.துரைரத்தினம்**
**சுவிட்சர்லாந்து**

செய்வேன். விளையாட வேண்டாம் என்று நான் சம்பந்தப்பட்டவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன் என அவர் எச்சரித்திருக்கிறார்.

மைத்திரிபால சிறிசேனா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பக்கம் செல்வோருக்கு கோடிக்கணக்கான பணம் வழங்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில் கட்சி மாறும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பணம் இலஞ்சம் அல்ல. அது சன்மானம். அதை தவறு என சொல்ல முடியாது என இலங்கையின் இடதுசாரி தலைவர்களில் ஒருவரும் மகிந்த ராசபக்ச தலைமையிலான அணியில் அங்கம் வகித்து அமைச்சர் தேசிய நல்லிணக்க அமைச்சை பெற்றிருக்கும் வாசுதேச நாணயக்கார கூறியிருக்கிறார்.

மகிந்த ராசபக்சவுக்கு பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக கட்சி மாறும் உறுப்பினர்களுக்கு கோடிக்கணக்கான பணமும் அமைச்சு பதவிகளும் வழங்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கும் நிலையிலேயே அமைச்சர் வாசுதேச நாணயக்கார நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கும் நடவடிக்கை தவறு அல்ல என சுட்டிக்காட்டியிருக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கும் அநாகரீகச்செயல் இலங்கை இந்தியா ஆகிய நாடுகளில் தான் நடைபெறுகிறது.

மேற்குலக நாடுகளில் இத்தகையக அநாகரீக செயல்கள் நடந்ததாக நான் இதுவரை அறியவில்லை.

தமக்கு ஆதரவு தருமாறும் வாசுதேசவ நாணயக்காரவின் கூற்றுப்படி சன்மானம் தருவதாகவும் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களிடம் நடத்தப்பட்ட உரையாடல்களின் ஒலிப்பதிவுகளும் அண்மையில் வெளிவந்திருந்தது.

மகிந்த ராசபக்சவுக்கு ஆதரவை தெரிவிப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவுக்கு இலஞ்சம் கொடுக்க முற்பட்டமை தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்திருக்கிறார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்தரன் ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு மாறி பிரதி அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்ட நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மகிந்த தரப்பு தனித்தனியாக அணுகி பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருக்கிறது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் அவர்களை அழைத்த மகிந்த ராசபக்ச தனக்கு ஆதரவு தருமாறும் இல்லை என்றால் பாராளுமன்றத்தில் நடுநிலை வகிக்குமாறும் கோரி இருந்தார்.

இதன் பின்னர் கடந்த வாரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிலங்கா தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளின் தலைவர்களும் சென்றிருந்தனர்.

இந்த இரண்டு சந்திப்புக்களிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மகிந்த தரப்புக்கு ஆதரவு வழங்க மறுத்ததை அடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தனித்தனியாக அணுகி தமக்கு ஆதரவு வழங்குமாறு மகிந்த தரப்பினர் கோரி வருகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா ரணில் விக்கிரமசிங்காவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கி மகிந்த ராசபக்சவை பிரதமராக நியமிப்பதற்கு முதலே தமிழ் தேசியக் கூட்டமைப்பு மூலம் வன்னி மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சிவசக்தி ஆனந்தனை மகிந்த தரப்பு அணுகி பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததாக சிவசக்தி ஆனந்தன் தனக்கு நெருக்கமான தரப்புக்களிடம் கூறியிருந்தார்.

அதன் பின்னர் மகிந்த ராசபக்ச பிரதமராக பதவி ஏற்ற பின்னர் மீண்டும் சிவசக்தி ஆனந்தனை மகிந்த தரப்பு அணுகியதாகவும் தாம் வர்த்தக வாணிபத்துறை அமைச்சு தரவேண்டும் என கோரியிருப்பதாகவும் அதற்கு இணங்கினால் அமைச்சு பதவியை ஏற்று மகிந்தவுக்கு ஆதரவு வழங்க போவதாக சிவசக்தி ஆனந்தன் ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்ததாக செய்திகள் வெளிவந்திருந்தன.

சிவசக்தி ஆனந்தன் பேசிய விடயங்களை ஒலி வடிவில் அந்த ஊடகம் வெளியிட்டிருந்தது. தான் மட்டுமல்ல செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிமலநாதன், சரவணபவன் போன்றவர்களும் பெருந்தொகை பணத்தை பெற்றுக்கொண்டு கட்சி மாற இருக்கிறார்கள் என்றும் அந்த ஒலி நாடாவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சரவணபவன் ஆகியோர் மானநஷ்ட வழக்கு போடப்போவதாக பத்திரிகை அறிக்கை வெளியிட்டிருந்தனர். ஆனால் அவர்கள் மானநஷ்ட வழக்கு இதுவரை போடவில்லை என்றே அறிய முடிகிறது. பத்திரிகை அறிக்கையோடு அது நின்று விடும் என்றே நம்பபடுகிறது.

ஏனெனில் கடந்த வருடத்தில் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து தன்னைத்தவிர ஏனைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15பேருக்கும் தலா 2கோடி இலஞ்சம் வழங்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் பகிரங்கமாக குற்றம் சாட்டியிருந்தார். வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவு வழங்கியதற்காக இந்த இலஞ்சம் வழங்கப்பட்டதாக சிவசக்தி ஆனந்தன் தெரிவித்திருந்தார்.

இதற்காக மானநஷ்டம் கோரி சிவசக்தி ஆனந்தனுக்கு மாவை சேனாதிராசா சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பியிருப்பதாகவும் தாம் கோரிய தொகையை தராவிட்டால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்போவதாகவும் அறிவித்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இந்த கடிதத்திற்கு பதில் அனுப்பவும் இல்லை. மாவை சேனாதிராசா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவும் இல்லை.

எனவே செல்வம் அடைக்கலநாதனோ அல்லது சரவணபவனோ மானநஷ்டம் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய மாட்டார்கள் என்பது சிவசக்தி ஆனந்தனுக்கு தெரியும்.

சிவசக்தி ஆனந்தன் அமைச்சு பதவி எடுக்கப்போவதாக செய்திகள் வெளிவந்த போதிலும் இதுவரை அவர் அமைச்சு பதவியை பெறவில்லை. எனினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முடிவுகள் தன்னை கட்டுப்படுத்தாது என்றும் தெரிவித்திருக்கிறார்.



மகிந்த ராசபக்ச மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்படுகின்ற போது சிவசக்தி ஆனந்தன் மகிந்த ராசபக்சவுக்கு ஆதரவளிப்பார் அல்லது நடுநிலை வகிப்பார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசனை அண்மையில் மகிந்த ராசபக்ச அணி சந்தித்து ஆதரவு கோரியிருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை எடுக்கும் முடிவிற்கே தான் கட்டுப்படுவதாக தான் அவர்களிடம் கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவித்திருக்கிறார்.

சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மகிந்த ராசபக்சவுக்கு ஆதரவு அளிப்பதில்லை, ரணில் விக்கிரமசிங்கவிற்கே ஆதரவு அளிப்பது என்ற முடிவை அறிவித்திருக்கின்ற போதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை தனித்தனியாக சந்தித்து தமக்கான ஆதரவை தருமாறு மகிந்த அணி கோரி வருகிறது. அந்த முயற்சி தமக்கு வெற்றி அளிக்கும் என்ற நம்பிக்கையை மகிந்த அணியினர் கைவிடவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைகொடுத்து வாங்க முடியாது என முன்னாள் இராணுவ தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேனா கூறி 48 மணி நேரத்திற்குள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் கட்சி தாவி பிரதி அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்டார்.

இதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்க முடியாது என்ற நம்பிக்கையும் தகர்க்கப்பட்டு விட்டது.

இன்றுள்ள நிலையில் ஜே.வி.பியை மட்டுமே விலை கொடுத்து வாங்க முடியாது என்ற நிலை காணப்படுகிறது. சில வேளைகளில் அது கூட தகர்க்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் களேபரத்தில் தங்கள் உறுப்பினர்களை கட்சி தாவால் பார்த்துக்கொள்ளும் பெரும் போராட்டத்தில் ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஷ் கட்சி தலைமையும் றிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஷ் தலைமையும் ஈடுபட்டுள்ளன.

தங்கள் உறுப்பினர்கள் தம்மை விட்டு கட்சி தாவி சென்று விடுவார்களோ அச்சம் மேலோங்கியிருக்கிறது.

சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஷ் கட்சி தலைவர் ரவூப் ஹக்கீம் தன்னுடன் ஏனைய 6 உறுப்பினர்களையும் ஆடம்பர வீடு ஒன்றில் வைத்து பராமரித்து வந்தார். மகிந்த தரப்பினர் தனது உறுப்பினர்களுடன் தனித்தனியாக பேசி கவர்ந்து செல்லாமல் பார்ப்பதில் கடந்த இரு வாரங்களாக பெரும் பிராயத்தனத்தில் ரவூப் ஹக்கீம் ஈடுபட்டிருந்ததார்.

இதன் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை கடந்த புதன் கிழமை சந்தித்து விட்டு தனது ஆறு உறுப்பினர்களையும் அழைத்துக்கொண்டு புனித உம்ரா கடமைக்காக மக்காவுக்கு புறப்பட்டு சென்றுள்ளார்.

இலங்கையில் தனது உறுப்பினர்களை வைத்திருந்தால் தப்பி தவறி யாராவது கொண்டு சென்று விடுவார்களோ என்ற அச்சத்தில் அவர் தனது உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு மக்காவுக்கு புறப்பட்டிருக்கிறார்.

அதேபோன்று அகில இலங்கை மக்கள் காங்கிரஷ் தலைவர் றிசாத் பதியுதீனும் தனது உறுப்பினர்கள் ஐந்து பேரில் ஒரு உறுப்பினரை பறிகொடுத்த நிலையில் ஏனைய நான்கு பேரையும் அழைத்துக்கொண்டு மக்காவுக்கு புறப்பட்டு சென்றுள்ளார். றிசாத் பதியுதீனும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை சந்தித்து விட்டே மக்காவுக்கு சென்றிருக்கிறார்.

எதிர்வரும் 13ஆம் திகதி இரவு இவர்கள் ஹஜ் யாத்திரையை முடித்துக் கொண்டு நாடு திரும்புவர் என்று கூறப்படுகிறது.

அதற்கு மறுநாள், 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூட உள்ளது. அன்றைய தினம் ஜனாதிபதியின் உரை மட்டுமே இடம்பெறும் நம்பிக்கை வாக்கெடுப்பு இடம்பெறாது என்றும் கூறப்படுகிறது.

விரைவாக நாடாளுமன்றத்தை கூட்டி ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறு ஐரோப்பிய ஒன்றியமும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்காத நோர்வே மற்றும் சுவிட்சர்லாந்து நாடுகளும் இணைந்து கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வரும் நிலையில் பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தி ஜனநாயகத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா நிலைநாட்டுவாரா என்பதும் இன்னும் உறுதி இல்லை.

மக்காவுக்கு சென்ற முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக கூடி பேசி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னர் ஒரு தடவை ஆளும் கட்சியின் பக்கம் கட்சித்தாவல்கள் நடந்த போது சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஷ் உறுப்பினர்களில் சிலர் ஆளும் கட்சியின் பக்கம் சென்ற நிலையில் கனவில் தோன்றிய தலைவர் கட்சியை உடையாமல் காப்பாற்ற நீயும் ஆளும் கட்சியின் பக்கம் சென்றுவிடு என சொன்னதாக ஹக்கீம் சொன்னதையும் மறந்து விட முடியாது.

புனித மக்காவிலும் ஹக்கீமுக்கும் றிசாத் பதியூனுக்கும் கனவு வராது என்று என்ன நிச்சயம்.

# வர்த்தமானியில் மூடிமறைக்கப்பட்ட சரத்தும் பாராளுமன்றைக் கலைத்தலும்

**கல்முனை நிருபர்**

ஜனாதிபதியின் பாராளுமன்றக் கலைப்புக்கான வர்த்தமானி அறிவித்தலில் முக்கியமான சரத்து குறிப்பிடப்படாமல் ஏனைய சரத்துக்களே குறிப்பிடப்பட்டுள்ளன என்று சட்ட முதுமானி வை.எல்.எஸ்.ஹமீட் தெரிவித்துள்ளார்.

இலங்கை வாழ் மக்கள் அரசியலில் பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் இருந்த நிலையில் நேற்று நள்ளிரவுடன் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சாதக பாதக நிலைகள் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர் மேலும் குறிப்பிடும் போது,

அரசியலமைப்பின் சரத்துக்கள் 70(5), 33(2(C), 62(2) ஆகியவற்றினால் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமையவும் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 10 இற்கு அமையவுமே குறித்த பிரகடனம் வெளியிடப்படுவதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு மிகப்பிரதானமான சரத்து 70(1) ஒன்று குறிப்பிடப்படாமல் மூடிமறைக்கப்பட்டுள்ளது.

இந்தச்சரத்துக்களை முதலில் சற்றுக் கண்ணோட்டம் விடுவோம்

சரத்து 70(5): இது பாராளுமன்றம் கலைப்பிற்கான பிரகடனம் வெளியிடும்போது அப்பிரகடனத்தில் அடுத்த தேர்தல் மற்றும் பாராளுமன்றம் கூடுவதற்கான திகதிகளைக் குறிப்பிட வேண்டுமெனத் தெரிவிக்கின்றது.

சரத்து 33(2)(C): இது பாரளுன்றத்தைக் கூட்டுவதற்கு, ஒத்திவைப்பதற்கு, கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமிருக்கிறது; எனத் தெரிவிக்கின்றது.

சரத்து 62(2) இது பாராளுமன்றம் முன்கூட்டியே கலைக்கப்பட்டாலேயொழிய அதன் ஆயுட்காலம் ஐந்து வருடமெனவும் ஐந்தவருடமுடிவில் பாராளுமன்றம் கலைந்ததாக கொள்ளப்படவேண்டுமெனவும் குறிப்பிடுகின்றது.

பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 10 பாராளுமன்றத்தைக் கலைக்கும் பிரகடனத்தில் வேட்புமனு கையளிக்கப்படும் காலப்பகுதி மற்றும் தேர்தலுக்கான திகதி குறிப்பிடப்பட வேண்டுமெனத் தெரிவிக்கின்றது.

இங்கு இரண்டு சரத்துக்கள் substantive law உடனும் ஒரு சரத்தும் ஒரு பிரிவும் procedural law வுடனும் சம்பந்தப்பட்டது.

அதாவது 33(2)(C) யும் 62(2) உம் ஜனாதிபதியின் பாராளுமன்றம் கலைப்பதற்கான அதிகாரத்தைப் பற்றியும் அடுத்த இரண்டும் திகதிகள் மற்றும் நியமனப்பத்திரத்தாக்கல் சம்பந்தமாகவும் கூறுகின்றது.

இதில் 33(2)(c) பாராளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரமிருக்கிறது; என்கின்றது. 62(2) பாராளுமன்றத்தை முன்கூட்டியே கலைத்தாலேயொழிய பதவிக்காலம் ஐந்து வருடம் என்கின்றது.

முதலாவது அதிகாரமிருக்கின்றது என்கின்றது. அடுத்தது முன்கூட்டியே கலைத்தாலேயொழிய என்பதன் மூலம் ஐந்துவருடம் முடிவதற்குமுன் கலைக்கமுடியும் என்கிறது.

எனவே, பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது; என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. இந்த சரத்துக்களைத்தான் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது ஜனாதிபதிக்கு மேற்படி சரத்துக்களின் பிரகாரம் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்குரிய அதிகாரத்தின்கீழ் தான் இந்தப் பிரகடனத்தை வெளியிடுவதாக ஜனாதிபதி வர்த்தமானியில் தெரிவிக்கின்றார்.

பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற ஜனாதிபதியின் அதிகாரத்தை யாரும் கேள்விக்குட்ப

**சட்ட முதுமாணி**
**வை.எல்.எஸ். ஹமீட்**

டுத்தவில்லை. இந்த அதிகாரத்தை எப்பொழுதுலிருந்து ஜனாதிபதிக்குப் பாவிக்கமுடியும்? என்பதுதான் இங்கு கேள்வி.

19வது திருத்தத்திற்கு முன் முதல் ஒரு வருடத்திற்குள் கலைக்க முடியாது. அவ்வாறு கலைத்திருந்தால் யாராவது ஏற்றுக்கொண்டிருப்பார்களா? அவ்வாறு எப்போதாவது கலைக்கப்பட்டதா? இல்லை.

இப்பொழுது சரத்து 70(1) இல், முதல் 41/2 வருடங்களுக்குள் 2/3 பெரும்பான்மையால் வேண்டுகோள் விடுத்தாலேயொழிய கலைக்கமுடியாது என்று தெட்டத்தெளிவாக சந்தேகங்களுக்கப்பால் சொல்லியிருக்கும்போது அவ்வாறு சொன்ன சரத்தை வர்த்தமானியில் குறிப்பிடாமல் மூடிமறைத்தது ஏன்?

அதாவது உங்களுக்கு பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு அதிகாரம் இருக்கின்றது. ஆனால் முதல் ஒரு வருடத்திற்குள் கலைக்க முடியாது என்று 19முன் கட்டுப்பாடு இருந்தது. இப்போது உங்களுக்கு கலைக்கமுடியும் ஆனால் முதல் நான்கரை வருடங்களுக்கு கலைக்க முடியாது; என்று அரசியலமைப்புச் சட்டம் சொல்லும்போது அவ்வாறு தன்னைக் கட்டுப்படுத்துகின்ற சரத்தை மூடிமறைத்து அதிகாரம் வழங்குகின்ற சரத்துக்களை மட்டும் குறிப்பிட்டு ஜனாதிபதி சட்ட விரோதமாக பாராளுமன்றத்தைக் கலைத்திருக்கின்றாரே! பூனை கண்களை மூடிக்கொண்டால் உலகம் இருண்டுவிடுமா?

யார் ஜனாதிபதிக்கு இந்த ஆலோசனைகளை வழங்குகின்றனர்? 14ம் திகதி படுதோல்வியடைந்துவிடுவோம் என்கின்ற அச்சத்தில் அப்பட்டமாக இவ்வாறு அரசியல் யாப்பை மீறமுடியுமா?

இது ஜனாதிபதிக்கெதிரான குற்றப்பிரேரணைக்கு ஒரு காரணமாகும். நீதிமன்றத்தினூடாக பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்பட்டதும் ஜனநாயகத்தை நேசிக்க அனைவரும் ஜனாதிபதிக்கெதிரான குற்றப்பிரேரணையை ஒற்றுமையாக சமர்ப்பித்து எதிர்காலத்தில் எந்தவொரு ஜனாதிபதியும் இவ்வாறான அத்துமீறல்களைச் செய்யாது தடுக்கவேண்டும்.





# இழக்கப்பட்ட சர்வதேச நம்பிக்கை!

மஹிந்த ராஜபக் ஷவை பிரதமராக நியமித்ததைக் கூட சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டிருக்கும். அதனை அவர் பாராளுமன்றத்தின் ஊடாக செய்திருந்தால், யாரும் திருப்பிக் கேள்வி கேட்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும்.

ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை. மஹிந்தவைப் பிரதமராக்கி விட்டு மறுநாள் பாராளுமன்றத்தையும், 21 நாட்களுக்கு முடக்கினார். இதுதான் மைத்திரிபால சிறிசேனவின் இராஜதந்திரம், அரசியல் அனுபவம், எல்லாவற்றையுமே தலைகீழாக புரட்டிப் போட்டது

மஹிந்த ராஜபக் ஷவை ஏற்றுக் கொள்வதா- ரணில் விக்கிரமசிங்கவை ஏற்றுக் கொள்வதா என்ற குழப்பம் கடந்த 26ஆம் திகதிக்குப் பின்னர் வெளிநாடுகளுக்கு ஏற்பட்டது.

ஆனால், கிட்டத்தட்ட எல்லா நாடுகளுமே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்த நடவடிக்கை அல்லது வழிமுறை சரியானதா என்ற சந்தேகத்தையே பெரும்பாலும் கொண்டிருந்தன.

பிரதமராகப் பதவியேற்க வருமாறு மைத்திரிபால சிறிசேன அழைத்தார், நான் பதவியேற்றேன் என்று, என்றோ ஒரு நாள் மஹிந்த ராஜபக் ஷ தன்னை நியாயப்படுத்திக் கொள்ளலாம். ஆனால், மைத்திரிபால சிறிசேனவினால் அவ்வாறு செய்யமுடியாது. எனினும், அவர் வேறொரு கதையையும், கூறத் தயங்கமாட்டார், ஏனென்றால், கடந்த மூன்றரை ஆண்டுகளில் அவர் முன்னுக்குப் பின் முரணாக கதைகளை விடுவதில், தனது ஆற்றலை நிரூபித்திருக்கிறார்.

சட்ட நிபுணர்களுடன் ஆலோசித்து விட்டு அரசியலமைப்புக்கு அமையவே நடவடிக்கை எடுத்தேன் என்று மைத்திரிபால சிறிசேன கூறுகின்ற கதைகளை நம்புவதற்கு சர்வதேச சமூகம் தயாராக இருக்கவில்லை. அதனை தெளிவாக கூறியதுடன், இறுக்கமான நிலையில் நின்றதால் தான், அவர் முன்கூட்டியே பாராளுமன்றத்தைக் கூட்டும் நிலை ஏற்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளைக் கூறும் மைத்திரிபால சிறிசேன, அதனை உரிய வகையில் கையாளவில்லை என்பதே, ஜனாதிபதி மீதான அவநம்பிக்கைக்கு முக்கியமான காரணம்.

முதல் நடவடிக்கையாக, மஹிந்த ராஜபக் ஷவை பிரதமராக நியமித்ததைக் கூட சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டிருக்கும். அதனை அவர் பாராளுமன்றத்தின் ஊடாக செய்திருந்தால், யாரும் திருப்பிக் கேள்வி கேட்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை.

மஹிந்தவைப் பிரதமராக்கி விட்டு மறுநாள் பாராளுமன்றத்தையும், 21 நாட்களுக்கு முடக்கினார். இதுதான் மைத்திரிபால சிறிசேனவின் இராஜதந்திரம், அரசியல் அனுபவம், எல்லாவற்றையுமே தலைகீழாக புரட்டிப் போட்டது.

இது அவரது திட்டம் அல்ல என்பதும், மஹிந்த தரப்பின் திட்டம் தான் என்பதும் அனைவருக்கும் தெரியும். எவ்வாறாயினும், துரதிர்ஷ்டவசமாக, அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய நிலையில் இருப்பவர், மைத்திரிபால சிறிசேன தான்.

பாராளுமன்றத்தை முடக்கியதை, நியாயப்படுத்தும் வகையில் மஹிந்த தரப்பினர் கூறிய, ஏற்றுக்கொள்ள முடியாத நியாயங்களும், அதனை அவர்கள் வெளிப்படுத்திய முறையும், அவர்கள் இன்னமும் அப்படியே தான் இருக்கிறார்கள் - மாறவில்லை என்பதை உணர்த்தியது.

அதனால் தான் சர்வதேச அழுத்தங்களை ஒரே நேரத்தில் சமாளிக்க வேண்டிய நிலைக்குள்ளானார் மைத்திரிபால சிறிசேன. அவர் பதவியேற்ற மூன்றரை ஆண்டுகளில், இதுபோன்றதொரு அழுத்தத்தை, நெருக்கடியை வெளியுலகில் இருந்து சந்தித்ததேயில்லை.

பதவியேற்ற புதிதில், அமைதிக்கான நோபல் பரிசுக்கான பரிந்துரைப் பட்டியலில் கூட இடம் பிடித்தவர். ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றபோது, அவருடன் படம் எடுத்துக் கொள்வதற்கு முக்கிய வெளிநாட்டுத் தலைவர்கள் முண்டியடித்தனர் என்ற கதையும் அப்போது அவரது அமைச்சர்களால் கூறப்பட்டது.

ஏன், கூட்டமைப்புக் கூட அவரை நெல்சன் மண்டேலா என்றது. மார்ட்டின் லூதர் கிங்கின் மறு அவதாரம் என்றது.

அப்படிப்பட்ட - சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் பெரியதொரு நம்பிக்கையைப் பெற்றிருந்த மைத்திரிபால சிறிசேன, ஒரே நாளில் தனது ஒட்டுமொத்த நம்பிக்கையையும் தொலைத்து விட்டு நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மஹிந்த ராஜபக் ஷ பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க உடனடியாகவே அவர் இடமளித்திருந்தால், இந்தளவுக்கு நெருக்கடி அவருக்கோ நாட்டுக்கோ ஏற்பட்டிருக்காது.

எனினும், அவ்வாறு பாராளுமன்றத்தைக் கூட்டியிருந்தால், மஹிந்த ராஜபக் ஷவினால், பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க முடியாமல் போயிருக்கும். அதனைத் தெரிந்து கொண்டே குதிரை பேரத்துக்காகவும், ஆட்களை விலைக்கு வாங்குவதற்காகவும், ஒரு கால இடைவெளியை ஏற்படுத்திக் கொடுத்தார்.

நல்லாட்சி, ஊழலற்ற தூய்மையான நிர்வாகம், என்பன போன்ற விடயங்களை வலியுறுத்தி வந்த மைத்திரிபால சிறிசேன, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், மோசமான நிலைக்குத் துணை போயிருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் மோசடிகள், முறைகேடுகள் நடந்ததாக குற்றம்சாட்டியிருந்தார் ஜனாதிபதி. அதற்காகவே அந்த அரசாங்கத்தை நீக்கும் முடிவை எடுத்ததாகவும் கூறியிருந்தார். அந்த அரசாங்கத்துக்கு மூன்றரை ஆண்டுகள் அவர் தான் துணையாக இருந்தவர்.

அதுபோலத் தான், முன்னைய ஆட்சிக்காலத்தில் மஹிந்த ராஜபக் ஷவினர் பெரியளவில் நாட்டைச் சூறையாடியதாகவும், வெளிநாடுகளில் பணத்தைக் குவித்து வைத்திருப்பதாகவும் குற்றம்சாட்டியவர் மைத்திரிபால சிறிசேன. அந்த அரசாங்கத்திலும் அவர் பங்காளியாக இருந்திருக்கிறார். இப்போது யாரைக் கொள்ளைக் கூட்டம் என்றும், சர்வாதிகாரிகள் என்றும் வர்ணித்தாரோ, அவர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார். இங்கும் அவர் துணை போயிருக்கிறார்.

அதுமாத்திரமன்றி, பாராளுமன்றத்தை முடக்கி வைத்து, நாட்டின் அரசியல் கலாசாரத்தை மோசமான நிலைக்குள் தள்ளி, குதிரை பேரத்துக்கும், பாராளுமன்றத்தை விலைக்கு வாங்கும் அரசியலுக்கும் அவர் ஆதரவளித்திருக்கிறார். ஆக, மைத்திரிபால சிறிசேன என்னதான் நியாயங்களையும், காரணங்களையும் முன்வைத்தாலும், தன்னைத் தூய்மையானவராக - ‘கிளீன்’ அரசியல் செய்பவராக காட்டிக் கொண்டாலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் - அவர் நேர்மையற்ற அரசியலுக்கும், ஊழலுக்கும் மோசடிகளுக்கும் துணை போயிருக்கிறார் என்பதே உண்மை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கை சர்வதேச அரங்கில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதுதான், அவர் மீதான சர்வதேச அழுத்தங்கள் ஒன்று குவிவதற்கும் காரணம்.

இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கான சூழலை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்டது அமெரிக்கா. அந்தக் காலகட்டத்தில், ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவராக இருந்த சமந்தா பவர், மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கைகள் இலங்கையில் ஜனநாயகத்தை தலைகீழாக புரட்டி விட்டது என்று கருத்து வெளியிட்டிருக்கிறார்.

பொறுப்புக்கூறல், ஜனநாயகம் என்று வாக்குறுதி கொடுத்து விட்டு, போர்க்குற்றங்களுக்கும், காணாமல் போனமைகளுக்கும் காரணமானவரை அவர் ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார் என்று அவர் விசனத்தை வெளியிட்டிருக்கிறார்.

அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டதும், அமெரிக்கா தான் முதலில் வாய் திறந்தது. எதுநடந்தாலும், அது அரசியலமைப்புக்குட்பட்டதாக இருக்க வேண்டும் என்று முதலில் கூறியது. அதற்குப் பின்னர், பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் அதனையே வழிமொழிந்தன.

ஆனால் எந்த நாடுமே, மஹிந்த ராஜபக் ஷவுக்கு ஒரு சம்பிரதாயத்துக்காவது வாழ்த்துக் கூறவில்லை. இது மஹிந்த ராஜபக் ஷவுக்கு மாத்திரமன்றி, அவரை இந்தப் பதவிக்குக் கொண்டு வந்த, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் கூட, அவமானத்தையே ஏற்படுத்தியது.

சீன ஜனாதிபதியின், வாழ்த்துச் செய்தியைக் கொடுத்து, சீனத் தூதுவர் மட்டும், வாழ்த்துக் கூறினார். அதற்குப் பின்னர் தான் வேறு வழியின்றி இந்தியா வாயைத் திறந்தது. இந்தியாவும் கிட்டத்தட்ட அரசியலமைப்புக்கு அமைவாகச் செயற்பட வேண்டும் என்றே கூறியது.

அதற்குப் பின்னர், ஐ.நா அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன இரண்டாவது சுற்று அறிக்கையை வெளியிட்டன. நாடாளுமன்றத்தைக் கூட்டி ஜனநாயகத்தை காப்பாற்ற வேண்டும் என்று கோரின.

அந்த அழுத்தங்களின் பின்னர் தான், ஜனாதிபதி, வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்து தன்னை நியாயப்படுத்தினார். அரசியலமைப்பில் ஆங்கிலத்தில் இல்லாத - சிங்கள மொழி பெயர்ப்பில் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே ஆட்சியைக் கவிழ்த்ததாக அவர் கூறியிருக்கிறார். இலங்கையில் இரண்டு அரசியல் சட்டங்கள் உள்ளன அது மொழிக்கு மொழி வேறுபடுகிறது என்ற உண்மையை மைத்திரிபால சிறிசேன ஒப்புக் கொண்ட தருணம் அது. ஒரு நாட்டுக்கு இரண்டு அரசியலமைப்புகள் என்பது ஆச்சரியமானது.

உலகில் வேறெங்கும் இதுபோன்றதொரு அரசியலமைப்பும் குழப்பமும் இருந்திருக்குமா என்பது ஐயமே. ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு விதமான அரசியலமைப்பு இருக்கும் இலங்கை தான், பழம்பெரும் ஜனநாயக நாடு என்று கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

இங்கு ஆச்சரியமான ஒரு விடயம் என்னவென்றால், உலகில் எந்தவொரு நாடுமே, மைத்திரிபால சிறிசேன செய்தது சரியான நடவடிக்கையே, என்று வாய் திறக்கவில்லை. இந்த இடத்தில் தான், அவர் உலக அரங்கில் இருந்து தனிமைப்பட்டுப் போயிருந்தார்.

சர்வதேச சமூகமே தனக்குப் பின்னால் இருக்கிறது என்று கூறிய அவரை, இன்று சர்வதேசம் எப்படிப் பார்க்கிறது என்பது அவருக்கே நன்றாகத் தெரியும். அவருக்கு இந்த நிலை ஏற்பட்டதற்கு, அவரைப் பற்றிய இந்த மாற்றத்துக்குக் காரணம், பூகோள அரசியலோ, அதிகாரப் போட்டியோ அல்ல. ஆட்சிக்கவிழ்ப்பை அவர், அரசியலமைப்புக்கு அமைவாக மேற்கொள்ளவில்லை. அதற்குப் பின்னரும், ஜனநாயகப் பண்புகளை மதிக்கவில்லை. அது தான். அந்தக் காரணம்.

அரசியலமைப்புச் சட்டத்தை மதிக்குமாறும், அதற்கமைய நடக்குமாறும், ஜனநாயக மாண்புகளைப் பாதுகாக்குமாறும், சர்வதேசம் திரும்பத் திரும்ப அறிக்கைகளை வெளியிட்டு நினைவுபடுத்தும் நிலைக்கு, ஒரே நாளில் நாட்டைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. சர்வதேச சமூகத்துடனான அவரது உறவுகளில் ஒரு பெரிய விரிசல்- அல்லது ஓட்டை விழுந்திருக்கிறது, இதனை அவர் எப்படிச் சரி செய்து கொள்ளப் போகிறார் என்று தெரியவில்லை. ஏனென்றால், அவர் விரும்பியோ விரும்பாமலோ எடுத்த நடவடிக்கை, அவரைப் பொறிக்குள் தள்ளியிருக்கிறது.

இனி அவர் சூழ்நிலைக் கைதியாகவே காலத்தைக் கடத்த வேண்டியிருக்கும் என்பதால், சர்வதேச சமூகத்தின் கருத்துக்களை அவரால், அவ்வளவு இலகுவாக மதிக்க முடியாது.

பாராளுமன்றத்தைக் கூட்டுமாறும், ஜனநாயக மாண்புகளைக் காக்குமாறும், அமெரிக்கா அழுத்தங்களைக் கொடுத்தபோது. அதற்கு டலஸ் அழகப்பெரும போன்ற ராஜபக் ஷ சகபாடிகளிடம் இருந்து வந்திருக்கின்ற விமர்சனங்கள், 2015இற்கு முற்பட்ட காலத்தையே வெளிப்படுத்தியது.

இத்தகையவர்களை அருகில் வைத்துக் கொண்டு மைத்திரிபால சிறிசேனவினால், சர்வதேச சமூகத்துடன் ஏற்பட்டுள்ள தற்போதைய விரிசலை ஒட்ட வைக்க முடியாது.

இந்த ஆட்சிமாற்றச் சூதாட்டம் ஒரு சர்வதேச அரசியல் சதியாகவே பார்க்கப்படும் நிலையில், மைத்திரிபால சிறிசேனவுக்கு, இனி மேற்குலகின் கதவுகள் அவ்வளவு சுலபமாகத் திறக்கும் என்று நம்பி விட முடியாது.

சர்வதேச சமூகத்தின் பேராதரவுடன், ஆட்சிக்கு வந்த அவரால், அந்த ஆதரவுத் தளத்துடன் வெளியேபோகும் நிலை இருக்கப் போவதில்லை.

எப்போதுமே தன்னை ஒரு தியாகி போலக்காட்டிக் கொள்வதில், அக்கறை கொண்ட சிறிசேன, உண்மையில் மஹிந்த ராஜபக் ஷவுக்காக தனது, புகழையும், மதிப்பையும் தியாகம் செய்யும் நிலை வரும் என்று ஒருபோதும் எண்ணியிருக்கமாட்டார்.

# மைத்திரியின் அஸ்திரம்!

இலங்கைத்தீவில் அடுத்து நடக்கப்போவது என்ன? என்ற வினாவுக்கு அடுத்தவாரம் விடை கிட்டக்கூடும் என நம்பி-கை வைப்போருக்கு அவர்கள் எதிர்பார்க்கும் புதிர் அவிழ்வதற்கு சற்றேறக் குறைய இன்னும் 3 நாட்கள் தான் உள்ளன.

ஆனால் எதிர்வரும் 14 ஆம் திகதி சிறிலங்கா நாடாளுமன்றம் கூடினாலும் கூட அதற்குப்பின்னர் எழக்கூடியசூழல் அலரிமாளிகையை விட்டு அகலாத ரணிலை பதவியில் அமர்த்துமா என்பது ஒரு முக்கிய வினாவாகவே உள்ளது.

நாடாளுமன்றத்தைக்கூட்டியவுடன், மகிந்தவோ அல்லது ரணிலோ யாரென்றாலும் அவர்களின் பெரும்பான்மை பலத்தை நிரூபிப்பதற்குரிய வகையில் வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும்படி பல இடித்துரைப்புக்குரல்கள் வந்துவிட்டன.

இறுதியாக ஐரோப்பிய ஒன்றியம் இந்த இடித்துரைப்பை விடுத்துள்ளது. ஏற்கனவே நாடாளுமன்றத்தை உடனடியாககூட்டுங்கள் என்ற குரல்கள் இவ்வாறு விடுக்கப்பட்டபோதும் அவை கவனத்தில் எடுக்கப்படவில்லை.

ஆவை ஒருவாறாகப் போக்குக்காட்டப்பட்டு தற்போது இன்னும் 4 நாட்களில் மைத்திரி மகிந்த கூட்டணி சொன்;ன அந்த நாளும் வரப்போகின்றது

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் கோரிக்கைக்கு மதிப்பளித்தே 16 ஆந் திகதி என்ற முன்னைய இலக்கிலிருந்து இரண்டு நாட்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கூட்ட மைத்திரி நடவடிக்கை எடுத்துள்ளதாக எஸ்.பி.திசாநாயக்கபோன்ற மைத்திரி மகிந்தக்கூண்டுக்கிளிகள் பேசுகின்றன.

நகைச்சுவை நடிகர்வடிவேலுவின் பாணியில் சொன்னால் இப்படியெல்லாம் பேசுவதற்கு இவர்கள் றூம் போட்டு யோசித்துக்கொள்வர்களோ என்னவோ.

நாடாளுமன்றத்தை உடனடியாககூட்டுங்கள் என இரண்டுவாரங்களுக்கு முன்னரே ஐ.நா செயலாளர்நாயகம் அன்ரனியோ குத்தரஸ் கோரிய நிலையில் அவருக்கு அப்போது பெப்பே காட்டியவர்கள் இப்போது அவரது கோரிக்கைக்காகவே (இரண்டு நாட்களுக்கு முன்னர்) நாடாளுமன்றம் கூட்டப்படுவதாக சொல்லி விதூஷகன்கள் ஆகின்றார்கள்.

இதுமட்டும்லலாமல் முன்னாள் அரச தலைவர் ஜே.ஆர் 7 தடவைகள் ஒத்திவைத்தார் பிரேமதாச நான்கு தடவைகள் ஒத்திவைத்தார் சந்திரிக்காவும் மஹிந்தவும் தலா ஐந்து தடவைகளும் ஒத்திவைத்தனரே இவற்றைவிடவா அதிகம் மைத்திரி அள்ளியெடுத்தார்? ஒத்திவைத்தார் என ஒத்தூதியும்கொள்கின்றார்கள்

நாடாளுமன்றத்தைக்கூட்டியவுடன் தமது பெரும்பான்மையை நிரூபிக்க முடியும் என மகிந்த அணிசொல்கிறது.அதேபோல எதிர்வரும் 14 இல் ஐக்கியதேசிய முன்னணி மீண்டும் ஆட்சி அமைக்கும் என யானைகள் மேற்பார்த்த மறுதரப்பும் கூறிக்கொள்கின்றது.

ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழுக்கூட்டத்தில் நேற்று வெளிப்பட்ட மைத்திரியின் கருத்து வேறுஒரு செய்தியை சொல்லமுனைகிறது.

ஏற்கனவேஎடுக்கப்பட்ட தீர்மானத்தில் இருந்துஎக்காரணம் கொண்டும் தான் பின்வாங்கப்போவதில்லை எனவும் இதுவரைதான் ஒரேயொரு துருப்புச்சீட்டை மட்டும் அஸ்திரமாக பயன்படுத்தியிருப்பதால் இன்னும் பல அஸ்திரங்கள் தனது அம்புறாத்துணியில் இருப்பதாகவும் மைத்திரி சொல்லியிருக்கிறார்.

தான் விரும்புவதைப்போல ஐக்கியதேசியக் கட்சி தனக்கு ஒத்துழைக்காமல் விட்டால் அரசியலமைப்பின்படி சட்டரீதியான துருப்புச்சீட்டுக்களைக் கொண்டு நிலைமையை கையாள்வேன் என்பதும் அவரது எச்சரிக்கை.

பொதுவாக எதிர்பார்கப்படுவது போல எதிர்வரும் 14 க்குப்பின்னர் சிறிஜெயவர்த்தனபுர அரங்கில் ஒருவேளை பெரும்பான்மையை நிருபிக்கும் ஆட்டம் இடம்பெற்றால் (இடம்பெறக்கூடுமென நம்புவோமா!) அந்த ஆட்டத்தில் யார் வென்றாலும் தோற்றாலும், இலங்கையின் அரசியல் களம் குழம்பிய குட்டையாகவே இருக்கும் சாத்தியங்கள் உள்ளன

ரணில் அல்லது மகிந்தவின் அரசாங்கமாக ஏதாவது ஒன்று அமைந்தாலும் இ அதன் தீர்மானம் எடுக்கும்வலு கேள்விக்குரியதாகவே இருக்கக் கூடிய சாத்தியக்கூறுகளும் 2019ஐ ஊடறுத்துச் செல்லும் இந்த இழுப்பாணி சப்பாணி நிலையும் உருவாக்கக்கூடும்.

ஆகமொத்தம் இலங்கைத்தீவின் தற்போதைய நிலை அரசியல் குழப்பங்களுக்குரியதாக இருந்தாலும் மைத்திரியும் தன்னிடம் சில மூலோபாயத் திட்டங்கள் உள்ளன என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்த வெளிப்படுத்தலானது. சிங்களமக்களுக்கும் ஒரு செய்தியை சொல்லியுள்ளது தமிழ்மக்களை மையப்படுத்திய கொழும்பின் அதிகாரத்தைப்பொறுத்தவரை அதில் அமரும் இரண்டுதேசியக்கட்;சிகளின் உள்ளூடனும் ஒன்றுதான் என்பது வெளிப்படையானது.

ஆனால் சிங்களமக்களைப்பொறுத்தவரை 2015 இல் கொஞ்சம் முற்போக்குவாதியாக கருதப்பட்ட மைத்திரியின்சாயம் அவரது நகர்வுகளின் ஊடாக வெளுத்துவிட்டது.



இதன் உதாரணங்களில் ஒன்றாக ஓரினச்சேர்க்கையாளர்களுக்குரிய சிங்களப்பதமான சமனலயோ( வண்ணத்துப்பூச்சிகள் ) என்றபதத்தை ரணில் தரப்பை நோக்கி கேலியாக எறிந்து தனது முதற்குடிமகன் தகுதியை தானே உரசினார்.

அடுத்தகட்ட தவணைஆட்சிக்கான அவரது ஆவல் இப்போது அவரை புதிய இடத்துக்குள் கொண்டு சென்றிருப்பதால் அவரை முன்னர் கைதூக்கிவிட்ட சமூக இயக்கங்கள் இப்போது வாயடைத்து நிற்கின்றன.

இந்த நிலையில் இன்னும் சில அஸ்திரங்கள் தனது அம்புறாத்துணியில் இருப்பதாகச்சொல்லி ஒட்டு மொத்தநாட்டுக்கும் தளம்பல் நிலையை உருவாக்கிக்கொள்கின்றார்.ஆகமொத்தம் 2015 இல் இருந்த மென்மை நிலையைவிட அதிகாரமிக்கவராக தன்னைநிலைநிறுத்தும் தோற்றப்பாட்டில் மைத்திரி இருப்பது தெரிகின்றது.

இதன் ஒரு அங்கமாக இதுவரை சிறிலங்காவின் சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழிருந்த காவற்துறையை தனக்கு கீழ்உள்ள பாதுகாப்பு அமைச்சின் கீழ் அவர் கொண்டுவந்துவிட்டார் இதேபோல சிறிலங்கா மத்திய வங்கி மீண்டும் நிதிஅமைச்சின் கீழ், கொண்டுவரப்பட்டும் விட்டது

அதாவது தற்காலிகமாவேனும் அதிகாரத்தை பங்குபோட்டு ஆடும் ஒரு ஆட்டத்தில் மைத்திரியும்மகிந்தவும் தீவிரமாகின்றனர்.

அவர்களின் இந்தஆட்டத்துக்கு எதிராக ஒரு பலமாக ஊடறுப்பைச்செய்வதற்கு ரணிலும் சபாநாயகர்கருஜெயசூரியவும் முயன்றாலும் எல்லாம் வழமைபோல நடக்கிறது என்பதைக்காட்ட மைத்;திரி முயல்கிறார். இதன் அடிப்படையில் நேற்று வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குரிய அபிவிருத்திக்காக என அமைக்கப்பட்ட அரசதலைவரின் விசேட செயலணி நான்காவது தடவையாக மைத்திரிதலைமையில் கூடிப்பேசியது.

இந்தக்கூட்டத்தில் அமைச்சர்கள் என்றவகையில் டக்ளஸ் தேவானந்தாவுடனும் கடந்தவாரம் தனது கைகளில் இருந்து பீறிட்டுச்சென்ற வியாழேந்திரன் ஆகியோர் சகிதம் இரா. சம்பந்தனும் இருந்து பேசவேண்டிய நிலை உருவாகியிருப்பதையும் இங்கு அவதானிக்கவேண்டும்

சரி இப்போது இந்த நிலையில் தமிழர்தரப்பின் ஆட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்தபேசுபொருளுக்கும் இடமிருக்கிறது. குறிப்பாக தமிழ்தேசியக்கூட்டமைப்பு யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து தீர்மானிக்கவேண்டுமெனவும் கடும்நிபந்தனையுடன் ஆதரவு வழங்கவேண்டுமென்ற குரல்களும் எழுந்துள்ளன.

ஆனால் கூட்டமைப்பு நிபந்தனையுடன் ஆதரவு வழங்கவேண்டும் என்ற நிலைப்பாடு இப்போதைய கட்டத்தில் எந்தளவுக்கு சரியானது என்பதில் கேள்விகள் இருக்கின்றன. ஏனெனில் இது இருகருக்கு பட்டயம் போல இரண்டு பக்கங்களில் வெட்டக்கூடியது என்பதால் இதில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாத்திரம் அதிக உற்றுநோக்கலுக்கு உள்ளாகியுள்ளது.

நன்றி: இணையம்

# பாரபட்சத்திற்கு உள்ளாகியுள்ள பெண்களின் தனிக் குடும்பங்கள்

வருடங்கள் பல உருண்டோடி விட்டன. ஆனால் கடந்து சென்ற விடயங்களைப் பற்றி நினைத்து என் நிகழ்கால வாழ்வின் நிம்மதியினை நான் இழக்க விரும்பவில்லை. வாழ்வை தனித்து கடப்பது என்பது வித்தியாசமான அனுபவமாக தான் இருக்கின்றது என்று கூறும் அந்தப் பெண்ணுக்கு 41 வயது. கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட அவர் 16 வயதான மகளுடனும் வயோதிப பெற்றோருடனும் வசித்து வருகின்றார். அவரது வீட்டில் இரண்டு தையல் இயந்திரங்கள் இருக்கின்றன. ஆடைகள் தைப்பதற்காக வெட்டப்பட்ட துணித் துண்டுகள் வீட்டின் பிரதான அறையில் ஆங்காங்கே இறைந்து கிடக்கின்றன. குவிந்து கிடக்கும் தைக்கப்பட்ட ஆடைகளுக்கு பொத்தான்களை அவர் தைத்துக் கொண்டிருந்தார். தனிப் பெற்றோராக தனது குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்காக அவர் தையல் வேலையில் ஈடுபட்டு வருகின்றார். தனிப் பெற்றோர் என்ற வகிபாத்திரம் இந்த சமூகத்தில் எவ்வாறு உள்வாங்கப்படுகின்றது? தனிப் பெற்றோர் என்ற ரீதியில் சமூகத்தில் அவர்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்க நேர்கின்றது?


கோப்புப் படம்

நாங்கள் காதல் திருமணம் புரிந்து கொண்டோம். எமக்குள் பல்வேறு காரணங்களினால் மனக்கசப்புகளும், கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டன. அவர் என்னுடன் வாழ முடியாது என்றார். அதற்கேற்ப பல காரணங்களைக் கூறி அவரது பெற்றோரையும், உறவினர்களையும் உதவிக்கு அழைத்து என்னை விவாகரத்து வரைக்கும் இணங்க வைத்தார். திருமணமான ஒருவருடத்திற்குள் நாம் பிரிந்துவிட்டோம்.இவ்வாறு அந்தப் பெண் (பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லை.) தனது கடந்த காலத்தை விபரித்தார்.

விவாகரத்தைப் பெற்றார் என்று ஒற்றை வார்த்தையில் சொன்னாலும் அதற்கு, 'பெண்ணாக' அவர் கொடுத்த விலை மிக அதிகம்.

**பிரியதர்ஷினி சிவராஜா**

அவர் விவாகரத்து வழக்கில் என்னைப் பெரிதும் அலைக்கழித்தார். எனக்கு பைத்தியம். நான் குடும்பத்திற்கு சரிவராத பெண் என்று இல்லாத பொல்லாத காரணக்களை எல்லாம் கூறி என்னை அவமானப்படுத்தும் அளவுக்கு தூற்றினார். ஒரு வயதுப் பெண்பிள்ளையுடன் மனதில் வேதனைசுமந்து நான் விவாகரத்திற்கு ஒப்புதல் அளித்து விவாகரத்தை வழங்கினேன். தாபரிப்பு செலவாக மாதம் 2 ஆயிரம் ரூபா மட்டும் கிடைக்கிறது. அது ஒரு பிள்ளையை வளர்க்க போதுமானதல்ல. எனது முயற்சியில் எனது உழைப்பில் நான் வாழப்பழகினேன். என்று கூறும் அவர் தன் குடும்பம்கூட தன்னை அனுசரிக்கவில்லை என்ற கவலையையும் வெளியிட்டார்.

தனிப் பெற்றோராக வாழ்வதற்கு ஒரு பெண் முடிவெடுத்தால் அவள் குடும்பத்தில் தாயின் வகிபாத்திரத்தையும், தந்தையின் வகிபாத்திரத்தினையும் வகிக்க வேண்டிய இரட்டை நிலைக்குள் தள்ளப்படுகிறாள். ஆனால் ஆணுக்கு அந்த பிரச்சினை இருப்பதில்லை. மனைவியை விட்டு பிரிந்தவருக்கோ, மனைவியை இழந்தவருக்கோ அடுத்த திருமணத்திற்கு ஒரு பெண் எப்போதும் தயார இருக்கிறாள் இந்த சமூகத்தில். அதேதான் இங்கும் நடந்தது.

விவாகரத்து பெற்று நான் ஒரு வயதுக் குழந்தையுடன் தனித்துவிடப்பட்டேன். யாரும் எனக்கு ஆதரவு வழங்கவில்லை. என் குடும்ப உறவினர்களும், இந்த சமூகமும் என்னைத்தான் குற்றவாளியாகப்பார்க்கிறது. ஆனால் அவருக்கு மிக இலகுவாக இன்னொரு திருமணம் செய்யமுடிந்ததுடன் இரண்டு பிள்ளைகளுக்கும் தந்தையானார். என இந்த சமூகத்தின் பாரபட்சத்தை முன்வைக்கிறார் அவர்.

இவ்வாறு விவாகரத்துப் பெற்ற பெரும்பாலான பெண்கள் சமூகத்தின் சிறுமைப்படுத்தல்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இரட்டைச் சுமைகளுடனும் சமூகத்தின் வசைகளுடனும் விவாகரத்துப்பெற்ற ஒரு பெண் வாழவேண்டியிருப்பது பெரும் அநீதிதான். எனது மகள் பூப்பெய்திய போது நான் அடைந்த மகிழ்வுக்கு அளவே இல்லை. ஆனால் வேதனையும் மகிழ்வும் கலந்த ஒரு வித உணர்வு எனக்கு அப்பொழுது ஏற்பட்டது. கணவனைப் பிரிந்து 16 வருடங்கள் கடந்து விட்டன. அவர் ஒருபோதும் எம்மை எட்டிப்பார்த்ததேயில்லை. ஆனால் சம்பிரதாயத்திற்கு தந்தையை அழைக்கவேண்டும் என எல்லோரும் வற்புறுத்தினர். எனது அம்மாகூட அப்படித்தான் கூறினார். ஆனால் நான் தடுமாற்றம் இல்லாத தீர்மானத்தை எடுத்தேன். குடும்பத்தாரின் எதிர்ப்பையும் மீறி, மகளின் விழாவுக்கு தந்தை தேவையில்லை என்று பிடிவாதமாக நின்றேன். அவ்வாறு நடத்தி முடித்தேன். என்கிறார் மிகுந்த வைராக்கியத்துடன்.

ஆனாலும், விவாகரத்துப் பெற்ற இந்தப் பெண் தனது தாய் தந்தையருடன் வாழ தொடங்கியதிலிருந்து அவரின் உறவினர்களின் பல கேள்விகளுக்கு பதில் சொல்லவும், தன் வாழ்க்கை தொடர்பான அனுதாபப் பார்வைகளை எதிர்கொள்ளவும் நேரிட்டதாக கூறுகிறார். அதனால் நான் வெளியில் எங்கும் தலைகாட்டுவதில்லை. உறவினர்கள் வீடுகளுக்கு செல்வதனை கூடிய மட்டும் தவிர்த்து வந்தேன். திருமண வீடுகளுக்கு தவிர்க்க முடியாமல் போக நேரும் போது எங்கேயாவது ஒரு மூலையில் அமர்ந்திருந்து விட்டு வந்து விடுவேன். என்னைப் பார்த்தவுடன் பல கேள்விகளைக் கேட்பார்கள். அந்த கேள்விகளுக்கு பதில் சொல்லி நேரத்தை வீணடிக்க நான் விரும்புவதில்லை. அவர்களது எல்லாக் கேள்விகளும் என்னை குற்றவாளிக்கூண்டில் நிறுத்துவதாகவே இருக்கும். அதனால் அவர்களை எதிர்கொள்வதனை நான் தவிர்த்து விடுவேன். என்கிறார் அவர்.

ஆனாலும் இந்த குடும்ப கட்டமைப்பில், பிள்ளைகளின் பெயருக்கு கொடுக்கும் முதலெழுத்துபோல் அப்பாவுக்கு கொடுக்கும் உயர் அந்தஸ்தும், சடங்கு சம்பிரயதாயங்களில் கணவன், அப்பா என்று ஆண்களுக்கு கொடுக்கும் முன்னுரிமை பெண்களுக்கு இல்லை. எந்த விதத்திலும் குடும்பத்திற்கு அனுசரணை வழங்காத ஆணாக இருந்தாலும் கணவன், அப்பா என்ற அந்தஸ்து அவர்களை எத்தகைய ஒரு நிகழ்வாக இருந்தாலும் முன்னுரிமைகொடுத்து கௌரவிக்கிறது. அவர்கள் இல்லாத மனைவி, அம்மா என்ற பாத்திரங்கள் அந்தளவுக்கு கௌரவம்பெறுவதில்லை.

அந்த பாத்திரங்கள் கௌரவம் பெறவேண்டுமென்டறல், பெயருக்கேனும் கணவன், அப்பா இருந்தாக வேண்டும். உண்மையில் அப்பா இல்லாது வளர்ந்த பிள்ளை அப்பாவை எதிர்பார்க்காவிடினும் இந்த சமூகம் அதை எதிர்பார்க்கிறது. கண்கள் பனிக்க அந்த தருணத்தை விபரித்தார்.

என் பிள்ளை ஒருபோதும் தந்தையைப் பார்க்க வேண்டும் என்று கேட்டதில்லை. ஆனால் ஒரு தடவை மட்டும் பாடசாலை விழாவுக்கு தந்தை வந்திருந்தால் நன்றாக இருக்கும், அவளது நண்பிககளும் அவர்களது பெற்றோரும் தனது தந்தை பற்றி விசாரிப்பதாகவும் தான் பதில்சொல்ல முடியவில்லை என்றும் கவலைப் பட்டாள். அன்று நான் அவளை வெளியில் அழைத்து சென்று வேண்டியதெல்டலம் வாங்கிக்கொடுத்து ஐஸ்கிறீம் உட்பட, வாங்கிக் கொடுத்து தந்தை இல்லாத வாழ்க்கையை நாம் சந்தோசமாகவும் நம்பிக்கையுடனும் வாழ வேண்டும் என்பதை அவளுக்கு உணர்த்தினேன் என்கிறார் மிகவும் தெளிவாக. ஆம் கணவனின்றி தனித்து வாழும் பெண்கள் தமது குழந்தைகளுக்காக தம்மை நெறிப்படுத்தி எழுந்து நிற்கிறார்கள். ஆனால் இந்த சமூகம் மீண்டும் மீண்டும் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என அழுத்தி உரைத்துக்கொண்டேயிருக்கிறது. எந்த கொடுமையான கணவனையும் கட்டிமாரடிக்கவேண்டும் என பெண்ணைப் பணிக்கிறது.

நான் சற்று பொறுமையுடன் அனுசரித்து வாழ்ந்திருக்கலாம் என்றும் என்னைச் சுற்றி உள்ளவர்கள் எப்பொழுதும் கூறிக்கொண்டிருக்கின்றனர். என்னால் அதனை சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

அது எப்படி எல்லா தவறுகளுக்கும் நான் காரணமாக இருக்க முடியும்? அந்தப் பெண்ணின் கேள்வியில் ஆத்திரம் வெளிப்பட்டது. குடும்பம் என்றாலே அதில் எத்தனை பொறுப்புகள், கடமைகள் இருக்கின்றன என்று எல்லோருக்கும் தெரியும். நான் ஒரு தனிப் பெற்றோராக என் பிள்ளையின் முழுப் பொறுப்பையும் ஏற்றிருக்கின்றேன். அவளுக்கான கல்வி வசதி முதல் அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றி வருகின்றேன். அதுமட்டுமல்லாமல், வீட்டு வாடகை, பெற்றோருக்கான மருத்துவ செலவுகள், உணவு, பராமரிப்பு செலவுகள், வீட்டு மின் கட்டணம், நீர்க்கட்டணம் என்று அனைத்திற்கும் நான் தான் பொறுப்பு.

ஆனால் இவ்வளவு சவால்களையும் நான் தனித்து நின்று எதிர்கொள்கின்றேன் என்பது எவ்வளவு கடினமான வேலை என்பது பற்றி யாரும் சிந்திப்பதில்லை. எனக்கு யாரும் ஆதரவாகவும், அனுசரணையாகவும் இருப்பதுமில்லை. ஆனால் என்மீது அவதூறு கூறுவதற்கு மட்டும் எல்லோரும் வரிசையாக வந்துநிற்கிறார்கள். இதனால், என் மகளும் எங்கள் உறவினர்களிடம் இருந்து சற்று விலகியே இருக்கின்றாள். என்கிறார் சலிப்புடனும் கவலையுடனும்.

தந்தை பற்றியும், அவரின் பிரிவால் நான் பட்ட துயரங்களையும் என் மகள் நன்கு அறிவாள். ஆனாலும் எங்கள் திருமணப் புகைப்படம் ஒன்றை தனது அறையில் மாட்டி வைத்திருக்கின்றாள். ஒரு தந்தை எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு உதாரணமாக அதை அவள் அங்கு வைத்திருக்கிறாள் போலும். ஏனெனில் அவர் என்னைப் பிரிந்தது நியாயமற்றது என அவள் அடிக்கடி கூறிக்கொள்வாள்.

இதனால்தான் பல பெண்கள் விவாகரத்து பெறாமலே தனித்து வாழ்ந்துவருகின்றனர். சமூகத்திற்காகவும் தங்கள் பிள்ளைகளுக்காகவும் என அதற்கு காரணம் கூறுகின்றனர்.

இவருக்கு வயது 36. ஒன்பது வயதேயான மகனுடன் வாழ்ந்துவரும் இவர் பிரபல நிறுவனம் ஒன்றில் கணக்காளராக பணிபுரிகிறார். பெற்றோரால் பேசிச் செய்யப்பட்ட திருமணம் நடந்தது. காலப் போக்கில் கணவரின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும், சில கருத்து முரண்பாடுகள் காரணமாகவும் கணவரைப் பிரிந்து வாழ முடிவு எடுத்தேன். சட்டப்படி பிரிவது மகனை பாதிக்கும் என்ற அச்சத்தில் சட்டப்படி விவாகரத்து பெறாமலே தனித்து வாழ்கிறேன் என்கிறார்.

எனது மகன் வார இறுதி நாட்களில் தந்தையிடம் சென்று வருவார். வார நாட்களில் என்னிடம் தான் இருப்பார். பாடசாலை முதல் கல்வி சம்பந்தமான அனைத்து வேலைகளையும் நான் தான் செய்கின்றேன்;. என்று கூறும் அந்தப் பெண் தனது பெற்றோருடனும் திருமணம் செய்யாத தங்கையுடனும் வசித்து வருகின்றார்.

வீட்டில் எனது தாயார் தான் மகனை பாடசாலைக்கு அனுப்பி எடுப்பார். எனது வேலைப்பளு காரணமாக சில வேளைகளில் மகனை சரிவர கவனிக்க முடியாத நிலை ஏற்படும். வேலை முடிந்து நான் வீடு செல்லும் போது அவன் நித்திரைகொள்வான்.

மனதுக்கு வேதனையாகவும் இருக்கும். ஆனால் என்ன செய்வது? தொழிலை விட்டு விட்டு முழு நேரம் அவனைக் கவனித்து கொள்ள விரும்பினாலும் பொருளாதார பிரச்சினைகள் காரணமாக அவ்வாறு ஒரு போதும் செய்ய முடியாது என்று குறிப்பிட்ட அந்தப் பெண் கலங்கிய மனதுடன் மேலும் சில விடயங்களைப் பகிர்ந்து கொண்டார். அப்பா தன்னுடன் இல்லை என்ற ஒரு ஏக்கம் மகனுக்கு இருக்கின்றது.

வார இறுதி நாட்களில் அப்பாவுடன் இருந்து விட்டு வரும் போது ஒரு மாற்றத்தினை அவனிடம் நான் அவதானிக்கின்றேன்.

அவனது பாடசாலை ஆசிரியர்களிடமும், அப்பா தன்னுடன் இல்லை என்றும் தன்னை எவரும் கவனிப்பதில்லை என்றும், தன் மீது அன்பு செலுத்த யாரும் இல்லை என்றும் கூறியிருக்கின்றான். இதனால் பிள்ளையை கவனிப்பதில்லை என்று ஆசிரியர்களின் கடும் கண்டனத்தினை நான் எதிர்கொள்ள நேரிட்டது. என்று கூறும் இந்தப்பெண் இரட்டைச்சுமையால் திணறிப் போகிறாள். வீட்டை நிர்வகிக்கும் முழுப் பொறுப்பையும் நிறைவேற்ற வேண்டும். அத்துடன் மகனின் கல்வி செயற்பாடுகள் குறித்தும் அக்கறை செலுத்த வேண்டும். அதற்காக நான் பெரிதும் உழைக்கின்றேன். ஆனால் நான் பிள்ளை பற்றிய அக்கறையின்றி செயற்படுவதாக எனது மகனின் பாடசாலை அதிபர் உட்பட வகுப்பாசிரியர் மற்றும் இதர பாட ஆசிரியர்களும் குற்றம் என் மீது குற்றம் சுமத்துகின்றனர். என்று வேதனையுறும் இந்தப்பெண்ணுக்கு தனது மகனைப் பார்த்துக்கொள்வதற்கு முழுநேரத்தையும் ஒதுக்கமுடியவில்லை என்ற குறை உள்ளது. இந்தனை பிரச்சினைகளுடனும் தனது வாழ்க்கையை நடத்தும் இவருக்கு மேலதிகமாக வேறு ஒரு பிரச்சினையும் உள்ளதாக கூறுகிறார்.

கணவனைப் பிரிந்து வாழ்வதால் பாலியல் ரீதியாக என்னை இலகுவில் அணுகலாம் என பலரும் நினைக்கின்றனர். இதனால் சில ஆண்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

சிலர் அவதூறு பேசுகின்றனர். அவசரத்திற்கு எந்த ஆணிடமும் எந்த உதவியையும் கேட்கமுடியாதுள்ளது என்கிறார் மனம் நொந்தவராக.

திருமணமான பெண்கள் தனித்து வாழ முடிவெடுத்தாலும் அவர்களுக்கும் குழந்தைகளுக்கும் எந்தவொரு பொருளாதார பாதுகாப்போ, வாழ்வதற்கான பாதுகாப்போ அற்ற நிலையில் வாழும் நிலைதான் மூன்றர் உலக நாடுகளில் உள்ளது.

இவ்வாறு தனித்து வாழும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ஆண்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. பெண் தனித்து வாழமுடியாத ஒரு உயிரியாக சமூகத்தால் கட்டமைக்கப்பட்டிருந்தாலும் இன்று பெண்கள்தான் அதிகளவில் தனித்து வாழ்பவர்களாக அதனால் ஏற்படும் பல்வேறு சவால்களையும் எதிர்கொள்பவர்களாக வாழ்கின்றனர்.

நன்றி: த கட்டுமரன்



# அடைகாக்கும் கோழிகளும் அடைய மறுக்கும் குஞ்சுகளும்

**தந்திமகன்**

தாய்க்கோழி தன் குஞ்சுகளை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளும். அது தனது குஞ்சுகளை நல்ல முறையில் பாதுகாத்து தன்னைப்போல தையரியமான வாழ்க்கைக்கு தயார்படுத்துவதாக அமையும். பருந்துபோன்ற ஊண் உண்ணிகளிடமிருந்து பாதுகாப்பது கஷ்டமான காரியமாக இருந்தாலும் தாய்க்கோழி தனது செட்டைக்குள் பாதுகாப்பளித்துக் கொள்ளும் நிலைமையை நமது சூழலில் வாழும் பிராணிகளிடமிருந்து கற்றுக்கொண்ட ஒரு பாடமாகும். பள்ளியில் சிறுவர்களுக்கு கதைகூறும்போது இதனையும் ஒரு கதையாக கூறுவார்கள் ஆசிரியர்கள். இன்று இந்தச் சீலமிக்க கதைகளுக்கு ஒப்பானதாகக் காணப்படுகின்ற கட்சி அரசியலுக்குள் சற்று ஆழமாகச் சென்று பார்த்தால் நம்பிக்கையற்ற முறையில் தாய்க்கோழியை விட்டுவிட்டு தான் பருந்துடன் மிகமிக உயர்த்தில் கொஞ்சநேரமாகவது பறக்கலாமே என்று நினைக்கின்ற அளவுக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்வதானது உலக ஒற்றுமைக்கு வித்திட்ட முஸ்லிம் சமூகத்தை உருவாக்கிய, ஒற்றுமையே ஈமானின் முக்கிய அம்சம் என்று திருக்குர்ஆனை உலகுக்கு அறிமுகப்படுத்திய திருநபி அவர்களுக்கும், அவர்களுடைய சொல் செயல் அங்கீகாரத்திற்கும் மாற்றமான ஒரு செயலாகவே முஸ்லிம்களால் பார்க்கப்படுகின்றது.

உம்றா பயணம், சத்தியவாக்கு, இரண்டு முஸ்லிம் கட்சிகளும் ஒன்றுபட்டு புதிய கட்சியொன்றின் ஆரம்பம் என்கிற கருத்தாடல்கள் அண்மைய நாட்களில் இந்த அடைகாக்கும் கட்சிகளிடமிருந்து வருகின்ற செய்திகளாக இருக்கின்றன. உண்மையாகவே இன்றைய அரசியல் சாகரத்தின் சதிவலையில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்காக முஸ்லிம் கட்சிகள் இரண்டும் தனது அங்கங்களை வெளியே விட்டால் பணத்திற்கு அல்லது பதவிக்கு ஓடிவிடுவார்கள், இவர்களை பேரினவாதிகள் பாராளுமன்றம், ஆட்சியை தக்க வைப்பதற்குத் தேவையானவர்களை தேடிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக் கழிவுடன் இலகுவாக வாங்க முடியும் என்கிற வழமையான கருத்தாடல்களைக் கொண்டுள்ள பேரினவாதத் தலைமைகளுக்கு சோரம் போகாமல் காப்பாற்ற வேண்டியதொரு நிலை காணப்படுமாக இருந்தால் முஸ்லிம் என்கிற அடையாளத்திற்கும், பெயருக்கும் அர்த்தமில்லை என்பதையே நாம் சுட்டிக்காண்பிக்க வேண்டியிருக்கிறது.

நம்பிக்கை என்கிற இச்சொல் அடையாளம், இஸ்லாமிய கண்ணோட்டத்தில் மிகவும் அரிதானதும், பொக்கிஷம் நிறைந்ததும் இஸ்லாமியரின் ஆழமான உறுதியான மிகவும் ஆணித்தரமான ஒரு விடயமாகவே பார்க்கப்படுகிறது. அதனையும் தாண்டி பேச்சுக்கும் செயற்பாட்டிற்கும் குந்தகம் விளைவிக்கின்றவர்களை மக்கள் நம்பிக்கையுடன், நமக்கு நல்லது செய்வார்கள் என்று வாக்களித்து வாக்குவித்து அனுப்பினால் அவர்களது இஷ்டத்திற்கு நடந்து கொள்வார்களாக இருந்தால் இவர்களை நம்பிக்கைத் துரோகிகள் என்று கூடக் கூறவேண்டியிருக்கிறது. தலைமைக் கோழி தன் குஞ்சுகளை சூழ்நிலைக் கைதிகள் போன்று அடைக்காத்துக் கொண்டு வெளியே சென்றால் அவர்கள் மாறிவிடுவார்கள் என்கிற அவநம்பிக்கை கொண்டவர்களையா முஸ்லிம் சமூகம் நம்பிக்கொண்டிருக்கிறது என்கிற கேள்வியும் எழுகிறதல்லவா?



இந்த ஒற்றுமையற்ற தன்மையை தீர்மானிப்பதற்காகவும், நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளவும் முஸ்லிம்களின் புனித்தன்மைகள் நிறைந்த மக்காவுக்குச் சென்று உம்றா கடமையில்; ஈடுபட்டு சத்திய வாக்கு பெறுவதாக இருந்தால் அவர்களை மீண்டும் முஸ்லிம்கள் எப்படி சார் நம்புவது என்று நினைக்கும் அளவுக்கு நிலைமைகள் சீரற்றுக் காணப்படுவதற்கு யார் காரணம். முஸ்லிம்களை விலைக்கு வாங்கக்கூடியவர்கள் என்று இலகுவாக நினைத்து அடிக்கடி கட்சிமாறக்கூடியவர்கள் என்கிற அவப்பெயரைக் காப்பதற்காக தலைமைகள் கடும் பிரயத்தனம் மேற்கொண்டிருப்பது ஒருபுறமிருக்க மக்கள் நம்பிக்கையுடன், தேர்தலின் பின்னர் தோல்வியுற்றவர்களுக்கு வழங்கப்பட்ட தேசியப் பட்டியல்கள்கூட வெளியேறத் துடிக்கும் கிழக்கின் சில உறுப்பினர்களை மக்கள் எதிர்கால அரசியலில் எவ்வாறுசார் நம்பப்போகிறார்கள்.

கோடிகளுடன் கோடிகளைச் சேர்த்து அற்ப சொற்ப வாழ்க்கைக்காக நம்பிக்கைத் துரோகிகள் என்கிற பட்டத்தைச் சுமந்து பேரினவாதத்திற்கு அடிமைப்படுவதற்காகவா நாங்கள் உங்களுக்கு வாக்களித்தோம். தலைவர்கள் உங்களை நம்பித் தந்ததற்காக நம்பிக்கைத் துரோகம் செய்யத்தான் முடியுமா என்ன? அதனையும் தாண்டி உறுப்பினர்களை வெளியே செல்லக்கூடாது தாய்க்கோழியின் கண்களுக்குள் நிற்கவேண்டும். அனைத்தும் தருகிறேன் நில்லுங்கள் என்று அடைத்துக்கொண்டு தலைமைகள் உங்களை வைத்திருக்கிறார்கள் என்றால் இதனைவிட ஒற்றுமையற்ற நம்பிக்கைத் தனத்திலிருந்து நாம் அனுப்பிய பாராளுமன்றத்தை அலங்கரிக்கும் முஸ்லிம்களின் நிலை இவ்வாறாக இருந்தால் முஸ்லிம் அல்லாதவர்கள் கட்சித்தாவிச் செல்வதற்கும் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கும் நம்பிக்கையற்று இருப்பதற்கும் ஈமானிய அடிப்படையில், ஒற்றுமையின் அடிப்படையில் முஸ்லிம்கள் என்கிற அடையாளத்தை கொண்டுள்ளவர்களுக்கும் இவர்களுக்குமிடையிலான மார்க்க ரீதியான வேறுபாடுகளை என்னவென்று சொல்லுவது?

இதேவேளை இந்த உம்றா கடமைக்கும், நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும் காரணமா அமைந்தவைகள் இன்றைய அரசியலில் தேவைப்பாடுடைய கட்சியாளர்கள் முஸ்லிம் உறுப்பினர்களை கௌவிக்கொள்வதற்டகக வட்டமடிக்கின்றவர்களிளமிருந்து அடைகாக்கும் கோழிகளின் நிலையில் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் காணப்படுகின்றனர். ஆனால் இவர்கள் அனைவரும் தப்பிக்க வேண்டிய ஒரு கடமையில் காணப்படுகின்றனர் என்பதை நிரூபிக்கவே இப்பயணம் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது புலனாகிறதல்லவா? சிக்கல் நிலை உருவாகியுள்ள அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் இரு பிரதான முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் தனது பாராளுமன்ற உறுப்பினர்களை ஒன்றாக வைப்பதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர் என்கிற உண்மையை இது எடுத்துக்காண்பிக்கிறதாகவே பார்க்கப்படுகிறது.

பாருங்கள் தமது உறுப்பினர்களைப் பிரித்தெடுப்பதனைத் தவிர்ப்பதற்காக முக்கிய முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் இருவரும் கடந்த சில தினங்களாக தமது உறுப்பினர்களை தம் வீடுகளிலும், பிரபல ஹோட்டல்களிலும் யாருக்கும் தெரியாத இடங்களிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர். கடந்த வாரம்கூட தம் கட்சி முக்கியஸ்தர் ஒருவர் குடும்ப திருமணத்துக்கு முஸ்லிம் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக இணைந்து ஹெலிகொப்டர் மூலம் பயணித்திருந்தனர் என்றால் இதனைவிட வேறொன்றும் கூறுவதற்கில்லை. அந்தளவுக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சித்தாவலுக்கு தயாராகி விட்டனர் என்கிற நிலைமையை தவிர்ப்பதற்காக தலைமைகள் காத்து வருகின்றனர்.

இதற்கிடையில் பிரதமனர் மகிந்தவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் - 14 ம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படும் என்கிற சபாநாயகரின் அறிவிப்பினால் புதிய அரசு கடுமையாக சிந்திக்கத் தொடங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது. எதிர்வரும் 14 ம் திகதி பாராளுமன்றத்தில் சம்பிரதாய அமர்வொன்று மாத்திரமே இடம்பெறவேண்டும் பாராளுமன்ற பாரம்பரியத்தினை பின்பற்றி அதனை அன்றைய தினம் ஒத்திவைக்க வேண்டும் என ஐக்கியமக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். எனினும் அன்றைய தினம் பாராளுமன்றத்தில் விவாதங்கள் எதனையும் மேற்கொள்ள முடியாது என்ற சட்டமெதுவும் இல்லை என ஐக்கியதேசிய கட்சியின் பிரதிநிதிகள் வாதிட்டுள்ளனர்.

இதேவேளை பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளை சட்டத்தின் கீழ் சபாநாயகரே அதன் நிகழச்சி நிரலை தீர்மானிக்கவேண்டும் என ஏனைய கட்சிகள் தெரிவித்துள்ளன. எனினும் அரசாங்கத்தின் பெரும்பான்மையை உறுதிசெய்வதற்கான வாக்கெடுப்பை நடத்துவதற்காக தேவைப்பட்டால் நிலையியல் கட்டளைசட்டங்களை இடைநிறுத்த தயார் என சபாநாயகர் தெரிவித்திருக்கின்றார். இந்த அரசியல் குழப்பங்களால் மக்கள் மத்தியில் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்கிறசெய்திகளும் காதுகளுக்கு எட்டாமலும் இல்லை. எதுவாக இருந்தாலும் நாட்டில் மழைபெய்கின்ற காலம் கடும் பஞ்சமும், விலையேற்றமும் தொழிலற்றுக் காணப்படுகின்ற இன்றைய நாட்களில் இந்த அரசியல் சிக்கலால் நாட்டில் தற்போது காணப்படும் சூழ்நிலை இலங்கையின் பொருளாதாரத்திற்கு கடும் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்றே பலரும் கூறிவருகின்றனர்.

இதேவேளை அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர்

12 ஆம் பக்கம் பார்க்க....

# மக்களின் வாக்குகளால் வென்றவர்கள் பேரம்பேசும் அரசியல் வலைக்குள்!

**சத்தார் எம்.ஜாவித்**

ஜனநாயக ஆட்சி என்பது மக்களால் மக்களைக் கொண்டு ஆளப்படும் ஆட்சி முறை என்பதே அதன் தத்துவமாகும். இலங்கையைப் பொருத்தவரை ஜனநாயகத் தத்துவங்கள் அரசியல் போட்டிகளாலும், கௌரவப் பிரச்சினைகளாலும் இன்று மழுங்கடிக்கப்பட்டு மக்களை ஏக்கத்திற்கும், பிரச்சினைகளுக்கும் உள்ளாக்கியிருக்கின்றது என்றே கூறலாம்.

கடந்த காலங்களை விடவும் தற்போதைய இலங்கையின் அரசியல் நடைமுறைகளும், அவற்றின் செயற்பாடுகளும் மக்களை ஜனநாயக் கோட்பாடுகளில் இருந்து விலகிச் செல்லும் அல்லது வெறுப்படையும் ஒரு வகையான துர்ப்பாக்கிய நிலைமைகளுக்கு இட்டுச் செல்கின்றது எனலாம். குறிப்பாக மக்கள் விரும்பிய ஆட்சி முறைக்குப் பதிலாக மக்கள் தமது பிரதிநிதிகளுக்கு வழங்கிய வாக்குறுதிகள் சீர்குலைக்கப்படும் நடவடிக்கைகளே அதிகம் இடம் பெற்று வருகின்றது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் கடந்த சில ஆண்டுகளாக மக்களால் பாராளுமன்றத்திற்கு தெரிவாகும் அரசியல் வாதிகள் தமது பதவிகளை தக்க வைத்துக் கொள்வதற்கும், அரசியல் சுகபோகங்களுக்காகவும், பணத்திற்காகவும் கட்சித் தாவல்களில் ஈடுபட்டு ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கும், மற்றொரு கட்சியில் இருந்து முன்பிருந்த கட்சிக்கும் மாறிமாறித் தாவி தமது பைகளை நிறைத்துக் கொள்கின்றார்களே தவிர மக்களின் நலன்களுக்காகவோ அல்லது ஜனநாயக விழுமியங்களுக்காகவோ தமது பதவிகளைப் பயன்படுத்துவதில்லை என்ற ஒரு மாயையே தற்போது தோற்றம் பெற்றுள்ளது என்பதைக் கண்டு கொள்ள முடிகின்றது.

இவ்வாறான மக்கள் விரும்பாத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் விடயத்திலும், அந்தக் கட்சிகளின் செயற்பாடுகளிலும் மக்கள் இன்று நம்பிக்கை இழந்தவர்களாக மட்டுமல்லாது ஏன் இவர்களுக்கு வாக்களித்தோம் என்ற கவலையிலும், ஆதங்கத்திலும் இருக்கின்றதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான ஒரு துர்ப்பாக்கிய நிலை தற்போது இலங்கையின் அரசியல் ஒரு பேசுபொருளாக மாறியுள்ளது. ஜனநாயக் கொள்கைகளை ஆதரிப்பவர்களும், அரசியல் வரலாறுகளைக் கற்றவர்களும் இது விடயத்தில் ஒரு வகையான எதிர்ப்புவாத கருத்துக்களையே முன்வைத்து வருகின்றனர்.

குறிப்பாக கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திடீரென ஏற்படுத்திய ஒரு அரசியல் மாற்றம் இலங்கையில் அரசியல், பொருளாதார நடவடிக்கைகளிலும், வெளிநாட்டுக் கொள்கைகளிலும், வெளிநாட்டு உறவுகளிலும் ஏற்றத்தாழ்வுகளை எற்படுத்தியிருக்கின்றது என்ற கருத்தை பலரும் வெளிப்படுத்தியுள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய சிறுபான்மைக் கட்சிகளுடன் இணைந்து மஹிந்த அரசாங்கத்தை வீழ்த்தி ஒரு கூட்டாட்சி அரசை உருவாக்கி ஏதோ ஒரு வகையில் கடந்த மூன்றாண்டுகளாக நகர்ந்து கொண்டு சென்ற நிலையில் இந்த இரு கட்சிகளுக்குள்ளும் ஏற்பட்டிருந்த கசப்புணர்வுகளும், கருத்து முரண்பாடுகளும் இந்த அரசையே கூறுபோட்டு நாட்டில் வாக்களித்த மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கின்றது. இதன் காரணமாக மக்கள் மத்தியில் யாரை ஏற்றுக் கொள்வது, எது சரி, எது பிழை என்று தீர்மானிக்க முடியாதளவு ஒரு வகையான குழப்ப நிலைமைகளையும் ஏற்படுத்தி இருக்கின்றது.

பாராளுமன்ற மற்றும் ஜனநாயக விதிமுறைகளுக்கு அமைவாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னாள் ஜனாதிபதியும், பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷவை திடீரென பிரதமராக்கி இதுவரை காலமும் பிரதமாராக இருந்து வந்த ரணில் விக்ரமசிங்கவை பதவி நீக்கம் செய்தமை சரியானது என அரச தரப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி, மலையகக் கட்சிகள் உள்ளிட்ட கட்சிகளும், அரசியல் ஆய்வாளர்களும், கல்விமான்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட ஆட்சி மாற்றச் செயற்பாடுகள் முற்றிலும் இலங்கை அரசியல் நடவடிக்கைகளுக்கும், பாராளுமன்ற நடைமுறைகளுக்கும் மாற்றமான பிழையானதொரு செயற்பாடு என்றும் வாதாடுகின்றனர்.



இந்த துர்ப்பாக்கிய நிலையில் எது சரி, எது பிழை என்பதற்கு அப்பால் இரு தரப்பினரும் தத்தமது பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் நிரூபிப்பதில் பாரிய போட்டித் தன்மைகளில் ஒரு கட்சி மற்றய கட்சிக் காரர்களை கோடிக் கணக்கில் பணத்தைக் கொடுத்து வாங்கும் பேரம் பேசும் நிலைமைகள் இன்று தாரளமாகவே இடம் பெற்று வருகின்றது. ஆளும் தரப்பில் அமைச்சுப் பதவிகளையும், ஏனைய சலுகைகளையும் வழங்கி எதிர்த்தரப்பினர்களை தம்பக்கம் இழுத்து தத்தமது பக்கத்தில் பெரும்பான்மையைக் கூட்டிக் காட்டும் விடயங்களில் முந்தியடித்துக் கொண்டு அரசியல் கட்சிகள் செயற்படும் நிலைமைகள் சர்வசாதாரணமாக ஆகிவிட்டது.

இலங்கை வாழ் மக்கள் நாளாந்தம் விஷம்போல் ஏறிவரும் விலைவாசிகளுக்கு மத்தியில் ஒவ்வொரு கட்சிகளும் தத்தமது பக்க பெரும்பான்மையைக் காட்டுவதற்கு மக்களின் பணத்தை இவ்வாறு மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கி அவர்களை மக்களில் இருந்து பிரித்துக் கொள்ளும் கைங்கரியங்கள் இடம் பெற்று வருவதை வாக்களித்தவர்கள் என்ற வகையில் மக்கள் இவற்றை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதே அதிகமானவர்களின் நிலைப்பாடாகும். இது ஒரு ஆபத்தான விடயமாகவும், மக்கள் அரசியல் வாதிகளை எதிர்க்கும் ஒரு விடயமாகவும் காணப்படுகின்றது.

பெரும்பாலான மக்கள் தற்போதைய மாற்றத்தை விரும்ப வில்லை என்ற கருத்தையே முன்வைக்கின்றனர். காரணம் பொதுத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விடயங்கள் பாராளுமன்றத்தின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்ற விடயத்தில் உறுதியாக உள்ளனர். இவ்வாறான நிலையில் மைத்திரிபால சிறிசேனவினதும், புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினதும் கட்சிக்காரர்கள் ஜனாதிபதி கடந்த 26ஆம் திகதி எடுத்த முடிவு ஜனநாயகத்திற்கு உற்பட்டது என்ற விடயத்தையே முன்வைத்துள்ளனர்.

இவ்வாறான நிலைமைகளால் மக்கள் மத்தியில் இரு வேறுபட்ட கருத்துக்கள் நிலவுவதுடன் இரு கட்சிகளுக்குமான செல்வாக்குகள் விடயத்தில் மக்கள் மத்தியில் ஏட்டிக்குப் போட்டியான நிலைமைகளும் காணப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் ஒருவருக்கொருவர் முட்டி மோதும் சந்தர்ப்பங்களும் இடம் பெற்றுள்ளதுடன் இவ்வாறான நிலைமைகள் தொடரக்கூடிய வாய்ப்புக்களும் இருப்பதை காண முடிகின்றது. எது எவ்வாறக இருந்தாலும் ஜனநாயக விதிமுறைகளின் படி ஆட்சியின் நிருவாக நடவடிக்கைகள் இட்டுச் செல்லுமாறு சர்வதேச நாடுகள் இலங்கை அரசை கேட்டுள்ளது. சர்வதேச சமுகமும் இது விடயத்தில் தமது கருத்துக்களை உறுதியாகத் தெரிவித்துள்ளதுடன் மக்கள் நலன்களின் அடிப்படையில் இலங்கை அரசு செயற்பட வேண்டும் என்று அழுத்தங்களையும் கொடுத்து வருகின்றது.

ஆட்சியாளர்கள் யாராக இருந்தாலும் தத்தமது சுய அரசியல் இலாப விடயங்களில் இருந்து விடுபட்டு மக்கள் நலன்களுக்காக சட்ட ரீதியான முறையில் மக்கள் விரும்பும் வகையில் செயற்படுவதே சாலச் சிறந்த விடயமாகும். ஜனநாயக ஆட்சி முறையை விரும்பும் மக்கள் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள ஆபத்தான அரசியல்

12 ஆம் பக்கம் பார்க்க....

# வெல்லப்போவது யார்?





**கல்முனை நிருபர்**

சபாநாயகரின் 05/11/2018 அறிவிப்பில் இரண்டு விடயங்கள் இருக்கின்றன. ஒன்று பாராளுமன்றம் கூடுகின்றபோது புதிய பிரதமர் நியமனத்திற்கு முன்பிருந்த சூழ்நிலையைக் கடைப்பிடித்தல் புதிய பிரதமர் தனது பெரும்பான்மையை நிரூபிக்கும்வரை. அதாவது பிரதமராக ரணிலையே ஏற்றுக்கொள்வது என்பதாகும். அடுத்தது ஏழாம் திகதி தான் பாராளுமன்றத்தைக் கூட்டலாம்; என்ற சமிக்ஞை. ஆனால் இதனை அவர் உறுதியாக கூறவில்லை. இந்த இரண்டு சூழ்நிலைகள் தொடர்பாகவும் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளை எனது முன்னைய ஆக்கத்தில் தெரிவித்திருக்கின்றேன். (முன்னைய பாராளுமன்றத்தைக் கூட்டுதல் என்ற ஆக்கத்தில் ரணிலை அங்கீகரித்தல் என்ற உப தலைப்புப் பகுதியை மீண்டும் வாசிக்கவும்).

அதாவது மஹிந்த அணியினர் விரும்பினால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரலாம். அவ்வாறு கொண்டுவந்தால் ரணிலைப் பிரதமராக ஏற்றுக்கொண்டதாகும். எனவே, பெரும்பாலும் கொண்டுவர வாய்ப்பில்லை. அதையும்தாண்டி, சிலவேளை, பெரும்பான்மை இருந்தால் மக்களுக்குக் காட்டுவதற்காக கொண்டுவந்தாலும் கொண்டுவரலாம். அவ்வாறுகொண்டுவந்து ரணிலைத் தோற்கடித்தால் சபாநாயகர் கூறுவதுபோல் மஹிந்தவைப் பிரதமராக அங்கீகரிக்கலாம். அத்துடன் அரசியல் பிரச்சினை தீரும். ஆனாலும் சட்டப்பிரச்சினை தொடரும்.

ஏனெனில் ரணில் பிரதமர் என்றால் அவர் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தோற்றால் அவரது அமைச்சரவை கலையும். அப்பொழுது பிரதமர் பதவி வெற்றிடமாகும். அந்த இடத்திற்கு புதிய பிரதமர் நியமிக்க வேண்டும். எனவே, மஹிந்தவை மீண்டும் பிரதமராக ஜனாதிபதி நியமிப்பாரா? அவ்வாறாயின் இடைக்காலத்தில் பிரதமரும் அமைச்சர்களும் அமைச்சரவையும் செய்தவற்றின் செல்லுபடியாகும் தன்மை கேள்விக்குறியாகும். அதேநேரம் மைத்திரி தான் பிழையாக மஹிந்தவை நியமித்ததை ஏற்றுக்கொண்டதாகும்.

சபாநாயகர் சட்டத்திற்கு அப்பால் செயல்படுகின்றார்

மஹிந்தவை பிரதமராக நியமித்தது அரசியலமைப்பிற்கு முரணா? இல்லையா? என்பதில் வாதப்பிரதிவாதங்கள் தொடர்கின்றன. அது அரசியலமைப்பிற்கு முரணல்ல என ஆங்கிலத்திலும் தமிழிலும் எனது ஆக்கங்களையும் ஒலிப்பதிவுகளையும் வெளியிட்டிருக்கின்றேன்.

அதேநேரம் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன மஹிந்தவின் நியமனம் ஆரம்பத்திலிருந்தே செல்லுபடியற்றது. (abinitiovoid) என்று தெரிவித்திருக்கின்றார். அவ்வாறெனில் சபாநாயகர் மஹிந்தவை பிரதமராக ஏற்று நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டு அதில் மஹிந்த பெரும்பான்மையால் வெற்றிபெற்றாலும் அவரது நியமனம் செல்லாது.

ஏனெனில் ஆரம்பத்திலிருந்தே செல்லுபடியற்றது என்றால் மஹிந்த பிரதமர் இல்லை என்று பொருளாகும். பிரதமராக இல்லாத ஒருவருக்கெதிராக நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு நடத்துவதே பிழை. அதையும் தாண்டி நடத்தப்பட்டு அதில் அவர் வெற்றிபெற்றாலும் அவர் பிரதமராக முடியாது.

**சபாநாயகரின் புதிய பிரதமர் தனது பெரும்பான்மையை நிரூபிக்கும்வரை பிரதமராக ரணிலையே ஏற்றுக்கொள்வது என்ற சபாநாயகரின் புதிய அறிவிப்புப் புரட்சி தொடர்பாக அரசியல் ஆய்வாளரும் சட்ட முதுமாணியுமான வை. எல்.எஸ்.ஹமீட் வழங்கிய அறிக்கை**

பிரதமராக இல்லாத ஒருவர் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் வெற்றிபெற்றதனால் பிரதமராகிவிட முடியாது.

### யார் தீர்மானிப்பது?

ஜனாதிபதி (நிறைவேற்றுத்துறைத் தலைவர்) அவரை நியமித்தது சட்டப்படியானது என்கிறார். சபாநாயகர் (சட்டவாக்கத்துறைத் தலைவர்) அது சட்டத்திற்கு முரணானது என்கின்றார். (ஏனைய சட்டறிஞர்களின் கருத்துக்கள் அபிப்பிராயம் மட்டுமே. அவை நிலைப்பாடுகள் அல்ல. ஆனாலும் இந்த அபிப்பிராயங்களை வைத்துத்தான் இவ்விரு தலைவர்களும் நிலைப்பாட்டை எடுக்கிறார்கள் என்பது வேறுவிடயம்)

இப்பொழுது இந்த இரண்டு நிலைப்பாட்டிற்குமிடையில் தீர்ப்புக்கூறும் அதிகாரம் நீதிமன்றுக்கே இருக்கின்றது. ஆனால் யாரும் நீதிமன்றத்தை நாடவில்லை.

### சட்டவாக்கத்துறை VS நிறைவேற்றுத்துறை

இன்றைய பிரச்சினையின் அடிப்படை ஜனாதிபதிக்கு பிரதமரை நீக்கும் அதிகாரம் உண்டா? என்பதாகும்.

நிறைவேற்றுத்துறைத் தலைவர் சரியென்கிறார். சட்டவாக்கத்துறைத் தலைவர் பிழை என்று கூறுவது வேறுவிடயம். ஆனால் பிழையென்ற நிலைப்பாட்டை எடுத்து அதன்படி செயற்படப் போகின்றேன்; என்று கூறுவது எந்த சட்டத்தின் அடிப்படையில்?

சபாநாயகர் இந்த சட்டத்தின் இத்தனையாவது சரத்தின் அடிப்படையில் இந்த முடிவை எடுத்திருக்கிறேன் என்று கூறவில்லை. ஜனாதிபதியின் முடிவு பிழை என்று மட்டும்தான் கூறுகின்றார். பிழையென்ற தீர்ப்பை நீதிமன்றம் மட்டுமே வழங்கலாம். சபாநாயகருக்கு தீர்ப்பு வழங்கும் அதிகாரம் இல்லை.

அபிப்பிராயம் கொள்ள எல்லோருக்கும் உரிமை உண்டு. அதேநேரம் அதை உத்தியோகபூர்வ நிலைப்பாடாக சபாநாயகர் எடுக்கலாம் அவரால் அதற்குரிய சட்டத்தின் சரத்துக்களைக் காட்டமுடியுமாயின். ஆனால் சபாநாயகர் கூறும் காரணம் 116 பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வாறு தெரிவித்திருக்கின்றார்கள்; என்பதாகும். அது அவர்களின் அபிப்பிராயம். அதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. ஆனால் அது எவ்வாறு ஒரு சட்டத்தின் அடிப்படையாக இருக்கமுடியும்.

சரி அது ஒருபுறம் இருக்கட்டும். பெரும்பான்மையை நிரூபிக்கின்றவரைத்தான் நான் பிரதமராக ஏற்பேன் என்று கூறுவதற்கு சபாநாயகருக்கு எந்த சட்டடிப்படையும் கிடையாது.

அடிப்படையில் நியமனம் பிழையென்றால் தீர்ப்பு நீதிமன்றத்திடம். அதையும்தாண்டி சபாநாயகர் ரணிலை பிரதமராக ஏற்று நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்றால் மஹிந்தவை சபாநாயகர் எவ்வாறு பிரதமராக ஏற்றுக்கொள்ள முடியும். எந்த சட்டத்தின் அடிப்படையில். அல்லது மஹிந்தவுக்கு இன்னுமொரு நம்பிக்கை வாக்கெடுப்பு நடாத்தி அதில் அவர் வெற்றிபெற்றால் அவரைப்பிரதமராக ஏற்றுக் கொள்ளப்போகின்றாரா?

அவ்வாறான ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கான நம்பிக்கை வாக்கெடுப்புக்கு பாராளுமன்ற நிலையியற்கட்டளை இடம்கொடுக்குமா? பிரதமராக நியமிக்கப்பட்ட ஒருவருக்கு நம்பிக்கை வாக்கெடுப்பு நடாத்தவேண்டிய அவசியம் அரசியல் அமைப்பில் இல்லை. ஆனால் ரணிலை பிரதமராக ஏற்றுக்கொண்டால், மஹிந்த பிரதமர் இல்லையென்ற நிலைப்பாட்டை எடுத்துவிட்டு அதன்பின் நம்பிக்கை வாக்கெடுப்பை நடாத்தி அவரைப் பிரதமராக ஏற்றுக்கொள்வதற்கு அரசியல் அமைப்பில் என்ன ஏற்பாடு இருக்கின்றது?

நமது நாடு ஒரு Constitutional democracy. அந்த நாட்டில் அரசியலமைப்பிற்கு அப்பால் ஜனாதிபதி செயற்படுவது பிழையென்றால் சபாநாயகர் செயற்படுவது சரியா?

### நாம் புரிந்துகொள்ள வேண்டியது

இந்தவிடயத்தில் பாராளுமன்றத்தைப் பொறுத்தவரை அரசியலமைப்புச் சட்டம் கூறுவது இவ்வளவுதான்.

பிரதமர் நியமிக்கப்பட்டால் அவரை பாராளுமன்றம் நம்பிக்கையில்லாப் பிரேரணையூடாக நிராகரிக்கலாம். நியமித்தமுறை சரியா? பிழையா? என்று பாராளுமன்றம் தீர்ப்புக்கூற முடியாது. அது நீதிமன்றத்தின் பணி. பாராளுமன்றத்திற்கே முடியாதபோது அதன்தலைவரான சபாநாயகருக்கு எவ்வாறு முடியும்?

அடுத்த கேள்வி

இங்குள்ள அடிப்படைப் பிரச்சினை பிரதமரை

I5 ஆம் பக்கம் பார்க்க....



# இலங்கையில் அதிகரிக்கும் தற்கொலைகள்



இலங்கையில் நாளொன்றுக்கு சாராசரியாக 8 பேர் தற்கொலை செய்கின்றார்கள். தற்கொலை செய்பவர்களில் ஆண்களே முன்னிலை வகிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.இந்த வருடம் முதல் 6 மாத காலங்களில் 1597 தற்கொலைகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. அந்த எண்ணிக்கையில் 1275 பேர் ஆண்கள், 322 பேர் பெண்கள் என்று அறிய முடிகின்றது.கோபம் மற்றும் முரண்பாடுகளை கட்டுப்படுத்தும் தன்மை மக்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும். மது பாவனை மற்றும் உள ரீதியான பிரச்சினைகள் உள்ளவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்குதல் மூலம் இதனை கட்டுப்படுத்த முடியும் என உள நல மருத்துவர்கள் கூறுகின்றனர். முரண்பாடுகளை கட்டுப்படுத்தும் தன்மை மக்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும். மது பாவனை மற்றும் உள ரீதியான பிரச்சினைகள் உள்ளவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்குதல் மூலம் இதனை கட்டுப்படுத்த முடியும்

வாழ்க்கை என்பது ஓர் அனுபவம். ஆளுக்கு ஆள் மாறுபடும். சுகமோ துக்கமோ அனுபவம் நம்மை பலப்படுத்துகிறது.

காயப்படுத்துகிறது, சிரிக்க வைக்கிறது, அழவைக்கிறது. முடிவில் இதில் எது வாழ்க்கை என்று சிந்திக்க வைக்கிறது.

சிந்திக்கும் மனிதன் தெளிவடைந்தானா என்றால் அதுதான் இல்லை. மேலும், மேலும் குழம்பி முடிவில் தற்கொலையில் வாழ்வை பறிகொடுக்கிறான்.வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு மனோபலம் ஒன்று மட்டுமே தீர்வாக அமைகிறது.

ஒவ்வொருவரின் வாழ்க்கை அனுபவங்களே அவர்களின் வழிகாட்டி. அனுபவங் களிலிருந்து அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படி கற்றுக் கொண்டவன் ஜெயிக்கிறான்

சி.திவியா

நம்பிக்கை எனும் வானவில் நம்மிடம் எப்போதும் இருக்கவேண்டும். வானவில் தோன்றும் போது வானம் அழகாகிறது. நம்பிக்கை தோன்றும் போது வாழ்க்கை அழகாகிறது. ஒவ்வொரு மனிதனின் கையிலும் அழகான வாழ்க்கை இருக்கிறது. அதை வளப்படுத்தும் நம்பிக்கை எனும் வானவில் தான் தோன்ற மறுக்கிறது.

நம்மைவிட உடலில் பலசாலி யானை

நம்மைவிட வேகத்தில் சிறந்தது குதிரை

நம்மைவிட உழைப்பில் சிறந்தது கழுதை.

இப்படி மிருகங்கள் நம்மைவிட பலமடங்கு பலசாலிகளாக இருந்தாலும், நாம்தான் இவைகளை அடக்கி ஆள்கிறோம். காரணம் மனிதன் மட்டுமே மனோபலம் கொண்டவன். நமக்கு ஏற்படுகிற பிரச்சினைகளும் அப்படித்தான். அதனை அடக்கியாளும் சக்தி நம்மிடம் உள்ளது.

இந்த வாழ்க்கை என்பது உண்மையில் நீர்க் குமிழியைப் போன்றது. அது உடையும் முன் விரும்பி அனுபவித்து வாழ்ந்து விடுங்கள்.

தற்கொலை எண்ணத்தை தூக்கி போடுவோம் சவால்களை ஜெயிப்போம் எறும்பு ஊரஊர கல் கூட தேயும் புது புதுவழி அமைப்போம் புது வாழ்க்கையில் பயணிப்போம்

உலகில் அதிகம் தற்கொலை செய்து கொள்வோர் பட்டியலில் இலங்கை நான்காவது இடத்தில் இருக்கிறது.

இந்தியா 18ஆ வ து இடத்தில் உள்ளது. 2016இல் இலங்கை முழுவதும் இடம்பெற்ற தற்கொலைகளில் எண்ணிக்கை 3025 ஆக இருந்தது வவுனியா மாவட்டத்தின் தற்கொலை2016ஆண்டு22, 2017ஆண்டு32,2018ஆண்டு23என வவுனியா வைத்தியசாலையின் தகவல் அறியும் சட்டத்தின்மூலம் கிடைக்கப்பெற்ற தரவுகள் தெரிவிக்கின்றது. அதற்குள் தமிழர்களாகிய நாங்களும் மிக மோசமான உள நலத்தோடு இருக்கிறோம் என்பதனை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

வவுனியாவில் தற்கொலைகள் தொடர்ந்துகொன்டே போகின்றது நுன்கடன் மூலம் பெண்களை மையப்படுத்தி வழங்கப்படும் கடன்களே மூலகாரணமாகவுள்ளது ஏழ்மையை மூலகாரணமாகக்கொன்டு இயங்கும் பெண்களின் வாழ்க்கைககுதிரை நளிவடைந்தமையினால் இதனைபயன்படுத்தி நுண்கடன் தலைவிரித்தாடுகிறது.

மனிதனின் வேர்கள் என்பது உளம் சார்ந்தது.

உளப்பிரச்சினைகள் பரந்தளவில் காணப்படும் நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. அதில் இலங்கை தொடர்பில் சரியான தகவல்கள் கிடைக்கப்படாமல் இருக்கலாம். ஆனால் அதிகம் அதிகம் தற்கொலை செய்வோர் பட்டியலை நோக்கினால் இந்த விடயத்திலும் இந்தியாலை விட நாங்கள் முன்னுக்கு இருக்கலாம் என்பதனை ஊகித்துக்கொள்ளலாம். போதைவஸ்த்துப் பாவனை, வீதி விபத்துக்கள் வாள் வெட்டுக்கள் ஏற்படும்கின்ற சமூகப் பிரச்சினைகளை நாங்கள் நித்தமும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம்.

இதற்க்கு உதாரணமாக வவுனியாவில்ஒரு கிழமைக்குள்ளே தொடர்நான்கு தற்கொலைகளும் ஒரு தற்கொலை முயற்சியும் ஒரு கிழமைக்குள்ளே இத்தனை தற்கொலைகள்

1.25.02.2018 தூக்கில் தொங்கிய நிலையில் (காதல் விவகாரம் ) அன்றே அவரது காதலியும் கிணற்றில் விழுந்து தற்கொலை

2.26.02.2018 வவுனியா ஆச்சிபுரத்தை சேர்ந்தமாணவி ஆசிரியர் பேசியதால் மருந்து குடித்து தற்கொலையில் காப்பாற்றப்பட்டு மீண்டும் தூக்கிட்டு தற்கொலை செய்தார்

3.27.02.2017 வவுனியா குருமன் காட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் வயது 28

4.27.02.2018 வவுனியா மாணவன் யாழ்ப்பாணத்தில் தூக்கிட்டு தற்கொலை

5.28.02.2018 ரயிலில் தற்கொலைக்கு முயன்றுள்ளார் வவுனியா பெண் ஒருத்தர் பல காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்க பட்டுள்ளார்.

இப்படியான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உள வைத்திய நிபுணர்கள் இருக்கின்றார்கள்.என்று சொல்லி விட்டு நாங்கள் எல்லோரும் அமைதியாக அருந்து விட முடியாது.

போதியளவு உள வைத்திய நிபுணர்கள் எம் மத்தியில் இல்லை. இருக்கும் சில நிபுணர்களுக்கும் தீவிர உளப்பிரச்சினைகளுக்கும் மட்டுமே சிகிச்சையளிப்பதற்குப் நேரமுள்ளது.

அதற்கு அடுத்த படிநிலையில் வேலை செய்யக்கூடிய உளவனப் பணியாளர்களும் போதிய அளவுக்கு இல்லை.

இதனால் இதற்கான தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நாங்கள் எல்லோரும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

சமூக சேவை என்பது ஒரு வகையில் நியூட்டனின் மூன்றாவது விதி போன்றது. நாங்கள் என்ன செய்கின்றோமோ அது எங்களுக்குத் திரும்பி வரும் நியூட்டன் சடப்பொருட்களுக் கூறியிருந்தாலும் மனிதனுக் அது சரியானதாகவே பொருந்தும். நான் இவ்வளவு பேருக்கு உதவி செய்யக் கூடிய நிலையில் இருக்கின்றேன் என்பது எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய விடயம் இல்லை.

இந்த சுயகணிப்பு உள வளத்திலே மிகப்பெரியதொன்றாகும். அதை பெற்றுக்கொள்கின்றவர்கள் மிக நீண்ட காலம் வாழ்கின்றார்கள். சமூக சேவைப்பணிகளிலே நீண்டகாலம் வாழ்கின்றார்கள். அப்படியானவர்கள் வயது போனாலும் ஆரோக்கியமாக இருப்பார்கள்.



ஏனென்றால் அவர்களின் மன ஆரோக்கியமாக இருக்கிறது. மனம் ஆரோகக்கியமாக இருக்கிறது. சமூக சேவை என்பது சமுதாயத்தின் நல்லெண்ணத்தை பெற்றுக்கொள்கின்ற விடயம்.

விஞ்ஞான பூர்வமாக எலிகளை வைத்து உரு பரிசோதனை செய்யப்பட்டது.

அந்த பரிசோதனையில் முடிவு என்னவென்றால் அவை கூட்டாக இருக்கும் போது ஒரு அதிர்ச்சி கொடுக்கப்பட்டால் இதனை அவைகள் உள்வாங்குகின்ற தன்மை குறைவாக இருக்கிறது.

அது எலிக்கு சரியென்றால் எங்களுக்கும் சரி தனியே இருக்கும் போது எனக்கு வருகிற அதிர்ச்சி, பயம், கஸ்டம், உளநெருக்கடி.

ஆனால் பத்துப்பேர், இருமது பேர், நூறு பேர் ஒன்றாக சேர்ந்து இருப்போமானால் அந்த அதிர்ச்சி எமக்கு குறைவாக இருக்கும் என்பது நிறுவப்பட்டிருக்கிறது.

ஆகவே தான் கூட்டா சேர்ந்து இயங்குகின்றவ்கள் ஆரோக்கியமாக இருப்பவர்கள் என்பது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இன்றைய உலகில் நவீனத்துவமான உளவியல் சிகிச்சை முறைகள் கையாளப்படுகின்றன.

இப்போது எங்கள் பகுதிகளில் தற்கொலைகள் அதிகரித்துவருகின்றது இதற்கு மூலகாரணங்களை ஆராய்ந்தால் முதலில் விடயங்களை திரும்ப திரும்ப யோசிப்பதையும் எதிர் காலத்தில் நடக்கப் போவதனையும் யோசித்து கவலைப்படுவதுஆகும் இதனை விட்டுவிட்டு இன்றைக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதனை மட்டும் யோசிக்கதவறுவது மாகும்

இதனை தடுப்பதற்கு பல சிகிச்சை முறையானது உளநலப்பிரச்சினைகளோடு இருப்பவர்களுக்கு மட்டுமல்ல நல்ல உள ஆராக்கியத்தோடு இருப்பவர்களும் உள்ளதுபின்பற்றக் கூடியது துன்பமாயிருக்கு கவலையாயிருக்கு, பயமாயிருக்கு என்று எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்வோம். அதே நேரம் எங்களுடைய இலக்குகளை விழுமிய திசையில் அமைத்துக்கொண்டு எங்களுடைய செயற்பாடுகளை செய்வோம்.

விழுமிய திசைதான் அங்கே விழுமியக்கருத்தாக அமையும். நாங்கள் எதைச் செய்தாலும் எம்மை அவதானிக்கும் மனத்தை நன்றாக வலிமைப் படுத்திக்கொண்டு விழுமிய திசையில் எங்கள் இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு நடப்போமாக இருந்தால் எங்களது உள ஆரோக்கியம் பற்றி என்றுமே கவலைப்படதேவையில்லை.

## மக்களின்...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

நகர்வுகளை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற விடயத்தை சமுக ஆர்வளர்களும், சமயத் தலைவர்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.

தேசிய அரசியலின் தோல்வி இந்த நாட்டின் அரசியல் விடயங்களில் மட்டுமல்லாது நாட்டின் பொருளாதாரத்திலும்கூட பாரிய தாக்கங்களை ஏற்படுத்தலாம். இன்றைய அரசியல் மாற்றம் காரணமாக இலங்கைக்கான ஜி.எஸ்.பி வரிச்சலுகைகள் நிறுத்தப்படலாம், வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்படலாம் அதன் மூலம் இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிப் பாதையில் செல்வதற்கு வழிவகுக்கும் என்ற கருத்தை ஒருசாரார் முன்வைக்கின்றனர். ஆனால் இதற்கு மாற்றமாக ஆளுந்தரப்பினர் கடந்த அரசு நாட்டில் பணவீக்கத்திற்கு வழிசமைத்து விட்டது, பொருட்களின் விலைகள் தொடச்சியாக அதிகரித்துச் செல்கின்றது, கடன் சுமைகள் அதிகரிக்கின்றது, மக்களின் வாழ்க்கைச் செலவு பண்மடங்கு அதிகரித்துள்ளது என்றவாறு தமது வாதங்களை முன்வைத்தள்ளனர். இத்துடன் மைத்திரி, மஹிந்த கூட்டாட்சி தற்போது பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளதாக தெரிவித்தாலும் அது மக்களுக்கு பயனளிக்கக்கூடிய அல்லது ஆறுதல் அளிக்கக்கூடிய விலைக்குறைப்பாக அது இல்லை என்றும் பண்மடங்கு அதிகரிக்கப்பட்ட விலைகளில் ஒரு சிறுதுளிதான் குறைந்துள்ளது. அதுவும் ஒரே நேரத்தில் குறைய வில்லை ஒவ்வொருவரும் விலையைக் குறைத்து விற்பதற்கு விரும்பாத ஒரு போக்கையே காண முடிகின்றது என்ற விடயத்தையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக உணவகங்களில் பல இடங்களில் விலையை அவர்கள் இன்னும் குறைக்க வில்லை. தேனீர்க் கடைகளில் தேனீருக்கான விலையை ஐந்து ரூபாவால் குறைத்துள்ளதாக தெரிவித்த போதிலும் இது விடயத்தில் பல தேனீர்க் கடைகளில் அவர்கள் இன்றும் விலையைக் குறைக்க வில்லை. இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள்கூட தமது கடமைகளைச் சரியாக செய்யாது பாராமுகமாக இருக்கின்றமை விடயத்தில் நுகர்வோரும், மக்களும் விசனமடைந்துள்ளனர்.

நாட்டின் பொருளாதாரம் இவ்வாறு இடம் பெற்றுக் கொண்டிருக்கடியில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தின் காரணமாக மக்களால் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் தத்தமது கட்சிப் பலத்தினைக் காட்டுவதற்காக மக்களின் விருப்பங்களுக்கு மாற்றமாக பணத்திற்காகவும், ஏனைய சுகபோகங்களுக்காகவும் விலைபோவது மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளதுடன், மக்களுக்கு அதாவது வாக்களித்தவர்களுக்கு அவர்கள் செய்யும் துரோகமாகவும் இருக்கின்றது என ஒரு சாரார் தெரிவிக்கின்றனர். இக்கருத்தானது நியாயமானதும், ஏற்றுக் கொள்ளக் கூடியதுமானதாகவே இருக்கின்றது.

குறிப்பாக தற்போதைய அரசியல் இருப்புக்கு சிறுபான்மைக் கட்சிகளின் அதரவு என்பது முக்கியமானதாகும். இவர்களின் ஆதரவு இல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ ஆட்சியமைக்க முடியாது. இவ்வாறான நிலையில் பேரினவாதக் கட்சிகள் சிறுபான்மைக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பக்கம் தமது கண்களை வைத்துக் கொண்டு அவர்களை பேரம்பேசி தம்பக்கம் இழுக்கும் விடயங்கள் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் இடம் பெற்று வருகின்ற நிலையில் இச்சிறுபான்மைக் கட்சிகள் தற்போது ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றத்தை ஏற்றுக் கொள்வதில்லை என்றும் தாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கே தமது ஆதரவு என்ற விடயத்தினையும் தெரிவித்துள்ளமை மஹிந்த, மைத்திரி அரசுக்கு பாரியதொரு சவாலான விடயமாக இருக்கின்றதையும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான நிலையில் சிறுபான்மைக் கட்சிகள் மக்களின் நலன்களின் அடிப்படையில், அவர்கள் தமக்குத் தந்த வாக்குப் பலத்திற்கு மாற்றமாக செயற்படாது இருக்கும் விடயத்தில் உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ளன. எனினும் இரண்டு பக்கத்திலும் போட்டித் தன்மைகள் ஏற்பட்டு ஒருவருக் கொருவர் தாம்தான் பெரும்பான்மையுடன் இருப்பதாக தெரிவிக்கின்றனர். இருந்தாலும் நவம்பர் 14ஆம் திகதிக்குப் பின்னர்தான் நாட்டின் சரியானதொரு நிலைமைகளை மக்கள் கண்டு கொள்வர்.

நாட்டின் இன ஐக்கியத்திற்கும், சமாதானத்திற்கும், ஜனநாயக விழுமியங்களுக்கும் ஏற்ற வகையில் ஆட்சியை முன் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பும், கடப்பாடும் அரசியல் தலைமைகளுக்கும், ஆட்சியில் பங்கெடுப்பவர்களுக்கும் உள்ள முக்கியமான அம்சங்களாகும். இவற்றை விட்டுவிட்டு எடுக்கும் முடிவுகள் நாட்டில் குழப்பங்களையும், பிரச்சினைகளையுமே அதிகரிக்குமே தவிர தீர்வுகளுக்கானதாகவோ அல்லது நிரந்த ஆட்சிக்கானதாகவோ அமையாது.

எனவே தொகுத்து நோக்கும்போது ஜனநாயகம் என்பது விற்கப்படும் பொருளோ அல்லது அரசியல் நோக்கத்திற்காக பேரம் பேசும் பொருளோ அல்ல. மாறாக அது மக்களுக்கானதும், மக்களை நிம்மதியாக சமாதானத்துடன் வாழ வைக்கும் ஒன்றாகும். இதனை அரசியலில் ஈடுபடுபவர்கள் தமது சுயநலத்திற்காக சாகடிக்காது அதன் விழுமியங்களை மக்களின் நலன்களுக்காக அதனை உயிரோட்டமுள்ளதாக ஆக்குவதற்கு தம்மாலான முழமையான பங்களிப்புக்களைச் செய்து மக்கள் விரும்பும் வகையில் செயற்படுத்துவதே சரியானதொரு அரசியல் பொறிமுறையாகும் எனலாம்.

## அடை...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒருவர் கருத்துரைக்கின்றபோது ஒவ்வொரு நாடும், எங்களை பார்த்து சிரிக்கிறது - எனக் குற்றம் சாட்டியுள்ளார். அவர் கருத்துரைக்கின்றபோது இன்;றைய அரசியல் சூழ்நிலையினால்; நாடு செயலிழந்துள்ளது, பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்திருந்தார். இலங்கையை உலகநாடுகள் மத்தியில் நகைச்சுவைபொருளாக்கியுள்ளதாகக் கூறும் அந்த பாராளுமன்ற உறுப்பினர் பிரதமர் யார் என்ற விவகாரத்திற்கு பாராளுமன்றத்தின் ஊடாக தீர்வை காணவேணடும் எனவும் தெரிவித்திருந்தார். எமது நாடு அதளபாதளத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது என குறிப்பிட்டுள்ள அவர் அரச அலுவலகங்களில் எவரும் பணிபுரியாத நிலை உருவாகியுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

அரச ஊழியர்கள் யார் உண்மையான பிரதமர் என தெரியாமல் தடுமாற்றத்தில் உள்ளனர் மக்கள் குழம்பிப்போயுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொருநாடும் எங்களை பார்த்து சிரிக்கின்றது அலரிமாளிகையில் ஒரு பிரதமர் இருக்கின்றார் மற்றொரு பிரதமர் பிரதமர் அலுவலகத்தில் இருக்கின்றார் இந்த விடயத்திற்கு நாடாளுமன்றத்தின் மூலம் தீர்வை காணவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். எனவேதான் அரசியல் சூழ்நிலைகளுக்கும் மத்தியி;ல் நாட்டின் அரசியல் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தயவு செய்து முஸ்லிம் அரசியல்வாதிகள் நடுநிலை வாதிகளாக இருந்து இரண்டு தரப்பினரையும் ஒற்றுமைப்படுத்தி சீரான அரசியல்தீர்வை முன்வைத்து நாட்டில் சுமுகமான அரசியல் சூழ்;நிலை ஒன்றை உருவாக்க முனைவதற்கு தம்மைத் தயார்படுத்துமாறு மக்கள் சார்பாக வேண்டுகின்றோம்.



# தொடரும் குழப்பம்!

## இன்றைய அரசியல் நெருக்கடியில் சட்ட ஆட்சி சார்ந்த விமர்சனப் பார்வை

'நம்பிக்கை குறைந்த குழப்பத்தால்' உலகம் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் மக்கள் மத்தியில் குழப்பம், பாதுகாப்பின்மை உணர்வு காணப்படுவதாகவும் நம்பிக்கையென்பது அறவே இல்லாமல் போய்விடும் கட்டத்தை அண்மித்துவிட்டதாகவும் அதேசமயம் நாடுகளுக்குள்ளும் அரசியல் கட்டமைப்புகளில் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை குறைவடைந்து வருவதாகவும் அதேசமயம் நன்மை,தீமை பற்றிப் பொருட்பாடுத்தப்படாமல் 'பிரபல்யமே' கொடிக்கட்டிப் பறப்பதாகவும் அண்மையில் ஐ.நா செயலாளர் நாயகம் கூறியிருந்தார். நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் அரசியல் மாற்றங்களும் இதனையே வெளிப்படுத்துபவையாகத் தோன்றுகின்றது எனலாம்.

தேசங்கள் தோற்றம் பெற்ற காலம் தொட்டே விதிமுறைகளின் தொகுப்பே ஆட்சியும் அதிகாரமுமாய் இருந்து வந்துள்ளது. இவ்விதிமுறைகளின் கோட்பாடு ரீதியான தொகுப்பையே சட்டம் எனக் காண்கின்றோம். சட்டத்தின் உருவாக்கம் மற்றும் அமுலாக்கம் என்பவற்றை பேணுவதற்கான அமைப்பு முறையே ஆட்சி மற்றும் அதிகாரம் கொண்ட அரசு அரிஸ்டோட்டிவ் தொடக்கம் டைசி வரைக்கும் சட்டத்தின் ஆட்சி பற்று பல்வேறு கருத்தாக்கங்கள் உருப்பெற்றுள்ள. இவ்வாறான சட்டவாட்சி கருத்தாக்கங்களை நடைமுறைப்படுத்தவும் சட்டத்தினால் மக்கள் ஆளப்படுவதனை உறுதிப்படுத்தவும் சட்டத்தினால் மக்கள் எவ்வாறு ஆளப்படவேண்டும் என்பதை வரையறுக்கவும் உருவாக்கப்படும் அடிப்படைச்சட்ட முறையே அரசியலமைப்பாகும். இதை இன்னுமொரு வார்த்தையில் சொன்னால் சட்டங்களை உருவாக்குவாக்குவதற்கும் அமுலாக்குவதற்குமான தாய்ச்சட்டம் எனக்கூறலாம்.

சட்டவாட்சி என்பது ஒரு நாட்டில் ஆட்சியை கொண்டு நாடாத்துகின்ற அதிகாரம் சட்டத்திடமே காணப்படுகின்றது என்பதை வலியுறுத்தும் கோட்பாடே சட்டவாட்சி கோட்பாடாகும். சட்டவாட்சியின் பிரதான மூன்று விடயங்களாக

★ சட்டம் அனைத்தினையும் விட மேலானதும் தனிமுதன்மையானதுமாகும்

★ சட்டத்தின முன் சகலரும் சமன், எவருக்கும் விசேட வரப்பிரசாதம் கிடையாது

★ சட்டத்தால் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

எனவே இவ்வாறான விடயங்கள் கொண்ட சட்டவாட்சி சில பண்புகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது எனலாம்.



சட்டத்தால் தனிப்பட்ட பாதுகாப்பு வழங்கப்படல், ஊடக சுதந்திரம் நிர்ணயம் செய்யப்படல், அடிப்படை உரிமை மீறப்படாமை, அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்பு வழங்கல், மத சுதந்திரம் பேணப்படல், அரசியல் சுதந்திரம் பேணப்படல் என்பன இதில் அடங்குகின்றன.

சட்டவாட்சி கோட்பாட்டின் முக்கியத்துவம் பல்வேறு அம்சங்களாக கூறப்படுகின்றன. அதே நேரம் இலங்;கையில் தற்போதைய அரசியல் நெருக்கடிகள் இவற்றிற்கு அப்பாற்பட்டதாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவாது, மனித உரிமைகள் பாதுகாக்கப்படல், தனிநபர் சுதந்திரம் பேணப்படல், எதேச்சதிகாரம் தவிர்க்கப்படல், சட்ட சமத்துவத்தை மேலோங்க செய்து ஏற்றத்தாழ்வு இல்லாத நிலையை உருவாக்கல், நல்லாட்சிக்கு தூண்டுகோளாக இருத்தல், ஜனநாயக விழுமியங்களை பாதுகாத்தல் போன்றனவாகும்.

அந்தவகையில் தற்போதைய அரசியல் நிலைமைகளில் நிறைவேற்று அதிகாரம் மற்றும் கலப்பு அதிகார முறையை கொண்ட இலங்கை நாடானது பல்வேறு அரசியல் சிக்கல், பொருளாதார நெருக்கடிகளை கொண்டதாகவும் புதிய சடுதியான மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் சர்வதேசத்தின் பார்வையை தன்பக்கம் திசைத்திருப்பியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இதில் முக்கியமாக அரசியல் யாப்பினை மீறி செயற்பட்டமையே அரசியல் நெருக்கடி ஏற்;பட்டமைக்கான முக்கியமான காரணமாக அமைகின்றது.

பொதுவாக நாட்டின் அரசியல் நெருக்கடிகள் பல்வேறு காரணங்கள அடிப்படையில் நாடுதழுவிய ரீதியில் ஏற்பட்டு வருகின்றதோடு குறிப்பாக வடக்கு வடமாகாண சபையின் முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் புதிய கட்சியொன்றை ஆரம்பித்தமை, தலைநகரின் காலி முகத்திடலில் இளைஞர்கள் அலையெனத் திரண்டு பெருந் தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பளக் கோரிக்கையை வலியுறுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நடத்திய போராட்டம் தெற்கில் பெரும் பரப்பரப்பை ஏற்;படுத்தியது. மேலும் கடந்த சில மாதங்களாக அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான தொடர்ச்சியான கவனயீர்ப்பு போராட்டங்கள், பொருளாதார பிரச்சினைகள் என பல்வேறு விதங்களில் ஏற்பட்ட வண்ணமே காணப்பட்டன.



சட்டவாட்சியின் அடிப்படைக் கோட்பாடான சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை முன் அனைவரும் சமம் என்பதை தகர்த்து ஜனாதிபதி என்ற தனிமனிதரை சட்டத்திற்கு மேலோங்கிய அதிகாரமிக்கவராய் ஆக்கியுள்ளது. இது அதிகாரம் என்னும் தனிப்பதம் அரசியலமைப்பின் ஆணிவேரான சட்டவாட்சியையே ஆட்டம் காணச் செய்யதுள்ளது என்பதற்கு இன்னுமோர் உதாரணமாகும்.

சட்டவாட்சி என்ற அடிப்படையில் பொதுவாக சட்டத்திற்கு ஏற்றதான ஆட்சி முறையை கொண்டிருப்பதோடு சர்வதேசத்தின் விருப்பத்தை கவர்ந்த ஒன்றாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை மூன்றாம் உலக அரசியல் கலாசாரம் காணப்படுகின்றன. எனினும் இலங்கையில் இந்நிலைகள் மாறுபட்டதாகவே காணப்படுகின்றன. சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை, ஊடகம், சிவில் அமைப்புக்கள் என்ற நிறுவனம் சார்ந்த அமைப்புக்கள் சுயாதீனமானதாக இயங்கியதா? அதேநேரம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் தன்மையில் காணப்பட்டதா என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

இதேவேளை சுயாதீனமான அரச செயற்பாடுகளை உறுதிபடுத்தும் முகமாக அரசியமைப்பின் 17ஆம் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்களுக்கு பதிலாக பாராளுமன்றக் குழு என்ற அமைப்பிடம் அனைத்துவகையான அரச நிருவாக அதிகாரங்களும் மீளக்கையளிக்கப்பட்டிப்பதனூடாக அரச இயந்திரத்தின் அதிகாரத்திற்கான தேடலும் அதற்கு உறுதுணையாக இரண்டாம் குடியரசு யாப்பின் உறுப்புரைகள் அமைந்து காணப்படுவதையும் தெளிவாக அறிந்து கொள்;ள முடிகிறது. குறிப்பாக 19 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் போன்றன தனிநபரின் சுயமான தீர்மானத்திற்கு இட்டுச் சென்றுள்ளது எனலாம்.

பொதுவாக சட்டவாட்சி என்பது சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் பொதுவான ஜனநாயக பண்புகளை உள்ளடக்கியதாக நிர்வாகம், நீதித்துறை, சட்டத்துறை, சுதந்திர ஊடகம் சார்ந்த பல்வேறு ஏற்பாடுகளை மக்களின் நலனுக்கான ஏற்படுப்படுத்தப்பட்டு யாப்பிற்கு உட்பட்;டதான அதிகார வரையறைகளை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றனர்.

இலங்கையின் அரசியலில் ஒக்டோபர் 26ஆம் திகதி ஒரு முக்கியமான வரலாற்று தினமாகப் பதிவாகியிக்கின்றது. வரலாற்றுத்தினம் என்பதிலும் பார்க்க ஜனநாயகத்தைக் கேள்விக்கு உள்ளாக்கிய ஒரு கரிநாளாகவும் அது கருதப்படலாம். அன்றைய தினம் எவருமே எதிர்ப்பார்த்திராத வகையில் திடீரென அதிர்ச்சியளிக்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நாட்டின் பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். இந்த அரசியல் மாற்றம் உள்ளூரில் மட்டுமல்லாமல் சர்வதேசத்திலும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

சி.அருள்நேசன்
கிழக்குப் பல்கலைக்கழகம்

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் ஏற்பாடுகளின்படி பதவியில் இருக்கும் பிரதமரை ஜனாதிபதி எழுத்து மூலம் அறிவித்து பதவி நீக்கலாம். இவ்வேற்பாடு 19ஆவது திருத்தத்தில் அந்த ஏற்பாடு நீக்கப்பட்டது. அதாவது பிரதமரை பதவி நீக்குவதற்கு ஜனாதிபதிக்கு இருந்த வெளிப்படையான ஏற்பாடு நீக்கப்பட்டது. 19ஆவது திருத்த ஏற்பாட்டின்படி உறுப்புரை 42(2) இன்படி பாராளுமன்றத்தில் நம்பிக்கையை பெற்றவரென ஜனாதிபதி அவரது அபிப்பிராயப்படி நம்பும் பாராளுமன்ற உறுப்பினரை பிரதமராக நியமிப்பார். என்ற உறுப்புரை இன்றைய அரசியல் நிலைக்கு மற்றும் சட்டவாட்சிக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியதோடு பொதுமக்கள் மத்தியில் கேள்விக்குட்படுத்தப்பட்டது. யாப்பிற்கமைய மேற்கொள்ளப்பட்டாலும் எவ்வித அறிவிப்பும் இன்று நடைபெற்றமையே பலரதும் குழப்பத்திற்கும் காரணமாகும்.

பிரிவு 46(2) இன்படி பிரதமர் எழுத்து மூலம் ஜனாதிபதிக்கு தான் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவிப்பதன் மூலம் பாராளுமன்ற உறுப்புரிமையை இழக்கும்போது பதவி இழப்பார் இதைத்தவிர பிரதமரை பதவி நீக்கும் ஏற்பாடுகள் எதுவும் அரசியல் யாப்பில் இல்லை. இதற்கு முன்பும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்கஹவை பதவி நீக்குவார் என்று இவ்வருட ஆரம்பத்திலிருந்து அரசியல் வட்டாரங்களில் அலசப்பட்டது. அதனை ஜனாதிபதி செய்வதற்கு அரசியல் யாப்பில் ஏற்பாடு இல்லை என்பதால் கடந்த ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவிற்கு எதிராக நம்பிக்கையில்ல பிரேரணை கொண்டு வரப்பட்டது. அதில் ரணில் வெற்றி பெற்றதால் அவரை பதவி நீக்கம் செய்ய முடியவில்லை.

இதற்குப் பிறகு மகிந்த அணியினர் தாங்கள் தேசிய கூட்டணி என்ற மைத்திரி - ரணில் கூட்டரசாங்கத்தை கவிழ்க்கப் போவதாக கூறிவந்தனர். பாராளுமன்றத்தை கலைத்துவிட்டு தேர்தலை நடத்தும்படி ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்து வந்தனர். 19ஆவது திருத்தத்தின்படி 4 ½ வருடங்கள் கழியாத நிலையில் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்க முடியாது. அப்படி கலைப்பதாயின் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனான பாராளுமன்றத்தை கலைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் இவ்வாறான தீர்மானத்தை நிறைவேற்றும் சூழ்நிலை இருக்கவில்லை.

ஜனாதிபதி மைத்திரி அமைச்சரவையை கலைத்துள்ளதோடு புதிய அமைச்சரவையையும் நியமித்துள்ளார். குறிப்பாக 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தது முதல் மீண்டும் அரசியல் ஆதிகத்தை நிலைநாட்டிக் கொள்ள மகிந்த ராஜபக்ஷ தொடர்ச்சியாக பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். 19ஆவது திருத்தச்சட்டத்தின்படி இரண்டு தடவைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதி பதவி வகிக்க முடியாது என்றாலும் அவ்வேறுபாடு தனக்கு ஏற்புடையதாகாது என்று தொடர்ந்து கூறிவந்ததுடன் தான் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் மகிந்த கூறிவந்தமை தெரிந்ததே. இவ்விடயம் தனி ஒருபர் எதேச்சதிகார முறையை வெளிப்படுத்துவதாக காணப்படுவதோடு பெரும்பான்மையினரின் பலத்தை சுட்டிக் காட்டுகின்றது.

19ஆவது திருத்தத்தின்படி ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளதால் தான் பிரதமராக பதவி ஏற்கவே விரும்புவதாக பிறிதொரு சந்தர்ப்பத்தில் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்த நிலையில் அதற்கான சந்தர்ப்பம் மிகுந்த அரசியல் நெருக்கடி நிலையில் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இரண்டு பேர் பிரதமர்களாக இருப்பதாக தெரிவித்த சூழ்நிலையில் அரசியல் யாப்பு ஏற்பாடுகளின் படி பிரதமரை பதவி நீக்கம் செய்யும்படி ஏற்பாடு இல்லாத சூழ்நிலை நிலையில் தற்போது இலங்கையில் அரசியல் யாப்பு சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இந்த சர்ச்சையை தீர்க்க உயர்நீதி மன்றம் அதனது அபிப்பிராயத்தை தெரிவிக்கலாம். இதைவிட அரசியல் யாப்பின் ஏற்பாடுகளின் படி பாராளுமன்றம் தீர்மானிக்க வேண்டும். அதாவது யாருக்கு பாராளுமன்ற பெரும்பான்மை இருக்கின்றது என்பதை சபாநாயகர் தீர்மானிக்க வேண்டும். ஆகவே இவ்வாறான நிலையில் சட்டவாட்சிக்கு புறம்பான அரசியல் செயற்பாடுகள் இலங்கையில் நடந்தேறிய வண்ணம் உள்ளது யாவரும் அறிந்த ஒன்றாகும்.


இலங்கையின் தற்கால அரசியல் நெருக்கடிகளுடனான சட்டவாட்சி தத்துவங்கள் பல்வேறு நிலைகளில் விமர்சிக்கப்படுகின்றன. குறிப்பாக சட்டத்தால் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்னறது எனக் கூறப்பட்டாலும் தற்காலத்தில் வலுவேறாக்கமின்மையால் நீதித்துறை சுதந்திரம் பேணப்படாமை தனிநபர்குட்பட்டதாகவும் பக்கச்சார்பான தீர்மானங்களை முன்வைக்கும் நிலை காணப்படுகின்றது. அதேநேரம் சட்டவாட்சி கோட்பாடு சட்டத்தை மீறக்காரணம் எவை என்பது பற்றி கவனம் செலுத்தவில்லை. சட்டத்தின் முன் யாவரும் சமன் என்ற கருத்தானது விமர்சனத்துக்குள்ளாகின்றது. அதாவது சிலவேளைகளில் நாட்டுத் தலைவர்கள், அரச பிரதிநிதிகள் மற்றும் இராணுவ வீரர்கள் போன்றோருக்கு விசேட சலுகைகள் வழங்கப்படுகின்றமை சட்டவாட்சிக்கு முரணான தன்மையை வெளிக்காட்டுகின்றது எனலாம்.

எனினும் இந்த நெருக்;கடியைத் தீர்ப்பதற்கு 3 வழிகள் உள்ளன. ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஒத்திவைத்து மீள பாராளுமன்றத்தை கூட்டுவது கார்த்திகை 14ஆம் திகதி என பிரகடனப்படுத்தியதால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையில் நிரூபிக்கும் பொழுது நெருக்கடி நிலை தீரலாம். அடுத்ததாக இலங்கைப்பிரஜை ஒருவர் உயர் நீதிமன்றத்தை நாடினால் உயர்நீதிமன்றம் இவ்விவகாரத்தில் சரியான வியாக்கியானத்தை வழங்கும். நாட்டின் ஜனாதிபதியும் அவசியம் கருதி உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை நாடமுடியும். இலங்கையின் நீதிமன்றங்கள் சில விமர்சனங்களுக்கு உட்பட்டாலும் நம்பத்தகுந்த நீதி சேவையை நிர்வகிப்பது மட்டுமல்ல மிக சிறந்த தீர்ப்புகளையும் வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தங்கள் அரசியல் செயற்பாட்டில் தொடர்ந்து அரசுகளுக்கு எதிர்ப்புகளை காட்டி நீண்டகாலம் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று பாராளுமன்ற அங்கத்தவர்களை உடைமையாக்கிய தமிழரசக் கட்சி, தமிழ் காங்கிரஸ், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் தலைவர்கள் முக்கிய பிரமுகர்களும் சட்டம் படித்தவர்கள் என்பதும் பிரபலமான சட்டமேதைகள் என்பதும் இலங்கை நீதி பரிபாலனசபை மேல் எவ்வளவு தூரம் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதையும் ஐயம் திரிபின்றிக் காட்டுகின்றது. எனவே இவ்வாறான நிலைப்பாடானது சட்டவாட்சியை கேள்விக்குட்படுத்துவதாக அமைகின்றது. முத்துறை சார்ந்த நிறுவனங்களில் நீதித்துறை சுயமாக இயங்குவதற்கு தடையானதாக இருக்கின்றது.

எது எவ்வாறாக இருந்தாலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்கு இன்னமும் 1 ½ வருடங்களே இருக்கின்ற நிலையில், எதிர்வரும் நாட்களுக்கு அதிகளவுக்கு நெருக்கடிகளைக் கொண்டவையாக அமையக்கூடுமென்ற அச்சம் பரவலாக மேலெழுந்துள்ளது. கடந்த 3 ½ வருட காலமாக இரு பிரதான கட்சிகளையும் பங்காளிகளாக் கொண்ட கூட்டணி அரசாங்க காலத்தில் பொருளாதார ரீதியில் மேம்பாடு காணப்பட்டாவிடிலும் குறிப்பாக சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் மக்கள் உட்பட பொதுமக்கள் அதிகளவுக்கு உரிமைகளை அனுபவிக்கக் கூடியதாக இருந்த நிலையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி நிச்சயமற்ற நிலையைத் தோற்றுவித்திருப்பதுடன் எத்தனை நாட்களுக்கு நீடித்துச் செல்லுமெனவும் எதிர்வுகூறமுடியாதுள்ளது.

நிறைவேற்றதிகாரத்திற்கும் சட்டவாக்கத்திற்கும், நீதித்துறைக்கும் இடையில் ஒன்றையொன்று மேவிச் செல்லாத வகையிலும் அத்துடன் சமமானதாகவும் அதிகாரங்கள் பங்கிடப்பட்டிருப்பது அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டிருந்தால் தற்போதைய இக்கட்டான நிலைமைக்கு உடனடியாகத் தீர்வொன்று சட்டப்பட்டிருக்கும். ஆனால் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட அதிகாரங்கள் தொடர்பாக தெளிவற்ற தன்மை காணப்படுகின்றது. எவ்வாறாயினும் ஜனநாயக விதிமுறைகள் தற்போது முற்றுகைக்குள்ளாக்கப்பட்டிருப்பதாக விமர்சிக்கப்படும் நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியல் கட்சியொன்றின் தலைவர் அல்லது அரசியல்வாதி என்பதற்கு அப்பால் தேசத்தின் தலைமைத்துவப் பண்பை நிலைநிறுத்த வேண்டியதே அவசியமானதாகத் தென்படுகின்றது.

பொதுவாக ஒரு நாட்டின் அரசியல் நிலைகளை சர்வதேசம் கவனித்து வருகின்றபோதும் இலங்கை விவகாரத்தில் இந்தியா, சீனா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் என்பன தங்களது அபிப்ராயங்களை செலுத்து வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபை செயலகம் நாட்டில் மீண்டும் இனவாதம் தலைத்தூக்கவிடக்கூடாது என்ற சிந்தனையை அளித்துள்ளதோடு உலக நாடுகளின் அரசியல் முறைகளுக்கு அப்பால் தீர்க்கமான, கட்டுக்கோப்பான அரசியலை இலங்கையில் காண்பதில் கடினமாக உள்ளதை ஆதாரப்படுத்தியுள்ளது எனலாம்.



சட்டவாட்சி விதிகளுக்கு அமைவாக நாட்டின் அனைத்து தரப்பினரின் அபிலாஷைகளையும், உரிமைகளையும் பாதுகாக்கின்ற அதேவேளை அரசியலமைப்பை மேவிச் செல்கின்ற தன்மையை இல்லாதொழிக்க வேண்டுமென சர்வதேசம் வலியுறுத்திகின்றன. இல்லதொழிய சர்வதேச மட்டங்களில் இலங்கைக்கான சலுகைகள் குறைந்து போகும் அதேவேளை, சர்வதேசத்தின் நேரடியான தலையீடுகள் இலங்கையினுள் ஏற்படுவதற்கு இவ்வரசியல் நெருக்கடி களம் அமைத்துக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

எனினும் இந்த மக்கள் ஆணையை இரு தரப்பினருமே முறையாக மதித்து செயற்படவில்லை என்பது கவலைக்குரியது மட்டுமல்ல, இந்நாட்டை பெரும் அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது. ஜனநாயக அரசியலில் மக்கள் ஆணையை மதித்து நடப்பதே அரசியல் தர்மமாகும். இந்;த அரசியல் குழப்பங்களுக்கு காரணமாக அமைந்த ரணில் - மைத்திரி தரப்பு முரண்பாடுகள் மக்கள் நலனையோ நாட்டு நலனையோ அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவில்லை. ஒருவருக்கு கழுத்தறுத்துவிட்டு அடுத்தவர் அதிகாரக் கதிரையைக் கைப்பற்றும் போட்டியே இதற்குக் காரணமாகும்.

19ஆவது திருத்தச்சட்டம், தகவலறியும் சட்டம் போன்ற ஓரிரு முன்னேற்றகரமான சட்டத் திருத்தங்கள், ஜனநாயக சூழலில் ஏற்பட்ட முன்னேற்றம் தவிர நடைமுறையில் மக்கள் எதிர்பார்த்த எதுவும் நடக்கவில்லை. இப்போது மைத்திரியால் அரவணைக்கப்பட்டிருக்கும் நபர்களை ரணிலும் தனது சொந்தக் தேவைகளுக்காக வேறு வழிகளில் அரவணைத்து பாதுகாத்தே வந்துள்ளார். ஆக 62 இலட்சம் மக்களின் ஆணைக்கு செய்யப்பட்ட துரோகத்தில் ரணில் தரப்புக்கும் கணிசமான பங்கிருக்கிறது. பாராளுமன்றத்தில் எந்தவொரு தரப்பும் பெரும்

14 ஆம் பக்கம் பார்க்க....

# மலையகத்தில் சமூக சீர்திருத்த இயக்கமாக பரிணமித்து வரும் மதுவற்ற தீபாவளி!

பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து சம்பளம், சம்பள முற்பணம் போன்றவற்றில் எதிர்பார்ப்புகள் நிடிவேறாத நிலையில் தீபாவளி கொண்டாட்டங்களும், தீபாவளி விற்பனையும் களைகட்டுமா என்ற சந்தேகம் நிலவியத. ஆனாலும் கடந்த சனிக்கிழமை தொடங்கி அட்டன் நகரம் அங்கிங்கும் நகர முடியாத படி சனகூட்டத்தால் நிரம்பி வழிந்தது. சனநெருக்கடியில் ஒருவரை ஒருவர் இடித்துக்கொண்டும் பேசிக்கொண்டு சென்றதால் ஏற்பட்ட சத்தம், வாகனங்கள் வீதியில் நடந்த மக்களை தாண்டி சொல்லுவதற்காக தொடர்ச்சியான எழுப்பிய வாகன ஹோன்களின் கர்ணகடூரமான சத்தம், போட்டிபோட்டுக்கொண்டு நடைபாதை வியாபாரிகள் தங்கள் பொருட்களை விளம்பரப்படுத்தி அடித்தொண்டையில் முடியுமான வரை பலமாக கத்தி எழுப்பிய சத்தம், இவ்வளவுக்கும் மத்தியில் நகரத்தின் பல இடங்களில் உயர்ந்த இடங்களில் கட்டப்பட்டிருந்த ஒலி பெருக்கிக்கு அருகில் இருந்தவாறு அதில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த செய்தியை ஆர்வத்துடனும், கவனமாகவும் பலர் கேட்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அத்தனை இரைச்சல்களையும் தாண்டி பிரிடோ நிறுவனத்தின் தலைவர் திரு. மைக்கல் ஜோக்கிம் அவர்களின் குரல் தெளிவாக கேட்டது.

பிரிடோ நிறுவனத்தின் சார்பில் உங்கள் அனைவருக்கும் இனிமையான தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். 12 ஆண்டுகளுக்கு முன் மது இல்லாமல் தீபாவளித் திருநாளை கொண்டாடுவோம் என்ற கோரிக்கையோடு மதுவற்ற மலையகத்தை நோக்கிய அருள் யாத்திரை என்ற தொனிப்பொருளோடு ஆரம்பித்த தீபாவளி பரிந்துரை படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று ஒரு சமூக எழுச்சி பரிந்துரையாக உருவாகி இருக்கும் சூழலில் உங்கள் மத்தியில் இந்த செய்தியை கொண்டு வருவதில் மகிழ்ச்சியடைகிறேன். நமது சமூகத்தை அடக்கியாண்ட மது என்னும் அரக்கனை படிப்படியாக வென்று வருகிறோம். தற்போது சமூகத்திலும், விசேடமாக இளைஞர்களிடமும் ஏற்பட்டு வரும் மாற்றங்களை அவதானிக்கும் போது மதுவற்ற மலையகம் என்பது சாத்தியமான ஒன்று தான் என்ற நம்பிக்கை துளிர்விடுகிறது.

மதுவை வென்றது மட்டுமல்ல நமது சமூகத்தின் சாபக்கேடாக இருந்து வரும் கடன் கலாச்சாரத்தில் இருந்தும் நாம் விடுபட வேண்டும் என்ற விழிப்புணர்வு சமூகத்தில் ஏற்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். வெறும் களியாட்டமாகவும் மதுவுக்கு முக்கியத்துவம் கொடுத்த கொண்டாட்டமாவும் இருந்த தீபத்திருநாள் இப்பொது ஒரு ஆன்மீக எழுச்சி விழாவாகவும், சமூக எழுச்சி விழாவாகவும் வளர்ச்சி பெற்று வருவதை தெளிவாக காண முடிகிறது. முன்பெல்லாம் தீபாவளித் திருநாளில் மூடிக்கிடந்த தோட்ட ஆலயங்கள் வழிபாட்டுக்காக திறந்திருக்கின்றன. காலையில் மதுவை படைப்பு பொருளாக வைத்து வீடுகளில் பூஜை என்ற பெயரில் காலையிலேயே மது அருந்துவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி சண்டை சச்சரவுகளில் முடிந்த புனிதான ஒரு ஆன்மீக விழாவின் அடிப்படை தத்துவத்தையே மாசுபடுத்திய நிலை மாறி இப்போது தோட்டங்கள் தோறும் ஆலயங்கள் திறக்கப்பட்டு பூஜைகள் நடத்தும் வழக்கமும், கௌிரவிரதம் இருக்கும் வழக்கமும் நடைமுறைக்கு வந்திருக்கிறதே. இது எவ்வளவு பெரிய ஆன்மீக சமூக மாற்றம். நமது கருத்துக்களுக்கு செவிமடுத்து சிந்தனையிலும் செயல்பாட்டிலும் மாற்றத்தை கொண்டுவந்துள்ள உங்களை பிரிடோ நிறுவனம் பாராட்ட விரும்புகிறது.

இந்த நாட்களில் சம்பளஉயர்வு பற்றி நாம் உரத்து குரல் கொடுத்து வருகிறோம். இந்த முறை சம்பள உயர்வுக்காக அனைவரும் ஒன்றாக குரல் கொடுக்கும் ஒரு சூழல் வந்திருப்பதே ஒரு பெரிய வெற்றி தான். ஆனால் அதே வேளையில் நமது தொழில் வாய்ப்பை தக்க வைத்துக்கொள்ள வேண்டுமானால் நாம் தோட்டங்களை பாதுகாக்க வேண்டும். தோட்டங்களை பாதுகாப்பது என்பது நமது இருப்பை பாதுகாப்பதாகும் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொண்டு தோட்டங்களை பாதுகாக்க உறுதி கொள்ள வேண்டும். இப்போது உள்ளூரில் நமது வருமானம் நமது தேவைகளை சந்திக்க போதுமானதாக இல்லை என்பதை கருத்தில் கொண்டு நம்மில் பலர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக செல்கிறோம். கடும் சிரமத்தி;ற்கு மத்தியில் அங்கு உழைத்த பணத்தை செலவிடுவதில் நாம் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும். அந்த பணம் நமது எதிர்கால அபிவிருத்திக்கு உதவ



வேண்டும். வெளிநாட்டு உழைப்பில் கிடைத்த பணத்தை எவராவது மதுவுக்கு செலவிட்டால் அது பாரதூரமான பாதகச் செயல் - உழைத்தவருக்கு துரோகம் செய்யும் செயல் என்பதை வெளியரங்காக சொல்வதற்கு தயக்கம் காட்டாது. ஒரு போதும் வெளிநாட்டில் உழைத்த பணத்தை மதுவுக்கு செலவிடாதீர்கள். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக செல்கிறவர்களுக்கு வழிகாட்டும் பாதுகாப்பான புலம் பெயர் சேவையை பிரிடோ நடத்துகிறது. அதனை பயன்படுத்துங்கள்.

அத்தோடு நாம் தொடர்ந்தும் வெறும் வீட்டுப் பணியாளர்களாகவும் எதுவித தொழில் திறனற்ற தொழிலாளர்களாகனவும் வெளிநாடு சென்று கொண்டிருக்க முடியாது. தெழில் திறன் இருந்தால்; நமது சிரமத்திற்கும் உழைப்புக்கும் ஏற்ற ஊதியம் கிடைக்கும். இதனை கருத்தில் கொண்டு உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ தொழிற் திறன்களை பெறுவதற்கு வழிகாட்டும் திறன் அபிவிருத்தி வழிகாட்டல் சேவை ஒன்றையும் பிரிடோ நடத்தி வருகிறது. இந்த சேவைகளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் கடந்த குறுகிய காலத்தில் ஒரு சமூகம் என்ற ரீதியில் அரசியல் ரீதியாகவும் பல வெற்றிகளை அடைந்துள்ளோம். எனவே நாம் எதிர்கால நம்பிக்கையோடு தீபாவளியை கொண்டாடும் தகுதியை பெற்றிருக்கிறோம் தொடர்ந்து முன்னேற பிரிடோநிறுவம் உங்களை வாழ்த்துகிறது.

ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கு ஒருமுறை சுமார் ஐந்து நிமிடங்கள் மீண்டும் மீண்டும் ஒலிபரப்பட்ட இந்த செய்தியை ஆர்வமாக கேட்டுக் கொண்டிருந்த மேலும் சிலரை அணுகி அவர்களிடம் கருத்து கேட்டோம்.

நுவரெலியா பகுதியில் இருந்து வந்திருந்த திரு.சுதர்சன் சொன்னார். நான் நுவரெலியாவில் இருந்து ஒரு தேவைக்காக அட்டன் நகருக்கு வந்தேன். எல்லா நகரங்களிலும பொருட்களை விளம்பரம் செய்யும் ஒலிபரபுக்களை மட்டுமே கேட்ட எனக்கு அட்டன் நகருக்கு வந்தவுடன் ஒரு தெளிவான வித்தியாசம் தெரிந்தது. இத்தனை ஆயிரம் மக்கள் கூடும் இடத்தில் சமூக மாற்று சிந்தனைகள் சொல்வற்காக வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பது ஒரு அருடிமான முன்னுதாரணமாகும்.

இந்த செய்தியை மட்டுமல்ல மிகவும் குறுகிய நேரத்துக்குள் மக்களுக்கு நல்ல கருத்துக்களை சொல்லும் சம்பாஷனைகளையும் ஒலிபரப்புகிறார்கள்.

செய்தியும் சிறப்பாகவும் மக்கள் மனதை கவர்வதாகவும் இருக்கிறது. மிகவும்;பாராட்க்க கூடிய விடயம்.

அவரிடம் கருத்துக் கேட்ட பின்னர் பிரிடோ நிறுவனத்தின் சார்பிலேயே இந்த செய்திகளும், சம்பாஷனைகளும் ஒலிபரப்பட்டன- நாங்கள் பிரிடோ நிறுவனத்தைசார்ந்தவர்கள் என்று அறிமுக்படுத்தினோம். உற்சாகமடைந்த அவர் அடுத்த முறை நுவரெலியா, தலவாக்கலை போன்ற அதிக மக்கள் கூடும் இடங்களிலும் இவ்வாறு கருத்துக்களை சொல்ல முன்வரவேண்டும். நாங்கள் ஒத்துழைப்பு தருவோம் என்று ஆர்வமுட்ன் கூறினார் திரு.சுதர்சன்.

அட்டன் போகவந்தலாவை, மஸ்கெலியா, பெல்மதுலை போன்ற பகுதிகளில் இருந்து வந்த பலரிடம் கருத்து கேட்ட போது அனைவருமே அடுத்த தீபாபவளியின் போது தங்கள் பகுதிகளிலும் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்கள். அது பிரிடோ நிறுவனத்தை பொறுத்த வரையில் உற்சாகம் தரும் விடயமாக இருந்தது.

இதே வேளையில் தீபாவளிக்காலங்களில் பிரதானமாக வியாபார நோக்கத்திற்காக வியாபாரிகளால் நடத்தப்படும் இவ்வாறான பொது ஒலிபரப்பில் இவ்வாறான கருத்துக்களை சொல்ல குறிப்பிடத்தக்களவு நேரத்தை ஒதுக்குமளவிற்கு ஒத்துழைப்பு தரும் அட்டன் நகர வியாபாரிகள் இவ்வாறான பங்களிப்பை வழங்கும் ஒலிபரப்பு ஏற்பாட்டாளர்கள் ஆகியோர் நிச்சயமாக பாராட்டப்படப் பட வேண்டியவர்கள்.

தங்களால் வழங்கப்படும் இந்த பங்களிப்பு காரணமாக மலையக சமூகத்திற்கு சமூக சீர்திருத்த கருத்துக்கள் சென்றடைகின்றன, அது சமூக முன்னேற்றத்துக்கு உதவுகிறது என்பதை அவர்கள் உணர்ந்திருப்பதாலேயே அவர்கள் வருடாவருடம் இவ்வாறான ஒத்துழைப்பை வழங்குகிறார்கள்.

இந்த வகையில் மதுவற்ற மலையகத்தை நோக்கிய அருள் யாத்திரை என்ற மகுடத்தோடு வருடாவருடம் பிரிடோ நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும்; மதுவற்ற தீபாவளிப் பரிந்துரை இந்த வருடம் 12வது வருடமாக முன்னெடுக்கப்பட்டது. 12 வருடங்களுக்கு முன்னர் வெறுமனே தீபாவளிப் பண்டிகையை மதுவின்றி கொண்டாடுவோம் என்ற கோரிக்கையோடு ஆரம்பிக்கப்பட்ட பரிந்துரை பல்வேறு சமூக சீர்திருத்த கருத்துகளோடு தொடர்ந்து முன்னெக்கப்பட்டு வந்துள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் புதிய பிரதேச சபைகள் ஆரம்பிக்கப்பட்டமை, அதைத் தொடர்ந்து புதிய பிரதேச செயலகங்கள் உருவாகி பெருந்தோட்ட மக்களுக்கு அரசு சேவைகள் இலகுவாக கிடைப்பதற்கும், இந்த மக்கள் தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்ளுவதற்குமான வாய்ப்பு அதிகரித்துள்ளமை, பிரதேச சபை மற்றும் உள்ளுராட்சி சபைகளின் நிதியும் சேவையும் பெருந்தோட்ட மக்களுக்கு கிடைப்பதற்கு தடையாக இருந்த பிரதேச சபை சரத்து 33 நீக்கப்பட்டமை, பெருந்தோட்ட அபிவிருத்தியை நேரடியாக அரசு நிதி உதவியோடு முன்னெடுப்பதற்கு வசதியாக பெருந்தோட்ட அபிவிருத்தி அதிகார சபை உருவாக்கப்பட்டுள்ளமை, சம்பளப் பிரச்சனையில் முதல் முறையாக அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு கிடைத்து வருகின்றமை.

விசேடமாக கொழும்பில் மலையக இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட கறுப்புச்சட்டை போராட்டம் மூலம் மலையக சமூகத்தில் அதிலும் விசேடமாக இளைஞர் சமூகத்தில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வும் எழுச்சியும் மலையக சமூகத்தின் முன்னேற்றத்தில் ஒரு புதிய திருப்பதை ஏற்படுத்தி எதிர்கால முன்னேற்றத்துக்கான சாதகமானசூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பின்னனியில் இந்த மாற்றத்தை முன்னெடுத்து செல்லும் முகமாக புதிய சிந்தனையோடு தீபாவளி கொண்டாடபபடப்பட வேண்டும் என்ற கருத்தை இந்த முறை பரிந்துரை கருத்துகளாக முன்வைத்து தீபாவளி பரிந்துரையை பிரிடோ முன்னெடுத்தது.

மதுவிற்ற தீபாவளிப் பரிந்துரைக்காக அச்சிடப்பட்ட சுவரொட்டிகள், வாழ்த்து அட்டைகள் அனைத்திலுமே; இந்த கருத்துக்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் ஐயாயிரம் பேரை இலக்காக கொண்டு நடத்பட்ட இந்த பரிந்துரை தற்போது ஐம்பதாயிரம் மக்களை நேரடியாக அடையக்கூடியதாக பரவலாக்கப்பட்டிருப்பது இந்த பரிந்துரைக்கு மக்கள் மத்தியில் உள்ள வரவேற்பை எடுத்துக் காட்டுகிறது. மக்கள் வாழ்வில் பல மாற்றங்களை கொண்டு வந்துள்ள இந்த மதுவற்ற தீபாவளி பரிந்துரை புதிய கருத்துக்களுடன் 12 வருடமாக தொடர்ந்து கொண்டாடப்படுவதற்கு மக்களின் ஆதரவு அடித்தளமாக அமைந்துள்ளது. மதுவற்ற மலையகத்தை நோக்கிய அரு;ள் யாத்திரை சிறப்பான வெற்றியை பெற சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் தமது ஒத்துழைப்பை வழங்கினர்.

மொத்தத்தில் மதுவற்ற மலையகமக் நோக்கிய அருள் யாத்திரை என்ற பிரிடோவின் தீபாவளிப் பரிந்துரை மக்களுக்கு நன்கு அறிமுகமாக, சமூக சீர்;திருத்த இயங்கமாக பரிணாம வளர்ச்சி பெற்று வருகிறது

**எஸ்.வடிவழகி**
**போகவந்தலாவை**

---

## தொடரும்...

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

பான்மையைப் பெற்றிராத சூழலில் 2015இன்ன மக்கள் ஆணையின் கால எல்லை முடியும் வரை அரசாங்கத்தை தொடர்ந்தும் கொண்டு செல்கின்ற பொறுப்பு பாராளுமன்றத்திற்கே உள்ளது. இப்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்;கு முன்னால் இரண்டு தெரிவுகளே உள்ளன.

1) 2015 மக்களாணையை மதித்து அடுத்து தேர்தல் வரைக்கும் 2015இல் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தை தொடர்ந்தும் கொண்டு செல்வதற்கு துணைபுரிதல் அல்லது,

2) வழமையான சாக்குப் போக்குகளைச் சொல்லி தமது சுயநல அரசியலை முதன்மைப்படுத்தி ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவுக்குத் துணை போதல்.

இந்த இரண்டு தெரிவுகளில் பாராளுமன்ற உறுப்பினர்களும் எதனைத் தெரிவுசெய்யப் போகின்றார்கள் என்பதை மக்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர். 2015 மாற்றம் என்பது வெறும் மரபு ரீதியான கட்சி அரசியல் அடிப்படையில் நடைபெற்ற மாற்றமல்ல. மாறாக, இலங்கையின் சமூக, அரசியல் பொருளாதாரப் போக்கில் பல்வேறு மாற்றங்களை முன்நிருத்தி மேற்போக்கில் பல்வேறு மாற்றங்களை முன்நிருத்தி மேற்கொள்ளப்பட்ட மாற்றம். இனப் பிரச்சினைத் தீர்வு, சமாதான சகவாழ்வு, ஊழலற்ற நிர்வாகம், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் ஜனநாயக சூழலைப் பேணி பிரச்சினைத் தீர்வு, சமாதான சகவாழ்வு, ஊழலற்ற நிர்வாகம், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் ஜனநாயக சூழலைப் பேணிப் பாதுகாத்தல் போன்ற அடிப்படையான மாற்றங்களைச் செய்வதற்கே இந்த அரசாங்கத்திற்கு ஆணை பாதுகாத்தல் போன்ற அடிப்படையான மாற்றங்களைச் செய்வதற்கே இந்த அரசாங்கத்திற்கு ஆணை வழங்கப்பட்டது.

எனினும், கடந்த நான்கு வருட கால கசப்பான அனுபவங்களும் ஜனாதிபதியினதும் பிரதமரதும் செயற்பாடுகளும் மிகுந்த ஏமாற்றத்தையே தந்துள்ளன. சுதந்திரத்தின் பின் தொடர்ந்தும் எமது தேசத்தை மாறி மாறி ஆட்சிசெய்து வந்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கங்கள் 70 வருடங்களாக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறியே ஆட்சி செய்து வந்துள்ளனர். எமது நாடு இன்று மிகமோசமான அரசியல் குழப்பத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது. யார் பிரதமர் என்பதைவிட நாடு 70 வருடங்களாக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறியே ஆட்சி செய்து வந்துள்ளனர். எமது நாடு இன்று மிகமோசமான அரசியல் குழப்பத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது. யார் பிரதமர் என்பதைவிட நாட்டுக்கும் மக்களுக்கும் எது இப்போது அத்தியாவசியம் என்பதே நமது கவனத்திற்கு விடயமாக இருக்க வேண்டும்.

மூன்று வாரங்களுக்கு பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அரசியல் குழப்பம் இன்னும் தீவிரமடைந்து வருகின்றதோடு மீண்டும் இனவாத அரசியல் தலைத்தூக்கும் என்ற நிலையில் சிவில் சமூகம் மற்றும் கல்விக்கற்ற சமூகத்தினர் மகிந்த தரப்பின் ஆட்சியை முற்றிலும் வெறுகின்றதை அவதானிக்க முடியும். எனவே ஜனநாயக வழியிலும் அரசியலமைப்பு சட்டத்திற்கு அமைவாகவும் ஒரு சில தினங்களுக்குள் இந்த அவசியமற்ற இழுபறி நிலை முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

வழிமுறை பின்பற்றப்படவில்லையென்பதே கவலையளிக்கும் விடயம். ஜனநாயக கொள்கைகள் முறையாக பின்பற்றப்படுகின்ற நாடுகளில் அதிகார சமநிலையை பேணுவதற்கான ஏற்;பாடுகள் கனதியாக மேற்கொள்ளப்பட்டு அவற்றுக் மதிப்பளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இலங்கையை பொறுத்தவரை நிறைவேற்றதிகாரம் (ஜனாதிபதி) சட்டவாக்க அதிகாரம் (பாராளுமன்றம்) நீதித்துறை அதிகாரம் ஆகிய மூன்று பிரதான கிளைகளுக்குமிடையிலேயே அரசாங்கத்தின் அதிகாரம் பகிரப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கிடையில் அதிகாரங்கள் ஒன்றையொன்று மேவிச் செல்லாமல் அதே சமயம் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் பதிலளிக்கும் கடப்பாட்டுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் செயற்படும் போதே அரச இயந்;திரம் சீராக இயங்குமென்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இந்த நோக்கத்தை இலக்காகக் கொண்ட அரசியலமைப்பில் சட்ட ஏற்பாடுகள் உள்வாங்கப்படுகின்றன.

19வது திருத்தம் அரசியலமைப்பில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் நிறைவேற்றதிகாரம் (ஜனாதிபதி) மற்றைய இரு அதிகார மையங்களையும் மேவிச் சென்று தீர்மானங்களை எடுக்கக்கூடியதாக இருந்ததென்றும் ஆனால் 19ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் நிறைவேற்றதிகாரம் சட்டவாக்கத்திற்கு அதிகளவு பகிரப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. எது எவ்வாறாக இருப்பினும் பாராளுமன்றம் கூடும் போது, புதிய பிரதமராக பதவியேற்றியிருக்கும் மகிந்த ராஜபக்ஷ சபையில் தனது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கும் போது தற்போதைய சர்ச்சையும் குழப்பமும் முடிவுக்க வரும். அதேவேளை விரைவில் பிரதான தேர்தல்கள் நடைபெறவேண்டியிருப்பதால் மக்கள் நீதிமன்றமே யாவற்றிலும் அதிகார பல வாய்ந்ததென்பதை சகலரும் மனதிலிறுத்திக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக தற்போதைய அரசியல் நெருக்கடி அரசியலமைப்பு முறை சார்ந்ததாக இருக்கின்றபோதும் இவை வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் இலங்கையின் பாராளுமன்னற ஜனநாயகம் பல அடிகளைத் தாங்கியுள்ளது. இருந்தும் தோற்றப்பாடான ஒரு பாராளுமன்றம் இதுவரையிலும் பேணப்பட்டுள்ளது என்று பலர் நம்புகின்றனர். ஆனால் அந்த ஜனநாயகம் பட்ட உட்காயங்கள் இன்னும் ஆறவில்லை.

தனிமனிதனதும் சமூகங்களதும் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவது ஒரு ஜனநாயக நாட்டின் அரசியலமைப்புச் சட்டங்களின் நோக்கங்களுள் அடங்கும். ஆயினும் யாப்பு விதிகளை மீறாமலே யாப்பின் நோக்கங்களை மீறலாம். 1948இன் குடியுரிமைச் சட்டம் அதை செய்தது. 1956இன் அரச கரும மொழிச் சட்டமும் இதை செய்தது. எனவே சட்டவாட்சி இயல்புகள் இலங்கையில் பேணப்படாமை காலம் காலமாக இருந்துவருகின்ற பிரச்சினையாகும். இலங்கையின் அரசியல் யாப்புகள் ஒவ்வொன்றும் மக்களின் ஜனநாயக உரிமைகள் தவிர்ந்த வேறு நோக்கங்களையும் கொண்டு வரையப்பட்டன என்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், யாப்பு விதிகட்மைய அரசாங்கங்களும் அரசின் பிற உறுப்புகளும் நடப்பது நாட்டின் அரசியல் உறுதிக்கு முக்கியம் எனினும் யாப்புத் தன்னளவில் எதற்கும் உத்தரவாதமல்ல. யாப்பில் உள்ளவாறே அரச கருமங்கள் நடப்பதற்கு அரசாங்கம் நேர்மையாயிருக்க வேண்டும். அரசாங்கம் நேர்மை தவறின் அதைத் தட்டிக்கேட்க வல்ல சமூக நிறுவனங்கள் இருக்க வேண்டும்.

யாப்புகள் வர்க்க சமூகத்தில் வர்க்கச் சார்பானவை. எனவே யாப்புகள் ஆளும் அதிகார நலன்களுக்கமையவே வரையப்படுகின்றன என்பதை வைத்தே யாப்பு எவ்வாறு பயன்படுகின்றது என்பதை இங்கு நினைவு கூற வேண்டும். அரசியல் யாப்பானது சமூக ஒழுங்கைப் பேணும் நோக்குடையது என்பதால் அது அனுமதிக்கும் உரிமைகளும் அதிகாரங்களும் நடைமுறையில் எல்லாருக்கும் சமமல்ல. சட்டமும், நீதியும் போன்று யாப்பின் உத்தரவாதங்களும் மனிதரின் சமூக கிளைக்கு ஏற்ப வேறுபட பயன்படும். அநீதியான பல சட்டங்களைத் தவிர்க்க யாப்பில் வழியில்லை எனவும் ஜனநாயக விரோதமான விடயங்கள் யாப்புகளில் அடங்கலாம் எனவும் அறிவோம். அவையெல்லாம் ஆட்ட விதிகளுள் அடங்கும். எனினும் ஆட்டவிதிகள் எவ்வாறு மீறப்பட்டுள்ளது தான் இன்றை அரசியல் நெருக்கடியின் பிரதான மையமாகும்.

எனினும் ஜனாதிபதி பிரதமரைப் பதவி நீக்கிய முதலாவது நிகழ்வு இதுவே. ஆதை நியாயப்படுத்த 2004ஆம் ஆண்டு சந்திரிக்கா அரசாங்கத்தைக் கலைத்துத் தேர்தலை நடத்தியதைச் சிலர் பேசுவர். அதன் பின்புலமும் தன்மையும் வேறு. 2000ஆம் ஆண்டு தெரிவான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சி கட்சித்தாவலால் 2004 இல் கவிழ்ந்தது. அதையடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் ஏற்பட்டது. அமைதிப் பேச்சுகள் பற்றித் தென்னிலங்கையில் அதிருப்தி வளர்த்த சூழலில் சந்திரிக்கா முக்கிய 3 அமைச்சுப் பதவிகளைப் பறித்து தனதாக்கினார். அதன் பின்பு பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை நடத்தினார். 2001ஆம் ஆண்டின் ஆட்சிக் கவிழ்ப்பும் 2004 ஆம் ஆண்டின் கவிழ்ப்பும் யாப்பு விதிகட்கு முரணானவையல்ல. முற்றிலும் ஜனநாயக விரோதமானவை.

தொகுத்து நோக்கும் போது, அரசியலமைப்பு என்ற நிலையிலும் சட்டவாட்சி நிலையிலும் மாறுபட்ட தன்மையை கொண்டதை அறிய முடிகின்றது. 19 ஆம் சட்டத் திருத்தத்தின் நோக்கங்களில் முன்பு கூறிவாறான அதிகாரத் துர்ப்பாவனையை தவிர்ப்பது முக்கியமானது. ஜனாதிபதியின் நடத்தையில் ஒழுங்கீனங்கள் பல. பிரதமருக்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இல்லையெனப் பாராளுமன்றம் தீர்மானித்தால் அவரைப் பதவி நீக்குவதில் நியாயமுண்டு. எனினும் யாப்பு வெளிப்பட அந்த உரிமையைச் ஜனாதிபதிக்கு வழங்கவில்லை. பிரதமராக அவர் நியமித்தவருக்குப் பாராளுமன்றப் பெரும்பான்மை உண்டு என்பதற்கு ஆதாரமில்லை. அதைவிட ரணில் விக்கிரமசிங்வைப் பதவி விலக்குவதாக அறிவிக்கும் முன்பே ராஜபக்ஸவை நியமித்தமை ஒரு குழறுபடி இந்த அவசரத்திற்கு காரணமென்ன.

முதலாவதாக அடுத்த ஆண்டு தனது அதிகாரத்தைப் பாவித்துப் பாராளுமன்றதைக் கலைத்துத் தேர்தல் மூலம் ராஜபக்ஸவைப் பிரதமராக்குவதற்கு இருந்த வாய்ப்பை ஏன் தவிர்க்க வேண்டும்? அடுத்துப் புதிய பிரதமர் தனது பாராளுமன்றப் பெரும்பான்யை உடனடியாககாட்டும் தேவையை தவிர்க்குமாறு பாராளுமன்றத்தை பிற்போட்டமை ஏன்? எனவே காரணங்கள் ஊகிக்கக் கடினமல்ல. பாராளுமன்றம் மீளக்கூடும் முன்பு களவாகவோ, கயவாகவோ ஒரு பெரும்பான்மையை உருவாக்குவதற்கு திட்டம் ஒரு நாளில் உருவானதல்ல. அது ஒரு வெட்கக் கேடான சதி என்பதே என் மதிப்பீடு.

இந்த இரண்டு பிரதான கட்சிகளும், தனித்தும் இணைந்தும் நாட்டைக் கட்டியெழுப்பத் தகுதியற்றவர்கள் என்பதை நாட்டு மக்களுக்கு நிரூபித்து விட்டார்கள். எனவே இந்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு இந்நாட்டின் மீது உண்மையான பற்றும் தூரநோக்கும் கொண்ட பலமான மூன்றாவது அரசியல் சக்தியொன்றின் அவசியம் காலத்தின் தேவையாக மாறியுள்ளது. இவ்வாறானதொரு மூன்றாவது சக்தியைக் கட்டியெழுப்புவதற்கு இன, மத, கட்சி வேறுபாடின்றி அனைத்து மக்களும் சட்டவாட்சிக்கு அமைவாக ஒன்றிணைய வேண்டும்.

# தீவிர வலதுசாரி நாடாகும் பிரேசில்

பிரேசிலின் புதிய அதிபராக 2019 தொடக்கத்தில் பதவியேற்கிறார் ஜெய்ர் பொல்சொனாரோ. ஒரு ஜனநாயக நாட்டில் பதவிக்கு வந்த வலதுசாரிகளிலேயே இவர்தான் அதிதீவிரமானவராக இப்போதைக்குக் கருதப்படுகிறார். பிலிப்பைன்ஸ், அமெரிக்கா, ஹங்கேரியைப் பின்பற்றி பிரேசிலிய மக்களும் வலதுசாரித் தலைவரைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

பொல்சொனாரோவை, 'பிரேசிலின் டிரம்ப்' என்றே அழைக்கின்றனர். இதில் உண்மையும் இருக்கிறது. அமெரிக்க அதிபர் டிரம்ப், பிலிப்பைன்ஸ் அதிபர் ரோட்ரிகோ துதார்தேவைப் போல இவரும், சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க வன்முறைதான் கை கொடுக்கும் என்று நம்புகிறார். அதிபர் தேர்தல் முடிவு வெளியான உடனேயே பிரேசில் நாட்டு ராணுவம் நகர வீதிகளில் மிடுக்கோடு அணிவகுப்பு நடத்தியது. மக்கள் கூடி நின்று ராணுவ வீரர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். அவர்களும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர். பொல்சொனாரோ ராணுவத்தில் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். பிரேசிலில் 1964 முதல் 1985 வரையில் நடந்த ராணுவ சர்வாதிகார ஆட்சியைப் புகழ்ந்து பேசியிருக்கிறார். அந்த ஆட்சியால்தான் உலக அரசியல் அரங்கில் பிரேசில் முதல் வரிசையில் இடம்பிடித்தது என்று கூறியிருக்கிறார். பொல்சொனாரோ அதிபராக மூன்று 'பி'க்கள் காரணம், அவை முறையே பீஃப், பைபிள், புல்லட் என்கின்றனர்.

## பீஃப் அரசியல்

100 கோடி ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவுள்ள அமேசான் மழைக்காட்டை யாரும் எளிதில் நுழைய முடியாதபடிக்கு சுற்றுச்சூழல், தொழிலாளர் சட்ட விதிகள் தடுக்கின்றன. நான் அதிபரானால் இந்தத் தடைகளைத் தகர்த்து, பொருளாதார வளர்ச்சி விரைவுபட காடுகளைப் பயன்படுத்த அனுமதிப்பேன் என்று பொல்சொனாரோ வாக்குறுதி தந்தார். காடுகளில் விவசாயம் செய்யலாம், கால்நடைகளையும்

கோழி-வாத்து உள்ளிட்ட பறவைகளையும் வளர்க்கலாம், கனிம வளங்களை அகழ்ந்தெடுக்கலாம், மின்சாரம் தயாரிக்க வனங்களில் அணைகளைக் கட்டலாம், மரங்களைத் துண்டுகளாக்கி விற்கலாம் என்று அடுத்து அனுமதிக்கப்போகிறார். இதனால் இத்துறையைச் சேர்ந்தவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக கடைப்பிடிக்கப்படும் கட்டுப்பாடுகளை, பிரேசிலின் இறையாண்மை மீது ஐக்கிய நாடுகள் சபை திணித்த நிபந்தனைகள் என்று பிரச்சாரத்தின்போது வர்ணித்தார் பொல்சொனாரோ. அவருடைய உத்தேச யோசனைகள், இறையாண்மையை பிரேசிலியர்களுக்கு மீட்டுத் தந்துவிடப்போவதில்லை; கனடா, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியர்களின் வணிக விருப்பங்களைத்தான் அவை பூர்த்திசெய்யப்போகின்றன.

பிரேசிலில் 'கத்தோலிக்க சமத்துவம்' என்று அழைக்கப்படும் ‘விடுதலை இறையியல்’ கோட்பாடு இப்போது செல்வாக்கிழந்துவருகிறது. மாறாக, பிரேசிலின் ஏழை மக்களிடையே பெந்தகொஸ்தேவுக்கு ஆதரவு அதிகம். அமெரிக்க உந்துதலால், நற்செய்திப் பிரசங்கங்கள் வளர்ந்தன. பிரேசிலின் மிகப் பெரிய பேராலயங்களில் ஒன்றான 'யுனிவர்சல் சர்ச் ஆஃப் தி கிங்டம் ஆஃப் காட்'உலகம் முழுக்க ஒரு கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறது. அதன் தலைவர் எடிர் மாசிடோ பிரேசிலின் இரண்டாவது மிகப் பெரிய தொலைக்காட்சி வலையமைப்பை (ரெகார்ட்டிவி) வைத்திருக்கிறார். இந்த இயக்கங்கள் மக்களிடையே மிகவும் செல்வாக்குள்ளவை. கருக்கலைப்பு, பாலினச் சமத்துவம் ஆகியவற்றை இவற்றின் ஆதரவாளர்கள் ஏற்பதில்லை. சுவிசேஷப் பிரசங்க அமைப்புகளும் கத்தோலிக்கக் குழுக்களும் பொல்சொனாரோவை ஆதரிக்கின்றன.

## புல்லட் அரசியல்

புல்லட் என்பது ராணுவத்தை மட்டுமல்ல; காவல் துறையையும் குறிப்பது. இரண்டு அமைப்புகளுமே அவரைத் தங்களுடைய நலனைக் காக்கக்கூடியவராகப் பார்க்கின்றன. நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்திருப்பதால் வெகுண்டுள்ள மத்தியதர வர்க்கமும் அவரை ஆதரிக்கின்றன. 2017-ல் 175 பேர் வன்செயல்களுக்குப் பலியாகியுள்ளனர். குற்றம் செய்யும் ஏழைகளை, காவல் துறை கடுமையாக ஒடுக்க வேண்டும் என்றே பேசியிருக்கிறார்.

அவர் இப்படிக் கூறியதற்கு இனவெறியும் காரணம். வன்செயல்களால் யார் மிகவும் பாதிக்கப்படுகின்றனரோ அவர்களையே அதற்குக் காரணமாகக் கருதுகிறார். மத்தியதர வர்க்கத்தினரின் விருப்பு - வெறுப்புகளே அவருடைய பிரச்சாரத்தின் மூலங்களாக இருந்துள்ளன. அவருடைய ஆட்சியையும் அவைதான் தீர்மானிக்கப்போகின்றன.

## பங்குச்சந்தையின் பிரதிநிதி

சாவ் பாவ்லோ நகரில் உள்ள பிரேசிலின் பங்குச் சந்தையை 'பி-3' என்றே அழைக்கின்றனர். அதன் அடிப்படை பங்குக் குறியீட்டுப் பெயர் 'போவஸ்பா'. அதில் 60 பெரிய நிறுவனங்களின் பங்குகள் இடம்பெற்றுள்ளன. பொல்சொனாராவின் வெற்றிக்குப் பிறகு இந்தப் பங்குகளின் விலை மதிப்பு கிர்ரென்று உயர்ந்தது. தங்களுடைய வேட்பாளர்தான் வெற்றிபெறுவார் என்பதை இப்பணக்காரர்கள் முன்னதாகவே உணர்ந்துள்ளனர். கனிம நிறுவனங்கள், மின்உற்பத்தி நிறுவனங்களின் கூட்ட அரங்குகளில் மது வெள்ளமாகப் பாய்ந்தது. தேசிய வேளாண்மைக் கூட்டமைப்பு அலுவலகமும் இதற்கு விதிவிலக்கல்ல. அரசியல் விமர்சகர்கள் தங்களுடைய கட்டுரைகளில் ‘காரியசாத்தியமான’, ‘நியாயமான’ என்றெல்லாம் அவருடைய வெற்றியை வர்ணிக்கத் தொடங்கிவிட்டனர். வறுமையில் விழுந்துகொண்டிருக்கும் லட்சக்கணக்கான பிரேசிலியர்களைவிட, தொழிலதிபர்கள் மீது அவருடைய கவனக்குவிப்பு இருக்கும் என்று இதற்குப் பொருள்.

அமெரிக்க முன்னாள் வெளியுறவுத் துறை அதிகாரி அன்னா ப்ரூசா நேரடியாகவே, 'பிரேசிலின் கனிமத் துறையில் முதலீடு செய்ய இது உகந்த நேரம்' என்று குறிப்பிட்டிருக்கிறார். சந்தைகளைத் திறந்துவிட வேண்டும் என்பதை ஆதரிக்கும் பொல்சொனாரோ, கட்டுப்பாடுகளை வெகுவாகக் குறைத்துவிடுவார் என்று அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அமெரிக்க அதிபர் தேர்தலில் டிரம்ப் வெற்றி பெற உதவிய ஸ்டீவ் பன்னான், 'சமூக ஊடகப் பிரச்சாரத்தை பொல்சொனாரோ வலுவாக நடத்தியுள்ளார்'என்று பாராட்டினார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தொழிலாளர் கட்சியினர், குழந்தைகளுக்குப் பாலியல் பற்றிச் சொல்லித்தருகின்றனர் என்று பொய்ச் செய்தியை சமூக ஊடகங்களில் பரவவிட்டதைத்தான் அப்படி மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

## பிரிக்ஸிலிருந்து அமெரிக்காவுக்கு

பிரேசிலிலும் ஒரு வலதுசாரித் தலைவர் அதிபராகிவிட்டார் என்பதும் டிரம்ப் வெற்றிக் களிப்பில் மிதந்தார். தொலைபேசியில் அவருடன் பேசினார். 'பிரிக்ஸ்'அமைப்பு நிலைகுலைந்துவிட்டதால் பிரேசில் அதிலிருந்து வெளியேற வேண்டும் அல்லது அதன் நடைமுறைகளில் அதிக வேகம் காட்டக் கூடாது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். அமெரிக்காவுக்குக் கீழ்ப்படிந்த நாடாக பிரேசில் இனி திகழும். இதைத்தான் பிரேசில் தொழில்துறை விரும்புகிறது, அமெரிக்காவும் எதிர்பார்க்கிறது. அமெரிக்காவிடம் பிரேசில் நெருங்குவது லத்தீன்-அமெரிக்க நாடுகளில் சுதந்திரமான பிராந்திய நடைமுறை சீர்குலையவே வழிவகுக்கும். உலகின் பல துருவ அமைப்புக்கும் பேரிழப்பாகிவிடும்.

# ரஜினி-திமுக; உறவும் விரிசலும்

**ஆர்.முத்துக்குமார்**

கடந்த சில ஆண்டுகளாகவே திமுகவுக்கும் ரஜினிக்குமான உறவு ஏற்றமும் இறக்கமுமாகச் சென்றுகொண்டிருந்த தருணத்தில், சமீபத்தில் திமுகவின் 'முரசொலி' நாளிதழில் 'ஹூ ஈஸ் தி பிளாக் ஷீப்' என்ற பெயரில் கேள்வி - பதில் பாணியில் வெளியான கட்டுரை, சலசலப்பை ஏற்படுத்தியது. ரஜினியிடமிருந்தும் அவரது ரசிகர்களிடமிருந்தும்



வந்த எதிர்வினைகளைத் தொடர்ந்து, ‘கட்டுரை சில நல்ல மனதைப் புண்படுத்துவதாக உள்ளதென்று கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இனி, அத்தகைய செய்திகளை வெளியிடுவதில் கவனத்துடன் செயல்படுமாறு ஆசிரியர் குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது’ என்று ‘முரசொலி’யில் திருத்தம் வெளியிடப்பட்டிருந்தாலும், திமுக - ரஜினி இடையிலான பிளவை இந்நிகழ்வுகள் காட்டுகின்றன என்றே பேசப்படுகிறது.

ரசிகர் மன்றத்தில் இருந்தது மட்டுமே மக்கள் மன்றத்தில் பதவி பெறுவதற்கு முழுத் தகுதி ஆகிவிடாது என்று ரஜினி சொன்னதை விமர்சித்த ‘முரசொலி’ கட்டுரை, ‘முப்பது, நாற்பது ஆண்டுகள் திரையில் நடித்தது மட்டுமே முதல்வர் ஆவதற்குத் தகுதியாகிவிடுமா?’ என்ற தொனியில் கேள்வி எழுப்பியது. கார்ப்பரேட்டுகளின் துணையோடு ரஜினி கட்சி ஆரம்பிப்பதாக விமர்சிக்கும் அந்தக் கட்டுரை, திராவிட எதிரிகளின் கைப்பாவையாக ரஜினி செயல்படுகிறார் என்ற காட்டமான விமர்சனத்தையும் முன்வைத்தது. கடந்த முப்பதாண்டுகளில் ரஜினியை விமர்சித்து இப்படியொரு கருத்து திமுக தரப்பிலிருந்து வெளிவந்திருப்பது இதுதான் முதன்முறை.

## பரஸ்பர ஆதரவு

ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தை அந்த ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது! - தொண்ணூறுகளின் மத்தியில் தமிழகத்தில் ஆட்சியிலிருந்த ஜெயலலிதாவுக்கு எதிராக ரஜினி முன்வைத்த முழக்கத்தை யாரும் மறந்துவிட முடியாது. அந்தத் தேர்தலில் ஜெயலலிதா வீழ்த்தப்பட்டு, கருணாநிதி முதலமைச்சரான பிறகு அவருடன் நெருக்கம் காட்டத் தொடங்கினார் ரஜினி. பின்னாளில் ஜெயலலிதாவுடன் சமாதானம் செய்துகொண்ட பிறகும்கூட, தென்னிந்தியாவின் மூத்த தலைவர் என்று கருணாநிதியைப் பெருமிதத்துடன் அழைக்கத் தவறியதில்லை.

நடிகர் ராஜ்குமாரை வீரப்பன் கடத்தியபோது தவித்துப்போன ரஜினி, முதலமைச்சர் கருணாநிதியிடம் உதவி கோரினார். வீரப்பனுடன் பேச்சு நடத்த முதலில் நக்கீரன் கோபாலும், பிறகு பழ.நெடுமாறனும் செல்வது தொடர்பாக முதலமைச்சர் கருணாநிதியிடம் பேசினார். காவிரி விவகாரத்தை முன்வைத்து தமிழ்த் திரைப்படக் கலைஞர்களுக்கும் ரஜினிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டபோது, ரஜினிக்குத் துணையாக இருந்தார் கருணாநிதி. திரைப்பட நட்சத்திரங்கள் நெய்வேலியில் போராட்டம் நடத்த முடிவெடுத்த நிலையில், 2002 அக்டோபர் 13 அன்று காலை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார் ரஜினி. அப்போது திமுக சார்பில் மு.க.ஸ்டாலின் நேரில் வந்து ஆதரவளித்தார். இப்படிப் பல்வேறு தருணங்களில் இரு தரப்பிலும் நெருக்கம் தொடர்ந்தது.

தொடக்கப் புள்ளி

ஆனால், 2004 மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் இடம்பெற்ற பாமக ஆறு தொகுதிகளில் போட்டியிட்டபோது, பாமகவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தார் ரஜினி. காரணம், ரஜினிக்கும் பாமகவுக்குமான பழைய பகை. பாமக போட்டியிடும் ஆறு தொகுதிகளிலும் ரஜினி ரசிகர்கள் பாமகவை எதிர்த்தும் மற்ற தொகுதிகளில் அவரவர் மனசாட்சிப்படியும் வாக்களிக்கலாம் என்றார் ரஜினி. ரஜினியின் இந்த முடிவு திமுக கூட்டணிக்கு எதிரானது என்றே பார்க்கப்பட்டது. ஆனால், தேர்தலின் முடிவில் பாமக ஆறு தொகுதிகளிலும் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது.

2006-ல் முதல்வர் கருணாநிதிக்குத் திரைப்படக் கலைஞர்கள் பாராட்டு விழா நடத்தினர். அப்போது மேடையில் பேசிய நடிகர் அஜீத், விழாக்களில் பங்கேற்கச்சொல்லி நிர்ப்பந்திக்கப்படுவதாக வருத்தப்பட்டார். அப்போது கருணாநிதியின் அருகில் அமர்ந்திருந்த ரஜினி, சட்டென்று எழுந்து நின்று கைதட்டி அஜீத்தின் பேச்சை வரவேற்றார். இது

16 ஆம் பக்கம் பார்க்க....

## வெல்ல..

11 ஆம் பக்கத் தொடர்ச்சி

நீக்கும் ஜனாதிபதியின் அதிகாரம் தொடர்பானதா? அல்லது யாருக்குப் பெரும்பான்மை இருக்கின்றது என்பதா?

பெரும்பான்மை இருப்பவரை ஏற்றுக்கொள்வேன் என சபாநாயகர் கூறுவதாயின் ஜனாதிபதிக்கு அடிப்படையில் பிரதமரை நீக்குகின்ற அதிகாரம் இருக்கின்றது; என்று சபாநாயகர் ஏற்றுக்கொள்கின்றார்; என்று பொருளாகும். ஆனால் பெரும்பான்மை இல்லாதபோதுதான் அவ்வாறு நீக்கமுடியும். ரணிலுக்கு பெரும்பான்மை இல்லை என்று நீங்கள் தீர்மானித்ததை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. பாராளுமன்றம் யாருக்குப் பெரும்பான்மை இருக்கின்றது என்று கூறுகின்றதோ அவரை பிரதமராக ஏற்றுக்கொள்வேன்; என்று சபாநாயகர் கூறுவதாகும்.

இது அரசியலமைப்புச் சட்டத்தில் இல்லாத ஒரு விடயம். ஒரு பிரதமரை ஜனாதிபதி நியமித்தால் அவரை ஏற்றுக்கொள்ளலாம். நிராகரிக்கலாம். நிராகரித்தால் அடுத்தவரை ஜனாதிபதி நியமிக்கலாம். இருவருக்குமிடையில் சபாநாயகரோ, பாராளுமன்றமோ தீர்ப்புச்சொல்ல முடியாது.

எனவே, இன்று சபாநாயகர் செயற்பட முனைவது அரசியலமைப்பிற்கு அப்பால் ஒரு புரட்சிகர வழியாகும். பொதுவாக புரட்சிகள் வெற்றிபெற்றால் சட்டபூர்வம் தோல்வியடைந்தால் சட்டவிரோதம்; என்பார்கள். இச்செயற்பாடுகளை யாரும் நீதிமன்றில் கேள்விக்குட்படுத்தி ஒரு தீர்ப்பைப் பெறாவிட்டால் எதிர்காலத்தில் வருகின்ற சபாநாயகர்களும் இவ்வாறான சூழ்நிலைகளில் இந்த நடைமுறையைப் பின்பற்றலாம்.

இந்த புரட்சிவழிக்குப் பின்னால் நியாயம் இருக்கின்றதா?

நியாயங்கள் தவறும்போதுதான் உலகில் அதிகமான புரட்சிகள் ஏற்படுகின்றன. ஜனாதிபதிக்கு பிரதமரை நீக்கும் அதிகாரம் உண்டு. க்கஊஅ யின் வெளியேற்றத்துடன் முன்னாள் பிரதமரின் பலம் வெளிப்படையில் 107 ஆகக்குறைந்ததனால் அவரை ஜனாதிபதி நீக்கியது சட்டபூர்வமாகும். ஆனால் 107 பெரும்பான்மை இல்லை என்று அபிப்பிராயம் கொண்ட ஜனாதிபதி 95 ஐப் பெரும்பான்மையாக அபிப்பிராயம் கொண்டது எவ்வாறு சரியாகும்.

மட்டுமல்ல, அவரது பேச்சுக்களிலெல்லாம் ரணிலின் குறைகளினால் நீக்கியதாக பேசுகின்றார். அவர் ஏற்கனவே ரணிலை நீக்கமுயற்சித்ததையும் கூறுகின்றார் என்றால் அவர் வெளிப்படையாகவே அதிகார துஷ்பிரயோகம் செய்ததை ஏற்றுக்கொள்கின்றார். ஏனெனில் பிரதமரை நீக்குவதற்கான ஒரேயொரு காரணமாக பெரும்பான்மை இன்மையைத்தான் கொள்ளவேண்டும். அவர்களின் பிரச்சினைக்காக பிரதமரை நீக்க முடியாது.

மட்டுமல்லாமல் பெரும்பான்மைக் குறைவில் ரணிலைவிடவும் கீழேயிருந்த ஒருவரை பிரதமராக நியமித்து அவருக்கு குறுக்குவழியில் பெரும்பான்மை பெறுவதற்காக பாராளுமன்றை முடக்கியது அதைவிடவும் அதிகார துஷ்பிரயோகமாகும். ஆனாலும் சட்டப்படியே அனைத்தையும் ஜனாதிபதி செய்திருக்கின்றார்.

அவ்வாறாயின் சட்டப்படி செய்தது எவ்வாறு அதிகார துஷ்பிரயோகமாகும்; என்ற கேள்வி இங்கு எழலாம். இதனைப் புரிந்துகொள்வதற்கு கீழே தரப்படும் கோட்பாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும்.

Rule of Law and Rule by Law

Rule of Law என்பது சட்டத்தின் ஆட்சியாகும். Rule by Law விற்கு தமிழ் தெரியவில்லை. இவற்றைப் புரிந்துகொள்வதற்கு முதலில் ' Law' என்ற சொல்லின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். அதற்குள் செல்லமுன் அடிப்படைப் புரிதலுக்காக சில உதாரணங்கள்.

சில நேரம் ஒரு சொல் பொதுவான அர்த்தத்திலும் (general meaning) குறித்த அல்லது விசேட அர்த்தத்திலும் (specific meaning) பாவிக்கப்படும். சிலநேரம் இரண்டிற்கும் இரண்டு சொற்கள் பாவிக்கப்படும். ஒரு சொல்லின் அர்த்தத்தை சரியாகப் புரிந்துகொள்வதற்கு அதன் denotation மற்றும் connotation அத்தோடு அதன் use and usage ஐத் தெரிந்திருப்பது உதவியாக இருக்கும்.

உதாரணமாக, accept (ஏற்றுக்கொள்) என்ற வினைச்சொல்லுக்கான பெயர்ச்சொல் acceptance ( ஏற்றுக்கொள்ளுதல்) ஆகும். ஆனால் கல்வியியல் துறையில், மொழியில் துறையில் சில இடங்களில் accept என்ற சொல்லின் பெயர்ச்சொல்லாக acceptation என்ற சொல் பாவிக்கப்படுவதுண்டு. இது விசேட அர்த்தத்தில் பாவிக்கப்படுகின்றது. இரண்டும் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளல்தான்.

அதேபோன்றுதான் decentralization என்ற சொல் சகலவிதமான 'அதிகாரப் பரவலாக்கலையும்' குறிக்கப்பயன்படுத்தப்படும். (general meaning). சிலநேரம் சில நிர்வாக அதிகாரங்களைப் பகிர்வதற்கு மாத்திரம் பாவிக்கப்படும். (விசேட பொருள்) இலங்கையில் இந்த விசேட பொருளில்தான் இச்சொல் பாவிக்கப்படுகின்றது.

எனவே, சில சொற்களுக்கு பொதுவான அர்த்தம் மற்றும் விசேட அர்த்தம் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு Law என்ற சொல்லுக்கு வருவோம்.

பொதுவாக சகல சட்டங்களையும் law என்று அழைக்கப்படும். (law, written law அரசியலமைப்பில் வெவ்வேறாக வியாக்கியானப்படுத்தப்பட்டிருப்பதை இங்கு யாரும் குழப்பிக்கொள்ள வேண்டாம். அது இத்தலைப்பிற்குரியதல்ல). ஆனால் Ru-le of Law பற்றிப்பேசும்போது law என்ற சொல்லும் legislation என்ற சொல்லும் வேறுபடுத்தப்படுகிறது.

பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் எல்லாம் legislation ஆகும். பொதுவான கருத்தில் அவைகளை law என்றும் அழைக்கலாம். ஆனால் விசேட கருத்தில் குறிப்பாக Rule of Law பற்றிப்பேசும்போது அவ்வாறு அழைக்கமுடியாது.

அதாவது சகல law வும் legislation ஆகும். ஆனால் சகல legislation உம் law அல்ல. இந்த வித்தியாசத்தைப் புரிந்தால் மேலே கூறப்பட்ட இரண்டு கோட்பாட்டையும் புரிய முடியும். அதனைப்புரிந்தால்தான் இன்றைய பிரச்சினையின் அதிகாரதுஷ்பிரயோகத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

பாராளுமன்றத்தால் ஆக்கப்படுகின்ற சட்டம் முதலில் legislation எனும் வடிவத்தைப் பெறுகிறது. அந்த சட்டம் நீதியானதாக இருக்கலாம் (just law). அநியாயமானதாக இருக்கலாம் (unjust law). அநீதியான சட்டம் சட்டமாக இருக்கமுடியாது. எனவே அது law அல்ல.

இந்த சட்டம் நீதியானதா, அநீதியானதா? என்பதை நீதிமன்றம்தான் சொல்ல முடியும். ஒரு இந்திய சட்ட அறிஞர் சொன்னார், ஒரு legislation நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பொருள்கோடல் செய்யப்படும்வரை அது வெறும் legislation ஏ தவிர அது ஒரு law அல்ல என்று.

இதற்கு இன்னும் ஒரு காரணம் இந்தியாவில் சட்டம் ஆக்கியதன்பின்னும் சட்டத்தை நீதிமன்றில் கேள்விக்குட்படுத்தலாம். ( post enactment judicial review). ஆனால் இலங்கையில் அது முடியாது.

அண்மையில் இந்தியாவில் திருமண முடித்தவர்களின் கள்ளத்தொடர்பு தொடர்பான சட்டத்தை நீதிமன்றம் ரத்துச் செய்தது. ஆனால் அது legislation இல்லை என்று கூறமுடியாது. ஏனெனில் பாராளுமன்றம் உருவாக்கிய சட்டம். ஆனாலும் அது law அல்ல.

இலங்கையில் judicial review of legislation இருந்திருந்தால் சிலவேளை மாகாணசபைத் தேர்தல் சட்டம் 'சட்டமல்ல' என ரத்துச் செய்யப்பட்டிருக்கலாம். இலங்கையில் சட்டங்களை ரத்துச்செய்யத்தான் முடியாது. பொருள் கோடலுக்கூடாக ஓரளவு அர்த்தங்களை வழங்கலாம்.

இப்பொழுது மேற்சொன்ன இரு கோட்பாடுகளுக்குள்ளும் வருவோம்.

Rule of Law என்பது பாராளுமன்ற சட்டத்தின் வார்த்தைப்பிரயோகம் எவ்வாறு அமைந்தபோதிலும் அது நியமான, உரிய நோக்கத்திற்காக மாத்திரம் பாவிக்கின்ற அர்த்தத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும். அதன்படி ஆட்சிசெய்யப்பட வேண்டும்.

உதாரணமாக பாராளுமன்றத்தை ஒத்திவைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. ஆனால் அவ்வதிகாரம் இன்று ஜனாதிபதி பாவித்திருக்கின்ற நோக்கங்களுக்காக வழங்கப்பட்டது? அல்லது பிரதமரை நீக்குகின்ற அதிகாரம், நியமிக்கின்ற அதிகாரம் அவருக்கு இருக்கின்றது. ஆனால் பெரும்பான்மை இல்லாவிட்டாலும் கூடுதல் ஆசனங்கள் உள்ளவரை நீக்கிவிட்டு குறைந்த ஆசனங்கள் உள்ளவரை நியமித்து குறுக்கு வழியில் பெரும்பான்மை பெறுவதற்கா அவ்வதிகாரம் வழங்கப்பட்டது?

இது அதிகார துஷ்பிரயோகமில்லையா? சட்டம் நியாயமில்லாமல் பிழையான நோக்கத்திற்காக பாவிக்கப்படுவது சட்டத்தின் ஆட்சியா? எனவே, இங்கு Rule of Law நசுக்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும் சட்டத்தில் எழுதிவைத்தபடிதான் அனைத்தும் நடக்கிறது. இதனைத்தான் Rule by Law என்கிறார்கள்.

Rule by Law என்பது சட்டத்தில் என்ன எழுதப்பட்டிருக்கின்றதோ அதன்படி நடப்பது. அது நியாயமா, இல்லையா? ஜனநாயகமா, இல்லையா? உரிமை மீறலா, இல்லையா? எதைப்பற்றியும் கவலையில்லை. எழுத்தில் உள்ளபடி நடந்திருக்கின்றோம்; என்பது. இது Rule of Law விற்கு எதிரானது.

இரண்டாம் உலகமகா யுத்தத்தில் நாசி ஜேர்மனியில் பலர் gas chamber இல் தள்ளப்பட்டெல்லாம் கொல்லப்பட்டார்கள். ஆனால் அவர்கள் சட்டப்படிதான் கொல்லப்பட்டார் கள். ஏனெனில் அவ்வாறு கொல்வதற்கு அனுமதியளிக்கின்ற சட்டம் அன்று இருந்தது.

யுத்தத்தின் பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். நாங்கள் சட்டப்படிதான் கொன்றோம் என்று அவர்கள் வாதாடினார்கள்.

ஆம், சட்டம் உங்களுக்கு அனுமதியளித்ததுதான். ஆனாலும் அது சட்டமுமல்ல, சட்டத்தின் ஆட்சியுமல்ல. அது Rule by Law. அதை ஏற்றுக்கொள்ள முடியாது; என்று Nuremberg trial இல் முடிவுசெய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள்.

அதேபோன்றுதான், இன்னுமொரு ஐரோப்பிய நாடு, பிரித்தானியா என்று நினைக்கின்றேன், கைதிகள் ஒரு முகாமில் அடைத்துவைக்கப்பட்டார்கள். ஒரு நாள் தற்செயலாக முகாம் தீப்பிடித்துவிட்டது. உள்ளே கைதிகள் கதறினார்கள் கதவைத் திறந்துவிடும்படி. அதற்குப்பொறுப்பானவர் திறக்க இல்லை. சட்டப்படி உயர்அதிகாரியின் உத்தரவில்லாமல் கதவைத்திறக்க எனக்கு அதிகாரமில்லை என்று மறுத்துவிட்டார். அனைவரும் தீயில் கருகி மாண்டுவிட்டார்கள்.

சட்டப்படி அவருக்கு திறக்க அதிகாரமில்லைதான். ஆனாலும் அந்த இடத்தில் அந்தச்சட்டம் அந்தப்பொருளில் பார்க்கப்பட முடியாது. அது Rule of Law அல்ல. அது Rule by Law என்று சம்பந்தப்பட்டவர் தண்டிக்கப்பட்டார்.

இன்று இலங்கையிலும் வெளிப்படையில் எழுத்தில் எல்லாம் இருக்கிறது. ஆனால் பொருள் அதுவல்ல. எனவே இங்கும் இவ்விடயங்களில் சட்டத்தின் ஆட்சிக்குப் (Rule of Law) பதிலாக Rule by Law நடக்கிறது.

நிறைவேற்றுத்துறைத் தலைவர் இவ்வாறு செய்யும்போது சட்டவாக்கத்துறைத் தலைவர் அதனை ஒரு புரட்சிகர முறையில் முகம் கொடுக்கின்றார். தைரியமான போராட்டம். வெல்லப்போவது யார்?

# ஜுவென்டஸை வென்றது மன்செஸ்டர் யுனைட்டெட்



ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸின் மைதானத்தில் இடம்பெற்ற குழு எச் போட்டியொன்றில், இறுதி ஐந்து நிமிடங்களில் பெறப்பட்ட இரண்டு கோல்கள் காரணமாக ஜுவென்டஸை மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது.

இப்போட்டியில், சக ஜுவென்டஸ் பின்கள வீரர் லியனார்டோ பொனூச்சி நீண்ட தூரத்திலிருந்து கொடுத்த பந்தை 65 ஆவது நிமிடத்தில் கோலாக்கிய கிறிஸ்டியானோ ரொனால்டோ ஜுவென்டஸுக்கு முன்னிலையை வழங்கினார்.

இந்நிலையில், குறித்த கோலோ தீர்மானமிக்க வெற்றிக் கோலாக அமையப் போகின்றது என எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில், போட்டி முடிவடைய 11 நிமிடங்கள் இருக்கையில் மாற்று வீரராகக் களமிறங்கிய மன்செஸ்டர் யுனைட்டெட்டின் ஜுவான் மாத்தா, போட்டி முடிவடைய நான்கு நிமிடங்கள் இருக்கையில் பெனால்டி எல்லைக்கருகிலிருந்து பெறப்பட்ட பிறீ கிக் மூலம் கோலைப் பெற கோலெண்ணிக்கையை மன்செஸ்டர் யுனைட்டெட் சமப்படுத்தியது.

இந்நிலையில், அடுத்த மூன்றாவது நிமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டின் அஷ்லி யங்கின் பிறீ கிக்கை ஜுவென்டஸின் அலெக்ஸ் ஸான்ட்ரோ ஓவ்ண் கோலாக மாற்ற இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது.

# ஆஸி.யின் மோசமான சாதனையை உடைத்த வேகப் பந்துவீச்சாளர்கள்: 2-வது போட்டியில் தென் ஆப்பிரிக்கா 7 ரன்களில் தோல்வி



வேகப் பந்துவீச்சாளர்களின் அபாரமான பந்துவீச்சால், அடிலெய்டில் இன்று நடந்த 2-வது ஒரு நாள் போட்டியில் தென் ஆப்பிரிக்க அணியை 7 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது ஆஸ்திரேலிய அணி.

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுடன் தொடர் தோல்வியைச் சந்தித்து வந்த ஆஸ்திரேலிய அணி நீண்ட இடைவெளிக்குப் பின் தென் ஆப்பிரிக்க அணியைச் சொந்த மண்ணில் சாய்த்துள்ளது.

ஆஸ்திரேலிய அணியின் முக்கிய பேட்ஸ்மேன்கள் இல்லாத நிலையில், வெற்றியைச் சுமக்க வேண்டிய பொறுப்பை வேகப் பந்துவீச்சாளர்கள் ஏற்றுக்கொண்டனர். மிட்ஷெல் ஸ்டார்க், ஹேசல்வுட் தலா 2 விக்கெட்டுகளையும், ஸ்டோய்னிஸ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தி தென் ஆப்பிரிக்க தோல்விக்கு காரணமாக அமைந்தனர்.

தென் ஆப்பிரிக்க பேட்ஸ்மேன்களுக்கு தொடக்கத்தில் இருந்தே நெருக்கடி கொடுத்து ஆஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசினார்கள். பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி மெருகேறி வருகிறது. ஆட்ட நாயகன் விருதை ஆஸ்திரேலிய கேப்டன் ஆரோன் பிஞ்ச் பெற்றார்.



இதையடுத்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியுடன் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளன.

ஆஸ்திரேலியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள தென் ஆப்பிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டியில் தென் ஆப்பிரிக்க அணி வெற்றி பெற்ற நிலையில், 2-வது போட்டி அடிலெய்டில் நடந்தது.

டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்க கேப்டன் டூப்ளசிஸ் பீல்டிங்கைத் தேர்வு செய்தார். முதலில் பேட் செய்த ஆஸ்திரேலிய அணி 48.3 ஓவர்களில் 231 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

ஆஸ்திரேலிய அணியில் முக்கிய பேட்ஸ்மேன்களான ஸ்டீவ் ஸ்மித், டேவிட் வார்னர் இல்லாத வெற்றிடம் ஒவ்வொரு போட்டியிலும் தெளிவாகத் தெரிந்தது. இந்தப் போட்டியும் அதற்கு விதிவிலக்கு அல்ல. அணியில் ஒரு வீரர் கூட அரைசதம் அடிக்கவில்லை.

தென் ஆப்பிரிக்க வேகப் பந்துவீச்சாளர்கள் பிரிட்டோரியஸ், ரபாடா, இங்கிடி, ஸ்டெயின் வேகத்தில் ஆஸ்திரேலிய பேட்ஸ்மேன்கள் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்து வந்தனர். 100 ரன்களைச் சேர்ப்பதற்குள் 3 முக்கிய விக்கெட்டுகளை இழந்தது.

நடுவரிசையில் கிறிஸ் லின் (44), கேரே (47) ஆகியோர் மட்டுமே ஓரளவுக்கு நிலைத்து பேட் செய்தனர். 166 ரன்களுக்கு 5-வது விக்கெட்டை இழந்த ஆஸ்திரேலிய அணி அடுத்த 65 ரன்களை சேர்ப்பதற்கு மீதமிருந்த 5 விக்கெட்டுகளையும் விரைவாக இழந்தது. கேப்டன் ஆரோன் பிஞ்ச் 41 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். 48.3 ஓவர்களில் 231 ரன்களுக்கு ஆஸ்திரேலிய அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

தென் ஆப்பிரிக்கத் தரப்பில் ரபாடா 4 விக்கெட்டுகளையும், பிரிட்டோரியஸ் 3 விக்கெட்டுகளையும், ஸ்டெயின் 2 விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.

232 ரன்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய தென் ஆப்பிரிக்க அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 224 ரன்கள் மட்டுமே சேர்த்து 7 ரன்களில் தோல்வி அடைந்தது. தென் ஆப்பிரிக்க அணியில் கேப்டன் டூப்ளசிஸ் (47), மில்லர் (51)ஆகியோர் மட்டுமே ஓரளவுக்கு ரன்கள் சேர்த்தனர். மற்ற வீரர்கள் அனைவரும் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர்.

ஒரு நேரத்தில் தென் ஆப்பிரிக்க அணி 68 ரன்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. 5-வது விக்கெட்டுக்கு டூப்ளசிஸ், மில்லர் ஆகியோர் நிலைத்து ஆடி அணிக்கு நம்பிக்கை அளித்தனர். ஆனால், டூப்ளசிஸை 47 ரன்களில் கம்மின்ஸ் வீழ்த்திய பின் ஆட்டத்தில் திருப்புமுனை ஏற்பட்டது. அடுத்து வந்த கடைசி வரிசை வீரர்களை ஆஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர்கள் எளிதாக வீழ்த்தினார்கள். அணியின் வெற்றிக்குப் போராடிய மில்லர் 51 ரன்களில் ஸ்டோய்னிஸ் வேகத்தில் வெளியேறினார்.

இங்கிடி 19 ரன்களிலும், இம்ரான் தாஹிர் 11 ரன்கள் சேர்த்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆஸ்திரேலியத் தரப்பில் ஸ்டோய்னிஸ் 3 விக்கெட்டுகளையும், ஸ்டார்க், ஹேசல்வுட் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

# சச்சினுக்கு பெரிய மனசு; தீபாவளி அன்று ப்ரித்வி ஷாவுக்கு பயிற்சி கொடுத்த சச்சின்

இந்திய டெஸ்ட் அணியில் சமீபத்தில் அட்டகாசமான அறிமுகம் பெற்ற ப்ரித்வி ஷா, ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடருக்கு பயிற்சிகள் மேற்கொண்டு வருகிறார்.

ப்ரித்வியின் ஆதர்ச நாயகனான சச்சின் முன்னிலையில் ப்ரித்வி ஷா பயிற்சி மேற்கொண்டது தான் இதில் முக்கியமான செய்தி.

சச்சின் மிகப் பெரிய கிரிக்கெட் வீரர் என்ற எந்த பகட்டும் இல்லாமல், இளம் இந்திய வீரருக்கு அறிவுரைகள் கூறியுள்ளது சச்சின் ரசிகர்களை நெகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

ப்ரித்வி ஷா இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் அணியில் இடம் பிடித்தாலும், களம் இறங்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அதையடுத்து வெஸ்ட் இண்டீஸ் டெஸ்ட் தொடரில் தன் டெஸ்ட் அறிமுக வாய்ப்பை பெற்றார். அந்த தொடரில் கலக்கிய அவர், முதல் போட்டியில் 154 பந்துகளில் 134 ரன்கள் குவித்தார். தன் முதல் சதத்தை 99 பந்துகளில் அடித்தார். அந்த முதல் சதத்தால் பல சாதனைகளை நிகழ்த்தினார்.

வெஸ்ட் இண்டீஸ் டெஸ்ட் தொடரின் இரண்டு போட்டிகளிலும் சேர்த்து 237 ரன்கள் குவித்த ப்ரித்வி ஷா, தொடரின் சிறந்த வீரர் விருதையும் வென்றார். இதையடுத்து ப்ரித்வி ஷாவை, சச்சின், சேவாக் உள்ளிட்ட ஜாம்பவான் பேட்ஸ்மேன்களுடன் ஒப்பிட்டு பேசத் துவங்கினர் ரசிகர்கள்.

அடுத்து இந்தியா ஆஸ்திரேலியா டெஸ்ட் தொடரில் பங்கேற்க உள்ளது. அந்த அணியிலும் இடம் பிடித்தார் இளம் ப்ரித்வி ஷா. இதற்கிடையே ரஞ்சி தொடரில் காயம் காரணமாக ப்ரித்வி ஷா முதல் போட்டியில் பங்கேற்கவில்லை. காயத்தில் இருந்து மீண்டுள்ள அவர் சச்சினுடன் சேர்ந்து தீபாவளி அன்று பயிற்சி மேற்கொண்டதாக கூறப்படுகிறது.



அதன் வீடியோ இணையத்தில் பகிரப்பட்டுள்ளது. அதில் சச்சின் ப்ரித்வி ஆடுவதை கவனித்துக் கொண்டு இருக்கிறார். இடையே சச்சினும் ப்ரித்விக்கு பந்து வீசி உள்ளார். மேலும், ஆஸ்திரேலியாவில் எப்படி பேட்டிங் செய்ய வேண்டும் என அறிவுரைகள் கூறியதாகவும் தெரிகிறது. நடப்பதை எல்லாம் பார்த்தால், ப்ரித்வி ஷா அடுத்த சச்சின் என பலரும் கூறுவது உண்மை தான் போல.

# கோலை வித்தியாசமாகக் கொண்டாடிய கால்பந்து வீரர்!

கால்பந்து விளையாட்டு, ஆக்ரோஷம், மோதல் போன்றவற்றைத் தாண்டி ஒரு கொண்டாட்டமான விளையாட்டு. விளையாடும் வீரர்களும் சரி, ரசிகர்களும் சரி, போட்டி முழுவதும் கொண்டாட்ட மனநிலையிலேதான் இருப்பார்கள். அதிலும் குறிப்பாக கோல் அடித்த பின்னர், அதைக் கொண்டாடும் விதத்தில் கவனம் ஈர்க்கும் வீரர்களும் உள்ளனர். கிரிஸ்டியானோ ரொனால்டோ கோல் அடித்ததும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதத்துக்கே தனி ரசிகர்கள் உண்டு.

ஆனால், மைதானத்தில் வீரர்களின் கொண்டாட்டத்துக்கு சில விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் உள்ளது. விதிமுறைகளை மீறிக் கட்டுப்பாடு இல்லாமல் நடக்கும் வீரர்களுக்கு கள நடுவர் தண்டனைகளை வழங்கலாம். இந்த நிலையில், சிலியன் லீக் கால்பந்து தொடரில் எவர்டான் மற்றும் அண்டோஃபாகஸ்டா அணிகள் மோதிய போட்டியின்போது வெனிசுலா கால்பந்து வீரர் எடுவெர்ட் பெல்லோ வித்தியாசமாகத் தனது கோலைக் கொண்டாடினார்.

ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்திலே அசத்தலாகக் கோல் அடித்த பெல்லோ, உடனடியாக தனது அணியினர் இருந்த கேலரி நோக்கி ஓடினார். அங்கு ஒருவரிடம் இருந்து மோதிரத்தைப் பெற்ற அவர், ரசிகர்கள் இருக்கும் பகுதிக்கு விரைந்தார். எகிறி குதித்துச் சென்ற அவர், அங்கிருந்த தன் காதலியிடம், மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். பின்னர் தான் கொண்டு வந்திருந்த மோதிரத்தை அவருக்கு அணிவித்துக் காதலை வெளிப்படுத்தினார். அவரின் காதலியும், அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். இந்தச் சம்பவத்தின்போது ரசிகர்கள் கைதட்டி உற்சாகப்படுத்தினர்.



பின்னர் களத்துக்கு திரும்பிய பெல்லோவுக்கு நடுவர் யெல்லோ கார்டு காண்பித்து எச்சரிக்கை செய்தார். இறுதியில் எவர்டான் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தனது அணி தோல்வி அடைந்ததைத் தவிர்த்து, பெல்லோவுக்கு இந்தப் போட்டி வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

# நல்ல வீரருக்கு அழகல்ல!



பாகிஸ்தான் வீரர் முகமது ஹஃபீஸ் பந்துவீசும் முறை குறித்து நியூஸிலாந்து பேட்ஸ்மேன் ராஸ் டெய்லர் கேள்வி எழுப்பிய விவகாரத்தில் பாகிஸ்தான் கேப்டன் சர்ஃபராஸ் அகமது தனது அதிருப்தியைத் வெளிளிப்படுத்தியிருக்கிறார். நியூசிலாந்து அணி ஐக்கிய அரபு நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் அணிக்கு எதிராக 3 ஒருநாள், 3 டெஸ்ட் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. டி20 தொடரை 3-0 என பாகிஸ்தான் அணி கைப்பற்றியது. இந்நிலையில் தற்போது ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. அபுதாபியில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 47 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. முதலில் பேட் செய்த நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 266 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக டெய்லர் 80 ரன்கள் எடுத்தார்.

டெய்லர் பேட் செய்யும்போது பாகிஸ்தானின் சுழற்பந்துவீச்சாளர் ஹபீஸ், பந்துவீசும் முறை சரியல்ல எனச் சைகை மூலம் நடுவரிடம் தெரிவித்தார். அவர் பந்து எறிவதுபோல் உள்ளதாக அந்த சைகை இருந்தது. பந்துவீச்சாளர் 15 டிகிரிக்கு மேல் தனது கைகளை மடக்கக் கூடாது. அவரது பந்துவீச்சு அப்படி இருந்ததாக டெய்லர் நடுவரிடம் தெரிவித்தார்.

போட்டி முடிந்த பின்னர் இது தொடர்பாகப் பேசிய பாகிஸ்தான் அணியின் கேப்டன் சர்ஃபராஸ் அகமது , டெய்லர் செய்தது தவறு. அப்படி செய்வது அவரது பணியும் கிடையாது. அவரது செயல்பாடு எங்களை அவமானப்படுத்துவதுபோல் இருந்தது. அவரது வேலை பேட் செய்வதுதான். அதில் அவர் கவனமாக இருந்தாலே போதுமானது. அவரது செயல் விளையாட்டு வீரருக்கு உகந்தது அல்ல என நடுவரிடம் தெரிவித்தேன். அவர் ஒரு புரொஃபெஸ்னல் கிரிக்கெட் வீரர். இரண்டு மூன்று முறை அவ்வாறு செய்தார். அது நடுவரின் பணி. ஹபீஸின் பந்துவீச்சில் எந்தத் தவறும் இல்லை, காரணமே இல்லாமல் டெய்லர் இதை ஒரு பிரச்னை ஆக்குகிறார் என்றார்.

# கிரிக்கெட் ஆலோசனை குழுவில் ஹத்துருசிங்க



இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சரின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் இலங்கை கிரிக்கெட் சபையால் அமைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் ஆலோசனைக் குழுவில், இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் சந்திக ஹத்துருசிங்க இடம்பெற்றுள்ளார்.

ஹத்துருசிங்க தவிர, ஏழு பேர் கொண்ட குறித்த குழுவில், இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்றதிகாரி அஷ்லி டி சில்வா, இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைத் தேர்வாலர் கிரேமி லப்ரோய், இலங்கை கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் விவகாரங்களுக்கான பிரதம அதிகாரி அசங்க குருசிங்க, இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ஜெரோம் ஜெயரத்ன, எஸ்.எஸ்.சி கழகத்தின் மைக்கல் டி செ ராய்ஸா, கென் டி அல்விஸ் உள்ளிட்டோரும் இடம் பெற்றுள்ளனர்.

# இலங்கை உதைப் பந்தாட்ட சம்மேளனம் அமைச்சர் பைஸர் முஸ்தபாவை சந்தித்தது

ஐ. ஏ. காதிர் கான்

இலங்கை உதைப் பந்தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவினர், விளையாட்டுத்துறை அமைச்சில் வைத்து, அமைச்சர் பைஸர் முஸ்தபாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, ஆசிய உதைப் பந்தாட்ட சம்மேளனத்தின் சட்ட திருத்தம் தொடர்பில் வாக்களிக்கும் முறைமைகள் குறித்து விரிவாக ஆராய்ப்படது. அத்துடன், அவர்களின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இங்கு அமைச்சர் பைஸர் முஸ்தபா, சம்மேளன உறுப்பினர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும்போது, விளையாட்டுத் துறை அமைச்சர் என்றவகையில், முதலில் நான் நாட்டைப் பற்றியே சிந்தித்து வருகின்றேன். உதைப் பந்தாட்ட விளையாட்டுக்கு பொறுப்பு வாய்ந்த சங்கம் என்ற வகையில், உதைப் பந்தாட்ட விளையாட்டின் சட்டத்திருத்தம் தொடர்பிலான தீர்மானம், அவர்களையே சாரும். இதற்கான சிறந்த முடிவுகளை எடுப்பதும், அவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளதுடன், இதற்கான பொறுப்பும் அவர்களிடமே உள்ளது.



உதைப் பந்தாட்ட விளையாட்டின் எதிர்கால முன்னேற்றங்கள் குறித்து, இலங்கை உதைப் பந்தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு கலந்துரையாடல்களை நடத்தி, சரியான தீர்மானங்களை எடுப்பார்கள் என்பது எனது நம்பிக்கையாகும் என்றார்.

## ரஜினி...

15 ஆம் பக்கத் தொடர்ச்சி

திமுகவினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. அதன் பிறகு, கருணாநிதி - ரஜினி நட்பில் பெரிய விரிசலும் இல்லை, நெருக்கமான பிணைப்பும் இல்லை.

இந்தப் பின்னணியில் தனது ரசிகர்களைச் சந்தித்த ரஜினி, மு.க.ஸ்டாலின் திறமையான நிர்வாகி என்றதோடு, ஸ்டாலினைச் சுதந்திரமாகச் செயல்படவிட்டால், இன்னும் சிறப்பாகச் செயல்படுவார் என்று துக்ளக் ஆசிரியர் சோ சொல்வார் என்று சொன்னார். இதை, ஸ்டாலின் மீதான பாராட்டாக எடுத்துக்கொள்வதா அல்லது ஸ்டாலினைச் சுதந்திரமாகச் செயல்பட கருணாநிதி விடவில்லை என்கிற விமர்சனமாக எடுத்துக்கொள்வதா என்ற குழப்பம் உருவானது.

1996 தேர்தலின்போது முதல்வர் நாற்காலி தன்னைத் தேடி வந்ததாகவும் ஆனால் அந்த நாற்காலி வேண்டாம் என்று ஒதுங்கிவிட்டதாகவும் சமீபகாலமாக ரஜினி பேசியதும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அந்தத் தேர்தலில் திமுக வெற்றிக்கு அவரது ஆதரவு துணைபுரிந்ததில் சந்தேகமில்லை. எனினும், முதல்வர் வாய்ப்பு என்பதெல்லாம் அதிகப்படியானது என்றே பலரும் கருத்து தெரிவித்தனர்.

### ஆசியும் அதிருப்தியும்

இதற்கிடையே, அரசியலில் இறங்குவது குறித்துப் பல ஆண்டுகளாகப் பேசிவந்த ரஜினி, திடீரென ஒருநாள் கருணாநிதியின் கோபாலபுரம் வீட்டுக்குச் சென்றார். எனது அரசியல் பிரவேசம் பற்றி கருணாநிதியிடம் கூறினேன். அவரிடம் ஆசி பெற்றேன் என்றார். ஆனால், அந்த சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ஸ்டாலின், திராவிட இயக்கத்தை அழிப்பதற்கு யார் யாரோ முயற்சி எடுத்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரின் கதைகள் எல்லாம் நாட்டுக்கே தெரியும் என்றார். ஆனால், அதன் பிறகும் முரசொலி பவள விழாவுக்கு ரஜினிக்கு அழைப்புவிடுத்தது திமுக. அந்த மேடையில் ஸ்டாலினுக்கு இருபுறமும் ரஜினியும் கமலும் நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

பிறகு, கருணாநிதி உடல்நிலை பாதிக்கப்பட்டபோது மருத்துவமனைக்கு நேரில் வந்து ஸ்டாலினைச் சந்தித்துப் பேசிய ரஜினி, மு.க.அழகிரியையும் தனியாகச் சந்தித்தார். பிறகு, செய்தியாளர்களிடம் அழகிரி பெயரை முதலில் சொன்ன ரஜினி, அதன் பிறகே ஸ்டாலின் பெயரைச் சொன்னார். அதுவும் ஊடகங்களில் பேசுபொருளாக மாறியது.

கருணாநிதி மரணத்துக்குப் பிறகு நடந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசிய ரஜினி, கருணாநிதி இல்லாத தமிழ்நாட்டை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அவருடைய இறுதிச் சடங்கின்போது முதல்வர் எடப்பாடி பழனிசாமி வந்திருக்க வேண்டாமா? என்று கேட்டதோடு, மெரினாவில் இடம் கொடுப்பதற்கு எதிராகத் தமிழக அரசு மேல்முறையீட்டுக்குப் போயிருந்தால் நானே போராட்டத்தில் இறங்கியிருப்பேன் என்றார். இப்படிப் போய்க் கொண்டிருந்த உறவில்தான், ‘முரசொலி’ கட்டுரை மேலும் விரிசலை ஏற்படுத்தியிருக்கிறது. எதிர்வினையாக, என்னையும் ரசிகர்களையும் யாராலும், எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது என்று ரஜினி கூறியிருக்கிறார். போர் வரும்போது பார்க்கலாம் என்று சொன்னார் ரஜினி. தற்போது போர் தொடங்கிவிட்டதாகவே தெரிகிறது, பார்க்கலாம்!

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 11.11.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

# வாசிப்பதால் சமூகப்பண்புகள் மேம்படுகின்றது; களுதாவளை பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

**க.விஜயரெத்தினம்**







வாசிப்பதனால் சமூகப் பண்புகள் மேம்படுகின்றது என களுதாவளை பிரதேச சபைச் தவிசாளர் யோகநாதன் தெரிவித்தார்.

களுதாவளை பொது நூலகம் தற்போது தரம் 3 இல் உள்ளது. அதனை எனது பதவிக் காலத்தில் தரம் இரண்டுக்கு உயர்தும் பொறுப்பு எனக்கு இருக்கின்றது. அதனை செய்யவேண்டும் என்பதை நான் உறுதியாகக் கூறிக் கொள்கின்றேன்.

மாணவர்களை சிறந்த முறையில் உருவாக்குவது, கல்வியை முன்னெடுத்துச் செல்வது, வாசிப்பதனால்தான். அதனால்தான் நமது அறிவு பெருகிக்கொண்டு செல்கின்றது. இதனூடாக தொழில் விருத்திகளைப் பெற்றுக் கொள்கின்றோம்.

தோண்டத் தோண்ட நீர் வருவதுபோல் வாசிப்பதனால் சமூகப் பண்புகள் மேம்படுகின்றன. எனவே அழியாச் செல்வமாகிய கல்வியை நாம் அனைவரும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைச் செயலாளர் ஞான முத்து யோகநாதன் தெரிவித்துள்ளார்.

களுதாவளை பொது நூலகமும், வாசகர் வட்டமும் இணைந்து நடாத்திய ஓவியக் கண்காட்சியும், விழுமின் எனும் சஞ்சிகை வெளியீட்டு விழாவும் களுதாவளை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வாசகர் வட்டத் தலைவர் சு.சிவரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.சு.கு.விநாயக மூர்த்திக் குருக்கள், மண்முனை தென் எருவிப் பற்று பிரதேச சபைச் செயலாளர் க.லெட்சுமிகாந்தன், நூலகர் எம்.சி.ஹரிஷா சமீம், பிரதேச சபை உறுப்பினர் திருமதி.நிவேதிதா சந்திரலிங்கம், மற்றும், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இலக்கியவாதிகள், வாசகர்வட்ட உறுப்பினர்கள், என பலர் இதன்போது கலந்து கொண்டனர்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-வாசிப்பதன் மூலம் எமது சமூகத்தை வளர்த்தெடுக்க வேண்டும்.

எமது முன்னோர்கள் இவ்விடத்தில் இதன் அத்திவாரமாகத்தான் இந்த நூலகத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்கள்.

தவிசாளராகிய எனக்கு இப் பிரதோசத்திற்குட்பட்ட நூலகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கின்றது.

வாசிப்பின் மூலம்தான் உலகெங்கும் எமது தமிழினத் வியாபித்திருக்கின்றது.

பல மொழிகளைக் கற்று பல பதவி எமது தமிழ் மக்கள் உலகமெங்கும் வாழ்ந்து வருகின்றார்கள்.எனவே எமது மாணவர்கள் எமது கல்விமான்களைப் போல் முன்னேற வேண்டும்.

அதற்காக வேண்டி தொடர்ந்து வாசித்துக் கொண்டே இருங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.




# வாழைச்சேனை இந்துக்கல்லூரி மாணவி கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடம்

**வாழையூர் ந.குகதர்சன்**



ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழக மாணவர்கள் நடாத்திய அகில இலங்கை ரீதியிலான பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட வாழைச்சேனை இந்துக்கல்லூரி மாணவி இரண்டாம் இடத்தை பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் அ.ஜெயஜீவன் தெரிவித்தார்.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழக மாணவர்கள் நடாத்திய மலைத் தென்றல் கலை, கலாசார நிகழ்வின் அங்கமான கலைத்திறள் அகில இலங்கை ரீதியிலான பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட வாழைச்சேனை இந்துக்கல்லூரி மாணவி ஜெ.அக்ஷித்தா கனிஸ்ட பிரிவில் கட்டுரை வரைதலில் இரண்டாம் இடத்தை பெற்று பாடசாலை பெருமை சேர்த்துள்ளார்.

வாழைச்சேனை இந்துக்கல்லூரி மாணவி ஜெகதீஸ்வரன் அக்ஷித்தா தமிழ் மொழித்தின எழுத்தாக்கப் போட்டியில் கட்டுரை வரைதலில் தேசிய மட்டம் வரை சென்று வெற்றி பெற்றதாகவும் மேலும் தெரிவித்தார்.

மேலும் மாணவியை வழிப்படுத்திய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்கு பாடசாலை சமூகம் சார்பாக பாராட்டுக்களை தெரிவிப்பதுடன், இவரது தந்தையாரும் சிறந்த எழுத்தாளர் எனவும் பாடசாலை அதிபர் அ.ஜெயஜீவன் மேலும் தெரிவித்தார்.

# திருப்பழுகாம - மாவேற்குடா வீதியினை கார்பட் பாதையாக புனரமைக்குக

**துறைநீலாவணை நிருபர்**



போரதீவுப்பற்று பிரதேச செயலக சபைக்குட்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய திருப்பழுகாமம் ஆற்றுக்கட்டுப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து மாவேற்குடா ஊடாக கார்த்திகேசர் கடை சந்திக்குச் செல்லும் பிரதான பாதையினை, கார்பட் பாதையாக புனரமைத்துத் தருமாறு பிரதேச வாழ் சமூக மட்டக் குழுக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

நீண்ட காலமாக சுமார் முப்பது வருட காலத்திற்கு மேலாக புனரமைப்பற்று குன்றும் குழியுமாக சேதமடைந்தவாறு காணப்படுவதினால் பாதையினைப் பயன்படுத்தும் செயலகப் பிரிவுக்குட்பட்ட பெருமளவான கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரமுள்ள இப்பாதை, மழைவெள்ள காலங்களில் நீரில் மூழ்கிய நிலையில் காணப்படுவதினால் பெரியபோரதீவு, பழுகாமம், மாவேற்குடா ஊடாக பல்வேறு கிராமங்களுக்குச் செல்லும் மாணவர்கள், மாற்றுத் திறனாளிகள், விசேட தேவையுடையோர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இடறி விழுந்து பல்வேறு விபத்துக்களுக்குள்ளாகியுள்ளதாகவும் தெரியவருகிறது.

அம்பிளாந்துறை, தாந்தா, தும்பங்கேணி, திக்கோடை, கொக்கட்டிச்சோலை, மண்முனை, களுவாஞ்சிக்குடி ஆகிய கிராம மக்களின் அத்தியவசிய பாதை மார்க்கத் தேவை கருதி புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் பிரதிநிதிகள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவை கோரியும் இற்றைவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையென பொதுமக்கள் கவலையுடன் அங்கலாய்க்கின்றனர்.

பொதுமக்கள் உட்பட பயணிகள் தங்கள் பயணங்களை சிரமமின்றி முறையாக மேற்க்கொள்ள குறித்த வீதியின் புனரமைப்புப் பணிகளை இன்னும் இழுத்தடிக்காமல் வெகுவிரைவில் கார்பட் பாதையாக அமைத்துத் தருவதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்க்கொள்ள வேண்டுமென பிரதேச வாழ் பொதுமக்களும் சமூக மட்ட அமைப்புகளும் கோரிக்கை விடுக்கின்றன.

# வெல்லாவெளியில் பொது நூலகத்தினை அமைக்குமாறு கோரிக்கை

**துறைநீலாவணை நிருபர்**

போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலக சபைக்குட்பட்ட வெல்லாவெளிப் பிரதேசத்தில், பொதுநூலகம் இன்மையினால் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

பிரதேச செயலகம் மற்றும் சபை அமைந்திருக்கும் வெல்லாவெளிக் கிராமத்தில் பொதுநூலகம் இன்மையினால் உயர்தரப்பிரிவில் கல்வி பயிலும் வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய மாணவர்கள், முன்பள்ளி மாணவர்கள் உட்பட பல்வேறு பாடசாலை மாணக்கர்கள் மிகுந்த சவால்களுக்கும் சிரமங்களுக்கும் உள்ளாவதுடன் கல்வியாளுமையில் பின்னடைவுக்குள்ளாவதாகவும் தெரியவருகிறது

கோயிற்போரதீவு, விளாந்தோட்டம், காக்காச்சிவட்டை, வேத்துச்சேனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த வாசகர்கள் நூலகமின்மையினால் அதிக பணம் செலவு செய்து பெரும் சிரமங்களுக்கு மத்தியில் ஏனைய செயலக சபைகளுக்குட்பட்ட நூலகங்களை நாடுவதாகவும் தெரியவருகிறது.

மட்டு மாவட்டத்தின் பின்தங்கிய எல்லைப்புற பிரதேச கிராம மக்களினதும் மாணவர்களினதும் அத்தியவசிய அடிப்படை தேவை கருதி சகல வசதிகளுடனும் கூடிய பொது நூலகத்தை அமைத்துத் தருமாறு சமூகமட்டக் அமைப்புகள் உரிய அலுவலர்களுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் கவிதைத்தொகுப்பு வெளியீட்டு வைக்கப்பட்டது

**க.விஜயரெத்தினம்**





மட்டக்களப்பு மாவட்ட புலவர் மணி நினைவு பணி மன்றத்தின் ஏற்பாட்டில் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளையின் 40 வது நினைவு கவிதைத்தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு மட்டக்களப்பு இந்து கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு புலவர்மணி நினைவு பணி மன்றத்தின் தலைவரும்,கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளருமான கலாநிதி எஸ் சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் எம் .உதயகுமார் கலந்துகொண்டார்.

நிகழ்வின் ஆரம்பநிகழ்வாக இந்துகல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் உருவ சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது .இதேவேளை கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள் விபுலானந்தர் அடிகளாரின் உருவ சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வினை தொடர்ந்து இறை வணக்கத்துடன் மங்கள விளக்கேற்றப்பட்டு ,தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்வு ஆரம்பமானது.

இதன்போது புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளையின் 40 வது நினைவு தினத்தை சிறப்பிக்கும் வகையில் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளையின் உருவ படத்திற்கு மாவட்ட அரசாங்க அதிபர்,மற்றும் குடும்ப உறுப்பினர்களினால் மலர் மாலை அணிவித்து புலவர் மணிக்கு வணக்கம் செலுத்தப்பட்டது.

இதனைதொடர்ந்து புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளையின் 40 வது நினைவு கவிதைத்தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. இதன் முதல் பிரதியினை மாவட்ட அரசாங்க அதிபர் எம் .உதயகுமார் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு வலயக்கல்விப் கே.பாஸ்கரன் புலவர்மணி நினைவு பணி மன்ற உறுப்பினர்கள் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளையின் குடும்ப அங்கத்தவர்கள்,கலைஞர்கள்,ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் என பலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கிழக்கில் உப உணவுப் பயிர்களின் விற்பனை அதிகம்;செய்கையாளர்கள் மகிழ்ச்சி!

**துறைநீலாவணை நிருபர்**

தற்போது பருவப்பெயர்ச்சி மழை என அழைக்கப்படும் மாரிகாலம் கிழக்கில் தொடங்கியுள்ளதால் குறுகியகால பயிர்ச்செய்கைகளில் கிடைக்கக்கூடிய உப உணவுப்பயிர்களான நிலக்கடலை, சோளம், மரவள்ளிக்கிழங்கு, வற்றாளைக் கிழங்கு போன்ற கிழங்கு மற்றும் தானியங்கள் கிழக்கு மாகாண சந்தைகளில் விற்பனைக்கு வந்துள்ளன.

கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாரை, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள சேனைப்பயிர்ச்செய்கை கிராமங்களில் பயிரிடப்பட்டு வந்த உப உணவுகளே இவ்வாறு சந்தைகளுக்கு விற்பனைக்கு வந்துள்ளன. தொழில் முயற்சியில் ஈடுபடும் பலர் கிழக்கில் நடை பாதையோரங்களில் விற்பனையில் ஈடுபட்டு வருவதையும் நிறைவான கேள்வி நிலவுவதையும் காண முடிகின்றது.

நிலக்கடலை ஒரு கொத்து நூறு ரூபாய்க்கும் பத்து சோளன் நூறுரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மட்டு அம்பாறையில் நிலக்கடலை தற்போது ஒருகொத்து நூறு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தாலும் எதிர்வரும் ஒரு மாதத்திற்குள் நாற்பது ரூபாய்வரை குறையவும் வாய்ப்புகள் உள்ளதாக பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்மாந்துறை, இறக்காமம், உகன, வெல்லாவெளி, பட்டிப்பளை, அக்கரப்பற்று, தமண ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவ்வாறு உபஉணவுகள் உற்பத்தி செய்யப்பட்டு களுவாஞ்சிக்குடி, மருதமுனை, பாண்டிருப்பு கல்முனை, நற்பிட்டிமுனை, மாளிகைக்காடு சாய்ந்த மருது ,காரைதீவு போன்ற பிரதேசங்களில் உள்ள சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு தாழங்குடா தேசிய கல்வியல் கல்லூரிக்கு உப பீடாதிபதி நியமிப்பு

**க.விஜயரெத்தினம்**

மட்டக்களப்பு தாழங்குடா தேசிய கல்விக்கல்லூரியின் நிதி நிர்வாகத்திற்குரிய உப பீடாதிபதியாக இ.மனோகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தாழங்குடா கல்வியக்கல்லூரி நிதி நிர்வாகத்திற்குரிய உப பீடாதிபதியாக இருந்த கி.புண்ணியமூர்த்தி அவர்கள் பீடாதிபதியாக பதவி உயர்வு பெற்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இ.மனோகரன் அவர்கள் 1.11.2018 நியமிக்கப்பட்டுள்ளார் .

மட்டக்களப்பு குறுமண்வெளியை பிறப்பிடமாகவும்,பெரியகல்லாற்றை வசிப்பிடமாக கொண்ட இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வணிக மாணிப் பட்டதாரி ஆவார்.தேசிய கல்வி நிறுவகத்தில் முதுகல்விமாணி MED பட்டத்தையும் ,அயர்லாந்து Ulsrer பல்கலைக்கழகத்தில் கல்வியில் முதுவிஞ்ஞானமாணி MSC in Education பட்டத்தையும் பெற்றுள்ளார். ஆங்கில மொழியில் சிறப்பு தேர்ச்சி பெற்ற இவர் ஆங்கில நூல்கள் பலவற்றையும்,உளவியல் சார்ந்த நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார்.







கடந்த சில நாட்களாக பெய்த அடை மழையினால் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிட்டங்கி வீதியின் மேலாக வெள்ள நீர் பாய்ந்து செல்வதால் இவ்வீதியால் பயணிக்கும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாவதை படங்களில் காணலாம்.

படம்: மண்டூர் நிருபர்




## மூதூரில் வெள்ள அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல்





**மூதூர் நிருபர்**

மூதூர் பிரதேச செயலாளர் மு.முபாரக் தலைமையில் மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மூதூரில் ஏற்பட்டுள்ள வெள்ள அபாய நிலைமைகளை கருத்திற் கொண்டு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

திருகோணமலை அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளரின் பங்குபற்றுதலோடு, பிரதேச சபை செயலாளர், மூதூர் பொது சுகாதார வைத்திய அதிகாரி ஜெஸ்மி மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், பொலிஸ், இராணுவ, கடற்படை அதிகாரிகள், ஆகியோர்கள் அடங்களாக பிரதேச செயலக அனைத்து அரச ஊழியர்களும் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

இதன்போது அனர்த்தத்திற்கு முன்னரான பாதுகாப்பு நடவடிக்கைகள், தற்போது பெய்துவருகின்ற மழைநீர் தேங்கி நிற்கின்ற இடங்களிலிருந்து நீரை வடிந்தோடச் செய்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் வெள்ள அபாயம் ஏற்படும் பட்சத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், டெங்கு அபாயம் தொடர்பான விழிப்புணர்வு ஆகிய விடயங்கள் பெரிதும் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரினது மேற்பார்வையின கீழ் வெள்ள அனர்த்தத்திலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான இணைந்த நடவடிக்கைகள் தீவிரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றமை பாராட்டத்தக்கதாகும்.

## மார்க்க தலைவர்கள் மீது பழியை போடாதீர் முஸ்லிம் தலைவர்களுக்கு பஷீர் எச்சரிக்கை

**கல்முனை நிருபர்**

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அவர்களின் தலையை தப்ப வைப்பதற்காக மார்க்க தலைவர்கள் மீது அரசியல் ரீதியான தீர்மானங்கள் தொடர்பான பழியை போட கூடாது என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தவிசாளரும், உற்பத்தி திறன்கள் ஊக்குவிப்பு முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

இவர் இது தொடர்பாக வெளியிட்ட செய்தி குறிப்பில் குறிப்பிட்டு உள்ளவை வருமாறு,

எந்தவொரு முஸ்லிம் அரசியல் கட்சியும் அரசாங்க கட்சியின் பக்கமோ அல்லது எதிர் கட்சியின் பக்கமோ மாறி செல்லுகின்ற அவசியம் ஏற்படுகின்ற தருணமொன்றில் உலமாக்களை அழைத்து ஆலோசனை கலப்பது ஆரோக்கியமானதல்ல.

இக்கட்சிகள் இருந்த கூட்டில் இருப்பதாகவோ அல்லது புதிய கூட்டில் சங்கமிப்பதாகவோ தீர்மானம் எடுக்கின்ற நிலையில், இத்தீர்மானம் எடுக்குமாறு உலமாக்கள்தான் சொல்லியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு பெரிய இரு கட்சிகளினதும் சிங்கள ஆதரவாளர்கள் வருவார்கள். இது முஸ்லிம் சமூகத்துக்கு பெரிய ஆபத்தை விளைவிக்க கூடியது. அரசியல் தலைவர்கள் அரசியல் தீர்மானங்களை எடுத்து பக்கம் மாறுவது காலாகாலமாக நடந்து வருகிற பேரினத்துக்கு பழக்கப்பட்ட நடைமுறையாகும். ஆனால் மத தலைமைகளின் ஆலோசனையின் பேரில் தீர்மானம் எடுக்கப்பட்டதாக கடந்த காலங்களில் செய்திகள் வெளிவராததால் சிங்களவருக்கு அது பற்றி தெரிந்திருக்கவில்லை. சமூக ஊடக வெளிச்சம் பரவி பாய்கிற இன்றைய காலத்தில் இரகசியம் என்று ஏதுமில்லை. இது மட்டுமல்ல கட்சி தலைவர்கள் அவர்களின் தலையை தப்ப வைப்பதற்காக ஊடகங்களூடாக மார்க்க தலைவர்கள் கூறியபடிதான் தீரமானம் எடுக்கப்பட்டது என்ற செய்தியைக் கசிய விடுவார்கள் என்பதையும் எதிர்பார்க்கலாம்..

எனவே, இவ்வாறான தீர்மானத்துக்கு மார்க்க தலைவர்கள்தான் காரணம் என கதையோ,செய்தியோ பரவினால் எடுத்த தீர்மானத்தால் பாதிப்படைகிற பெரிய கட்சியின் சிங்கள- பௌத்த ஆதரவாளர்களுக்கு இஸ்லாத்தின் மீது கோபம் மூளும், இந்த மார்க்கத்தின் மீதான கோபம் அரசியல் தலைவர்களின் மீதான கோபத்தை கடந்து முழு முஸ்லிம் சமுதாயத்தின் மீதும் சூழ்ந்து கௌவி பிடித்து கடித்து குதறும் வாய்ப்புள்ளது. இது மாத்திரமல்ல பல வருடங்களாக முஸ்லிம்களின் மீது சிங்கள தீவிரவாத இயக்கங்களால் வெறுப்பு பிரச்சாரம் செய்யப்பட்டு வன்மம் வளர்ந்து வந்திருக்கிறது. மேலும், இரண்டு பெருங்கட்சிகளின் ஆட்சி காலத்திலும் பல தடவைகள் மத தலங்கள் பல தாக்கப்பட்டுள்ளன.இவ்வாறே மக்களும் வன்முறையை சந்தித்துள்ளனர். இவ்வாறு நீண்ட காலமாக நீரில் ஊறிய உரிமட்டையின் நிலையில் இருக்கும் முஸ்லிம்களுக்கு தலைமை வகிக்கும் அரசியல் மற்றும் மார்க்க தலைமைகள் ஒன்றிணைந்து இன்று நிலவும் அரசியல் சூழலில் அரசியல் முடிவுகளை எடுப்பதாக இருக்க கூடாது.

## வகுப்பறைக்குள் புகுந்த வெள்ள நீர்; கற்றல் நடவடிக்கைகள் பாதிப்பு!

**கிண்ணியா நிருபர்**

கடும் அடை மழை காரணமாக கிண்ணியா அல் அக்ஸா தேசிய பாடசாலை வளாகத்தினுள்ளும் வகுப்பறைக்குள்ளும் மழை நீர் வெள்ளம் பெருக்கெடுத்ததால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றார்கள் தெரிவிக்கின்றனர்.

இரு நாட்கள் தொடர்ச்சியான அடை மழை காரணமாக தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறித்த பாடசாலையின் வகுப்பறைக்குள் நீர் புகுந்ததால் தளபாடங்கள் நனைந்து பாதிக்கப்பட்டுள்ளதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்துள்ளதாக பெற்றார்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வழமையான நிலைமைக்கு கால நிலை மாற்றம் திரும்புவதற்கு முன்னர் பாடசாலை வளாகத்தின் தாழ் நிலப் பகுதிகளை வெள்ள அனர்த்தத்தில் இருந்து பாதுகாக்க உரிய அரச அதிகாரிகள் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு கல்விக்கான ஆரம்ப கட்ட வேலைகளை செய்யுமாறு பெற்றார்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

**கிண்ணியா நிருபர்**

சமூக சேவைகள் நலன்புரி அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தில் இரு வருட சமூகப் பணி -2019/2020 டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை சமூகப் பணிக் கல்லூரியில் இவ் முழு வருட டிப்ளோமா பாடநெறியானது தமிழ், சிங்கள மொழிகளில் நடைபெறவுள்ளதாகவும் இதற்கான தகைமைகளாக கா.பொ.தா.சா. தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அரச, மாகாண உள்ளூராட்சி திணைக்களங்களில் மூன்று வருட கால திருப்திகர சேவையினை பூர்த்தி செய்திருக்க வேண்டும். அரச ஊழியர்கள் தங்களது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்க முடியும். 20 தொடக்கம் 46 வயதுக்கு இடைப் பட்டவர்களாக இருக்க வேண்டும்.

பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 20018.12.09 திகதிக்கு முன்பு பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், இல 488 அ, நாவல வீதி, இராஜகிரிய எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பணிப்பாளர் நாயகம்( மேலதிகம்) திருமதி.ஷாமினி அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

விண்ணப்பப் படிவங்களுக்கும் ஏனைய தகவல்களைப் பெற வேண்டுமாயின் 0112882506/7 எனும் இலக்கத்துடனோ அல்லது 2018.11.02 ந் திகதி வர்த்தமாணி பத்திரிகையை பார்வையிடுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சாய்ந்தமருதில் வெள்ள அபாயம்; முதல்வர் அவசர நடவடிக்கை; தோணா தடைகள் அகற்றல்; முகத்துவாரமும் திறப்பு!





**ஜெஸீர் எம் ஹனீபா**

கடந்த சில தினங்களாக பெய்து வருகின்ற அடை மழை காரணமாக சாய்ந்தமருது பிரதேசத்தில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர சபையின் சாய்ந்தமருது சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் விடுத்த அவசர வேண்டுகோளின் பேரில் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் மற்றும் ஆணையாளர் எம்.சி.அன்சார் ஆகியோர் அங்கு விஜயம் செய்து, வெள்ள நீரை கடலுக்கு அனுப்புவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

## தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வுகள்



**எம்.பஹ்த் ஜுனைட்**

காத்தான்குடி நகர சபையின் கீழ் இயங்கிவரும் காத்தான்குடி பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மதத்தினை சிறப்பித்து மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகளின் இறுதி நாள் நிகழ்வு நகர சபை செயலாளர் திருமதி றிப்கா ஷபீன் தலைமையில் ஹிஸ்புழ் ழாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் காத்தான்குடி நகர முதல்வர் அஸ்பர் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரகாஷ் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் நகர சபை உறுப்பினர்கள், ஊழியர்கள், உலமாக்கள், என பலரும் கலந்துகொண்டனர். தேசிய வாசிப்பு மாதத்தில் இடம்பெற்ற மாணவர்களுக்கான போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்ததுடன் பட்டிமன்றம், வாசகர்கள் கௌரவிப்பு, ஊழியர்கள் கௌரவிப்பு போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## நீடிக்கும் காலநிலை மாற்றத்தினால் கடற்றொழில் பாதிப்பு

**எம்.பஹ்த் ஜுனைட்**

வங்காள விரிகுடாவில் உருவாகிவரும் தாழமுக்கம் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கலாம் என வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

தற்போதைய காலநிலை மாற்றத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மீனவர்களின் இயல்பு நிலை கேள்விக்குறியாகியுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலானவர்கள் கடற்றொழிலை வாழ்வதாரமாக கொண்டுள்ளதுடன் பிரதான வருமானமாகவும் நம்பி வாழ்ந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## வளங்களை இணங்கண்டு சுற்றுலாத் துறையை விருத்திக்கு இட்டுச் செல்ல வேண்டும்

**கிண்ணியா நிருபர்**

சுற்றுலாத் துறை நலனோம்புகை என்பது எங்களால் உருவாக்கப்பட வேண்டும் தற்காலத்தில் உள்ள சுற்றுலா துறையானது இலங்கையில் முன்னோர்கள் காலத்தில் தோற்றம் பெற்றது. சுற்றுலா துறையின் விருத்திக்கு சரியான வளங்களை இணங்கண்டு விருத்தி செய்ய முடியும் என சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சுற்றுலா முகாமைத்துவ பீடத்தின் விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ். எம்.அஸ்லம் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களை சுற்றுலா நலனோம்புகை தொடர்பில் தெளிவுபடுத்தும் செயலமர்வு அவுஸ்திரேலிய எயிட் நிறுவனத்தின் அனுசரனையில் உணர்ச்சி, நுண்ணறிவு மற்றும் வாழ்க்கை திறன்கள் நிறுவனத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை சண்சைன் மண்டபத்தில் இடம் பெற்ற போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்

எமது நாட்டில் பல்வேறு கலாசாரங்களை கொண்ட பாரம்பரியங்களை உள்ளடக்கிய மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் வெளிநாட்டுப் பயணிகளுக்கான சுற்றுலாத் துறையில் அதிக செலவாணியை பெறக்கூடிய வகையில் விசேடமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் சக இனத்தவர்களுடனும் குடும்பமாக உறவு முறைகளையும் ஏற்படுத்திக் கொள்ள கூடியவாறான வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது சுற்றுலா பிரதேசங்களை மாத்திரம் கவரக்கூடிய நிலை மட்டுமல்லாது ஏனைய பல் வகைமை கொண்ட கலாசார பாரம்பரியங்களை பேணிக் கொள்ள மனித விழுமியங்களை அவர்களுக்காக கொண்டு சேர்க்க வேண்டும்.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறையில் பல இடங்கள் காணப்படுகிறது திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை உள்ளிட்ட பல இடங்களை கண்டு கொள்ள கூடிய வாய்ப்புக்களும் உள்ளது.

இதற்கான அதிகளவான தொழில்வாய்ப்புக்களை பெறக் கூடிய பயிற்சிகளை பெற வேண்டியுள்ளது சுற்றுலா முகாமைத்துவம் தொடர்பில் விருந்தோம்பல் போன்ற பயிற்சி நெறிகளை கற்பதன் ஊடாக பல வழிகளில் வருமானத்தை பெறுவதறாகன வாய்ப்பினையும் ஏற்படுத்துகிறது.

சமூக கலாசார பொருளாதார ரீதியான விடயங்களிலும் சுற்றுலாத் துறை பாரிய தாக்கங்களை சாதகங்களாக செலுத்துகிறது.

கிராமம், நகரம் என்பவற்றில் காணப்படும் இடங்களை அதாவது மலைகள், கடல்கள், மேடு பள்ளம் நீர்வீழ்ச்சி, குளங்கள், தீவுகள் காடுகள் என்பனவற்றை கொண்டதான சுற்றுலா தளங்களை உருவாக்கி அதனூடான உற்பத்திகளை வளர்ச்சியடைய செய்வதனால் நாட்டின் சுற்றுலாத் துறையை வெளிநாட்டவர்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக காட்ட முடியும் என்றார்.

## மனையியல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

**மீனோடைக்கட்டு நிருபர்**

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கிவரும் மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் முதலாம் வருடகால மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பயில்வதற்கு தகைமையுள்ள யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர் ரீ.ஜே. அதிசயராஜ் தெரிவித்தார். தகைமையுடைய விண்ணப்பதாரிகள், எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், அட்டாளைச்சேனை எனும் முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பிவைக்குமாறும் உதவி பிரதேச செயலாளர் தெரிவித்தார். மேலதிக விவரங்களுக்கு, 0771281478, 0776652925.



**கல்முனை மறுமலர்ச்சி மன்றத்தினால் கல்முனை பிரதேச செயலகத்தில் புதிய பிரதேச செயலாளராக கடமையேற்ற எம்.எம். நஸீரை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு மன்றத்தின் செயற்பாட்டாளர் ஏ எஸ்.எம்.ஹாஜாகான் தலைமையில் கல்முனை அல்தாப் ஹோட்டலில் நடைபெற்றது. இதன்போது பிரதேச செயலாளருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பதையும் மன்றத்தின் தலைவர் ஏ.எம் நஸீர், மன்றத்தின் உறுப்பினர் எம்.சீ.அஹம்மட் புர்க்ஹான் உள்ளிட்ட உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.**

**படம்:கல்முனை நிருபர்**

# இரத்துச் செய்யப்பட்ட ஆற்றுமண் அனுமதிப்பத்திரங்களை மீண்டும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

**கல்முனை நிருபர்**

இலங்கை மட்டாண்டக் கூட்டுத்தாபன இறக்காம தொழிற்சாலைக்குச் சொந்தமான காணியினை அண்மித்துள்ள கல்லோயா ஆற்றில் மண் எடுப்பதற்காக வழங்கப்பட்டிருந்த 8 அனுமதிப்பத்திரங்களையும் ரத்துச் செய்துள்ள நிலையில் குறித்த அனுமதிப்பத்திரங்களை மீளவும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையினை பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் முன்னெடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபன இறக்காம தொழிற்சாலைக்கு நேரடி விஜயம் செய்தபோது கல்லோயா ஆற்றின் குறித்த பிரதேசத்திற்கும் சென்று பார்வையிட்டார்.

இதன்போது இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரசாத் ஹெட்டியாராச்சி, புவிச்சரிதவியல் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் பண்டார, நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர், இறக்காம தொழிற்சாலையின் வினியோக மற்றும் திட்ட முகாமையாளர் தினேஸ் சஞ்ஜீவ, உற்பத்தி மற்றும் களஞ்சியசாலை முகாமையாளர் ஆர்.எம்.எஸ். ரத்நாயக்க, இறக்காம பிரதேச சபை உறுப்பினர் ஜெமீல் காரியப்பர், இறக்காம பிரதேச சபை முன்னாள் தவிசாளர் யூ.கே. ஜபீர்



மௌலவி ஆகியோர்பிரசன்னமாகியிருந்தனர்.

குறித்த இறக்காம தொழிற்சாலைக்குச் சொந்தமான காணியினை அண்மித்துள்ள கல்லோயா ஆற்றில் மண் எடுப்பதற்காக 8 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததாகவும் அவ்வனுமதிப் பத்திரத்தை பெற்ற நபர்களில் ஒருவர் மண் அகழ்வு நடவடிக்கையினை உரிய முறையில் மேற்கொள்ளவில்லை என்பதற்காக சகல அனுமதிப்பத்திரங்களையும் புவிச்சரிதவியல் மற்றும் நீர்ப்பாசன திணைக்களங்கள் இரத்துச் செய்துள்ளதாகவும் ஹரீஸிடம் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருந்த உரிமையாளர்கள் தெரிவித்திருந்தனர்.

அதற்கமைவாக மேற்கொள்ளப்பட்ட இவ்விஜயத்தின்போது குறித்த ஆற்றுப் பிரதேசத்தில் மண் நிரம்பி நீர் ஓட்டத்திற்கு தடையாக காணப்படுவது அவதானிக்கப்பட்டதோடு மண் அகழ்வதற்கான அனுமதிப்பத்திரங்களை இறுக்கமான வரையறைகளுடன் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

குறுகிய மாத காலத்துக்கொருமுறை புதுப்பிக்கத்தக்கதாக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் உரிய முறையில் மண் அகழ்வை மேற்கொள்ளாதவர்களின் அனுமதிப்பத்திரங்களை ரத்துச் செய்ய முடியும் எனவும் இதனால் உரியமுறையில் மண் அகழாமையினால் ஏற்படும் பாதிப்புக்களை தடுக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அனுமதிப் பத்திரங்களை பெறுபவர்கள் மண் அகழ்வு மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் மரங்களை நட்டு பராமரிக்கவும் பணிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் இங்கு தீர்மானிக்கப்பட்ட விடயங்களை மேலதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு முயல்வதாக புவிச்சரிதவியல் மற்றும் நீர்ப்பாசன திணைக்களங்களின் அதிகாரிகளினால் இதன்போது தெரிவிக்கப்பட்டது. அத்தோடு ஹரீஸ் குறித்தமேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.




# கிழக்கு மாகாண ஆளுனரால் அனர்த்த முகாமைத்துவ மேம்பாட்டு குழு நியமனம்

கிழக்கு மாகாண ஆளுனர் ரோஹித்த போகல்லாகமவினால் மாகாண அனர்த்த முகாமைத்துவ மேம்பாட்டு குழு உருவாக்கப்பட்டுள்ளது. மாகாண உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் செயளாலர்.அஸீஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட இக்குழுவில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்கள்இ கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்இ கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்இ கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி பணிப்பாளர் ஆகியோர் இதன் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு தேவையான குடிநீர்இ உணவு மற்றும் தங்குமிட வசதிகளை வழங்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுனர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கி உள்ளார்.

அத்துடன் இக் குழுவானது மாகாணத்தின் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான நிலவரங்களை முகாமை செய்வதுடன் உரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளது. மாகாண சுகாதாரத்துறை மற்றும் உள்ளூர் அதிகார சபைகளுக்கு அனர்த்த முன்னெச்சரிக்கை தொடர்பில் செயற்படவேண்டிய விதம் பற்றியும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# திருகோணமலை மாவட்ட இலக்கிய விழா

திருகோணமலை மாவட்ட இலக்கிய விழா 2018.11.12ம் திகதி மதியம் 2மணிக்கு திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக்கல்லூரியில் கோலாகலமாக மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமாரவின் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தவிர்க்க முடியாத காரணங்களால் குறித்த விழா அதே நாள் காலை 9 மணிக்கு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெறும் என ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தமிழ்இ சிங்களம் மற்றும் ஆங்கில மொழி ரீதியாக நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதுடன் மூவினங்களையும் பிரதிபலிக்கும் கலை கலாசார நிகழ்ச்சிகளும் அரங்கேரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெரியநிலாவணை புலவர்மணி மஹா வித்தியாலய மாணவி தேசிய ரீதியில் சாதனை

**பெரியநீலாவணை நிருபர்**

பெரியநிலாவணை புலவர்மணி சரிபுத்தீன் மஹா வித்தியாலய மாணவி எஸ்.ஏ. செரின் ஸஹ்றா (தரம்-7) தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினை பெற்று பாடசாலைக்கும், கல்முனை கல்வி வலயத்திற்கும் தமது பிரதேசத்திற்கும் பெருமை தேடித்தந்துள்ளார் என பாடசாலையின் அதிபர் எம்.எம். முஹம்மட் நியாஸ் தெரிவித்தார்.

தேசிய மட்டத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட ஆங்கில தின கையெழுத்துப் பிரதி பண்ணுதல் போட்டியில் பங்குபற்றி 2ம் இடத்தினை பெற்று இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

சாதனை மாணவிக்கு கற்பித்த ஆசிரியர்களான திருமதி எஸ்.எம்.ஜெனிர், திருமதி எம்.ஐ.பஹ்மிதா, திருமதி. எப்.ஐ.அப்துல் பஸாஹிர், திருமதி. எம்.எம்.சுபுஹானி, திருமதி.எம்.எஸ்.ஜனுபா ஆகியோரும் கல்முனை வலயக் கல்வி ஆலுவலகத்தின் ஆங்கிலப் பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.கலீல் மற்றும் அதிபர் ஆகியோருடன் சாதனை மாணவியையும் படத்தில் காணலாம்.



# கலந்துரையாடல்

**கிண்ணியா நிருபர்**

கிண்ணியா பொது நூலக சிரேஷ்ட நலன்புரி சங்கத்தினருக்கும் கிண்ணியா பிரதேச புதிய தவிசாளர் எம்.எச். சனூஸ்க்கு இடையிலான சந்திப்பு, கிண்ணியா பிரதேச சபை நூலகத்தில் இடம்பெற்றது.



இச்சந்திப்பின் போது, கிண்ணியா பிரதேச சபை பொது நூலகத்தின் அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது சிரேஷ்ட நலன்புரிச் சங்கத்தில் புதிய தவிசாளரை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்ப படிவம் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களால் வழங்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச சபைக் குட்பட்ட பிரதேசத்தில் வாசிப்பு திறனை மேம்படுத்தும் நோக்குடனும், நூலகத்தை நவீனமயப் படுத்தும் நோக்குடன் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிண்ணியா பிரதேச சபை நூலகத்தை ஒரிரு வாரத்துக்குள் வாசகர் நலன் கருதி கவர்ச்சிகரமாக செய்ய வேண்டிய வேலைகளை கூறுங்கள் அதனை செய்து தருவதாகவும் தவிசாளர் உறுதியளித்தார்.



**திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட திருக்கோவில் குமர வித்தியாலயத்தில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ர.மிதுரேஸ்(185) நி.யதுஷயா(181) ஜீ.ரஜேனுகாந்(180) வி.விகாஷ்(179) ம.டில்சானி(177) த.சிகாம்சன்(175) அ.சோபகாசன்(172) ப.யுக்சியா(171) அ.லோறிசா(167) ப.ரோகிதன்(164) ஆகிய மாணவ,மாணவிகளையும், கற்பித்த ஆசிரியர்களான கே.கந்தசாமி, திருமதி. சுகிர்தா மலர்ராஜன் மற்றும் அதிபர் ஆர்.இரத்தினகுமார் ஆகியோரையும் படத்தில் காணலாம்.**

**படம்: திருக்கோவில் நிருபர்**

# வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

**கந்தளாய் நிருபர்**

தோப்பூரிலிருந்து பள்ளிக்குடியிருப்பு,தங்கபுரம், கட்டைபறிச்சான் இறால்பாலமூடாக மூதூரைச் சென்றடையும் பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாது பள்ளமும் படுகுழியுமாக போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியை தினமும் பள்ளிக்குடியிருப்பு, தங்கபுரம். ஸ்ரீனிவாசபுரம்,சின்னக்குளம்,இத்திக்குளம்,பாட்டாளிபுரம், வீரமாநகர் நல்லூர் கிராம மக்கள் நாளாந்தம் பயன்படுத்தும் பிரதான வீதியே இவ்வாறான அவல நிலையில்



காணப்படுவதாகவும் இவை தொடர்பாக பிரதேச அரசியல் வாதிகளிடம் கேட்டால் கல்லு இன்று வரும்,நாளை வேலைகள்ஆரம்பம் என்றெல்லாம் கூறுகின்றார்களே தவிர வேலைகள் எதுவும் நடைபெறுவதில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# எல்லை கடந்து சிந்திக்க மறுப்பதால்தான் இன்று அரசியல் பிரச்சினை நிலவுகின்றது



**கல்முனை நிருபர்**

எல்லை கடந்து சிந்திக்க மறுப்பதால்தான் இன்று அரசியல் பிரச்சினை நிலவுகின்றது என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தவிசாளரும், உற்பத்தித்திறன்கள் ஊக்குவிப்பு முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகு தாவூத் தெரிவித்தார்.

கவிஞர் மு. சப்ராஸ் பஷீர் எழுதிய 'என் பேனாவின் முனை வழியே' கவிதை நூல் வெளியீட்டு விழா ஏறாவூர் வாசிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் ஏறாவூர் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோதே பஷீர் சேகு தாவூத் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் இங்கு மேலும் உரையாற்றும் போது,

தமிழ்,முஸ்லிம் மக்களுக்கு இடையிலான உறவு இறுகி போயுள்ள காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஏறாவூர் மண்ணுக்கு என்று ஒரு தனித்துவமான பெருமை இருக்கின்றது. உற்பத்தி பொருளாதாரத்தில் மிக பெரிய ஆட்களாக இருந்து, எல்லோரையும் சமத்துவமாக மதித்து, வேலையாட்களையும் சரிசமமாக நடத்திய பெருமை குறித்துத்தான் நாம் உண்மையில் பெருமிதம் அடைய வேண்டியவர்களாக இருக்கின்றோம். மனிதர்களை மனிதர்களாக மதித்து, சமத்துவமாக நடத்தி, இன வேறுபாடுகள் அற்ற, எந்த சாதி வேறுபாடுகளுக்கும் உட்படாத சமூக அமைப்பு முறையை ஏறாவூர் மக்கள் கொண்டவர்கள் என்கிற பெருமையை தவிர வேறு ஒரு பெருமிதமும் எமக்கு தேவை இல்லை.

சிந்திப்பது என்பது ஒரு முக்கியமான விடயம் ஆகும். அதிலும் பிறர் நலனுக்காக சிந்திப்பது என்பது விசேடமான சிந்திப்பு ஆகும். கவிஞன் பேராசைப்பட வேண்டும். கவிஞன் எல்லை கடந்து சிந்திக்க வேண்டும். எதற்கும் எல்லை வைக்கப்படவே இல்லை. எல்லை கடந்து சிந்திக்க மறுப்பதால்தான், குறுகிய எல்லைக்குள் நிற்பதால்தான் இன்று அரசியல் பிரச்சினை நிலவுகின்றது.

எல்லை பிரச்சினை என்பது தமிழ் அரசியல்வாதிகளும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் அடிக்கடி பேசுவதை செவிமடுக்க முடிகின்றது. அதுதான் அவர்களுக்கு தெரிந்த எல்லையாக உள்ளது. தமிழர்களின் எல்லை என்று சொன்னால் முஸ்லிம்கள் வாழ்கின்ற இடம் என்றும் முஸ்லிம்களின் எல்லை என்று சொன்னால் தமிழர்கள் வாழ்கின்ற இடம் என்றும் அர்த்தம் பிடித்து வைத்திருக்கின்றார்கள். அவ்வளவு தூரத்துக்கு தமிழ் - முஸ்லிம் உறவு குறுகியும், இறுகியும் போய் உள்ளது.

கல்வி விற்கப்பட கூடாது. கல்வியை விற்பதை ஹராம் என்று கொண்டு வர வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். எது இன்று அதிகமாக இலவசமாக மக்களை சென்றடைய வேண்டுமோ அதை மக்கள் பெற கூடுதல் காசை செலவழிக்க வேண்டி உள்ளது. அதுதான் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றது. கல்வியும், சுகாதாரமும் காசுக்கு விற்கப்பட கூடாது.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை விடயத்தில் பெற்றோருக்கு ஒரு விதமான வெறி உள்ளது. அது குடும்பத்தின் கௌரவமாக மாற்றப்படுகின்றது. இதை போல கேடு கெட்ட மடத்தனம் ஒன்று இருக்க முடியாது. இது மிகவும் துரதிஷ்டமான ஒரு நிலை ஆகும். இந்நிலையில் பணம் காய்த்து கொடுக்கின்ற வியாபாரமாக கல்வி மாறிம் பெறுகின்றது. பரீட்சை முடிவடைகின்ற வரை 365 நாட்களும் படிப்பிப்பார்கள். கல்வி அறிவு, ஞானம் ஆகியவை விற்பனைச் சரக்குகள் அல்ல.

# தடுப்பு ஊசி பெற்றுக்கொடுக்க வேண்டுகோள்

**ஆலையடிவேம்பு நிருபர்**

கிழக்குமாகாண கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்களத்தின் விசரநாய்க்கடி நோயினை ஒழிப்போம் செயற்திட்டம் இடம்பெறுவதனை முன்னிட்டு ஆலையடிவேம்பு பிரதேச கால்நடை வைத்திய சுகாதார காரியாலய பகுதியின் கீழ்வரும் கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய உயிர்கொல்லி நோயான விசர்நாய்க்கடி நோய்க்கான தடுப்பு மருந்தினை பெற்று வளங்குமாறு மிருக வைத்திய அதிகாரி எம்.ஐ.நிப்ஹறான் தெரிவித்துள்ளார்.

இவ் விசர் நாய் கடி நோயிலிருந்து மக்களையும் விலங்குகளையும் , பாதுகாக்கும் நோக்கில் இத் தடுப்புமருந்துகள் தமது வைத்தியசாலைகளில் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது என ஆலையடிவேம்பு பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.நிஸ்கான் தலைமையில் பிரதேசங்களில் நடமாடும் சேவை தற்போது இடம் பெற்று வருகின்றது

இதனை விலங்கு வளர்ப்போர் முதலாவது தடுப்பூசியினை 01 1/2 மாதத்திலும் ,இரண்டாவது தடுப்பூசியினை முதல் தடுப்பூசியி வழங்கியதில் இருந்து 02 மாதத்திலும் மற்றய தடுப்பூசியினை ஒவ்



வொரு வருடத்திற்கு ஒரு தடவை கள் பெற்றுக்கொடுக்க வேண்டும் இதன் மூலம் அவற்றின் உயிர்களையும் வளர்ப்போரின் உயிர்களையும் பாதுகாக்க முடியும் என தெரிவித்தார்

மேலும் இவற்றினை பன்னையாளர்கள் பெற்றுக்கொடுக்க தவறின் அவற்றின் உயிரிழப்பிற்கு ஏதுவாக அமைந்து விடுவதுடன் இவற்றினை பரவுவதில் இருந்து தவிர்க்க தயவு செய்து இவ் தடுப்பு மருந்தினை ஏற்றப்படுவதுடன் அவர்களுக்கான பெற்றுக்கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். மருந்துவகைகள் இலவசமாக ஆலோசனைகளும் வழங்கிவைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## கூத்தரங்கைக் கற்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஓரம்சமாக இவ்வருடம் நொண்டி நாடகம்



மட்டு துஷாரா

கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறையில் வருடாந்தம் நடைபெறும் செயன்முறையில் கூத்தரங்கைக் கற்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஓரம்சமாக இவ்வருடம் நொண்டி நாடகம் தென் மோடிக் கூத்திற்கான சட்டங் கொடுக்கும் நிகழ்ச்சி வந்தாறுமூலையிலுள்ள பல்கலைக்கழக மூதவைக் கட்டிடத்தின் முன்றலில் நடைபெற்றது.



நுண்கலைத்துறைத் தலைவர் சு.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலை பண்பாட்டுப் பீடாதிபதி மு.ரவி கௌரவ அதிதியாக கலை பண்பாட்டுப் பீட அவை உறுப்பினர் அ.சுகுமாரன் மற்றும் பல்கலைக்கழக

விரிவுரையாளர்களும், கல்வி சாரா அணியினரும், மாணவர்களும் பங்குபற்றினார்கள்.

## கல்முனையில் இலத்திரனியல் நூலக வசதிகளை ஏற்படுத்த உதவுமாறு ஆசியா பவுண்டேஷனிடம் முதல்வர் வேண்டுகோள்

அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பொது நூலகங்களில் இலத்திரனியல் நூலக வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஆசியா பவுண்டேஷன் உதவ முன்வர வேண்டும் என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் கல்முனை மாநகர சபையினால் பெரிய நீலாவணையில் அமைக்கப்படவுள்ள பொது நூலகத்திற்கு ஆசியா பவுண்டேஷன் பங்களிப்பு செய்ய முன்வர வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆசியா பவுண்டேஷன் நிறுவனத்தின் புத்தகங்கள் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் அன்டனி டி.நல்லதம்பியுடனான சந்திப்பின்போதே முதல்வர் இக்கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

இச்சந்திப்பு கல்முனை மாநகர முதல்வர் செயலகத்தில் இடம்பெற்றது. இதில் ஆசியா பவுண்டேஷன் நிபுணத்துவ ஆலோசகர் எம்.ஐ.எம். வலீதும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது ஆசியா பவுண்டேஷன் நிறுவனமானது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் நூலகங்களின் விருத்திக்கும் ஆற்றி வருகின்ற பங்களிப்புகள் குறித்து பணிப்பாளரினால் விபரிக்கப்பட்டதுடன் கல்முனையிலுள்ள பொது நூலகங்களின் நிலைவரங்கள் குறித்தும் முதல்வரிடம் கேட்டறிந்து கொண்டார்.



கல்முனை மாநகர சபையின் கீழ் நான்கு பொது நூலகங்களும் சில வாசிகசாலைகளும் சிறப்பாக இயங்கி வருவதாக தெரிவித்த முதல்வர், இப்பொது நூலகங்களுக்கு ஆசியா பவுண்டேஷன், புதிய நூல்களை பெற்றுத்தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றாக வாழ்கின்ற பெரிய நீலாவணை கிராமத்தில் புதிய பொது நூலகம் ஒன்றை அமைப்பதற்கு தம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த முதல்வர், இந்நூலகத்திற்கு தேவையான பெரும்பகுதி நூல்களை கொள்வனவு செய்வதற்கு இந்நிறுவனம் உதவ முன்வர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் தற்போதைய நவீன உலக சவால்களுக்கு எமது பகுதி இளைஞர், யுவதிகளும் மாணவர்களும், கல்விமான்களும் முகம்கொடுக்கும் வகையில், எமது பொது நூலகங்களில் இலத்திரனியல் நூலக வசதிகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாக தெரிவித்த முதல்வர் றகீப், அது குறித்தும் ஆசியா பவுண்டேஷனின் புத்தகங்கள் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் அண்டனியிடம் வலியுறுத்தி கலந்துரையாடினார்.

இக்கோரிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதாக தெரிவித்த பணிப்பாளர் அன்டனி, ஜீ.சி.ஈ.சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களின் நலன்கருதி கடந்த கால பரீட்சை வினாத்தாள் தொகுதிகள் அடங்கிய நூல்களை இப்பொது நூலகங்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் சிறுவர்களுக்கான நூல்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

## கல்முனையில் கணித பாட செயலமர்வு





எம்.ஐ.எம்.அஸ்ஹர்

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பான ஸஹிரியன் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியம் (செஸ்டோ) ஒழுங்கு செய்திருந்த கல்விப் பொதுத் தராதர சாதாரணதர மாணவர்களுக்கான இலவச கணித பாட செயலமர்வு கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரி இராசவாசல் முதலியார் எம்.எஸ். காரியப்பர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இச் செயலமர்வில் கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரி, சாய்ந்தமருது மழ் ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயம், சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலயம், கல்முனை அல் மிஸ்பா மகா வித்தியாலயம் , கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் பங்குபற்றினர்.

## உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு விசேட இலவச வைத்திய முகாம்



பைஷல் இஸ்மாயில்

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு 2018.11.14 ஆம் திகதி அட்டாளைச்சேனை தள ஆயர்வேத வைத்தியசாலையில் ஆரோக்கிய வாழ்வு எனும் தொனிப்பொருளில் நடைபவனியும், மாபெரும் இலவச மருத்துவ முகாமும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வைத்திய அத்தியட்சகர் கே.எம். அஸ்லம் தெரிவித்தார்.

சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்படும் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு அன்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நடைபவனி காலை 7 மணிக்கு குறித்த வைத்தியசாலை முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு சின்னப் பாலமுனை வரை சென்றடையவுள்ளதாகவும், இந்த நடைபவனியில்

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள சகல பள்ளிவாசல் தலைவர்கள், செயலாளர்கள், நிருவாக சபை உறுப்பினர்கள், உலமாக்கள், ஊர் பெரியோர்கள், வைத்தியர்கள் போன்றோர் இதில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் கூறினார்.

மேலும் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரை வறக்கா ஆயுர்வேத மருத்துவ நிருவனத்தின் அனுசரணையுடன் மாபெரும் இலவச வைத்திய முகாமும் இடம்பெறவுள்ளதாகவும், அதில் சீனிப் பரிசோதனை, உயர் குருதி அழுத்தம், உயர் குருதி அமுக்கம் போன்ற பரிசோதனைகளுடன் விஷேடமாக பாரிச வாதம், தலைவலி, மூட்டுவாதம் உள்ளிட்ட மருத்துவப் பரிசோதனைகளுடன் தெற்றா நோய்களுக்கான சிகிச்சைப் பரிசோதனைகளும் இந்த இலவச வைத்திய முகாமில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதில் ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொண்டு தங்களின் நோய் தொடர்பான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதுடன், இலவச மருத்து சிகிச்சை மற்றும் மருந்து வகைகளையும் பெற்றுச் சென்று பயனடையுமாறும் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.





கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தி/பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கந்தளாய் வலய கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.தாரீக் நளிமி) பரிசில்கள் வழங்குவதை படங்களில் காணலாம். படங்கள்: கந்தளாய் நிருபர்



நற்பிட்டிமுனை அனைத்து பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவர் அல்-ஹாஜ் ஜே.எம்.ரிசான்(ஹாமி) மற்றும் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை பொருளார் எம்.ஐ. நிரோஸ் ஆகியோர் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீனிடம் இருந்து உபகரணங்களை பெற்றுக்கொள்வதை காணலாம்.
படம்: கல்முனை நிருபர்

## கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் புதிய அதிபராகஎம்.ஐ. ஜாபீர் பதவியேற்பு

கல்முனை நிருபர்



கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் புதிய அதிபராக இலங்கை கல்வி நிர்வாக சேவையிலுள்ள எம்.ஐ. ஜாபீர் பாடசாலையில் பதவியேற்றார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், முன்னாள் அதிபர் எம்.எஸ். முஹம்மட் , ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களான எஸ்.அஷ்ரப்கான், றியாத் ஏ. மஜீட் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய எம்.எஸ். முஹம்மட் ஓய்வு பெற்றுச் செல்வதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பொருத்தமான அதிபரை விரைவாக நியமனம் செய்யும் வகையில் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் கல்வி அமைச்சின் உதவியுடன் முன்னாள் பிரதி அமைச்சர் எச்.எம். எம். ஹரீஸ் எடுத்த தீவிர நடவடிக்கையினால் அக்கல்லூரியின் அதிபராக எம்.ஐ. ஜாபீர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சாய்ந்தமருது பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை ஒன்றுக்கு அதிபராக கடமையேற்றமையின் மூலம் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக இருக்கும் என முன்னாள் பிரதி அமைச்சர் எச்.எம். எம்.ஹரீஸ் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

## சிரேஷ்ட பிரஜைகள் நலன்புரிச்சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு

கந்தளாய் நிருபர்

சிரேஷ்ட பிரஜைகள் நலன்புரிச்சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு தி/பெரிய கிண்ணியா ஆண்கள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதியாக கலந்து கொண்ட கிண்ணியா நகர சபை தவிசாளர் , எஸ்.எச்.எம். நளீம் அவர்கள் முதலாவது அங்கத்துவத்தைப் பெற்றார். அத்துடன் இச்சங்கத்தின் தலைவராக ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் எம்.எம். சரிபு அவர்களும், செயலாளராக ஓய்வு பெற்ற நூலகர் எம்.ரீ. சபறுள்ளாகான் அவர்களும், பொருளாலராக ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் எஸ்.எச்.எம். மகரூப் அவர்களும் ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டனர்.

## கிழக்கு மாகாண தேர்தல்கள் பிரதி ஆணையாளர் நியமனம்



கிழக்கு மாகாண பிரதி தேர்தல்கள் ஆணையாளராக இலங்கை நிருவாக சேவையின் முதலாம் தர அதிகாரியான சங்கரப்பிள்ளை சுதாகரன் தேர்தல்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவிக்கு நியமிக்கப்பட முன்னர் இவர் திருகோணமலை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடமையாற்றியிருந்ததுடன் அதற்கு முன்னர் வன்னி, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் உதவி ஆணையாளராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவர் தமது கடமைகளை எதிர்வரும் 15ம் திகதி உத்தியோகபூர்வமாக திருகோணமலை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் பொறுப்பேற்கவுள்ளார்.









அக்கரைப்பற்று ஹிஜ்ரா வித்தியாலயத்திலிருந்து 2017, 2018 ஆம் ஆண்டுகளில் நடை பெற்ற தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களை விருது வழங்கி பாராட்டும் புலமைத் தாரகை விருது விழாஅதிபர் எம்.எச்.தாஸீம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது . பாடசாலை அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட நிகழ்விற்கு வருகை தந்த அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்-ஷேய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லா, பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.ஜி.பஸ்மில், ஏ.எச்.பௌஸ் உள்ளிட்ட கல்வியியலாளர்கள் வரவேற்கப்படுவதையும், 2018 பரீட்சையில் 180 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த ஏ.கதீஜதுல் அம்னாவிற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்-ஷேய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லா விருது வழங்கி பாராட்டுவதையும், கற்பித்த ஆசிரியர் எம்.ஐ.அன்வர் இன் கல்விச்சேவையைப் பாராட்டி பிரதி அதிபர் எம்.அலாவுதீன் பொன்னாடை போர்த்த, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.பஸ்மில் நினைவுப் பரிசு வழங்குவதையும், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எச்.பௌஸ், எம்.சித்தி பாதிமா, அதிபர் எம்.எச்.தாஸீம் ஆகியோர் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

படம்: ஏ.ஜி.ஏ.கபூர்

# மடு பிரதேச செயலகத்தின் அரச உத்தியோகத்தர்களினால் அபகரிக்கப்பட்ட காணி உரிமையாளரிடம் ஒப்படைப்பு

மன்னார் மடு பிரதேச செலயகப் பிரிவிலுள்ள கட்டை அடம்பன் பகுதியிலுள்ள இரண்டு ஏக்கர் மேட்டுக்காணியை அரச ஊழியர்களிடமிருந்து வவுனியா இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரின் தலையீட்டில் திரும்ப மீட்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மன்னார் மடு பிரதேச செலயகப்பிரிவிலுள்ள கட்டை அடம்பன் பகுதியிலிருந்து மேட்டுக்காணி இரண்டு ஏக்கர் தந்தையின் பெயரிலிருந்து வந்துள்ளது. இதையடுத்து குறித்த காணியின் ஆவணங்களை அவரது இறப்பின் பின்னர் அவரது மகன் தனது பிள்ளைகளுக்கு பங்கிட்டு வழங்கும் நோக்கில் மடு பிரதேச செயலகப்பிரிவிற்கு எடுத்துச் சென்று காணியை ஆராய்ந்தபோது குறித்த இரண்டு ஏக்கர் காணியினை மடு பிரதேச செலயகப்பிரிவில் பணியாற்றும் கிராம அலுவலகர் உட்பட 4 அரச ஊழியர்கள் அரை ஏக்கராக பிரித்து தமது பெயர்களின் காணி அனுமதிப்பத்திரம் கடந்த 2012ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டுள்ள சம்பவம் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த வருடம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டு அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிலையில் மடு பிரதேச செயலகப்பிரிவில் கடமையாற்றிய பிரதேச செயலாளருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து புதிய பிரதேச செயலாளரின் முயற்சியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரியின் வழிநடத்தலில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரியும் சட்டத்தரணியுமான ஆர்.எல்.வசந்தராசா சம்பவ இடத்திற்குச் சென்று கள விசாரணைகளை ஆரம்பித்து குறித்த பிரதேச செலயகத்தில் பணியாற்றிய கிராம அலுவலகர் உட்பட 4 பேரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் ஒரு வருட காலத்திற்குள் காணியை மீளப்பெற்று உரிமையாளருக்கு குறித்த இரண்டு ஏக்கர் காணியையும் மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தின் பெறுமதியில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

அரை ஏக்கர் காணியின் பெறுமதி ஐம்பதினாயிரம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டு காணி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு நான்கு பேருக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட பணத்திதைச் செலுத்தி இரண்டு ஏக்கர் காணியையும் மீள உரிமையாளருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தினை பொலிஸ் நிலையத்தினூடாக நீதிமன்றத்தின் கவனத்திற்குக்கொண்டு சென்றிருந்தால் பல்வேறு பிரச்சினைகளை அரச உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுவதுடன் வேலையும் பறிபோகும் நிலை ஏற்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு தந்தி

## வவுனியாவில் வீதிக்கு வந்த முதலையால் பதற்றம்

**வவுனியா நிருபர்**

வவுனியா, நாகர்இலுப்பைக்குளம் பகுதியில் வீதிக்கு வந்த 12 அடி நீளமான முதலையால் இன்று காலை பதற்ற நிலை ஏற்பட்டது.

வவுனியா, நாகர் இலுப்பைக்குளம் பகுதியில் வசிக்கும் மக்கள் காலை வீதியில் பயணித்த போது 12 அடி நீளமான முதலை ஒன்றை அவதானித்துள்ளனர். இதனையடுத்து பதற்றமடைந்த மக்கள் முதலையை விரட்ட அவ்விடத்தில் கூடிய போது முதலை வீதியோரத்தில் இருந்த சிறிய பற்றைக்குள் புகுந்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டது.

இதனையடுத்து ஊர்மக்கள் பொலிசாருக்கு கொடுத்த தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை வந்த வவுனியா



பொலிசார், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளை வரவழைத்தனர். அவர்கள் முதலையை மீட்டு பாதுகாப்பான இடத்தில் விடுவதற்காக எடுத்துச் சென்றனர்.

## போதிய போக்குவரத்து வசதிகளின்றி முட்கொம்பன் கிராம மக்கள் சிரமம்



கிளிநொச்சி பூநகரி முட்கொம்பன் கிராமத்திற்கான போதிய போக்குவரத்து வசதிகள் இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி முட்கொம்பன் கிராமத்திற்கான போதிய போக்குவரத்து வசதிகள் இன்மையால் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

அதாவது முட்கொம்பன் கிராமத்தில் உள்ள தாங்கள் வைத்தியசாலை உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கும் பூநகரிஅல்லது தேவைகளுக்கும் பூநகரி அல்லது கிளிநொச்சி ஆகிய இடங்களிற்;கே செல்லவேண்டிய நிலை காணப்படுகின்ற நிலையில் தமது கிராமத்திலிருந்து செல்வதற்கான உரிய போக்குவரத்து வசதிகள் இன்றிக்காணப்படுவதாகவும் இதனால் தாங்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதில்ஐ பெரும் கஸ்ரங்களை எதிர்கொள்வதாவும் இவ்வாறு போக்குவரத்;து வசதிகள் இன்மையால் பயணத்தேவைகளுக்கு நான் ஒன்றை செலவிட வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## மழை நேரத்தில் வீதிகளில் தூங்கும் கட்டக்காலி மாடுகளால் பயணிகள் அசௌகரியம்: வவு.தெற்கு பிரதேசபை அசமந்தம்





**வவுனியா நிருபர்**

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகளில் தூங்கும் கட்டாக்காலி மாடுகளால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையிடம் சுட்டி காட்டிய போதும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மழை தொடங்கியுள்ள நிலையில் நெளுக்குளம், இராசேந்திரங்குளம், பாரதிபுரம், குளுமாட்டுச்சந்தி, உக்கிளாங்குளம், கூமாங்குளம் போன்ற வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இரவு மற்றும் காலை வேளைகளில் கட்டாகாலி மாடுகள் வீதிகளில் நிற்பதால் போக்குவரத்து செய்வோர் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதுடன் விபத்துக்களும் ஏற்பட்டு வருகிறது.

இது தொடர்பில் பிரதேசபை ஒலிபெருக்கியில் அறிவித்த போதும் எந்த பயனும் ஏற்படவில்லை. எனவே, பிரதேச சபை ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

## இரணைமடு குளத்தின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 19.8 அடியாக உயர்வடைந்துள்ளது. அண்மை நாட்களாக நாட்டில் நிலவும் பருவபெயற்சி மழை காரணமாக குளங்களின் நீர்மட்டம் அதிகரித்த வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் மிக பெரும் நீர்பாசண குளமான இரணைமடு குளத்தின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்த வருகின்றது. குளத்திற்கு அதிக நீர் தற்போதும் வருகை தருவதாக அறிய கிடைத்துள்ளதாகவும், குளம் அபிவிருத்தியின் ஊடாக அதிக நீர் தேக்கும் வகையில் தற்போது தயாராக உள்ள நிலையில், 22 அடிவரை நீர் உயர்ந்தால் இவ்வருட காலபோகத்தினை 22 ஆயிரம் ஏக்கர்களை வெற்றிகரமாக செய்து முடிக்க முடியும் எனவும் விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். தொடர்ந்தும் நீர் வருகை தருவதாலும், மேலும் மழைவீழ்ச்சி கிடைக்கும் என்பதாலும் குளத்தின் வான் கதவுகள் திறக்கலாம் எனவும் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் விவசாயிகள் சார்பில் இரணைமடு விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



## கம்போடியா நாட்டின் விசேட குழு முகமாலைக்கு விஜயம்





கம்போடியா நாட்டின் விசேட குழு ஒன்று முகமாலை பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர். முகமாலை பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் தொடர்பில் நேரடியாக பார்வையிட்டனர். யுத்த காலத்தில் குறித்த பகுதியில் புதைக்கப்பட்டிருந்த அதிகளவான கண்ணிவெடிகள் அகற்றும் செயற்பாடுகள் தொடர்ந்தும் பல்வேறு நாடுகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இன்று குறித்த குழுவினர் முகமாலை பகுதியில் இவ்வாறான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடதக்கதாகும்.

## மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு தண்டனை

**வவுனியா நிருபர்**

மது போதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டர் சைக்கிள் செலுத்தியவருக்கு 25 ஆயிரம் தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன், சாரதி அனுமதிப் பத்திரமும் 9 மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டது.

வவுனியா நீதிவான் நீதிமன்றில் குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரியவருவமாவது, வவுனியாவில் இளைஞர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிலில் சென்ற போது போக்குவரத்துப் பொலிசார் வழிமறித்துள்ள போதும் நிறுத்தாமல் சென்றுள்ளார். இதையடுத்து பொலிசார் குறித்த இளைஞனை துரத்திச் சென்று குறித்த இளைஞரை மறித்த போது மதுபோதையில் மோட்டார் சைக்கில் செலுத்தியதுடன், சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை தெரிய வந்துள்ளது. இதையடுத்து அவரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது 25000 ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளதுடன், 9 மாதம் சாரதி அனுமதிப்பத்திரம் ரத்து செய்யப்பட்டது.

## நல்லாட்சியில் தமிழருக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை: சிவசக்தி ஆனந்தன் எம்.பி

**வவுனியா நிருபர்**

நல்லாட்சி அரசு என்ற பெயரில் கடந்த மூன்றரை ஆண்டுகள் ஆட்சியில் இருந்த அரசு தமிழருக்கோ, அல்லது தமிழர் நலனுக்கோ எதுவும் செய்யவில்லை. மாறாக தமிழ் இனத்தை ஏமாற்றும் செயலிலேயே கடந்த அரசு செயற்பட்டது என வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரும், ஈபிஆர்எல்எப் கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்றரை வருடமாக தாங்கள் ஆதரவு தெரிவித்த நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்கள் பிரச்சனைகளை எவ்வாறு கையாண்டுள்ளது? என வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசு என்ற பெயரில் கடந்த மூன்றரை ஆண்டுகள் ஆட்சியில் இருந்த அரசு தமிழருக்கோ, அல்லது தமிழர் நலனுக்கோ எதுவும் செய்யவில்லை. மாறாக தமிழ் இனத்தை ஏமாற்றும் செயலிலேயே கடந்த அரசு செயற்பட்டது.

அதேநேரம் அந்த அரசோடு இணைந்து செயற்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இந்த வருடத்திற்குள் தீர்வு கிடைக்கும் என தொடர்ச்சியாக கூறி வந்தது. ஆனாலும் தமிழருக்கு எதுவும் கிடைக்கவில்லை. நிபந்தனையுடன் அரசுக்கு அழுத்தம் கொடுங்கள் என்று ஈபிஆர்எல்எப் ஆகிய நாங்கள் தொடர்ச்சியாக கோரி வந்தோம். அவர்கள் எதனையும் கேட்டதாக இல்லை. மாறாக அவர்கள் முழுமையாக என்னை ஒதுக்கினர்.

2015ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றமானது நாட்டின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த நாட்டின் வரலாற்றில் என்றுமில்லாத வகையில், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை மட்டுமே மூலதனமாக வைத்து இலங்கையை ஆட்சி செய்யும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் வேறுவழியின்றி கைகோர்த்து ஆட்சிப்பீடம் ஏற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

இதுவரை காலமும் ஒரு கட்சி தமிழ் மக்களுக்கு வழங்கிய உத்தரவாதங்களை மற்றொரு கட்சி எதிர்த்து வந்தது. சர்வதேச தலையீட்டின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. இந்நிலையில் இலங்கையுடனான சர்வதேச சமூகத்தின் இராஜதந்திர உறவுகள் சுமூகமாக்கப்பட்டதுடன் எமது பிரச்சினைகளை அனைவரும் மெல்ல மெல்ல கைவிடத் தொடங்கி விட்டனர்.

புதிய அரசாங்கம் உருவானதன் பின்னர் யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து பொறுப்புக்கூறலுக்கு கலப்பு பொறிமுறை ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இரண்டு வருட காலஅவகாசத்தை இந்த அரசாங்கம் பெற்றுக்கொண்டது. இந்த விடயத்தில் முன்னேற்றங்கள் ஏற்படாத நிலையில் மேலும் இரண்டாண்டு கால நீடிப்பையும் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் பெற்றுக் கொண்டது.

யுத்தம் முடிவுற்றவுடன் இயல்பாகவே மக்களின் காணிகளை மக்களிடம் கையளிப்பதையே ஏதோ காணி இல்லாத மக்களுக்கு புதிதாக காணிகளை வழங்குவதைப்போல விளம்பரம் செய்தது.

பெயருக்கு சில அரசியல் கைதிகளை பிணையில் விடுவித்துவிட்டு கைதிகளின் விடயத்தில் அக்கறை செலுத்துவதுபோல் நடித்தது. அடுத்துவரும் மார்ச் மாதத்துடன் காலநீடிப்பு வழங்கிய இரண்டு ஆண்டுகாலமும் முடிவடையும் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் செயற்பட ஆரம்பித்ததுபோல் நாடகமாடுகிறது.

யுத்தத்தின்போது எமது மக்களின் வீடுகளை இடித்து அழித்துவிட்டு அதனைக் கட்டிக்கொடுப்பதாக நாடகமாடுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது எமது ஆதரவினை சில நிபந்தனைகளுடன் வழங்கவேண்டும் என்று நாம் விடுத்த கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் உதாசீனம் செய்தார். அதன் விளைவை இன்று தமிழ்த் தேசிய இனம் அனுபவிக்கின்றது.

அத்துடன், புதிய அரசியல் யாப்பினூடாக தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வு வரப்போகிறது. நாம் முன்வைத்த இணைந்த வடக்கு கிழக்கில் சுயாட்சி கிடைக்கப்போகிறது. அதனை எதிர்காலத்தில் அமையக்கூடிய எந்த அரசாங்த்தினாலும் மாற்ற முடியாத நிலை உருவாகும் என்று சொல்லியே ஏனைய விடயங்களைப் பிற்போட்டு மைத்திரி-ரணில் அரசாங்கத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியது.

இதேபோல், புதிய அரசியல் யாப்பினூடாக தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலை உருவாகும் என்ற உத்தரவாதம் எம்மால் குழம்பிவிடக்கூடாது என்ற அடிப்படையிலேயே நாம் கூட்டமைப்பிற்குள் விமர்சனங்களை முன்வைத்து ஒற்றுமையுடன் செயற்பட்டோம்.

இருப்பினும் கடந்த மூன்றாண்டுகளாகவே பாதுகாப்புத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதையும் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு குறைந்த அளவிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை கண்டித்து நாம் வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராகவே வாக்களித்து வந்துள்ளோம்.

2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மேலும் இரண்டாண்டு காலம் நீடிப்பை வழங்க வேண்டாம் என்று நாம் விடுத்த கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை ஏற்காததால் எமது கட்சியின் மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட நானும் ஆதரவு வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

கடந்த 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளிவந்த அரசியல் யாப்பின் இடைக்கால அறிக்கையில் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கும் எத்தகைய விடயங்களும் உள்ளடக்கப்படவில்லை என்பதை எமது கட்சியின் சார்பில் அறிக்கையாக வெளியிட்டிருந்தோம்.

அதன் காரணமாகவே இன்றுவரை எனக்கு பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கான வாய்ப்பு எதிர்க்கட்சித் தலைவரினால் மறுக்கப்பட்டு வருவதை நாடே அறியும்.

ஒட்டுமொத்தத்தில் எமது கொள்கை நிலைப்பாடு சரியானதே என்பது நிரூபிக்கப்பட்டு வருகின்றது. ஜனநாயகத்தில் எண்ணிக்கை பெரும்பான்மையின் முடிவுகள் எப்போதும் சரியானதாக இருக்காது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.




## வவுனியாவில் தொடர் மழை காரணமாக 05 வீடுகள் சேதம்: 21 பேர் பாதிப்பு

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர்மழை காரணமாக 5 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், 21 பேர் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட தேசிய அனர்த்த சேவைகள் நிலைய இணைப்பாளர் பி.தனராஜ் தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதுடன், சீரற்ற கால நிலை தொடர்கிறது. இதன் காரணமாக வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட மாறாஇலுப்பைக் குளம் பகுதியில் 04 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ள துடன், 18 பேர் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் வவுனியா பிரதேச செயலக பிரிவிற் குட்பட்ட நந்திமித்திர கிராமத்தில் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், 3 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

இதனடிப்படையில் இதுவரை 05 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் 21 பேர் பாதிப்படைந்துள்ளனர். மழை தொடர்ந்து பெய்து வருவதால் எதிர்வரும் நாட்களில் பாதிப்புக்கள் அதிகரிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வவுனியா கல்லுமலை விநாயகர் ஆலயத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாட்டால் பதற்றம்

**வவுனியா நிருபர்**

வவுனியா- சமனங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாட்டால் மக்கள் பதற்றமடைந்துள்ளனர்.

சமனங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயம் கடந்த 1952ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைக்கப்பட்டு மக்களால் பூஜை வழிபாடுகள் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் இவ்வாலயம் அமைந்துள்ள மலையில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற் தூண்கள், பாழடைந்த செங்கல் படிவங்கள், கட்டடங்கள் என பல காணப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் தொல்பொருள் திணைக்களத்தினால் கல், மணல் மற்றும் பல கட்டட பொருட்கள்





இவ்வளாகத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த நிலையில், விகாரையொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தமையால் பிரதேச மக்கள் அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக பிரதேசவாசி ஒருவர் கூறுகையில், இவ்வாலயத்தை பரம்பரை பரம்பரையாக நாம் வழிபட்டு வருகின்றோம். ஆனால் தற்போது இவ்வாலயம் தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமென கூறி புத்தர் சிலையினை ஸ்தாபிக்க முயல்கின்றனர் என குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம், முன்னாள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று இவ்விடயம் தொடர்பாக அப்பிரதேச மக்களுடன் கலந்துரையாடியதுடன் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் தொலைபேசியில் கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு இவ்விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டதையடுத்து, அவ்விடத்திற்கு வருகை தந்த பொலிஸார், ஆலய பரிபாலன சபையினர் மற்றும் தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோரிடம் விசாரணைகளையும் முன்னெடுத்திருந்ததன் அடிப்படையில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை தொல்பொருள் திணைக்கள பிராந்திய முகாமையாளர் இவ்விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளதாவது, குறித்த இடத்தில் அனுராதபுரக் காலத்தின் புராதன சின்னங்கள் உள்ளன. அவைகளை அழியாமல் தடுப்பதற்கு இச்சின்னங்களை புனரமைக்கும் செயற்பாட்டினை செய்வதாக கூறியிருந்தார்.

## கிளிநொச்சியில் பலத்த மழை காரணமாக மக்கள் குடியிருப்புக்களுக்குள் வெள்ளம்





கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்த பலத்த மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த 24 மணித்தியாளங்களில் பெய்த மழை காரணமாக கிளிநொச்சிக் குளங்களின் வாசிப்பு இரணைமடுக்குளம் 26 அடியாகவும், அக்கராயன் குளம் 19 அடி 4 அங்குலமாகவும் கல்மடுக் குளம் 23 அடி 4 அங்குலமாகவும் கரியாலை நாகபடுவான் குளம் 4 அடி 01 அங்குலமாகவும் முறிப்புக் குளம் 15அடி 5 அங்குலமாகவும் பிரமந்தனாறுக் குளம் 11 அடியாகவும் குடமுருட்டிக் குளம் 05அடி 01 அங்குலமாகவும் வன்னேரிக் குளம் 10 அடியாகவும் உயர்ந்துள்ளது.

இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 19.8 அங்குலமாக இருந்த நிலையில் வெகுவாக மட்டம் அதிகரித்துள்ளமை குறிப்பிடதக்கதாகும்

இந்நிலையில் கிளிநொச்சி கனகாம்பிகை குளம் வான்பாய்ந்து வருகின்றமையால் கிளிநாச்சி ஆனந்தபுரம் கிழக்கும் மற்றும் இரத்தினபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் குடியிருப்புகள் சிலவற்றினுள் வெள்ளம் உட்சென்றுள்ளது. அதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த பகுதியில் வாழும் வெள்ளத்தினால் முழுமையாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்பில் கிளிநாச்சியில் உள்ள 7வது காலாற்படையினரால் 11 குடும்பங்களை சேர்ந்த 57 பேருக்கான உடனடி உணவுகள் வழங்கப்பட்டுள்ளன. சிறுவர்கள், பெண்கள், வயது முதரிந்தவர்கள் தொடர்பில் அவர்களை மீட்பதற்காக விரைந்த படையினர், குறித்த குடும்பங்களிற்கான உடனடி உணவுகளை வழங்கினர்.

இதேவேளை குறித்த பிரதேசங்களில் உள்ள குடும்பங்களை சேர்ந்த சுமார் 200 பேருக்கான மதிய உணவு, குடிநீர், மற்றும் பிஸ்கட் வகைகளை கிளிநொச்சி நகரில் சுயேட்சை குழுவில் போட்டியிலட்டு கரைச்சி பிரதேச சபை உறுப்பினராக தெரிவான தாமோதரம்பிள்ளை ரஜனிகாந் அவர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக வெள்ளத்தால் தாம் பாதிக்கப்படுவதாகவும், முறையான வடிகாண் வசதி இன்மையால் இவ்வாறான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதற்கு முறையான திட்டமொன்றை வகுத்து தருமாறும் மக்கள் கோருகின்றனர்.

மக்கள் உணவு, குடிநீர் உள்ளிட்டவற்றை பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

## குடமுறிட்டிக்குளத்தின் அணைக்கட்டை புனரமைத்து பாதுகாக்குமாறு விவசாயிகள் கோரிக்கை



கிளிநொச்சி குடமுறிடிக்குளத்தின் நீர்க்கொள்ளவை அதிகரிக்கக்கூடிய வகையில் அதனை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமறு விவசாயிகள் கோரிகசை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள குடமுருட்டிக்குளத்தின் கீழ் உள்ள சுமார் ஆயிரத்து 100 ஏக்கர் நிலப்பரப்பில் 400 வரையான விவசாயிகள் தற்பாது விவசாய நடடிவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் குடமுருட்டிக்குளத்தில் போதிய நீரைத்தேக்க முடியாத நிலையில் குளத்தின் அணைக்கட்டு மற்றும் வான் பகுதி என்பன சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இதனால் குளத்தில் போதிய நீரைத்தேக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் குறித்த குளத்தின் அணைக்கட்டினை உயர்த்தி புனரமைப்பதுடன், சுமார் 400 அடி நீளமான வான் பகுதியையும் புனரமைக்குமாறும் அதன் மூலம் குறித்த வயல் நிலங்களில் காலபோகம் சிறுபோகம் ஆகிய இரண்டு போகங்களிலும் பயிர் செய்யமுடியும் என்றும விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பிரதான வீதி புனரமைக்கப்படாமையினால் மக்கள் பெரும் சிரமம்



கிளிநொச்சி பிரமந்தனாறு மயில்வாகனபுரம் ஆகிய பகுதிகளுக்கான பிரதான வீதி புனரமைக்கப்படாமையினால் இப்பகுதிகளில் வாழும் சுமார் இரண்டாயிரத்து 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவில் அதிகளவான சனத்தொகையைக் கொண்ட பகுதியாகக் காணப்படும் புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில் ஆயிரத்து 816 குடும்பங்களைச் சேர்ந்த 5613 பேரும் புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில் 712 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 183 பேரும் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த கிராமங்களுக்கான பிரதான வீதிகள் எவையும் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் இக்கிராமங்களில் வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த கிராமங்களில் போதிய அடிப்படை வசதிகள் பொதுச்சேவைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இங்குள்ள மக்கள் மீவுறு இடங்களிற்கே செல்ல வேண்டியுள்ளது.

ஆத்துடன் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே குறித்த கிராமங்களில் பிரதான வீதியாகக் காணப்படும் வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அடிப்படை வசதிகளின்றி அவதியுறும் கருநாட்டுக்கேணியில் மீளக்குடியேறிய மக்கள்

கருநாட்டுக்கேணியில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் 28 ஆண்டுகளுக்கு பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போதும், தமக்கான போதிய அடிப்படை வசதிகள்; ஏற்படுத்தித்தரவில்லை

முல்லைத்தீவு கருநாட்டுக்கேணியில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் 28 ஆண்டுகளுக்கு பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போதும், தமக்கான போதிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித்தரவில்லை என இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் போன்ற கிராமங்களில் வாழ்ந்த மக்கள் கடந்த 1983ம் ஆண்டு ஏற்பட்ட யுத்தம் காரணமாக அங்கிருந்து ஒரேநாளில் வெளியேற்றப்பட்டனர்.

இப்பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் முல்லைத்தீவு, முள்ளியவளை மற்றும் பிறமாவட்டங்களிலும் இடம்பெயர்ந்து வாழ்ந்தனர்.

இந்நிலையில் கடந்த 2009ம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்றதன்



பின்னர் 2011ம் ஆண்டு இப்பகுதியில் மக்கள் மீள்குடியேற்ற அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களில் ஒன்றான கருநாட்டுக்கேணி கிராமத்தில் மீள்குடியேறியுள்ள 25 வீதமான குடும்பங்களுக்கு இதுவரை நிரந்தரமான வீட்டுத்திட்டங்கள் கிடைக்கவில்லை அத்துடன், பத்து வீதமான மக்களுக்கு மின்இணைப்புக்களும் வழங்கப்படாதிருக்கின்றன.

இதனால் மேற்படி குடும்பங்கள் மீள்குடியேறி ஏழு வருடங்களாகியும் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள். இதனைவிட, சிறுகடல் வற்றுக்காலங்களில் மீன்பிடிப்படகுகளை கரைசேர்ப்பதில் பாரிய பிரச்சனைகள் ஆகவே இந்தப்பகுதிகளில் இறங்குதுறை ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளதுடன், கிராமிய வீதிகளையும் புனரமைத்துத் தருமாறும் இப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை அமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாண்டு பாரிய நெற்செய்கை



முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள குளங்களின் கீழ் இவ்வாண்டு ஒன்பதாயிரத்து 632 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக, வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.விகர்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் கேட்ட போது முல்லைத்தீவு மாவட்டத்தின் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள வவுனிக்குளத்தின் கீழ் ஐயாயிரத்து 500 ஏக்கர நிலப்பரப்பிலும் . அம்பலப்பெருமாள்குளத்தின் கீழ் 559 ஏக்கரிலும் கோட்டைகட்டியகுளத்தின் கீழ் 376 ஏக்கரிலும் தென்னியங்குளத்தின் கீழ் 647 ஏக்கரிலும் மருதங்குளத்தின் கீழ் 213 ஏக்கரிலும் ஐயன்கன்குளத்தின் கீழ் 891 ஏக்கரிலும் தேறாங்கண்டல்குளத்தின் கீழ் 292 ஏக்கரிலும் மல்லாவி குளத்தின் கீழ் 299 ஏக்கரிலும் கல்விளானகுளத்தின் கீழ் 496 ஏக்கரிலும் பழையமுறிகண்டிகுளத்தின் கீழ் 359 ஏக்கரிலுமாக மொத்தம் ஒன்பதாளிரத்து 632 ஏக்கரில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்

இதே வேளை ஏனைய சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழுள்ள பயிர்ச்செய்கை நிலங்கள் மானாவாரி நிலங்கள் ஆகிய வற்றிலும் விவசாயிகள் நெற் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

## புனரமைக்கப்பட்ட குளம் உடைப்பெடுப்பு

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப்பிரதேச செலயகப்பிரிவிலுள்ள குமுழமுனை கிழக்கில் அமைந்துள்ள நித்தகைக்குளமே உடைப்பெடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டின் மாகாண நீர்ப்பாசன அமைச்சின் நிதி உதவியில் கடந்த 35 வருடங்களுக்கு பின்னர் இந்த வருடம் புனரமைப்புச் செய்யப்பட்ட குளமே கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக உடைப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த குளத்தில் 13அடி தண்ணீர் கொள்ளளவு செய்யக்கூடியதாக இருந்துள்ளது.

இந்நிலையில் கடும்மழை காரணமாக இக்குளத்தில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அதனை அண்டிய விவசாய வயல்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் விவசாயிகளின் உடமைகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை என்றும் குளத்தை அண்டி அருகிலுள்ள கிராமங்களிலுள்ளவர்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமரவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாயாறு கடற்பரப்பின் நீர்மட்டம் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடும் மழைகாரணமாக அதிகரித்துள்ளது எனவே இப்பகுதியை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறும் எமது செய்தியாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தாய்ப்பாசம்

## சிறுகதை



அதிகாலை நாலு மணி இருக்கும் பரமேஸ்வரி நித்திரை விட்டெழுந்து கொள்கின்றாள் .

பாத்திரங்கள் அனைத்தையும் ஒன்றாக்கி எடுத்துக் கொண்டு ஒவ்வொன்றாய் சுத்தம் செய்து பின் அடுப்பை மூட்டித் தண்ணீரைக் கொதிக்க வைத்து ஒரு குவளையில் தேனீராக்கி எடுத்துக் கொண்டு மகன் கஜனை மெதுவாக தட்டி எழுப்புகின்றாள்...

தம்பி.. தம்பி..

எழும்புப்பா நல்லா விடிஞ்சுபோச்சு

இந்தத் தேத்தன்னியக் குடிச்சுப் போட்டுப்

போய் குளிச்சு வெளிக்கிடப்பா ..

ம்ம் ...

என்றவாறு கஜன் தேனீர் குவளையைத் தூக்கிக் கொண்டு கிணற்றடிப் பக்கமாக சென்றான்.

காலைக் கடன்களை முடித்து விட்டு பாடசாலை வெளிக்கிடத் தொடங்கினான்.

ஆம் கஜன் உயர்தர வகுப்பில் கணிதப் பிரிவில் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றான்.

கஜனது தந்தை சிறு வயதிலே இராணுவத்தின் கண் மூடித்தனமான குண்டுத் தாக்குதல் ஒன்றில் இறந்து விட்டார்.

தாயார் பரமேஸ்வரியின் அன்றாட கூலித் தொழில் மூலமே கஜனது படிப்பும் அவர்களது வீட்டுச் செலவும் போகின்றது.

பரமேஸ்வரி தன் மகன் கஜனை எப்படியாவது ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவந்துவிட வேண்டும் எனும் திடமான முடிவோடுதான் தினமும் தன்னை வருத்தி வேலை செய்கின்றாள்.

பரமேஸ்வரிக்கு உறவுகள் பல இருந்தாலும் அவர்கள் யாருமே அவளுடன் கதைப்பதில்லை காரணம் காதலித்து திருமணம் புரிந்தமையே ஆகையால் பரமேஸ்வரி ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தாள்..

இவ்வாறே பரமேஸ்வரியின் வாழ்வு வேலையும் வீடும் மகனைப் படிப்பிப்பதுமாக கழிந்து போனது

காலங்கள் கழிந்தோடின கஜனும் தனது படிப்பினை பல்கலையில் நிறைவேற்றி அரச தொழில் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்தான்

கஜன் பணிபுரியும் தொழில் நிறுவனம் தொலைதூரத்தில் இருப்பதனால் மாதமொருமுறையே வீட்டுக்கு வந்து போனான்.

அன்றும்

வழமை போலவே கஜன் வேலைக்குப் போவதற்ககாக வெளிக்கிட்டுக் கொண்டிருந்தான்

திடீரென அவனது தொலைபேசி அலறுகின்றது .

தொலைபேசியை எடுத்து

ஹலோ சொல்லுங்கோ.?

என்றான்.

தம்பி நீங்க கஜனா ?

ஓம் ஓம் நான் கஜன் தான்.

சொல்லுங்கோ ?

என்ன பிரச்சனை..?

ஒன்டுமில்ல தம்பி

நாங்க வைத்திய சாலையில் இருந்து பேசுறம்

உங்க அம்மா தரையில விழுந்து காலில சிறிய காயம் இப்ப இங்கதான் இருக்கிறாங்க உதவிக்கு யாருமே வரல அதுதான் சொல்லலாம் என எடுத்தோம் என்றவாறு அழைப்பைத் துன்டித்தனர்.

தன் தாய் வைத்தியசாலையில் என்றவுடன் பயந்தே போனான் கஜன்

சற்றும் தாமதமின்றி வைத்தியசாலையை நோக்கிப் பயணித்தான் .

வைத்தியசாலையைச் சென்றடைந்த கஜன் தன் தாய் இருக்கும் அறையை நோக்கிச் சென்றான்.

காலில் மருந்து கட்டப்பட்டு ஓர் கட்டிலில் ஆழ்ந்த தூக்கத்தில் அவள் இருந்தாள்.

தூக்கத்தைக் கலைத்திடாது அவன் மெதுவாக எழுந்து வெளியே வருகின்றான் .

அங்கே வைத்தியரும் வருகின்றார்.

தம்பி உங்க அம்மாவா இவங்க..?

ஓம் டாக்டர் என்ர அம்மாதான்

ஏதாவது பிரச்சினையா..?

இல்ல தம்பி உங்க அம்மாக்கு காட் பிரச்சினை இருக்கு அவங்கள பக்குவமாக பாத்துக் கொள்ளனும் இது முதல் தடவை என்பதால கொஞ்சம் பரவாயில்ல .

கவனமா பாத்துக் கொள்ளுங்கோ

தனிமையில் இருந்து யோசிக்கவோ அல்லது அதிர்ச்சிச் சம்பவங்களையோ பாத்தாங்களேன்டாலோ திரும்ப வாறதுக்கான அறிகுறிகள் நிறைய இருக்கு.

என்ன டாக்டர் சொல்றீங்க இத மாத்த முடியாதா ?

எவ்வளவு பணம் முடிஞ்சாலும் பரவாயில்ல அம்மாக்கு எதுவித பிரச்சினையும் வராமல் சிகிச்ச வழங்க முடியாதா டாக்டர்

எனக் கேட்டவாறு அழுதான்.

இல்ல தம்பி இது குணமாக்க முடியாத வருத்தம் நீங்க அம்மாவ பின்னேரம் கூட்டிற்றுப் போகலாம் எனக் கூறிச் சென்றார்.

அவ்வாறே தாயாரை வீட்டுக்கு அழைத்துச் சென்றான் கஜன்

தன் தாய் மீதுகொண்ட

அளவு கடந்த பாசத்தால் கஜன் ஒவொரு கோவிலாக ஏறி இறங்கி அலைந்து திரிந்து

பலவாறான நேர்த்திகளையும் வைத்தான்.

சிறிது காலம் எதுவித பிரச்சினைகளும் இன்றி இருவரும் சந்தோசமாக இருந்தனர்

அந்த சந்தோசம் நிலைத்திட வேண்டும் என என்னி இருவரும் கோவில் சென்றனர்.

தாயாரைக் கோவிலில் நிற்குமாறு கூறிவிட்டு கற்பூரம் வாங்கி வருவதற்காக றோட்டைக் கடக்க முற்படுகின்றான் கஜன்.

எங்கோ இருந்து வந்த லொறியொன்று அவனை மோதித் தள்ளிவிட்டுச் சென்றது

கஜன் தூக்கியெறியப்பட்டு மயக்க நிலையில் கிடந்தான்

இதைக் கண்ட தாயார் என்னாச்சோ ஏதாச்சோ என எண்ணியவாறு ஓடி வந்தார்

ஐயோ என் மகன் ...

என்றவாறு நிலத்தை நோக்கிச் சரிந்தார் .

பரமேஸ்வரியின் உயிர் அவள் உடலை விட்டுப் பிரிந்துபோனது.

கஜன் மயக்க நிலையில் இருந்து எழுந்து வருகின்றான் .

எங்க அம்மாவைக் காணல என அங்கும் இங்கும் தேடினான்.

தாயார் இறந்துபோனதை அறிந்திடாதவனாய்.

என்ன டாக்டர் என் அம்மாக்கு என்னாச்சு என்றவாறு பதறியடித்தான்

மன்னிக்கனும் தம்பி உங்க அம்மாவ எங்களால காப்பாத்திட முடியல எனக் கூறிக் கைவிரித்தார்

என்ன செய்வதென்று தெரியாத கஜன் அழுது புரண்டான் .

அக்கம் பக்கத்தில் நின்றவர்கள் ஆறுதல் கூறிட

தன் தாயின் உடலை வைத்தியசாலையில் இருந்து ஏற்றி வீட்டை நோக்கி எடுத்துச் சென்று.

உரிய முறையில் தகனம் செய்வதற்காக மயாணம் கொண்டு சென்றான்.

கஜன் எது நடக்கக் கூடாது என நினைத்தானோ அவையெல்லாம் நடந்து முடிந்தது.

தாயின் உடலுக்கு கொள்ளி வைத்துவிட்டு அவள் நினைவுகளை மட்டும் சுமந்தபடி வீடு செல்கின்றான்.

வெறிச்சோடிப்போன வீட்டில் தன் தாயின் நினைவுகளை மீட்டியபடியே கட்டிலில் சாய்கின்றான்...

# பொம்மை சிறகுகள்!

''இந்த வயசுல அப்பாவுக்கு புத்தி இப்படி போக வேணாம்'' உதட்டைச் சுளித்தாள், ஸ்ரீகுமாரின் மகள்.

''இப்போ, என்னாச்சுன்னு இப்படி பேசுறே...'' தங்கையை அடக்கினான், மூத்தவன் மாதவன்.

''இன்னும் என்னாகணும்... ஆன காலத்துக்கு, இப்போ போயி அப்பாவுக்கு ரெண்டாம் கல்யாணம் தேவையா...''

''செய்துக்கிட்டா என்ன... அவரும் மனுஷன் தானே!''

''சம்பந்தமெல்லாம் எடுத்து, பேரன் பேத்திகள பாத்த பிறகு எதுக்கு இந்தக் கண்றாவியெல்லாம்,'' என்றான், இளையவன் கேசவன்.

''அதுக்கும், இதுக்கும் என்னடா சம்பந்தம்... நாம சின்ன வயசா இருந்தப்ப, அப்பா இப்படி ஒரு முடிவெடுத்திருந்தா மட்டும் இத ஒத்துட்டு இருப்பீங்களாக்கும். இங்க பாரு கேசவா... அப்பா நமக்கான எல்லா கடமைகளையும் முடிச்சிட்டார்; இனிமேலாவது, அவர் தனக்கான வாழ்க்கைய வாழட்டும்,'' என்றான், மாதவன் கண்டிப்பாக!

''அதுக்கில்லேண்ணா... எங்க மாமியார் வீட்டுல கேவலமா பேச மாட்டாங்களா...''என்றாள், தங்கை.

''அதுவுமில்லாம, அத்தை இன்னும் உயிரோட தானே இருக்காங்க'' சந்தடி சாக்கில் பேசினாள், கேசவனின் மனைவி.

''அம்மா உயிரோடு தான் இருக்காங்க; என் தங்கை பிறந்த சமயத்துல பிரசவத்துல என்னவோ சிக்கல் மனப் பிரம்மை வந்துருச்சு. அது இதுன்னாங்க, இப்பவும் ட்ரீட்மென்ட்டுல தான் இருக்காங்க. மூச்சு மட்டும் தான் இருக்கு; பேச்சு நின்னு போச்சு. அப்பா ஓடி ஓடி சம்பாதிச்சதுலே பாதி, அம்மாவோட மருத்துவ செலவுக்கே போயிருச்சு. இன்னிக்கு வரை, நம்ம அப்பா சன்னியாசி வாழ்க்கை தான் வாழ்ந்துட்டு வர்றாரு...'' சொல்லும் போதே மாதவனுக்கு தொண்டை அடைத்தது.

''எனக்கென்னமோ, மாமாவோட முடிவு சரின்னு தான் படுது,''பட்டென்று சொன்னாள், மாதவனின் மனைவி.

''க்கும்... ஐம்பது வயசுல கல்யாணம் கேட்குதாக்கும்,'' நொடித்தாள், கேசவனின் மனைவி.

''இது, உடம்பு சம்பந்தப்பட்ட விஷயமில்ல; மனசு சம்பந்தப்பட்டது,'' என்றாள், மாதவனின் மனைவி.

''எது சம்பந்தப்பட்டதோ, ஆனா, இது நம்ம குடும்ப கவுரவம் சம்பந்தப்பட்டதுங்கறத ஏன் நீங்களும், அண்ணனும் புரிஞ்சுக்க மாட்டேங்கிறீங்க... அதுவும், அந்தக் குந்தாணியப் போயி கல்யாணம் செய்யப் போறார்... அந்த மூதேவி வேற மதம்; அதோட, அப்பாவை விட மூணு, நாலு வயசு பெரியவ வேற... நினைக்கவே அசிங்கமாயிருக்கு,'' என்றாள், தங்கை.

''ஏய்... பெரியவங்கள பேசுற பேச்சா இது... வாயடக்கி பேசு; அவங்கள பத்தி உனக்கு என்ன தெரியும்,'' என்று, அதட்டினான் மாதவன்.

''அதென்ன... அவளைச் சொன்னா, உனக்கு இவ்வளவு கோபம் வருது...'' என்றாள், தங்கை நிஷ்டூரமாக!

சிறிது நேரம் மவுனமாக இருந்தவன், பின், ''ஏன்னா, அவங்கள நான் அம்மாவா ஸ்வீகரிச்சு, வெகு காலமாச்சு,'' என்றான் அமைதியாக!

உள்ளறையில், எல்லாவற்றையும் கேட்டவாறு படுத்திருந்த ஸ்ரீகுமாருக்கு, மாதவனின் வார்த்தைகள் மனதை நெகிழ வைத்தது.

முதன் முதலாய், ரோஸியை சந்தித்த நாள், மனதில் பூவாய் விரிந்தது.

அது பிரபல, 'டிவி' சேனல் நடத்தும் டாக்ஷோ. 'டிவி' சீரியல்கள் பற்றிய தலைப்பில், நேயர்கள் இரு பிரிவாக பிரிந்து கேட்கும் கேள்விகளுக்கு, வெட்டியும், ஒட்டியும் பேச, 'செலிபிரிட்டி'கள் இடையில் தோன்றி, விடை தருவர்.

அந்த, 'டிவி' நிறுவன உரிமையாளரும், முன்னாள் சினிமா கதாநாயகியுமான செலிபிரிட்டி, வெளிநாட்டில் அகப்பட்டுக் கொள்ள, அந்நிறுவனத்தின் உயர் அதிகாரியான ஸ்ரீகுமார் நிகழ்ச்சியில் பங்கேற்றான்.

'டிவி' பிரைம் டைமில் எல்லா சேனல்களிலும் பெரும்பாலும் இவர்கள் தயாரிப்பு தான். தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடத்திலும் கூட, இவர்களின் சீரியல்கள் தான்.

அந்த, 'டாக்ஷோ'வில் நிறைய கேள்விகள் கேட்டு, ஸ்ரீகுமாரை திணறடித்தாள், ரோஸி.

எப்படியோ பேசி சமாளித்தாலும், அதன்பின் ஸ்ரீகுமாரின் மனசுக்குள் முடிச்சு போட்டாற் போல நின்று விட்டாள், ரோஸி!

இரண்டு, மூன்று நாட்கள் மனம் அவளையே



சுற்றிச் சுற்றி வர, இரண்டு வாரத்திற்கு பின், வாணி மகாலில் நடைபெற்ற ஒரு நாடக இடைவேளையில் அவளைப் பார்த்த போது, அவனால் புன்னகையை கட்டுப்படுத்த முடியவில்லை. மறுவாரம், புத்தக கண்காட்சியில், கை நிறைய புத்தகங்களுடன்! அடுத்து, சத்யம் தியேட்டரில்...

அவளை சந்திக்கும்போது எல்லாம் காற்றில் பறப்பதாகவே உணர்ந்தான், ஸ்ரீகுமார். பின், இருவருமே திட்டமிட்டு ஓட்டலுக்கு சென்றனர். பேசி வைத்து சந்தித்தனர்.

மயிலிறகின் மென்மையுடன், இருவர் நடுவிலும் நட்பு வருடிப் போனது. சினிமா, டிராமா, இலக்கியம் என, எந்தவொரு போலித்தனமும் இன்றி, தங்களை வெளிப்படுத்திக் கொண்டனர்.

தன் திருமண வாழ்க்கை முறிந்து, தனித்து வாழ்வதை அவளும், தனக்கு மூன்று குழந்தைகள் இருப்பதையும், மூன்றாவது பிரசவத்தின் போது, ஏற்பட்ட சிக்கலில், தன் மனைவி மனப்பிறழ்வாகி, மருத்துவமனையில் இருப்பதையும், தன் குழந்தைகள், தன் தாய் வீட்டில் வளர்வதை அவனும் மறைக்கவில்லை.

முதலில், இவை வெறும் செய்திப் பரிமாற்றங்களாக இருந்தனவே ஒழிய, எந்த ஒரு மாற்றமும் இல்லை. தங்கள் நிலைகளை உணர்ந்து, புரிதலுடன் இருந்தனர்.

பத்திரிகையில் பணிபுரிந்தாள், ரோஸி. தொலைக்காட்சி தொடர் தயாரிப்பில், முக்கிய பணியில் இருந்தான், ஸ்ரீகுமார். வேலை, வீடு என்றிருந்தவர்களின் வாழ்வில், இந்த அறிமுகம், புது மழை போல குளிர்ச்சியாய் இருந்தது.

ஊரிலிருந்து வந்திருந்த தன் மகன் மாதவனை, ரோஸிக்கு அறிமுகம் செய்தான், ஸ்ரீகுமார்.

பிளஸ் 2 முடித்து, கல்லூரியில் சேர சென்னை வந்திருந்தான், மாதவன்.

தோளுக்கு மேல் வெட்டப்பட்டிருந்த கூந்தலும், கஞ்சியில் மொட மொடத்த காட்டன் சேலையும், புன்னகை பூத்த முகம் என, முதல் பார்வையிலேயே மாதவனுக்கு அவளை பிடித்து போனது.

பேச ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே, ஆரம்ப கால தயக்கமும், கூச்சமும் காணாமல் போனதுடன், 'ரோஸிம்மா...' என்று மிக இயல்பாக அழைக்க ஆரம்பித்தான், மாதவன்.

அப்புறம், இருவரும் தான் காலேஜுக்கு அலைந்தனர். சினிமா சென்றனர்; ஐஸ்கிரீம் சாப்பிட்டனர். ஸ்ரீகுமாரை ஓரம் கட்டி, இவர்கள் ஒரு சங்கிலிக்குள் பிணைந்தனர்.

ஸ்ரீகுமார், லொகேஷனுக்காக ஆந்திரா சென்றிருந்த சமயம் அது!

நண்பனுடன் டூவீலரில் சென்ற மாதவனுக்கு விபத்து ஏற்பட்டு, காலிலும், இடுப்பிலும் சரியான அடி. செய்தி அறிந்து, ஓடி வந்தாள் ரோஸி. மருத்துவமனையிலேயே தங்கியிருந்து கவனித்தாள்.

மறுநாள் இரவு தான் ஸ்ரீகுமாரால் வர முடிந்தது. ஆனாலும், மூன்று மொழிகளில் வெளிவரவிருக்கும் புதிய தொடர் தயாரிப்பில் மூச்சுவிட நேரமின்றி தவித்தவனை, ஆசுவாசப் படுத்தி, வேலைகளை கவனிக்கும்படி கூறி, தானே மாதவனை கவனித்துக் கொண்டாள்.

ஒரு மாதத்திற்கு பின், ஸ்ரீகுமார் சென்னை திரும்பிய போது, மாதவன் டிஸ்சார்ஜ் ஆகி, ரோஸியின் வீட்டில் இருந்தான்.

நன்றியில் நெகிழ்ந்த மனதுடன், மகனை தன் வீட்டுக்கு அழைத்து வந்தான், ஸ்ரீகுமார்.

'அப்பா...'

'ன்னடா...' தோளுக்குயர்ந்த மகன், குழந்தையை போலத் தோன்றினான்.

'வலிக்குதாடா?'

'இல்லப்பா..'

'பால் தரட்டுமா?'

'வேணாம்ப்பா...' என்ற மாதவனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. ஸ்ரீகுமாருக்கு உடம்பு பதறியது. 'தாங்ஸ்ப்பா... எனக்கு ரோஸிம்மாவை ரொம்ப பிடிச்சுருக்கு...' என்றவன், தாயைப் போல ரோஸி உணவு ஊட்டியதையும், தந்தையை போல உடம்பு துடைத்ததையும், தாதியைப் போல கண் விழித்து

மருந்தூட்டியதையும், சகோதரி போல பொய் சண்டையிட்டதையும், தோழி போல விளையாடியதையும், முகச்சுளிப்போ, அருவருப்போ இல்லாமல் இயல்பாக தனக்கு உதவியதையும் விவரித்து, 'அப்பா... அம்மாவோட அன்புன்னா இதுதானா...' என்று திக்கித் திக்கி கேட்ட போது, மகனை இறுக்கி, அணைத்து கொண்டான் ஸ்ரீகுமார்.

தாயிருந்தும், தாயன்பை அனுபவிக்காமலேயே வளர்ந்த, தன் மகனின் ஏக்கத்தை உணர்ந்த போது, யாரோ இதயத்தை வாளால் அறுப்பது போல இருந்தது ஸ்ரீகுமாருக்கு!

இச்சம்பவத்திற்கு பின், அவர்கள் நட்பில், மன நெருக்கம் அதிகரித்தது.

நினைவுகளிலிருந்து மீண்ட ஸ்ரீகுமார், 'அவள் மூலம் எனக்கு நட்பு மட்டுமா கிடைச்சது... எத்தனையோ உதவிகள் செய்திருக்கிறாள். பணத்தால் செய்தவை தான் எவ்வளவு... கட்டாந்தரை போல காய்ஞ்சு கிடக்கும் என் வாழ்க்கையில ரோஸியோட அன்பு மொத்தமும் வேணும். அவ, என் வாழ்க்கையில உரிமையோடு வரணும்...' என, நினைத்தபடியே உறங்கிப் போனார்.

திருமணத்திற்கு பத்து நாட்கள் இருக்கையில், ஸ்ரீகுமாரின் மனைவியை பார்த்தே ஆக வேண்டும் என அடம் பிடித்தாள், ரோஸி.

மருத்துவமனைக்குள் நுழைந்த மூவரையும் உற்சாகமாய் வரவேற்றார் டாக்டர்.

சாய்ந்தாற்போல உட்கார்ந்திருந்தாள், ஸ்ரீகுமாரின் மனைவி. சிவந்த நிறம்; வெளிறிய தேகம்.

''குமார்... பாத்தீங்களா உங்க மனைவி எழுந்து உட்கார்ந்துட்டாங்க. ரெண்டொரு வார்த்தை பேசுறாங்க. உங்க நம்பிக்கை தான் இவங்களை உட்கார வச்சுருக்கு,'' என்றார் டாக்டர்.

'இதென்ன அதிசயம்... இத்தனை ஆண்டுகள் அசைவற்று கிடந்தவள், இப்போது, எழுந்து உட்கார்ந்துள்ளாளே...' என, திகைத்து நின்றார், ஸ்ரீகுமார்.

அருகில் அமர்ந்து அவள் கைகளை, தன் கைகளுக்குள் வைத்தாள் ரோஸி. கைகளை இழுத்துக் கொண்ட ஸ்ரீகுமாரின் மனைவி, பின், ரோஸியை ஒரு விரலால் தொட்டுப் பார்த்து, குழந்தையைப் போல் சிரித்தாள்.

மனைவி குணமடைந்ததற்கு சந்தோஷப் படுவதா, துக்கப்படுவதா எனத் தெரியாமல் பேந்தப் பேந்த முழித்த தகப்பனின் கைகளை ஆறுதலாக பற்றினான், மாதவன்.

டாக்டரிடம் பேசிய பின், மூவரும் கிளம்பினர். வழியில் மூவரும் ஏதும் பேசிக் கொள்ளவில்லை.

புரிபடாத சங்கதிகளின், பிடிபடாத ராகங்களாய் அவரவர் மனதுக்குள், பற்பல வடிவங்களில் உருவமற்று அலைந்தன.

''ஸ்ரீகுமார்... இந்தக் கல்யாணம் வேணாம்...'' என்றாள் ரோஸி.

''ரோஸி...'' அதிர்ந்தார், ஸ்ரீகுமார்.

''இத்தனை வருஷங்களுக்குப் பின், உங்க மனைவி குணமாகியிருக்காங்கன்னா... கடவுளோட விருப்பம் இதுதான். அதனால், இனி, நாம், நாமாகவே இருப்போம்,'' என்றாள்.

ஏதோ பேச வாயெடுத்தார், ஸ்ரீகுமார்.

''ப்ளீஸ்... வேணாம்...''

''ரோஸிம்மா...''என்று மாதவன் ஆரம்பிக்க, ''ப்ளீஸ்... எந்த விவாதமும் வேணாம். உங்கம்மா குணமாகியிருக்கிற இந்த நேரத்துல, இந்த திருமணத்தை யாராலயும் ஏற்க முடியாது. இது நின்னு போனால், உங்கம்மா குணமானதை குடும்பமே கொண்டாடும். எனக்கும் குற்றவுணர்வு இருக்காது,'' என்றவள்,''பொம்மை சிறகுகள் பறக்க உதவாது,'' என்றாள் மெதுவாக!

தொடர்ந்து... ''பொம்மைகளுக்கு சிறகுகள் இருக்கலாம். ஆனால், அவற்றால் உபயோகம் இல்லை. நம் உறவும் பொம்மை சிறகுகள் தான்,'' என்றாள்.

அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காமல், காரிலிருந்து இறங்கிக் கொண்டான் மாதவன்.

மெதுவாக ரோஸியின் தோளை தொட்டார், ஸ்ரீகுமார். சட்டென உடைந்து போய், அவர் நெஞ்சில் முகம் புதைத்து, கதறி அழ ஆரம்பித்தாள். ஸ்ரீகுமாரின் கண்களிலும் கண்ணீர் வழிந்தது.

எதற்காக இந்த அழுகை... நின்று விட்ட திருமணத்திற்காகவா, இழந்து விட்ட பந்தத்துக்காகவா காரணம் புரியாமல் வான் மழையும் சரம் சரமாய் இறங்கி, பூமியை சங்கமித்து தழுவியது!

**ஜே.ஜெரினா**



## மீண்டும் மாதவனுடன் ஜோடி சேரும் அனுஷ்கா

**13** வருடங்களுக்குப் பிறகு பிரபல நடிகர் மாதவனுடன் ஜோடி சேர்ந்து நடிக்க இருக்கிறார் அனுஷ்கா.

அனுஷ்கா நடிப்பில் கடைசியாக வெளியான படம் 'பாகமதி'. கடந்த ஜனவரி 26-ம் தேதி, தமிழ் மற்றும் தெலுங்கில் இந்தப் படம் ரிலீஸானது. ஜி.அசோக் இயக்கிய இந்தப் படம், பாக்ஸ் ஆபீஸில் நல்ல வசூலைப் பெற்றது. ஹாரர் படமான இதில், ஜெயராம், ஆதி, ஆஷா சரத் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்தனர்.

இந்தப் படத்துக்குப் பிறகு அனுஷ்கா வேறெந்த படத்திலும் நடிக்கவில்லை. காரணம், அவருடைய உடல் எடை. 'இஞ்சி இடுப்பழகி' படத்துக்காக ஏற்றிய எடை, குறையவே இல்லை. இத்தனைக்கும் அனுஷ்கா யோகா டீச்சர். யோகாவால் கூட அவர் எடையைக் குறைக்க முடியவில்லை.

எனவே, தீவிர உடற்பயிற்சி மற்றும் டயட் மூலம் தற்போது எடையைக் குறைத்திருக்கிறார். அதனால், படங்களில் நடிக்கவும் முடிவெடுத்திருக்கிறார். நவம்பர் 7 அனுஷ்காவின் பிறந்த நாள். அதை முன்னிட்டு, அவருடைய புதுப்படம் பற்றிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார் கோனா வெங்கட்.

அடுத்த ஆண்டு (2019) அமெரிக்காவில் இந்தப் படத்தின் படப்பிடிப்பு தொடங்க இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கோனா வெங்கட் இயக்கும் இந்தப் படத்தில் அனுஷ்கா ஜோடியாக மாதவன் நடிக்கிறார்.

அனுஷ்கா தமிழில் அறிமுகமான படம் 'ரெண்டு'. இந்தப் படத்தில் மாதவன் ஜோடியாக நடித்தார் அனுஷ்கா. அதன்பிறகு 13 வருடங்கள் கழித்து மறுபடியும் மாதவனுடன் ஜோடி சேர இருக்கிறார் அனுஷ்கா.



## வெறித்தனமான முதல்பார்வை போஸ்டர் 'கடாரம் கொண்டான்'

**வி**க்ரம் நடித்துவரும் 'கடாரம் கொண்டான்' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியிடப்பட்டுள்ளது.

விக்ரம் நடிப்பில் சமீபத்தில் ரிலீஸான படம் 'சாமி ஸ்கொயர்'. ஹரி இயக்கிய இந்தப் படத்தில், ஹீரோயினாக கீர்த்தி சுரேஷ் நடித்தார். ஐஸ்வர்யா ராஜேஷ், சூரி, பாபி சிம்ஹா, ஜான் விஜய் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்தனர்.

இதைத் தொடர்ந்து, 'தூங்காவனம்' படத்தின் இயக்குநரான ராஜேஷ் எம் செல்வா இயக்கத்தில் தற்போது நடித்து வருகிறார் விக்ரம். இதில், அக்ஷரா ஹாசன் மற்றும் அபு ஹாசன் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

கமல்ஹாசனின் ராஜ்கமல் ஃபிலிம் இண்டர்நேஷனல் மற்றும் ட்ரைடென்ட் ஆர்ட்ஸ் ஆர்.ரவீந்திரன் ஆகியோர் இணைந்து இந்தப் படத்தைத் தயாரிக்கின்றனர். ஜிப்ரான் இசையமைக்க, ஸ்ரீனிவாஸ் ரெட்டி ஒளிப்பதிவு செய்கிறார். கடந்த செப்டம்பர் மாதம் இதன் படப்பிடிப்பு தொடங்கியது.

இந்நிலையில், அடுத்தகட்டப் படப்பிடிப்புக்காக படக்குழுவினர் மலேசியா செல்ல இருக்கின்றனர். அடுத்த ஆண்டு இறுதிக்குள் படத்தை ரிலீஸ் செய்யப் படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியிடப்பட்டது. கமல்ஹாசன் தன்னுடைய ட்விட்டர் பக்கத்தில் இதை வெளியிட்டார். 'கடாரம் கொண்டான்' எனப் படத்துக்குத் தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. 'கடாரம் கொண்டான்' என்பது ராஜேந்திர சோழனின் பட்டப் பெயராகும்.

## இயக்குநராகும் விஷால்

**தெ**ருநாய்களை மையப்படுத்தும் படத்தை விஷால் இயக்க இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.


அர்ஜுனிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றி, பின்னர் 'செல்லமே' படத்தின் மூலம் நடிகரானவர் விஷால். நடிகராக மட்டுமின்றி, விஷால் ஃபிலிம் ஃபேக்டரி மூலம் தயாரிப்பாளராகவும் மாறி, தன்னுடைய படங்களைத் தானே தயாரித்து வருகிறார்.



அத்துடன், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் செயலாளராகவும், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவராகவும் இருந்து வருகிறார்.

இந்நிலையில், விஷால் விரைவில் இயக்குநராக இருக்கிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. அவருடைய நீண்ட நாள் கனவு, நனவாக இருக்கிறது. முழுவதும் விலங்குகளை மையப்படுத்தி, குறிப்பாகத் தெருநாய்களை மையப்படுத்தி இந்தப் படம் எடுக்கப்பட இருக்கிறது.

இந்தப் படத்தில், பிரபல நடிகை ஒருவர் முக்கியக் கதாபாத்திரத்தில் நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. அவர் யார் என்பது விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது.




## இந்த மாதத்துடன் நிறைவுக்கு வரும் சூர்யாவின் என்ஜிகே!

**சூ**ர்யா நடித்துவரும் 'என்.ஜி.கே.' படத்தின் படப்பிடிப்பு இன்னும் சில நாட்களே மீதமிருப்பதாகக் கூறப்படுகிறது.

செல்வராகவன் இயக்கத்தில் சூர்யா நடித்துவரும் படம் 'என்.ஜி.கே.'. நந்த கோபாலன் குமரன் என்பதன் சுருக்கம்தான் 'என்.ஜி.கே'. ரகுல் ப்ரீத் சிங் மற்றும் சாய் பல்லவி என இரண்டு ஹீரோயின்கள் இந்தப் படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக நடிக்கின்றனர்.

ஜெகபதி பாபு, பாலா சிங் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். யுவன் சங்கர் ராஜா இசையமைக்க, சிவகுமார் விஜயன் ஒளிப்பதிவு செய்கிறார். ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தை, ரிலையன்ஸ் என்டெர்டெயின்மென்ட் நிறுவனம் வெளியிடுகிறது.

தீபாவளிக்கு இந்தப் படம் ரிலீஸாகும் என முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால், திட்டமிட்டபடி படப்பிடிப்பு முடியாததால், ரிலீஸ் தள்ளி வைக்கப்பட்டது. இதற்காக, சூர்யா ரசிகர்களிடம் ட்விட்டரில் மன்னிப்பு கேட்டார் செல்வராகவன். அத்துடன், இந்தப் படத்துக்காக ஏற்கெனவே போட்ட ட்யூன்களை அழித்துவிட்டு, புதிதாக ட்யூன்கள் போடுவதாகத் தெரிவித்தார் யுவன் ஷங்கர் ராஜா.

இந்தப் படத்துக்காக ஒதுக்கிய தேதிகள் முடிவடைந்த நிலையில், கே.வி.ஆனந்த் இயக்கத்தில் பெயரிடப்படாத படத்தில் நடித்து வருகிறார் சூர்யா. அப்படியே கிடைக்கும் இடைவெளியில் 'என்.ஜி.கே.' படத்திலும் நடித்து வருகிறார். கே.வி.ஆனந்த் படத்தின் ஷூட்டிங், லண்டனில் தொடங்கி வட இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இதன் இரண்டாவது ஷெட்யூலை முடித்துவிட்டு சென்னை திரும்பிவிட்டார் சூர்யா. எனவே, 'என்.ஜி.கே.' படத்தின் மீதமுள்ள படப்பிடிப்பு தொடங்கும் எனத் தெரிகிறது. இன்னும் 15 நாட்களே படப்பிடிப்பு பாக்கியுள்ள நிலையில், இந்த மாத (நவம்பர்) இறுதிக்குள் மொத்தப் படப்பிடிப்பும் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## புது வரவு!

**இ**யக்குநர் சேரனுக்கு அடையாளம் கொடுத்த 'பொற்காலம்' உள்ளிட்ட பல படங்களைத் தயாரித்தவர் ரோஜா கம்பைன்ஸ் காஜா மைதீன். இவருடைய மனைவி ஆம்னி பிரபலமான கதாநாயகியாக வலம் வந்தவர். தற்போது ஆம்னியின் தம்பி சீனிவாஸின் மகள் ஹ்ரித்திகா 'விடியாத இரவொன்று வேண்டும்' என்ற படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகிறார். இது கருப்பையா முருகன் என்ற புதுமுக இயக்குநரின் படம்.

பிறந்தது ஆந்திராவில், வளர்ந்தது சென்னையில், படிப்பது பெங்களூருவில். எல்லாத் தென்னிந்திய மொழிகளிலும் நடித்துப் புகழ்பெற்ற என் அத்தையைப் போல் நானும் புகழ்பெற விரும்புகிறேன். அதற்கு, என் மாமா காஜா மைதீன் ஆசீர்வாதத்துடன், அவர் தேர்வு செய்துதரும் கதையில், தமிழ்ப் படத்தில் அறிமுகமாவது எனது அதிர்ஷ்டம் என்கிறார் ஹ்ரித்திகா.



## இவனுக்கு எங்கேயோ மச்சம் இருக்கு

**கூ**த்துப்பட்ட
மறைந்த நாளில்,
யஞ்சலி செலுத்து
ஆடிய கூத்துப்பட்
மானவர் விமல். ஏ
விமல் தற்போ
படம் 'இவனுக்கு எ
ஆஷ்னா ஸவேரி ஜே
இந்தப் படத்தின் ம
நாளிலிருந்து வர

தமிழ் சினிமாவி
கதைகள் அதிக அ
பெற்ற காலம் ஒன்
படங்களில் பாடமு
போது பேய்ப் பட
ஒரு பக்கம் தர
இன்னொரு பக்கம்,
படங்கள் அதிகரி
இந்தப் படமும்
டீஸ

## பறக்கும் பிரபாஸ்




**'பா**குபலி' படத்துக்குப் பின் பிறகு தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளில் உருவாகிவரும் 'சாஹூ' படத்தில் நடித்து வருகிறார் பிரபாஸ். ஹாலிவுட் தொழில்நுட்பக் கலைஞர்கள் பலரின் பங்கேற்புடன் பெரிய பட்ஜெட் படமாக வளர்ந்து வருகிறது 'சாஹூ'. அதன் பிரத்யேக முன்னோட்டத்தைத் தனது பிறந்தநாள் அன்று வெளியிட்டார் பிரபாஸ்.

இந்த முன்னோட்டத்தில், பிரபாஸின் ஸ்டைலிஷ் தோற்றம், இறக்கையுடன் கூடிய டர்போ இன்ஜினை உடலில் கட்டிக்கொண்டு, சூப்பர்மேனைப் போல நூறு மாடிக் கட்டிடத்திலிருந்து குதித்துப் பறக்கும் காட்சி உள்ளிட்ட அதிரடி சண்டைக் காட்சிகளில் பிரபாஸைப் பார்த்து, டீஸரை யூடியூபில் ட்ரெண்ட் ஆக்கியிருக்கிறார்கள் அவருடைய ரசிகர்கள். சுஜீத் இயக்கிவரும் இந்தப் படத்தில் பிரபாஸ் ஜோடியாக நடித்துவருபவர் ஷ்ரத்தா கபூர்.

**'ஓ**வியங்கள் தவிர்த்து உலகிடம் பேசுவதற்கு வேறு ஒன்றுமே இல்லை' என்றவர் உலகப் புகழ் ஓவியரான வின்சென்ட் வான்கா. இதைக் கலையார்வத்தில் மட்டும் அவர் சொல்லவில்லை. வாழ்ந்த காலத்தில் அந்த அளவுக்குப் பெரும் புறக்கணிப்புக்கு அவர் ஆளானார். 37 வயதில் அகாலமாய் முடிந்த வான்காவின் உருக்கமான வாழ்க்கை 'அட் எ டர்னிடி ஸ்' கேட்' என்ற திரைப்படமாக வருகிறது.

சிறுவயது முதலே குடும்பம், பள்ளி, மதபோதகர் எனப் பலரால் வான்கா புரிந்துகொள்ளப்படாமலும் போதிய அரவணைப்பின்றியும் மனச்சோர்வுக்கு ஆளானார். வளர்ந்ததும் வறுமையும் சேர்ந்துகொள்ள மன அழுத்தத்தில் விழுந்தார். வாழ்நாளில் பத்தாண்டுகளுக்கும் குறைவான காலத்திலே அவர் தூரிகை ஏந்தியிருந்தார். அதிலும் கடைசி 6 ஆண்டுகளில் பின்னாளில் உலகப் பிரசித்தி பெற்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைந்து தள்ளினார். அதற்கான பொருளையோ புகழையோ வாழ்நாளில் வான்கா ருசிக்கவில்லை என்பது மற்றுமொரு சோகம்.

பிரான்சில் வாழ்ந்த கடைசி 2 ஆண்டுகளில் வான்காவை அலைக்கழித்த மன பாதிப்புகளும் வறுமையும் அவற்றின் மறுமுனையில் பீறிட்ட கலைத்தாகமும் உச்சத்திலிருந்தன. ஓவியங்களின் வழியே ஆதியும் அந்தமுமற்ற வெளியுடனான வான்காவின் உரையாடல் அப்போதுதான் நிகழ்ந்தது. தன் காதை அறுத்துக்கொண்டது முதல் சர்ச்சைக்குரிய தற்கொலை முயற்சி வரையிலான தருணங்களை இந்தத் திரைப்படம் அலசுகிறது.

கலைஞனின் துயர வாழ்க்கையைப் பகிரும் படம் என்றாலும், வான்காவின் பார்வையிலான காடு, மலை, வானம் உள்ளிட்ட இயற்கைக் காட்சிகளைத் தனித்துவமாகப் படம் பிடித்திருக்கின்றனர். வான்காவாக வில்லெம் டேஃபோ (willem dafoe) நடித்திருக்கிறார். படத்தை இயக்கியவர் ஜூலியன் ஸ்னாபெல் (julian schnabel). சாவதற்கு 2 மாதம் முன்பாக வான்கா வரைந்த ஓவியத்தின் பெயரையே திரைப்படத்தின் தலைப்பாகச் சூட்டியுள்ளனர். 'அட்எ டர்னிடி'ஸ் கேட்' திரைப்படம் நவம்பர் 16 அன்று திரைக்கு வருகிறது.



## விக்ரம் பிரபுவுக்கு ஜோடியாக மகிமா



'அசுரகுரு' படத்தில் திரைப்பட கல்லூரியில் தங்கப்பதக்கம் பெற்று, மோகன் ராஜாவிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய ராஜ்தீப் இயக்குகிறார். விக்ரம் பிரபு ஜோடியாக மகிமா நம்பியார் நடிக்கிறார். தவிர மனோபாலா, யோகி பாபு, ஜெகன், முனீஸ்காந்த், நாகிநீடு, சுப்புராஜ், குமரவேல் நடிக்கின்றனர். ராமலிங்கம் ஒளிப்பதிவு செய்ய, கணேஷ் ராகவேந்திரா இசை அமைக்கிறார்.

## ஆதியின் 'ஹாக்கி'

'மீசைய முறுக்கு' படத்தை இயக்கி ஹீரோவாக நடித்த இசை அமைப்பாளர் ஹிப் ஹாப் தமிழா ஆதி, மீண்டும் சுந்தர்.சி தயாரிப்பில், 'நட்பே துணை' என்ற படத்தில் நடிக்கிறார். அவருக்கு ஜோடி, புதுமுகம் அனகா. டி.பார்த்திபன் தேசிங்கு இயக்குகிறார். சிவகார்த்திகேயன் நடித்த 'மான் கராத்தே', 'ரெமோ' படங்களில் இணை இயக்குனராக பணியாற்றியவர் இவர்.



'ஹாக்கி' சம்பந்தமான கதை என்பதால், ஹாக்கிக்கான பிரதான மைதானம் மற்றும் காரைக்கால், தரங்கம்பாடி, பாண்டிச்சேரி பகுதிகளில் படப்பிடிப்பு நடத்தப்பட்டுள்ளது. ஹிப் ஹாப் தமிழா ஆதியின் இசையில் 8 பாடல்கள் உருவாகியுள்ளது.



ரஜினி நடித்துள்ள 'பேட்ட'படம், ஜனவரி 10-ம் தேதி ரிலீஸாகலாம் என்று கூறப்படுகிறது.

'2.0' படத்தைத் தொடர்ந்து கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் 'பேட்ட' படத்தில் நடித்துள்ளார் ரஜினி. சன் பிக்சர்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்க, திரு ஒளிப்பதிவு செய்துள்ளார். அனிருத் இசையமைக்கும் முதல் ரஜினி படம் இது.

ரஜினியுடன் இணைந்து பாலிவுட் நடிகர் நவாஸுதீன் சித்திக், விஜய் சேதுபதி, இயக்குநர் மகேந்திரன், சிம்ரன், சசிகுமார், பாபி சிம்ஹா, த்ரிஷா, சனந்த் ரெட்டி, மேகா ஆகாஷ், குரு சோமசுந்தரம், ராம்தாஸ், ராமச்சந்திரன் என ஏகப்பட்ட நட்சத்திரங்கள் இந்தப் படத்தில் நடித்துள்ளனர். சிறப்புத் தோற்றத்தில் வைபவ் நடித்துள்ளார்.

ஊட்டியை கதைக்களமாகக் கொண்ட இந்தப் படத்தின் ஷூட்டிங், டேராடூன், டார்ஜிலிங், சென்னை, லடாக், ஐரோப்பா, வாரணாசி ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளது. ஹாஸ்டல் வார்டனாக இந்தப் படத்தில் நடிக்கிறார் ரஜினி.

கடந்த அக்டோபர் 19-ம் தேதியுடன் படத்தின் மொத்த ஷூட்டிங்கும் முடிவடைந்துள்ளது. இத்தனைக்கும் படக்குழு போட்ட ஷெட்யூல்படி நவம்பர் முதல் வாரத்தில்தான் படப்பிடிப்பு முடிய வேண்டுமாம். ஆனால், சொன்ன தேதியைவிட 15 நாட்கள் முன்கூட்டியே படப்பிடிப்பை முடித்துள்ளார் கார்த்திக் சுப்பராஜ்.

இந்நிலையில், 'பேட்ட' படத்தை வருகிற பொங்கல் விடுமுறைக்கு ரிலீஸ் செய்ய தயாரிப்பு தரப்பு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. அதாவது, அடுத்த ஆண்டு (2019) ஜனவரி 10-ம் தேதி (வியாழக்கிழமை) படத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.

சிவா இயக்கத்தில் அஜித் நடித்துள்ள 'விஸ்வாசம்' படமும் பொங்கலுக்கு ரிலீஸாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



...றை நிறுவனர் ந.முத்துசாமி ... அவரது உடலுக்குக் கலை ...ம்விதமாக மரண ஆட்டம் ...டறை நடிகர்களில் முக்கிய ...ஆர்.முகேஷ் இயக்கத்தில் ...து நாயகனாக நடித்துவரும் ...ங்கேயோ மச்சம் இருக்கு'. ...ஜாடியாக நடித்துவருகிறார். ...உஸர், ட்ரைலர் வெளியான ...வேற்பையும் எதிர்ப்பையும் சந்தித்துவருகிறது. ...ல் சர்ச்சைக்குரிய பாலியல் ...ளவில் படமாகி வரவேற்பு ...று இருந்தது. அதுபோன்ற ...ம் இருக்கும். ஆனால், தற் ...சீசன் கிட்டத்தட்ட முடிந்து ...மான படங்கள் வந்தாலும் ..., அடல்ட் காமெடி வகைப் ...த்து வருகின்றன. விமலின் ... அந்த ரகம் என்பதால்தான் ...க்கு இத்தனை வரவேற்பு.

## இருவேடங்களில் ராய் லட்சுமி



ஹீரோ இல்லாமல், ஹீரோயினுக்கு அதிக முக்கியத்துவம் கொண்ட கதையுடன் உருவாகும் படம், 'சின்ட்ரல்லா'.

இதில் பேய் வேடத்தில் நடிக்கிறார், ராய் லட்சுமி. வினோ வெங்கடேஷ் இயக்குகிறார். அவர் கூறுகையில், 'திகில் கதை கொண்ட இதில் பேயாகவும், இசைக்கலைஞராகவும் இரு வேடங்களில் ராய் லட்சுமி நடிக்கிறார். அவரது திரையுலக வாழ்க்கையில் இது ஒரு முக்கியமான படமாக இருக்கும். முற்பகுதி கதையில் குழந்தைகளுக்கு பிடித்த விஷயங்களும், பிற்பகுதி கதையில் பயமுறுத்தும் சம்பவங்களும் இடம்பெறும். பேய் வேடம் ஏற்றுள்ள ராய் லட்சுமி, நான்கு மணி நேரம் மேக்கப் போட்டுக்கொள்கிறார். ராமி ஒளிப்பதிவு செய்கிறார். அஸ்வமித்ரா இசை அமைக்கிறார். வரும் மார்ச் மாதம் படம் வெளியாகிறது' என்றார்.



## இந்தியில் அறிமுகமாகும் நித்தியா மேனன்

மலையாளத்தில் ஒருவர் மட்டுமே நடிக்கும் 'பிரானா' மற்றும் 'கொளம்பி', மறைந்த முதல்வர் ஜெயலலிதா வேடத்தில் 'தி அயர்ன் லேடி', மிஷ்கின் இயக்கத்தில் 'சைக்கோ', தெலுங்கில் என்டிஆர் வாழ்க்கையை மையமாக வைத்து உருவாகும் 'கதாநாயகுடு' படத்தில் மறைந்த நடிகை சாவித்திரி கேரக்டரில் நடித்து வரும் நித்யா மேனன், இந்தியில் ஜெகன் சக்தி இயக்கும் படத்தின் மூலம் அறிமுகமாகிறார். இதில் அக்ஷய் குமார் ஹீரோ. வித்யா பாலன், சோனாக்ஷி சின்ஹா, டாப்ஸி ஆகியோர் நடிக்கும் இந்த படத்தின் கதை, மங்கள்யான் திட்டத்தை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

## ஒரு தூரிகையின் துயரம்



## காதோடு...காதாக...!

துணிந்து அந்த கதாபாத்திரத்தில் நடிப்பது என்று முடிவு செய்துள்ளாராம் சர்ச்சை நடிகை. மறைந்த முதல்வரின் வாழ்க்கை வரலாற்றை 4 இயக்குனர்கள் தமிழில் படமாக எடுக்கிறார்கள். அதில் ஒரு இயக்குனர் தன் படத்தில் முதல்வர் அம்மாவாக நடிக்குமாறு சர்ச்சை நடிகையிடம் கேட்டுள்ளாராம். பெரிய கதாபாத்திரம், நடிக்கலாமா வேண்டாமா என்ற குழப்பத்தில் இருந்திருக்கிறார் சர்ச்சை நடிகை. இதையடுத்து அந்த படத்தில் நடிக்கலாமா, வேண்டாமா என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் கேட்டுள்ளார். அவர்களோ, இந்த கதாபாத்திரத்திற்கு நீ தான் பொருத்தமாக இருப்பாய் என்று கூற சரி நடிக்கலாம் என்று முடிவு செய்துள்ளாராம் சர்ச்சை நடிகை. ஆக, அம்மாவாக ரெடியாகிவிட்டார் சர்ச்சை நடிகை. மற்றொரு இயக்குனரின் படத்தில் அண்டை மாநிலத்தை சேர்ந்த நடிகை 'அம்மா'வாக நடிக்கிறார்.

மார்க்கெட் உச்சத்தில் இருந்தபோது ஏகப்பட்ட பந்தா செய்த சின்னப்பூ நடிகை, தற்போது பட வாய்ப்புகளுக்காக மிகவும் அடக்கி வாசிக்கிறாராம். பூ நடிகையின் சாயலில் இருந்ததால் சின்னப்பூ ஆனவர் இந்த நடிகை. அதனால் முதல் படத்தைத் தொடர்ந்து அடுத்தடுத்து முன்னணி நடிகர்களுடன் நடிக்கும் வாய்ப்பு வந்தது. ஆனால், திடீரென மார்க்கெட் சரிந்தது. இதனால் மார்க்கெட் இல்லாத நடிகர்களுடனும் நடித்து, தனது மார்க்கெட்டை மீண்டும் உயர்த்துவது என முடிவு செய்துள்ளார் நடிகை. இதனால், முன்பு செய்த பந்தாக்களை எல்லாம் மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, சமத்துப் பிள்ளையாக வலம் வருகிறாராம். இது ஒருபுறம் இருக்க, முன்பு ஆடை விசயத்திலும் அதிக அக்கறை காட்டியவர், தற்போது அதிக தாராளம் காட்டுகிறாராம். படப்பிடிப்பு தளங்களுக்கே குட்டைப் பாவாடையுடன் வந்து ஷாக் தருகிறார். சின்ன நடிகர்கள் படம் என்றாலும் ஓகே எனக் கூறி, ஆடை விசயத்திலும் தாராளம் காட்டுவதால் புதிய பட வாய்ப்புகள் கிடைக்கும் என்பது தான் நடிகையில் மனக்கணக்கு.

# மின்னல் ஒரு கோடி...!

'மாயாவி' தமிழ்த் திரைப்படத்தில் ஜோதிகா, நடிகை ஜோதிகாவாகவே நடித்திருப்பார். அந்தப் படத்தில் நாயகனின் நண்பராக வரும் சத்யன், ஜோதிகாவைப் பார்த்து நான் எல்லாம் சிம்ரன் அக்காவோட போஸ்டரையே மூணு மணி நேரம் பார்ப்பேன் என்பார்.

இந்த வசனத்தில் சொல்லப்படுவதுபோல் சிம்ரனின் போஸ்டரைப் பார்த்தே சொக்கிப்போகும் ஏராளமான ரசிகர்கள் ஒரு காலம்வரை இருந்தனர். அந்தப் படம் வெளியான 2005-ம் ஆண்டில் சிம்ரன் திரையுலகிலிருந்து தற்காலிகமாக விலகியிருந்தார். அதற்கு முந்தைய 7-8 ஆண்டுகளில் அவர் முன்னணிக் கதாநாயகியாகவும் ஆளுமைமிக்க நடிகையாகவும் தமிழ்த் திரையை ஆக்கிரமித்திருந்தார். பெண்களின் நடிப்புத் திறமைக்கு மீண்டும் மரியாதை பெற்றுத் தந்தவராக அடையாளம் பெற்றிருந்தார்.



### ஒரு கோடி மின்னல்

1990-களின் இடைப் பகுதியில் ரஜினி, கமல், விஜயகாந்த், சரத்குமார், சத்யராஜ், அர்ஜுன் என முன்னணி நடிகர்கள் அனைவரும் சூப்பர் ஹீரோக்கள் ஆகிக்கொண்டிருந்ததால் கதாநாயகிகள் வெறும் அழகுப் பதுமைகளாகச் சுருங்கிக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட சூழலில் தான் 1997-ல் வெளியான 'வி.ஐ.பி' படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகிலும் தமிழ் சினிமா ரசிகர்களின் இதயங்களிலும் காலடி எடுத்துவைத்தார் சிம்ரன்.

அந்தப் படத்தில் இவரும் ஒரு 'அழகுப் பதுமை' யாகத்தான் வந்து போனார். ஆனால், அதில் வெளிப்பட்ட அவரது நடனத் திறமை ரசிகர்களை வியக்கவைத்தது.

'இந்தியாவின் மைக்கேல் ஜாக்சன்' என்று புகழப்பட்ட பிரபுதேவாவுக்கு ஈடுகொடுத்து அவர் நடனம் ஆடிய விதத்தின் மூலம் ரசிகர்களின் மனங்களை 'மின்னல் ஒரு கோடி'யாகத் தாக்கினார். விஜய், சிம்ரன் வருகைக்குப் பிறகு தான் நாயக, நாயகியரின் நடனத் திறமை உன்னிப்பாகக் கவனிக்கப்படத் தொடங்கியது என்று சொல்லலாம்.

### 'ஒல்லி' நட்சத்திரம்

90-களில் நடிகைகள் ஒல்லியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பு இல்லை. அப்போது முன்னணி நடிகைகளாக இருந்த குஷ்பு, மீனா, ரோஜா, சுகன்யா எனப் பலரும் 'ஒல்லி' என்று சொல்லத்தக்கவர்கள் அல்ல. ஒல்லியான உடல்வாகுடன் தமிழ் சினிமாவில் முதல் இடத்தை அடைந்து, சில ஆண்டுகள் ஆதிக்கம் செலுத்தியவர் சிம்ரன் தான்.

மும்பையில் பஞ்சாபி குடும்பத்தில் பிறந்த சிம்ரனின் இயற்பெயர் ரிஷிபாலா. ஃபேஷன் டிசைனராக மாறவே அவர் விரும்பினார். தூர்தர்ஷனின் மெட்ரோ சானலில் 'சூப்பர் ஹிட் முகாபுலா' என்ற நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியதன் மூலம் பாலிவுட்டின் கதவுகள் அவருக்குத் திறந்தன. 1995-ல் வெளியான அவரது முதல் படம் 'சனம் ஹர்ஜாய்', வந்த சுவடே தெரியாமல் போனது.

1996 இறுதியில் வெளியான 'தேரே மேரே சப்னே' அவரது முதல் வெற்றிப் படம். இடையில் மலையாளத்தில் மம்முட்டியுடன் 'இந்திரபிரஸ்தம்' படத்திலும், கன்னடத்தில் ஷிவ் ராஜ்குமாருடன் 'சிம்ஹடா மாரி' படத்திலும் 'அப்பாய் காரி பெல்லி' என்ற தெலுங்குப் படத்திலும் நடித்தார். இவற்றுக்குப் பிறகுதான் அவரது தமிழ் அறிமுகம் நிகழ்ந்தது. அதே ஆண்டில் விஜய்யுடன் 'ஒன்ஸ் மோர்', அப்பாஸுடன் 'பூச்சூடவா' ஆகிய படங்களில் நடித்தார்.

மணி ரத்னம் தயாரித்து வசந்த் இயக்கிய 'நேருக்கு நேர்' படத்தில் அறிமுக நாயகன் சூர்யாவுக்கு ஜோடியாக நடித்தார். அதில் 'மனம் விரும்புதே உன்னை' என்ற கர்னாடக இசைப் பாணியில் அமைந்த பாடலில் வெளிப்பட்ட அவரது அழகும் நடனத் திறனும் தமிழ் ரசிகர்களை செராக்க வைத்தன. அதே படத்தில் 'எங்கெங்கே' பாடலில் ஓடிக்கொண்டே இருந்த அவரைக் காதலுடன் துரத்திய சூர்யாவுடன் தமிழக இளைஞர்கள் பலரும் இணைந்துகொண்டனர்.

சிம்ரனிடம் நடிப்புத் திறமையை 1999-ல் வெளியான இரண்டு படங்கள் உறுதிப்படுத்தின. விஜய்யுடன் 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தில் பார்வையை இழந்தவராகவும் அஜித்துடன் 'வாலி' படத்தில் கணவனின் அண்ணனால் மோகிக்கப்படுபவராகவும் அவர் சிறப்பாக நடித்திருந்ததாக ரசிகர்களும் விமர்சகர்களும் ஏற்றுக்கொண்டனர். 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்துக்குச் சிறந்த நடிகைக்கான தமிழக அரசின் விருதைப் பெற்றார்.

### நடனத்துக்கு கௌரவம்

முன்னணி நடிகையாக இருந்தபோதே 'அந்தப்புரம்' என்ற தெலுங்குப் படத்தில் ஒரேயொரு பாடலுக்கு நடனமாடினார். அதுவரை 'ஐட்டம்' பாடல்களில் கவர்ச்சி நடிகைகளும் வாய்ப்பிழந்த நடிகைகளுமே தோன்றிவந்தனர். அசாத்திய நடனத் திறமைகொண்ட சிம்ரன், அது போன்ற ஒரேயொரு பாடல்களுக்கும் ஒரு தனி இடத்தைப் பெற்றுத்தந்தார். 'யூத்' படத்தில் 'ஆல்தோட்ட பூபதி' பாடலில் விஜய்யுடனும், 'பிதாமகன்' படத்தில் 'தகதக வென ஆட வா' பாடலில் சூர்யாவுடனும் அவர் ஆடிய நடனம் ரசிகர்களையும் ஆட்டம்போட வைத்தது.

தொடர்ந்து 'தமிழ்','பஞ்சதந்திரம்', 'ரமணா', 'அரசு', 'நியூ' போன்ற வெற்றிப் படங்களில் நடித்துக்கொண்டிருந்த காலத்திலேயே தன் சிறுவயது நண்பர் தீபக் பாகாவைத் திருமணம் செய்துகொள்வதாக சிம்ரன் அறிவித்தார்.

ஒரு சிறு இடைவெளிக்குப் பின் மீண்டும் வந்தவருக்குக் கதாநாயகி வேடம் கிடைக்கவில்லை. அவரது இரண்டாவது இன்னிங்ஸில் பல படங்களில் நடித்திருந்தாலும் 'வாரணம் ஆயிரம்' படத்தைத் தவிர வேறு எதுவும் சொல்லிக்கொள்ளும்படி அமையவில்லை. இப்போது 'துருவ நட்சத்திரம்' படத்தில் விக்ரமுடனும் கார்த்திக் சுப்பராஜ் இயக்கும் படத்தில் முதல்முறையாக ரஜினிகாந்துடனும் நடித்துவருகிறார். இந்த இரண்டு படங்களும் அவருக்கு இன்னும் மேம்பட்ட இடத்தைப் பெற்றுத்தரலாம்.

### காலம் கடந்துவிடவில்லை

2010-க்குப் பிறகு தமிழ் சினிமாவில் கதாநாயகிகளை மையமாகக் கொண்ட படங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன, அவற்றில் கணிசமானவை வெற்றி பெறுகின்றன. நயன்தாரா புகழ் ஏணியின் உச்சியில் இருப்பதற்கு இப்படிப்பட்ட படங்களில் நடிப்பதும் முக்கியக் காரணம். 2000-க்குப் பிந்தைய தலைமுறையைச் சேர்ந்த கதாநாயகியாக இருந்திருந்தால் சிம்ரனும் நயன்தாராவுக்கு இணையாகவோ அதற்கும் மேலான இடத்திலோ இருந்திருக்கக்கூடும்.

இருந்தாலும், சிம்ரன் கடந்த காலக் கனவுக்கன்னியாகத் தேங்கிவிட வேண்டியதில்லை. தொடர்ந்து நடித்துக்கொண்டிருக்கும் அவர், தன் திறமைக்கு அணி சேர்க்கும் கதைகளைத் தேர்ந்தெடுத்து மீண்டும் ஒரு வெற்றிப் பயணத்தைத் தொடங்குவதற்கான காலம் கடந்துவிடவில்லை. அப்படி அவர் தேர்ந்தெடுத்து நடித்தால், இதுவரை அவருக்குக் கிட்டாத சிறந்த நடிகைக்கான தேசிய விருது கிடைக்கலாம்.

# விதம் விதமாய் தேநீர் அருந்துங்கள்!

காலை எழுந்தவுடன் சுடச்சுட டீ அருந்துவது தான் அனைவருக்கும் பிடித்தமானது. தேயிலை கொண்டு தயாரிக்கப்படுவதை மட்டுமே டீ என அழைப்பதில்லை. வேறு பல பசுந்தழைகள் கொண்டு கொதிக்க வைத்து தரப்படும் சுவையான சுடுநீர் கூட டீ என்றுதான் அழைக்கப்படுகிறது. உலகெங்கும் விதவிதமாக டீ குடிக்கும் பழக்கம் உள்ளது.

தேயிலையிலேயே மாறுபட்ட சில வகைகளை கொண்டும் தேநீர் உருவாக்கி தரப்படுகிறது. அவற்றிற்கு என தனி மதிப்பும், சிறப்பு குணங்களும் உள்ளன. அந்த வகையில் சில பொருட்கள் கொண்டும் தேநீர் தயாரிக்கப்பட்டு தரப்படுகிறது. இப்பொருட்களை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து தருவதை நம் முன்னோர் குடிநீர் என்றும், கசாயம் என்றும் அழைத்து வந்தனர். மாடர்ன் உலகில் எந்த மூலிகையும், பசுந்தழையும் போட்டு கொதிக்க வைத்து பரிமாறினால் அது தேநீர் வகையில் இணைக்கப்படுகிறது.

தேயிலை தவிர்த்து இஞ்சி, புதினா, கிரீன் டீ, லாவண்டர், செம்பருத்தி, ஏலக்காய், கிராம்பு, இலவங்கப்பட்டை, ரோஸ்ஹிப், லெமன் பாம், நெட்டில், ஹாதோரன் போன்ற விதவிதமான பொருட்களை கொண்டு டீ தயாரித்துத் தரப்படுகிறது. சில நம் நாட்டு மூலிகை மற்றும் செடிகளாக காணப்படுகிறது. சில அயல்நாட்டில் கிடைக்கக்கூடிய விதைகள், பழங்கள் கொண்டு தயாரிக்கப்படுகிறது. இந்த தேநீர் அருந்தும்போது உடலுக்கு புத்துணர்வு ஏற்படுவதுடன், உடல் ஆரோக்கியமும் மேம்படுகிறது. சில தேநீர்கள் நோய்களை குணப்படுத்தும் நோக்கிலும், மன அழுத்தம் போக்கும் வகையிலும் அருந்தப்படுகிறது.

### எலுமிச்சை புல் தேநீர்

எலுமிச்சை புல் தேநீர் என்பது நாம் உணவு அருந்தியபின் குடிக்க வேண்டிய தேநீர். எலுமிச்சை புல்-யை தண்ணீரில் போட்டு நன்கு கொதிக்க வைத்தபின் குடித்திட வேண்டும். இந்த தேநீரில் உள்ள சிட்ரல் குண அமைப்பு உணவு செரிமானம் அடைவதற்கு உதவி புரிகிறது. நல்ல வாசம் மிகுந்த தேநீரான இது அனைவருக்கும் பிடித்தமானது.

### பயன் நிறைந்த கிரீன் டீ

கிரீன் டீ என்பது பிரபலமான மூலிகையாகும். இதன் தேநீரில் எதிர்ப்பு சக்தி அதிகமாக உள்ளது. இதன் மூலம் உடலின் வயதான தோற்றம் ஏற்படுவது தடுக்கப்படும். புற்றுநோய் மற்றும் கட்டிகள் ஏற்படுவதை தடுப்பதுடன் உடலின் கொலஸ்ட்ரால் அளவை குறைக்க உதவுகிறது.

### இளஞ்சூடான இஞ்சி தேநீர்

இஞ்சி உடல் சக்தியை அதிகரிப்பதுடன், புத்துணர்வை அதிகரிக்க செய்ய உதவுகிறது. உணவு செரிமானம் அடையவும், வாய் குமட்டலை தடுக்கவும் இஞ்சி தேநீர் உதவுகிறது. நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்த இஞ்சி தேநீர் அருந்துவது முடக்கு வாதம் போன்ற நோய்களுக்கு மருந்தாகவும் அமைகிறது.

### புத்துணர்வுடன் கூடிய புதினா தேநீர்

நறுமணத்துடன் கூடிய தேநீர் - ஆக புதினா தேநீர் உள்ளது. இது குமட்டல், வாந்தி மற்றும் மலச்சிக்கலை தீர்க்கும் தேநீர் ஆக உள்ளது. மேலும், உடல் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் என்பதுடன், சளி தொந்தரவுகள், ஆஸ்துமா மற்றும் தலைவலி போன்றவற்றை நீக்கும் விதமாகவும் அருந்திடலாம். இதய நோயாளிகள் புதினா தேநீர் அருந்துவதை தவிர்த்திடல் வேண்டும்.

### சீமை சாமந்தி தேநீர்

கெமோமில் என்ற சீமை சாமந்தி என்ற மூலிகை உலகளவில் மிக பிரபலமான ஒன்றாகும். இது மன அழுத்தம் மற்றும் வயதான தோற்றத்தை தடுக்கும் தன்மை கொண்டது. மேலும் தூக்கமின்மையை போக்கி நல்ல தூக்கத்தை ஏற்படுத்தும் தன்மை கொண்டது. உலகளவில் ஆர்கானிக் சீமை சாமந்தி தேநீர் தயாரிப்புகள் தயார் செய்து விற்பனைக்கு வருகின்றன.

### ரோஸ் ஹிப் தேநீர்

ரோஜா செடியில் இருந்து கிடைக்கும் பழம் போன்ற பகுதியே ரோஸ் ஹிப் என்பதாம். இதனை கொண்டும் தேநீர் உருவாக்கப்படுகிறது. விட்டமின்-சி சத்து நிறைந்த இந்த ரோஸ் ஹிப் தேநீர் அருந்துவதன் மூலம் சரும பளபளப்பு மற்றும் சிறுநீரக செயல்பாடு சிறப்பாக இருத்தல் போன்ற பயன்கள் ஏற்படுகிறது.

### இதயத்தை பலப்படுத்தும் செம்பருத்தி தேநீர்

செம்பருத்தி பூவின் தேநீர் என்பது காய்ந்த செம்பருத்தி பூவினை கொண்டு தயாரிக்கப்படுகிறது. செம்பருத்தி தேநீர் அருந்துவதன் மூலம் உயர் ரத்த அழுத்தம், மன அழுத்தம், கொலஸ்ட்ரால் போன்றவை குறைகின்றது. உடலில் செல் பாதிப்பு ஏற்படுவதை தடுப்பதுடன் நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்ததாகவும் செம்பருத்தி தேநீர் உதவுகிறது.

லாவண்டர் பூ தேநீர் என்பதும் உலகளவில் பிரபலமான தேநீர் ஆக உள்ளது. இதனை அருந்துவதன் மூலம் காய்ச்சல், இருமல், ஆஸ்துமா போன்றவை நீங்குகிறது. மேலும் ஆறாத புண்களை கொண்டுள்ளோர் லாவண்டர் தேநீர் அருந்திவர சீக்கிரமே ஆறிவிடும்.



# ஆயுளைக் கூட்டும் இரத்ததானம்



இரத்த தானம் செய்தால் பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படாது என்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது. தொடர்ந்து சீரான இடைவெளியில் ரத்த தானம் செய்து வந்தால் புற்றுநோய் பாதிப்பில் இருந்தும் விடுபடலாம், ஆக்ஸிஜனேற்ற அளவை அதிகரிக்கலாம் என்பது ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. ரத்த தானம், ஆயுளையும் அதிகரிக்க செய்யும். தொடர்ந்து ரத்த தானம் செய்வதன் மூலம் உடல் உள்ளுறுப்புகள் ஆரோக்கியமாக செயல்பட்டு வாழ்நாளை நீட்டிக்க செய்யும். நோய் எதிர்ப்பு மண்டல அமைப்பையும் வலுப்படுத்தும்.

இரத்த தானம் செய்வதன் மூலம் ரத்த சிவப்பு அணுக்கள் புதிதாக உற்பத்தியாகும். அப்படி ரத்த சிவப்பணுக்கள் மறுசுழற்சி செய்யப்படுவதன் மூலம் உடல் புத்துணர்ச்சி பெறும். உடலில்இருந்து கார்பன் டை ஆக்ஸைடை நீக்கவும் உதவும். ஒருமுறை ரத்த தானம் செய்யும்போது உடலில் இருந்து 650 கலோரி செலவாகும். அதன் மூலம் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்பு குறைய வாய்ப்பிருக்கிறது.

அதே வேளையில் ரத்ததானம் செய்வதற்கு ஏதுவான உடல் அமைப்பை பெற்றிருந்தால் மட்டுமே அதை செய்ய வேண்டும். ரத்ததானம் செய்வதற்கு முன்பு நாடி துடிப்பு, ரத்த அழுத்தம், உடல் வெப்பநிலை, ஹுமோகுளோபின் அளவு போன்ற பரிசோதனைகளை செய்து கொள்ள வேண்டும். அதேபோல் ஹெபடைடிஸ் பி, ஹெபடைடிஸ் சி, எச்.ஐ.வி. பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். எந்தபாதிப்பும் இல்லாதபட்சத்தில் தாராளமாக ரத்ததானம் செய்து வரலாம்.




# கல்லீரலுக்கு பலம் தரும் மணத்தக்காளி



மணத்தக்காளி கீரையை நாம் அன்றாடம் உணவில் பயன்படுத்துவதன் மூலம் உணவாகவும், மருந்தாகவும் பயன் தருகிறது. அதே போல் மேற்பூச்சு மருந்தாகவும் பயன் தருகிறது. தோல் நோய்களின் தொல்லைகளில் இருந்து விடுபட உதவுகிறது. மலச்சிக்கலை போக்குகிறது. இதன் காய்களை வற்றலாக்கி அதை உண்பதன் மூலம் சர்க்கரை நோய்க்கும் மருந்தாக மணத்தக்காளி பயன்தருகிறது. ரத்த அழுத்தத்தை இது தணிக்கிறது. ஈரலுக்கு வலுத்தரக் கூடியதாகவும் மணத்தக்காளி விளங்குகிறது.

மண்ணீரலுக்கும் இது மருந்தாகிறது. ஆன்டி பாக்டீரியல் குணம் காரணமாக நுண் கிருமிகளை அழிக்கும் திறன் கொண்டதாகவும் மணத்தக்காளி பயன் தருகிறது. நோய் கிருமிகளை எதிர்க்கும் தன்மை கொண்டதாக, நோய் கிருமிகள் வராமல் தடுக்கக் கூடியதாக மணத்தக்காளி வேலை செய்கிறது. கல்லீரலை பலப்படுத்தக் கூடிய, குடற்புண்ணை ஆற்றக் கூடிய மருந்தை மணத்தக்காளியை பயன்படுத்தி தயார் செய்யலாம். இது உடலுக்கு குளிர்ச்சி தரக் கூடிய ஒரு உணவாகவும் அமையும்.

அவ்வப்போது மணத்தக்காளியை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் மஞ்சள் காமாலை நோய் நம்மை அண்டுமோ என்ற அச்சம் இல்லாமல் இருக்கலாம். கல்லீரலுக்கு பலம் தருவதால் மஞ்சள் காமாலை வராமல் இது தடுக்கிறது. மஞ்சள் காமாலை தாக்கம் கொண்டவர்களும் இதை அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் மஞ்சள் காமாலை படிப்படியாக மறைந்து போக செய்கிறது. அதே போல் மணத்தக்காளி வற்றலை பயன்படுத்தி சளிக்கான மருந்தை தயார் செய்யலாம். இது சுவையின்மையை போக்கக் கூடியதாக, பசியை தூண்ட செய்வதற்கும் பயன்படுகிறது.

வாய்ப்புண் உள்ளவர்கள், மணத்தக்காளி கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், வாய்ப்புண் மட்டுமின்றி, வயிற்றுப்புண்ணும் குணமாகும். ஏனெனில் வாய்ப்புண் உள்ளவர்களுக்கு வயிற்றுப்புண்ணும் இருக்கும்.

மலச்சிக்கலால் அவஸ்தைப்படுபவர்கள், மணத்தக்காளி கீரையை சாப்பிட்டால், இப்பிரச்சனையில் இருந்து விடுபடலாம்.

செரிமான பிரச்சனை உள்ளவர்கள், மணத்தக்காளி கீரையை சாப்பிட்டு வந்தால், உடலுக்கு வேண்டிய சத்துக்கள் கிடைப்பதுடன், செரிமான பிரச்சனையும் நீங்கிவிடும்.

சிலர் தினமும் சரியாக சிறுநீர் கழிக்கமாட்டார்கள். அத்தகையவர்கள் மணத்தக்காளி கீரையை சாப்பிட்டு வந்தால், சிறுநீர் சீராக வெளியேறி சிறுநீரகத்தில் கோளாறு ஏற்படாமல் பாதுகாக்கலாம்.

முக்கியமாக ஆண்கள் மணத்தக்காளி கீரையை சாப்பிட்டு வந்தால், அவர்களின் விந்தணு வலிமையுடன் இருக்கும்.

# தூக்கம் உன் கண்களை தழுவட்டுமே



தூங்குவதற்கு உபயோகப்படுத்தும் தலையணையை குறைந்த பட்சம் ஆண்டுக்கு ஒருமுறையாவது மாற்றிவிட வேண்டும்.

மெத்தையை ஒன்பது ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது மாற்றியமைக்க வேண்டும்.

படுக்கை அறையில் நிலவும் வெப்பநிலையும் தூக்கத்திற்கு இடையூறை ஏற்படுத்தும். அங்கு மிதமான வெப்பநிலை நிலவுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

இரவு நேரங்களில் செல்போனில் அதிக நேரம் செலவழிப்பதை தவிர்க்க வேண்டும். இரவு பொழுதில் கண்களில் அதிக வெளிச்சம்படக்கூடாது. செல்போனில் இருந்து உமிழப்படும் வெளிச்சம் தூக்கத்தை வரவழைக்கும் ஹார்மோனின் உருவாக்கத்தை தடுத்துவிடும்.

அதனால் படுக்கை அறைக்குள் செல்போனுக்கு இடம் கொடுக்காமல் இருப்பது நல்லது.

மதுப்பழக்கமும் தூக்கத்தை தடுத்து சோர்வை ஏற்படுத்திவிடும். மதுக்குடிக்கும்போது அதிலிருக்கும் ஆல்கஹால் தூக்கத்தை தூண்டும் வகையில் செயல்படும். சில மணி நேரங்களிலேயே எதிர்மறையாக செயல்பட்டு தூக்கத்தை தடுத்து சோர்வை உண்டாக்கிவிடும்.

அதிகம் தண்ணீர் பருகுவதும் அவசியமானது. அது சோர்வை விரட்டி உடலை புத்துணர்ச்சிக்குள்ளாக்கும்.

தூங்கும் நேரத்தையும் முறைப்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட நேரத்துக்குள் தூங்க சென்றுவிட வேண்டும். விடுமுறை நாட்களாக இருந்தாலும் அதில் மாற்றம் செய்யக்கூடாது.

# வெற்றிலையின் மகத்துவம்



வெள்ளை வெற்றிலை, கறுப்பு வெற்றிலை, கமார் வெற்றிலை, கற்பூர வெற்றிலை என இருந்தாலும் நாம் உபயோகப்படுத்துவது பெரும்பாலும் வெள்ளை வெற்றிலை தான்.

வெற்றிலை வைத்தியத்துக்கு பெரிதும் கை கொடுக்கும். இரும்புச்சத்து, நீர்ச்சத்து, நார்ச்சத்து, தாமிரச்சத்து, மாவுச்சத்து, புரதம், கால்சியம் அடங்கிய மூலிகை விட்டமின் அ மற்றும் இ இதில் உள்ளன. உணவிலும் இதைச் சேர்ப்பர். போர் வீரர்கள் வெற்றிலை மாலை அணிந்துச் செல்வதும் வழக்கம்.

ஆண்மைக் குறைபாட்டை நீக்கும். குழந்தை பெற்ற பெண்ணுக்குத் தாய்ப்பால் சுரக்கவும், பால் குறைந்த பெண்களுக்கு வெற்றிலையை மார்பில் கட்ட தாய்ப்பால் சுரக்கும். சுவாசப் பிரச்சினை உள்ளவர்க்கு பலனளிக்கும். நோய் எதிர்ப்புச் சக்தி தரவும் உதவும். பசியின்மையைப் போக்கிடும். மூளைக்கும், எலும்பு, நரம்பு, பற்கள் உறுதிக்கு செயல்படும்.

மந்தத்தைப் போக்கி ஞாபகசக்தியினை அதிகரிக்கச் செய்யும். இருமல், சளியை விரட்டும். குழந்தைகளின் வயிற்று உபாதைகளை நீக்கி, வயிற்றுப்பூச்சியைக் கொல்லும். நெய் தடவிய வெற்றிலையை லேசாக வாட்டி வயிற்றில் போட வயிற்றுவலி சரியாகும். உடல் பருமனை குறைக்கும். தீப்புண்ணுக்கும் போடலாம்.

இதன் சாறை காதில் ஊற்ற சீழ்வடிதல், காதுவலி குணமாகும். வெற்றிலைச் சாறை 2 சொட்டு மூக்கில் விட்டால் மூக்கடைப்பு, ஜலதோஷம் நீங்கும். தண்ணீர் + எலுமிச்சைச்சாறு + வெற்றிலைச்சாறு பனங்கற்கண்டுடன் பருகிட சிறுநீரகப் பிரச்சினை சரியாகும். ஓமம், மிளகு, வெற்றிலை சேர்த்த கஷாயம் பருகிட மூட்டுவலி, தசைப்பிடிப்பு விலகும்.

வெற்றிலையை அரைத்து ஆமணக்கு எண்ணெயில் குழைத்து நெற்றியில் பற்றுப் போட தலைவலி, புண், தேமல், படை நீங்கும். விளக்கெண்ணெய் தடவிய வெற்றிலையை வாட்டிப் போட்டால் கை, கால் வீக்கம் குறையும்.

# பக்கவிளைவற்ற ஃபிசியோதெரபி

விதவிதமான, புதிது புதிதான உடல் உபாதைகளைத் தாண்டி, உடல் சோர்வு, வலி, காயப்பட்டுக் கொள்ளுதல் என இன்னும் பல விதங்களில் நம் உடல் பாதிக்கப்படுகிறது.

அப்படியான காயங்களுக்கு, உடல் சோர்வுக்கெல்லாம் உகந்த சிகிச்சையாக ஃபிசியோதெரபி சிகிச்சை பார்க்கப்படுகிறது.

காயங்களைக் கண்டறிந்து, உடல் ரீதியாகவே சிகிச்சை தரும் அறிவியலே ஃபிசியோதெரபி. இதன் முக்கிய நோக்கம் வலியைக் குறைப்பதும், செயலிழப்பை குறைப்பதுமே.

சிறியவர் முதல் பெரியவர் வரை, தசை, எலும்பு, வாதம், சுவாசம், நரம்பு மண்டலம் தொடர்பான எந்த காயங்களுக்கும், விளையாட்டில் ஏற்படும் காயங்களுக்கும், ஆண் / பெண்களின் ஆரோக்கியத்துக்காகவும் ஃபிசியோதெரபி பயன்படும்.

உபாதைகளையும் மீறி வாழ்க்கையை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள ஃபிசியோதெரபி உதவும். சிறந்த வாழ்க்கைத் தரத்தை உறுதிசெய்வதே பிசியோதெரபி நிபுணரின் வேலை. இது வலி நிவாரணம் மூலமாக



வும், உடற்பயிற்சி மூலமாகவும் நடக்கும். இதனால் உடலில் நடக்கும் மாற்றங்களுக்கு வளைந்து கொடுக்க முடியும். சுதந்திரமாக செயல்பட முடியும். வலி நிவாரணத்துக்கான ஆலோசனைகளையும் பிசியோதெரபி நிபுணர் வழங்குவார். ஆரோக்கியம் மேம்பட உடற்பயிற்சியும் தரப்படும்.

முதல் சந்திப்பில் உடல் நிலை, தினசரி நடவடிக்கைகளை செய்ய விட முடியாமல் தடுக்கும் உபாதைகள் போன்றவற்றைப் பேச முடியும். உடலை பற்றிய ஆய்வை பிசியோதெரபி நிபுணர் மேற்கொள்வார். பிறகு குறிப்பிட்ட நபருக்கு ஏற்றவாரு, ஆரோக்கியமாக வாழ ஏதுவான சிகிச்சை முறைகளை திட்டமிடுவார்.

காயத்துக்கு பின் ஒருவர் சரியாக எழுந்து நடமாட பிசியோதெரபி உதவுகிறது. மூட்டுகளில் இருக்கும் மெல்லிய திசுக்களை அசைத்தல், உடலில் இருக்கும் நச்சை நீக்குதல், தசைகளை தளர்த்து ஓய்வெடுத்தல் என இந்த சிகிச்சை நடக்கும். ஒரு நபரின் உடல் வலிமையை மேம்படுத்தவும், அதிகரிக்கவும் பிசியோதெரபி உதவும். அதே நேரத்தில் இருக்கும் உபாதைகளையும் சரிசெய்யும்.

காயத்தின் தன்மை அல்லது உபாதையின் தன்மையைப் பொருத்து பிசியோதெரபி நிபுணர் பல்வேறு சிகிச்சை முறைகளைக் கையாளுவார். பல்வேறு விசேஷ பரிசோதனைகளுக்குப் பிறகு நிபுணர் சிகிச்சையைத் தொடங்குவார்.

முக்கியமாக, பிசியோதெரபியினால் குறைந்த அளவு பக்க விளைவுகளே நேரும்.

வலி: உடலை வளைக்கும்போது வலி ஏற்படலாம். உடல் சரியாகும் போது அந்த வலி அதிகமாகும்.

வீக்கம்: இது பொதுவானதே. ஏனென்றால் திசுக்கள், சதை விரியும்போது வலுவடையும். அதே நேரத்தில் வீக்கம் ஏற்படும். சிகிச்சைக்குப் பின் குளிர்ந்த / சூடான ஒத்தடம் கொடுக்கும் போது வலி, வீக்கம் சரியாகும்.

அடிப்படை விதியே முழு சிகிச்சையை பிசகின்றி முடிப்பதுதான். வலி மற்றும் வீக்கம் காரணமாக சிகிச்சை தடைபட்டால் அது உபாதையை இன்னும் மோசமாக்கி நிவாரணத்தையும் தாமதமாக்கும். தேவை என்ன என்பது குறித்து பிசியோதெரபி நிபுணரிடம் பேசவேண்டும். அப்போது தான் விரைவில் குணம் பெறத் தேவையான அறிவுரைகளை அவர் வழங்குவார்.

### நிவாரண காலம்

ஒவ்வொரும் வித்தியாசமனாவர்கள். அதனால் குறிப்பிட்ட நிவாரண காலம் என்று எதுவும் கிடையாது. அது நபருக்கு நபர், காயத்தின் தன்மை பொருத்து மாறும். ஒருவர் மற்றவரை விட சீக்கிரம் நிவாரணம் பெறலாம். அது அவர்களின் வலி தாங்கும் அளவு மற்றும் காயத்தின் தன்மையைப் பொருத்தது.


### இதன் பலன் எவ்வளவு நாள் நீடிக்கும்?

ஒரு அறுவை சிகிச்சை அல்லது காயத்துக்குப் பின், ஒருவரின் உடல் முழுமையாக மீள பிசியோதெரபி மிக முக்கியமானது. சிகிச்சை காலம் முழுவதும் தவறாமல் எல்லா பயிற்சிகளையும் அக்கறையுடன் செய்வீர்களென்றால், பிசியோதெரப்பி உங்களை பரிபூரணமாகக் குணப்படுத்தி, ஆரோக்கியமான, சுதந்திரமான வாழ்க்கை வாழ உதவும்.

### இதற்கான மாற்று என்ன?

மாற்று சிகிச்சை என்றால், உடற்பயிற்சி, உடற்பயிற்சி மேலும் உடற்பயிற்சி மட்டுமே.

# வாட்ஸ்அப்பில் ஏற்பட்ட புதிய மாற்றங்கள்



**வா**ட்ஸ்அப் பேஸ்புக் நிறுவனத்தின் கைகளுக்குச் சென்ற பிறகு அதில் சேர்க்கப்பட்ட வசதிகள் சற்று அதிகம்தான். பயனாளர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக பல வசதிகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் வாட்ஸ்அப்பில் சேர்க்கப் படுகின்றன. கடந்த மூன்று மாதங்களுக்குள்ளாக வாட்ஸ்அப் அறிமுகப்படுத்திய புதிய வசதிகள் மற்றும் கூடிய விரைவில் வாட்ஸ்அப்பில் சேர்க்கப் படவுள்ள வசதிகள் இவைதாம்.

### பிரைவேட் ரிப்ளை

வாட்ஸ்அப்பில் அண்மையில் சேர்க்கப்பட்ட வசதிகளில் இதுவும் ஒன்று. ஒரு குரூப்பில் மெசேஜ் அனுப்பும்போது அதை அந்தக் குரூப்பில் உள்ள அனைவருமே பார்க்க முடியும். வாட்ஸ்அப்பில் குரூப் என்பதே அதற்காகத்தான் என்றாலும் சில சமயங்களில் இது சிக்கலை ஏற்படுத்தும் வாய்ப்புகளும் உண்டு. எடுத்துக்காட்டாக ஒரே ஒருவருக்கு மட்டும் ஒரு தகவலை தெரியப்படுத்த வேண்டும் என வைத்துக்கொண்டால் அதை மற்றவர்களுக்குத் தெரியாமல் குரூப்பில் அனுப்புவது முடியாத விஷயம். ஆனால் தற்பொழுது பிரைவேட் ரிப்ளை வசதி மூலமாகக் குறிப்பிட்ட ஒருவருக்கு மட்டும் தனியாக மெசேஜை அனுப்பலாம். அதை வேறு யாரும் பார்க்க முடியாது. நீங்கள் பீட்டா (Beta) பரிசோதனையாளர் என்றால் இந்த வசதியை இப்பொழுதே பயன்படுத்திப் பார்க்க முடியும். இந்த வசதி தற்பொழுது ஆண்ட்ராய்டு பயனாளர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது.

### ஸ்டிக்கர்

கடந்த சில மாதங்களாக பீட்டா பரிசோதனையாளர்களுக்கு மட்டும் கிடைத்த இது இறுதியாகக் கொடுக்கப்பட்ட அப்டேட்டிற்கு பிறகு பெரும்பாலோனோருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நீண்ட காலமாக வாட்ஸ்அப்பில் எதிர்பார்க்கப்பட்ட வசதி இது. தற்பொழுது சிலருக்கு பிறர் அனுப்பும் ஸ்டிக்கர்களை பார்க்க முடிந்தாலும், அனுப்ப முடியாமல் இருக்கிறது. இது அடுத்தடுத்த அப்டேட்களில் சரி செய்யப்படும் வாய்ப்புகள் உண்டு. ஆனால் வந்த வேகத்திலேயே சர்கார் விஜய் வரை அப்டேட்டாக இருக்கிறது ஸ்டிக்கர்.


### வாட்ஸ்அப் பக்அப்

வாட்ஸ்அப் சாட்களின் பக்அப் தற்பொழுது கூகுள் டிரைவில் சேமிக்கப்பட்டு வருகிறது. அதில் மாற்றம் செய்யவிருக்கிறது வாட்ஸ்அப் நிறுவனம். குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு கூகுள் டிரைவில் சேமிக்கப்படும் வாட்ஸ்அப் சாட் பைல்களின் அளவு கணக்கில் கொள்ளப்படாது. இதன் மூலம் கூகுள் டிரைவில் வாட்ஸ்அப் சாட்களின் பக்அப் தவிர்த்து பிற பைல்களை சேமித்து வைத்துக் கொள்ள அதிக இடம் கிடைக்கும்.

அதே போல ஒரு வருடத்திற்கு மேல் அப்டேட் செய்யப்படாமல் இருக்கும் பக்அப் தானாகவே நீக்கப்படும் என்ற முடிவையும் எடுத்திருக்கிறது வாட்ஸ்அப் நிறுவனம்.

### Suspicious Link Indicator

வாட்ஸ்அப்பில் பரவும் ஸ்பேம் மெசேஜ்களால் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கு சேர்க்கப்பட்ட புதிய வசதி இது. ஒருவருக்குப் புதிதாக ஒரு மெசேஜ் வரும் போது அது ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தும் எனச் சந்தேகம் எழுந்தால் அதை வாட்ஸ்அப் எச்சரிக்கை செய்யும்.




### சைலைன்ட் மோட்

தற்பொழுது வாட்ஸ்அப் சாட்டில் ஏதாவது ஒன்றை மியூட் செய்து வைத்தால் அது தொடர்பான நோட்டிபிகேஷன்கள் மறைக்கப்படும். ஆனால் படிக்காத மெசேஜ்களின் எண்ணிக்கை மொபைலின் நோட்டிபிகேஷன் பகுதியில் காட்டப்படும். ஆனால் சைலைன்ட் மோட் மூலமாக மியூட் செய்யப்பட்டுள்ள சாட்டில் எவ்வளவு மெசேஜ் புதிதாக வந்திருக்கிறது என்பதும் சேர்த்தே மறைக்கப்பட்டு விடும். இந்த வசதி ஆண்ட்ராய்டு பயனாளர்களுக்கு மட்டுமே கிடைக்கும்.

### பிக்சர் இன் பிக்சர் வீடியோ மோட்

இதன் மூலமாக வாட்ஸ்அப்பில் வரும் வீடியோ லிங்க்குகளை வாட்ஸ்அப்பின் உள்ளேயே பார்க்க முடியும். இதற்கு முன்பு வரை லிங்கை கிளிக் செய்தால் அதற்குரிய ஆப்பில் மட்டுமே பார்க்க முடியும். ஆனால் தற்பொழுது இன்ஸ்டாகிராம், ஃபேஸ்புக் மற்றும் யூட்யூப் வீடியோக்களை




வாட்ஸ்அப்பின் உள்ளேயே பார்த்து ரசிக்க முடியும்.

### ஸ்வைப் டு ரிப்ளை

ரிப்ளை விஷயத்தில் வாட்ஸ்அப்பில் செய்யப்பட்டுள்ள பெரிய மாற்றம் இது. வழக்கமாக ஒரு மேசேஜிற்கு ரிப்ளை செய்வதற்கு அதை சில நொடிகள் அழுத்திப் பிடிக்க வேண்டியிருக்கும். ஆனால் இந்த புதிய வசதி மூலமாக மேசேஜை வலதுபுறமாக ஸ்வைப் செய்தால் எளிதாக ரிப்ளை செய்ய முடியும்.

### ஃபார்வேர்டு மெசேஜ் லிமிட்

வாட்ஸ்அப் நிறுவனத்திற்குப் பெரிய தலைவலியாக இருப்பது இந்த ஃபார்வேர்டு மெசேஜ்கள் தான். முக்கியமாகக் காலை வணக்கம், மாலை வணக்கம் என ஒன்று விடாமல் ஃபார்வேர்டு செய்யும் இந்தியர்களுக்கு அவசியமான தேவையாகவும் இருந்தது. இதன் மூலம் ஒரே நேரத்தில் ஐந்து பேருக்கு மேல் ஒரு மெசேஜை ஃபார்வேர்டை செய்ய முடியாது.

### Delete for Everyone வசதியில் மாற்றம்


சமீப காலத்தில் வாட்ஸ்அப்பில் புதிதாக சேர்க்கப்பட்ட வசதிகளில் பெரும் வரவேற்பைப் பெற்றது இதுவாகத்தான் இருக்கும். அதில் ஒரே ஒரு சிறிய மாற்றம் மட்டும் தற்பொழுது செய்யப்பட்டிருக்கிறது. அனுப்பப்பட்ட மெசேஜை திரும்பப் பெறும் கால அளவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எப்போதும் போல 1 மணி நேரத்திற்குள் தவறாக அனுப்பிய மெசேஜை 'டெலிட் ரிக்வெஸ்ட்' கொடுத்து அழித்துக் கொள்ள முடியும். அதாவது ஒரு மணி நேரத்திற்குள் அந்த மெசேஜை பெற்றவர்களும் (receiver) ஆன்லைன் வரவேண்டும். அப்போதுதான் 'டெலிட் ரிக்வெஸ்ட்' ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அழிக்கும் போது இருவருக்கும் மெசேஜ் அழிந்து விடும். ஆனால், 'டெலிட் ரிக்வெஸ்ட்' கொடுக்கப்பட்டு 13 மணி நேரத்திற்குப் பிறகு மட்டுமே ரிசிவர் ஆன்லைன் வருகிறார் என்றால் உங்கள் பக்கம் மட்டுமே மெசேஜ் அழியும். மறுபக்கம் மெசேஜ் அழியாது.

### வெக்கேஷன் மோட்

வாட்ஸ்அப்பில் ஒருவரின் சாட்டை மறைத்து வைப்பதற்கு Archive செய்தால் போதும். ஆனால் அதில் ஏதாவது புதிதாக மெசேஜ் வரும்போது மறைந்திருக்கும் சாட் பகுதிக்கு அது வெளியே வந்து விடும் என்பது இதில் தற்பொழுது இருக்கும் ஒரு குறை. அதை வெக்கேஷன் மோட் மூலமாகச் சரி செய்ய முடியும். இந்த வசதி தற்பொழுது பரிசோதனையில் இருக்கிறது. இது செயல்பாட்டிற்கு வந்தால் Archive செய்த சாட்கள் புதிதாக மெசேஜ் வந்தாலும் மறைந்தே இருக்கும்.

### வாட்ஸ்அப் பேமன்ட்

டிஜிட்டல் முறையில் பணப் பரிமாற்றம் செய்வது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதில் வாட்ஸ்அப்பும் கூடிய விரை





வில் இணையவிருக்கிறது. வாட்ஸ்அப் மூலமாகப் பிறருக்கு பணம் அனுப்பும் வசதி தற்பொழுது பீட்டா பரிசோதனையாளர்கள் சிலருக்குத் தரப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. பணம் தொடர்பான விஷயம் என்பதால் நீண்ட காலமாகவே பரிசோதனையிலேயே இருந்து வருகிறது இந்த வசதி. எப்படியும் இன்னும் அடுத்த சில அப்டேட்களில் இந்த வசதி அனைவருக்கும் கிடைக்கும் என்று நம்பலாம்.

# வாட்ஸ்அப் ஸ்டிக்கர்களை எப்படி உருவாக்குவது?

**வ**ரிசையாக வாட்ஸ்அப் க்ரூப்களில் வந்துவிழும் ஸ்டிக்கர்களைப் பார்ப்பவர்களுக்கு இரண்டு சந்தேகங்கள் எழும். எப்படி இவற்றை அனுப்புவது, எப்படி இவற்றை உருவாக்குவது. பதில் இதோ...


கடந்த சில நாள்களாகவே, உங்கள் அனைவரது வாட்ஸ்அப் இன்பாக்ஸ்களிலும் புதிய ஸ்டிக்கர்கள் எட்டிப்பார்க்கத் தொடங்கியிருக்கும். ஏற்கெனவே டெலிகிராம், ஹைக் போன்ற இன்ஸ்டன்ட் மெசெஞ்சர்களில் மட்டுமே இருந்த இந்த வசதியை தற்போது வாட்ஸ்அப்பும் தன் ஃபிளாட்பார்மில் களமிறக்கிவிட்டது. இந்தியாவில் முன்னணி இன்ஸ்டன்ட் மெசேஜிங் சேவை என்பதால் வாட்ஸ்அப்பில் ஸ்டிக்கர்கள் எதிர்பார்த்ததைவிடவும் மிக விரைவாகவே ஹிட் அடித்துள்ளன. இத்தனைக்கும் இந்த வசதி அனைவருக்கும் முழுமையாக வரவில்லை. கடந்த வாரம் முதல் கொஞ்சம் கொஞ்சமாக அதிக பயனர்களுக்கு இதை விரிவுபடுத்தி வருகிறது வாட்ஸ்அப். குறைந்தது 2.18.329 வெர்ஷன் இருந்தாலே இந்த ஸ்டிக்கர்கள் எடுக்கும். சிலருக்கு வாட்ஸ்அப் ஸ்டிக்கர்கள் இன்பாக்ஸில் வந்தால் காட்டும். அதை ஃபார்வேர்டு செய்யவோ, க்ளிக் செய்யவோ முடியும். ஆனால், அவர்களின் கீ-போர்டில் அனுப்புவதற்கான ஸ்டிக்கர்கள் இருக்காது. இந்தப் பிரச்னை உங்களுக்கும் இருந்தால் உடனே வாட்ஸ்அப்பை அப்டேட் செய்யுங்கள். அப்படியும் வரவில்லை என்றால் இன்னும் வாட்ஸ்அப் உங்களை லிஸ்ட்டில் சேர்க்கவில்லை என அர்த்தம். எனவே இப்போதைக்கு ஸ்டிக்கர் ஃபார்வேர்டு செய்யமட்டும்தான் முடியும். கொஞ்சகாலம் பொறுத்திருங்கள்!



### வாட்ஸ்அப் ஸ்டிக்கர்

வாட்ஸ்அப் புதிய அப்டேட் வந்தவர்களுக்கும் சில சந்தேகங்கள் இருக்கும். எப்படி ஸ்டிக்கர்களை அனுப்புவது, எங்கிருந்து அவற்றை டவுன்லோடு செய்வது எனச் சின்னச் சின்ன குழப்பங்கள் இருக்கலாம். இதற்கான பதில்களை அடுத்தடுத்து பார்க்கலாம்.

வாட்ஸ்அப்பின் 2.18.329-க்கும் மேலான வெர்ஷன்களை வைத்திருப்பவர்கள் என்றால் நேராக வாட்ஸ்அப் கீ-போர்டு செல்லுங்கள். அங்கே இருக்கும் எமோஜி ஸ்மைலியை க்ளிக் செய்யுங்கள். இப்போது எமோஜிக்கள், GIF ஆகியவற்றின் பக்கத்தில் குட்டியாக இன்னொரு ஐகான் புதிதாக வந்திருக்கும். அதுதான் ஸ்டிக்கர். அதை க்ளிக் செய்தால் Default ஸ்டிக்கர்கள் லோட் ஆகும். இதற்கு மேலும் புதிய ஸ்டிக்கர்கள் வேண்டுமானால் ஓரத்தில் இருக்கும் '+' குறியீட்டை க்ளிக் செய்யவேண்டும். இப்போது வாட்ஸ்அப்பின் ஸ்டிக்கர் ஸ்டோர் ஓப்பன் ஆகும். எந்த ஸ்டிக்கர்கள் வேண்டுமானாலும் க்ளிக் செய்து பார்த்துக்கொள்ளலாம். தேவைப்பட்டால் டவுன்லோடு செய்து, My Sticker பகுதியில் சேர்த்துக்கொள்ளலாம். இவையனைத்தும் போக இன்னும் லேட்டஸ்ட் ஸ்டிக்கர்கள் வேண்டுமென்றால் Get More Stickers ஆப்ஷனை க்ளிக் செய்து, ப்ளே ஸ்டோரில் இருக்கும் புதிய ஸ்டிக்கர்களை டவுன்லோடு செய்துகொள்ளலாம். உடனே அவை உங்கள் வாட்ஸ்அப்பில் அப்டேட் ஆகிவிடும். இந்த ஸ்டோரிலேயே தீபாவளி வாழ்த்துகள், கார்ட்டூன் கதாபாத்திரங்கள், எமோஜி ஸ்டிக்கர்கள் எனச் சில முக்கியமான ஸ்டிக்கர்கள் கிடைத்துவிடும். இதெல்லாம் போக நாமும் தனியாக ஸ்டிக்கர்கள் உருவாக்கிட முடியும். சமீபத்தில் வாட்ஸ்அப்பில் சுற்றிக்கொண்டிருந்த சர்கார் ஸ்டிக்கர்கள், மாரி ஸ்டிக்கர்கள் அனைத்தும் இப்படி உருவாக்கப்பட்டவைதான். சரி...எப்படி புது ஸ்டிக்கரை உருவாக்குவது?




### ஸ்டிக்கர்கள் உருவாக்கும் முறை

இதற்கு இரண்டு வழிகள் உண்டு. முதலாவது, வாட்ஸ்அப் சொல்லும் வழி. இது எளிதானதுதான் என்றாலும், இதற்கு கொஞ்சம் கோடிங் தெரிந்திருப்பது அவசியம். கோடிங் ஓரளவுக்குத் தெரியும் என்றால்கூட இவற்றை உருவாக்கிடலாம். ஆண்ட்ராய்டு மற்றும் டிஓஎஸ் இரண்டிலும் ஸ்டிக்கர்களை உருவாக்கிடலாம். இதற்காக வாட்ஸ்அப்பின் அதிகாரபூர்வமான சோர்ஸ் கோடே Git Hub ல் கிடைக்கிறது.

இதைப் பயன்படுத்தி நமக்குத் தேவையான இமேஜ்களை பேக் செய்து, புதிய ஸ்டிக்கர் பேக்குகளை தயாரித்துவிடலாம். Git Hub பற்றி தெரிந்துகொள்வதற்காக நிறைய டுட்டோரியல் வீடியோக்களே இணையத்தில் கிடைக்கின்றன. இல்லை, இதெல்லாம் கொஞ்சம் கஷ்டம்பா என்றால் இரண்டாவது வழியை நாடலாம். அதாவது, தேர்ட் பார்ட்டி ஆப். இது வாட்ஸ்அப்பின் அதிகாரபூர்வ ஆப் அல்ல. ஆனால், மிக எளிதாக இவற்றில் ஸ்டிக்கர்களை உருவாக்கிட முடியும். இதுவும் ஆண்ட்ராய்டுக்கு மட்டும்தான். iOS க்கு அல்ல; இது எப்படி என்று பார்ப்போம்.

முதலில் கூகுள் ப்ளே ஸ்டோரில் Sticker maker for WhatsApp என்ற ஆப்பை டவுன்லோடு செய்துகொள்ளவும். இப்போது உள்ளே சென்றதும் Create a new stickerpack என்ற ஆப்ஷன் இருக்கும். அதனை க்ளிக் செய்தால், நாம் கிரியேட் செய்யப்போகும் ஸ்டிக்கர் தொகுப்பின் பெயரைக் கேட்கும். அதையும், ஸ்டிக்கரின் Author பெயராக உங்கள் பெயரையும் கொடுத்தால் உடனே ஒரு Folder ஓப்பன் ஆகும்.

அந்த ஃபோல்டரை ஓப்பன் செய்தால் உள்ளே முழுவதும் Empty Tray-களாக இருக்கும். இவையனைத்தும் நம் புதிய ஸ்டிக்கர்களுக்கான இடம். முதலில் Tray Ic-on என்பதை க்ளிக் செய்யவேண்டும். இதுதான் ஸ்டிக்கர் பேக்கின் முகப்புப் படமாக இருக்கும். இதைத் தேர்வு செய்யும்போது நம்முடைய கேமரா மற்றும் ஃபைல் மேனேஜர்களுக்கான அனுமதியை ஆப் கேட்கும். அதைக் கொடுத்தால்தான் நம்மால் இமேஜ்களை இங்கே புராசஸ் செய்யமுடியும்.

காலியாக இருக்கும் ஒவ்வொரு ஸ்டிக்கர் ஐகானையும் க்ளிக் செய்தால், புதிதாக ஒரு இமேஜை கேமரா மூலம் போட்டோ எடுக்கவோ அல்லது ஏற்கெனவே ஃபைல் மேனேஜரில் இருக்கும் இமேஜை இங்கே கொண்டுவரவோ முடியும். நமக்குத் தேவையான இமேஜை லோட் செய்ததும், அந்த இமேஜில் எந்தப் பகுதிவரை ஸ்டிக்கரில் தெரியவேண்டுமோ அதை அந்த இமேஜின் மீது மார்க் செய்யவேண்டும். டச் ஸ்க்ரீனில், விரல்கள் மூலமாக இதைச் செய்துவிட முடியும். துல்லியமான கட்டிங்கிற்காக படத்தை ஜூம் செய்துகொள்ளலாம்.

அல்லது முழுப் படமும் அப்படியே ஸ்டிக்கராக வேண்டுமெனில், Use without Cutting ஆப்ஷனைப் பயன்படுத்தலாம்.

இப்படிக் குறைந்தது மூன்று ஸ்டிக்கர்களாவது கிரியேட் செய்தால்தான் வாட்ஸ்அப்புடன் இணைக்க முடியும். அதிகபட்சம் 30 ஸ்டிக்கர்கள் வரை உருவாக்கலாம்.

இப்படி நமக்குத் தேவையான ஸ்டிக்கர்கள் அனைத்தையும் உருவாக்கிவிட்டு, Publish Sticker Pack என்பதை க்ளிக் செய்தால், ஸ்டிக்கர் பேக் நம் வாட்ஸ்அப்புடன் இணைக்கப்பட்டுவிடும். பின்னர் இந்த ஸ்டிக்கர்களை வழக்கம்போல வாட்ஸ்அப் கீ-போர்டு பகுதிக்குச் சென்று பார்க்க முடியும். அவ்வளவுதான்!

# தேடல் வரலாற்றை நீக்கலாம்!

**இ**ணைய நிறுவனங்கள் தகவல்களைத் திரட்டுவது தொடர்பான சர்ச்சை வலுப்பெற்றுவருகிறது. இந்நிலையில் தேடி இயந்திரமான கூகுள், பயனாளிகள் தங்கள் தேடல் வரலாறுத் தொடர்பான தகவல்களை நீக்குவதை எளிதாக்கி இருக்கிறது.

தேடி இயந்திரமான கூகுள், பயனாளிகளின் தேடல் தொடர்பான பல்வேறு தகவல்களைச் சேகரித்து, சேமித்து வைக்கிறது. பயனாளிகளுக்கு ஏற்ற தேடல் முடிவுகளை அளிக்கவும், அவர்கள் தேடல் விருப்பங்களுக்குப் பொருத்தமான விளம்பரங்களை அளிக்கவும் கூகுள் இந்தத் தகவல்களைப் பயன்படுத்துகிறது. அதாவது, ஒருவரின் தேடல் வரலாறு முழுவதையும் கூகுள் சேமித்து வைக்கிறது. தனிப்பட்ட அடையாளங்களோடு இந்தத் தகவல்கள் சேமிக்கப்படுவதில்லை என்று கூகுள் சொல்கிறது.


மேலும், கூகுள் தன் பங்குக்குத் தங்களைப் பற்றி எந்தவிதமான தகவல் சேகரிக்கப்படுகிறது என்பதை அறிந்து கொள்ளும் வசதியை அளிக்கிறது. அதோடு தேடல் வரலாற்றை நீக்கும் வசதியையும் அளிக்கிறது. ஆனால், இந்த வசதியைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் கொஞ்சம் மெனக்கெட வேண்டும். கூகுள் கணக்கு பகுதிக்கு உள்ளே சென்று தேடிப்பார்க்க வேண்டும்.

இப்போது இந்த வசதியை மிகவும் எளிதாகக் கண்டறியக்கூடிய வகையில் கூகுள் தனது முகப்பு பக்கத்திலேயே அறிமுகம் செய்வதாகத் தெரிவித்துள்ளது. தனியுரிமை கவலை உள்ளவர்கள், தங்கள் தரவுகளைக் கட்டுப்படுத்துவதில் ஆர்வம் உள்ளவர்கள் இந்த வசதியைப் பயன்படுத்தலாம்.

# ஆபத்துக் காலத்தில் உதவும் செயலி

**த**னிநபர் பாதுகாப்பு நோக்கோடு உருவாக்கப்பட்டுள்ள செயலிகள் வரிசையில் வருகிறது 'ஷேக் 2 சேப்டி' செயலி. இந்தச் செயலியை நிறுவுவதன் மூலம், அவசர காலத்தில் உதவி தேவையெனில், போனை 'ஷேக்' செய்வதன் மூலம் நெருங்கிய நபர்களுக்கு உதவி கோரிக்கை அனுப்பி வைக்கலாம். இருப்பிடம் பற்றிய தகவல், ஒளிப்படமும் அனுப்பி வைக்கப்படும். பவர் பட்டனை நான்கு முறை அழுத்துவதன் மூலம் இதை இயக்கலாம்.

செயலியை நிறுவியவுடன் அவசர காலத்தில் தொடர்புகொள்ள வேண்டிய எண்கள் உள்ளிட்டவற்றைப் பதிவேற்றிக்கொள்ள வேண்டும். பெண்கள், முதியவர்கள், சிறார்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் இந்தச் செயலி பயனுள்ளதாக இருக்கும். பேரிடர் காலங்களில் உதவி கோரவும் இந்தச் செயலி கைகொடுக்கும்.



# மாதவிலக்கு பிரச்சினைக்கு கட்டுக்கொடி



மாதவிலக்கின் போது அதிக உதிரப்போக்கு, சிறுநீரில் ரத்தம் கலந்து போகுதல், சீதபேதி, வெள்ளைப்போக்கு பிரச்னைகளுக்கு கட்டுக்கொடி, துத்தி செடியை பயன்படுத்தி தீர்வு காணலாம். கிராமங்களில் எளிதில் கிடைக்க கூடியது கட்டுக்கொடி. இதன் கொடி பார்ப்பதற்கு கயிறு மாதிரி இருக்கும். நீண்டு வளர்ந்து இருக்கும். இதன் இலை நாக்கு வடிவத்தில் காணப்படும். பனை மரம், ஈச்ச மரத்தின் மீது கட்டுக்கொடி படர்ந்து காணப்படும்.


இது, ரத்தத்தை கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது. கட்டுக்கொடியை பயன்படுத்தி மாதவிலக்கு சமயத்தில் ஏற்படும் அதிக ரத்தப்போக்கை கட்டுப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். கட்டுகொடி இலைகள் 10 எடுத்துக் கொள்ளவும். இதை துண்டுகளாக்கி தண்ணீரில் போடவும். இலைகளை கைகளால் நன்றாக பிசையவும். இலைசாறு தண்ணீரில் கலந்து விடும். பின்னர், இலை சக்கையை மட்டும் எடுத்துவிட்டு தண்ணீரை அரை மணிநேரம் வைத்திருந்தால் ஜெல்லி போன்று மாறும்.

ஒரு ஸ்பூன் அளவுக்கு எடுத்து காலை மற்றும் மாலை வேளைகளில் சாப்பிட்டு வர அதிகப்படியான உதிரப்போக்கு கட்டுக்குள் வரும். சீத கழிச்சலுக்கு இது மருந்தாகிறது. அதிக உதிரப்போக்கை கட்டுக்குள் கொண்டுவரும் அற்புதமான மருந்தாக கட்டுக்கொடி விளங்குகிறது. மரத்தின் பட்டையை பயன்படுத்தி மாதவிலக்கின்போது ஏற்படும் அதிக உதிரப்போக்கை கட்டுப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும் ஒதிய மரப்பட்டையை பொடியாக்கி கொள்ளவும்.

இந்த பொடியை 2 கிராம் அளவுக்கு எடுக்கவும். இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்க்கவும். பின்னர், ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி 50 முதல் 100 மில்லி அளவுக்கு காலை, மாலை வேளையில் குடித்துவர மாதவிலக்கின் போது ஏற்படும் அதிக ரத்தப்போக்கு கட்டுக்குள் வரும்.துத்தி செடியை பயன்படுத்தி ரத்த போக்கை கட்டுப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். சாலை ஓரங்களில் கிடைக்க கூடியது துத்தி செடி.

இதனுடைய பூ மஞ்சள் நிறத்தில் இருக்கும். மாலை நேரத்தில் பூக்கும் தன்மை உடையது. துத்தி செடியின் காய்கள் சக்கரம் போன்று காணப்படும். இலைகள் இதய வடிவில் இருக்கும். துத்தி இலையை பசையாக அரைத்து எடுக்கவும். பெரிய நெல்லிக்காய் அளவுக்கு பசையை எடுத்து அரை டம்ளர் காய்ச்சிய பால் அல்லது மோரில் போட்டு கலக்கவும். இதை குடித்துவர வலியுடன் கூடிய அதிக ரத்தப்போக்கு கட்டுப்படும். துத்தி இலைகள் ரத்தத்தை கட்டுப்படுத்தும். துத்தி செடியின் வேர்கள் சிறுநீரக பழுதை சரிசெய்யும் தன்மை கொண்டது.

# இரவில் வியர்ப்பது ஆபத்தா?



பகல் பொழுதுகளில் வியர்ப்பது இயற்கை. சில பெண்களுக்கு இரவில்தான் அதிகமாக வியர்க்கும். சமையலறை வெப்பம், வீட்டின் காற்றோட்டமற்ற சூழல், உடையின் தன்மை போன்றவற்றின் காரணமாக இரவில் வியர்ப்பது சாதாரணமானது. ''எந்தக் காரணமும் இல்லாமல், உடையும், படுக்கையும் நனைகிற அளவுக்கு உங்களுக்கு வியர்த்துக் கொட்டுகிறது என்றால் அதை சாதாரணம் என அலட்சியப் படுத்தக் கூடாது என்கிறார் மருத்துவர் நிவேதிதா. இரவு நேர அதீத வியர்வைக்கான காரணங்களைப் பற்றிப் பேசுகிறார் அவர்.

## மெனோபாஸ்

மெனோபாஸ் வயதில் இருக்கும் பெண்களுக்கு அதன் முக்கியமான அறிகுறிகளில் ஒன்று இப்படிப்பட்ட இரவு நேர வியர்வை. உடல் முழுக்க சூடாவது போன்று உணர்வார்கள். அதன் தொடர்ச்சியாக அதீத வியர்வையும் இருக்கும். இது பயப்படக் கூடியது அல்ல.

இடியோபதிக் ஹைப்பர்ஹிட்ரோசிஸ் (Idiopathic hyperhidrosis) என்கிற பிரச்னை சிலருக்கு இருக்கலாம். இதில் உடலானது கண்டுபிடிக்கும்படியான எந்தவித மருத்துவக் காரணங்களும் இல்லாமல் தானாகவே அதிகளவு வியர்வையை சுரந்து கொண்டே இருக்கும்.

தொற்றுகள் ஏற்படுவதும் ஒரு காரணம். குறிப்பாக டி.பி. தொற்றுக்கும் இந்த இரவு நேர வியர்வைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அது தவிர இதய வால்வுகளிலும் எலும்புகளிலும் வீக்கத்தை ஏற்படுத்துகிற பாக்டீரியா தொற்று மற்றும் சீழ் பிடித்தல் போன்றவையும் இரவு நேரத்தில் வியர்வையை ஏற்படுத்தக்கூடும். இரவு நேர வியர்வைக்கு ஹெச்.ஐ.வி. தொற்று இருப்பதும் ஒரு காரணம்.

சில வகை புற்றுநோய்களின் ஆரம்ப அறிகுறியாகவும் இரவு நேர வியர்வை இருப்பது உண்டு. நிணநீர் சுரப்புப் புற்றுநோயின் முக்கிய அறிகுறி இது. திடீர் எடைக்குறைவு, காய்ச்சல் போன்றவற்றோடு இந்த வியர்வையும் இருப்பவர்கள் புற்றுநோயாக இருக்குமோ என சோதித்துக் கொள்வது சிறந்தது.

மன அழுத்தத்தைக் குறைக்கும் மருந்துகளை எடுத்துக் கொள்வோருக்கு இத்தகைய வியர்வை சகஜம். இந்த மருந்துகளை எடுத்துக் கொள்வோரில் 8 முதல் 22 சதவிகிதம் பேருக்கு இந்தப் பிரச்னை இருப்பதாகச் சொல்கிறார்கள். மனநலத்துக்காக எடுத்துக் கொள்கிற வேறு சில மருந்துகளும் இதே விளைவை ஏற்படுத்தலாம். காய்ச்சலைத் தணிக்க எடுத்துக் கொள்கிற சில மருந்துகளின் விளைவாகவும் இரவு நேரவியர்வையை உணரலாம்.

ரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறையும் போதும் வியர்க்கும். இன்சுலின் மற்றும் நீரிழிவு மருந்துகள் எடுத்துக் கொள்வோருக்கு இரவில் திடீரென சர்க்கரை அளவு குறைந்து, அதிக அளவில் வியர்க்கும். ஹைப்பர் தைராய்டிசம் உள்ளிட்ட சில வகை ஹார்மோன் கோளாறுகளின் காரணமாகவும் உடல் சூடாவதும், இரவில் வியர்ப்பதும் இருக்கும்.

பக்கவாதம், தன்னாட்சி நரம்பியக்கத் தடை பிரச்னை உள்ளிட்ட நரம்பு மண்டலக் கோளாறுகள் இருப்பவர்களுக்கும் எப்போதுமே வியர்வை அதிகமாகவும், இரவில் மிக அதிகமாகவும் இருக்கும். எனவே, அதீத வியர்வையை உடல்வாகு என்று அலட்சியம் செய்யாமல் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டியது அவசியம்.

# உடல் எடை...அவதானம்!



புகுந்த வீட்டுக்கு ஸ்லிம்மாக போகிற பெண்கள் கொஞ்சநாளில் புஷ்டியாக மாறிடுறாங்க... இதுக்கு கல்யாணத்துக்கு அப்புறம் வெயிட் போடறது சகஜம்தானேன்னு சமாதானம் வேற... அவர்கள் செய்யும் தவறே அதிக எடை கூடுவதற்கு காரணமாகிறது.

★ சமைக்கும் போது, டேஸ்ட் பாக்குறேன், லைட்டா பசிக்குது இப்படி பலவித காரணங்களை சொல்லி உடனடி பிரேக்ஃபாஸ்ட்ல ஆரம்பிச்சு மினி மீல்ஸ், ஈவ்னிங் குட்டியா ஸ்நாக்ஸ்னு கிச்சன்ல சாப்பிட்டுகிட்டே சமைக்கறீங்களா..? குடும்பத்துல எல்லாரும் சாப்பிட்டதுக்கு அப்புறம் மிச்சமாகுற உணவை சாப்பிடுவது போன்ற பழக்க வழக்கங்கள் தொடரும் பட்சத்தில், பெண்கள் தங்களது நாற்பது பிளஸ் வயதில் மெடிக்கல் பில்லுக்கு தனி பட்ஜெட் போட வேண்டி வரும் பெண்களே...

★ வீட்டில் அம்மி, உரல்னு எல்லாம் இருந்தால் அதை பயன்படுத்துங்க. கிரைண்டர், மிக்சின்னு போனா, சில ஆண்டுகளுக்கு பின்னர் உடல் எடையை குறைக்க ஜிம்முக்குத்தான் போக வேண்டும்.

★ காலையில் ஆரம்பிச்சு வீட்டு வேலைகள் எல்லாத்தையும் மதியமே முடிச்சிட்டு, லஞ்ச், டின்னர்னு எல்லாமே டி.வி முன்னாடி உட்கார்ந்த இடத்துலயே பண்றது, மதிய சாப்பாட்டுக்கு பின்னாடி தூக்கத்தை வழக்கமாக்குறது போன்றவற்றை இன்றே கைவிட்டுங்கள். அதற்கு பதிலாக ஹோம் க்ளீனிங், கார்டனிங்னு சின்ன சின்ன வேலை பாத்தீங்கன்னா நீங்கள் பிட்டாக இருப்பீர்கள்.

★ தினமும் மூன்று முறைக்கு மேல் காபி, டீ குடிக்க வேண்டாம். அதற்கு பதிலாக சமையலுக்கு காய்கறி வேக வைக்கும் போது, கூடுதலாக ஒரு கப் தண்ணீர் சேர்த்து, காய்கறி சூப் தயார் செய்து குடிக்கலாம். இதனால் ஆரோக்கியமும், அழகும் நிரந்தரமாக இருக்கும்.

★ வேலைக்கு போகாம வீட்லயே இருந்தாலும், வீடு பெருக்க, துடைக்க, துணி துவைப்பது போன்ற வேலைகளை சோம்பேறித்தனம் இல்லாமல் பார்த்தால், உடல் எடை அதிகரிக்காமல் இருக்கும்.

★ குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்வது துவங்கி அருகிலிருக்கும் கடைக்குகூட இருசக்கர வாகனத்தில் அழைத்துச் செல்லும் பழக்கத்தை தவிர்த்து, இது போன்ற சிறு விஷயங்களுக்காக குறைந்த பட்சம் ஒரு நாளில் 2-3 கி.மீ தூரம் நடக்க பழகிக் கொள்ளுங்கள். நீங்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான் உங்கள் குழந்தைகளை நீங்கள் ஆரோக்கியமாக பார்த்துக்கொள்ள முடியும்.

# கர்ப்பகால நீரிழிவு



கர்ப்பக் காலத்தில் அழையா விருந்தாளியாக வந்துசெல்லும் நோய், கர்ப்பக் கால சர்க்கரை நோய். நாம் சாப்பிடும் உணவு குளுகோஸாக மாற்றப்பட்டு ரத்தத்தில் கலக்கிறது. கணையத்தில் சுரக்கும் இன்சுலின் இந்த குளுகோஸை நம்முடைய உடல் திசுக்கள் பயன்படுத்தும்படி செய்கிறது.

பெண்கள் 30 வயதுக்கு மேல் கர்ப்பம் அடைதல், அதிக எடை உள்ள பெண்கள், முந்தைய கர்ப்பகாலத்தில் ஏற்கெனவே சர்க்கரை நோய் இருந்தாலோ, மனநல நோய் அல்லது ஸ்டீராய்ட் மருந்து உட்கொண்டிருந்தாலோ அல்லது குடும்பத்தில் யாருக்கேனும் சர்க்கரை நோய் பிரச்னை இருந்தாலோ அவர்களுக்குச் சர்க்கரை நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

கர்ப்பக் காலத்தில் நஞ்சுக்கொடி, குழந்தையின் வளர்ச்சிக்காகப் பல்வேறு ஹார்மோன்களை சுரக்கிறது. கிட்டத்தட்ட இந்த அத்தனை ஹார்மோன்களும் இன்சுலின் செயல்பாட்டைப் பாதித்து, ரத்தத்தில் சர்க்கரை அளவை அதிகரிக்கச் செய்கிறது. இதையே கர்ப்பக் கால சர்க்கரை நோய் என்கிறோம்.

பொதுவாக, கர்ப்பக் காலத்தின் 20-வது வாரத்தில் இது ஏற்படும். பெரும்பாலும் பிரசவத்துக்குப் பிறகு இது மறைந்துவிடும். பெரும்பாலான கர்ப்பக் கால சர்க்கரை நோயை ஆரோக்கியமான உணவு மற்றும் உடற்பயிற்சியின் மூலம் கட்டுப்படுத்தலாம்.25 வயதைக் கடந்தவர்கள், பெற்றோருக்கு சர்க்கரை நோய் உள்ளவர்கள், உடல் பருமனானவர்கள் ஆரம்பத்திலேயே இது பற்றி டாக்டரிடம் ஆலோசனை பெற வேண்டும்.

கருத்தரித்த பெண்கள் அனைவரும் ரத்தத்தில் சர்க்கரை அளவைப் பரிசோதித்துக்கொள்வது மிகமிக அவசியம்.கருத்தரித்த 24-வது வாரத்தில் இருந்து 28-வது வாரத்துக்குள்ளாக 'இனிஷியல் குளுகோஸ் சேலன்ஜ்' டெஸ்ட் செய்துகொள்ள வேண்டும்.

இதைத் தொடர்ந்து, குறிப்பிட்ட கால இடைவெளியில் 'குளுகோஸ் டாலரன்ஸ் டெஸ்ட்' செய்துகொள்ள வேண்டும். கர்ப்பக் காலத்தில் சர்க்கரையைத் தவிர்க்க, உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். உணவில் நார்ச்சத்து அதிகமாகவும், கொழுப்பு மற்றும் கலோரி குறைவாகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டாம்.




# பருக்களை போக்கும் சிகிச்சைகள்

பருவ வயதில் தொடங்கி, பல வருடங்களுக்குப் பாடாகப் படுத்தும் பருப் பிரச்னையின் பின்னணி பற்றி கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம். பரு வரக் காரணம், யாருக்கு வரும், பருவை விரட்டும் அழகு சாதனங்கள் பற்றியும் தெரிந்து கொண்டோம். அதன் தொடர்ச்சியாக பருக்களைப் போக்கும் பார்லர் மற்றும் வீட்டு சிகிச்சைகள், பொதுவான ஆலோசனைகள்.

சோப்பும் தண்ணீரும் தினமும் இருவேளைகள் மிதமான சோப்பு மற்றும் தண்ணீர் கொண்டு முகத்தை நன்கு கழுவுவதுதான் பருக்களை வரவிடாமல் தடுக்கும். ஏற்கனவே வந்துவிட்ட பருக்களை விரட்ட இது உதவாது. ஆனால், முகத்தின் சருமம் சுத்தமாக இருந்தால் புதிதாக பருக்கள் வராமல் தடுக்கப்படும். முகத்தைக் கழுவுகிறேன் என்கிற பெயரில் அழுத்தித் தேய்க்கக்கூடாது. அது பருக்களையும் அதிகப்படுத்தும். சருமத்துக்கும் நல்லதல்ல.



## தவிர்ப்பது எப்படி?

★ பருக்கள் இருப்பவர்கள் காலையில் தினம் 2-3 முறைகள் மிக மிதமான கிளென்சர் கொண்டு முகம் கழுவ வேண்டும். உடற்பயிற்சி செய்கிற வழக்கமுள்ளவர்கள் அதை முடித்ததும் முகம் கழுவ வேண்டும்.

★ சிலர் பருக்கள் இருந்தால் ஆஸ்ட்ரின்ஜென்ட் உபயோகிப்பார்கள். சருமம் மிகவும் எண்ணெய் பசையுடன் இருப்பவர்கள்தான் ஆஸ்ட்ரின்ஜென்ட் உபயோகிக்க வேண்டும்.

★ பரு இருப்பவர்கள் சருமத்தை மட்டுமின்றி, கூந்தலையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அதிலும் எண்ணெய் வழிகிற கூந்தல் என்றால் ஒருநாள் விட்டு ஒருநாள் தலையை அலச வேண்டும்.

★ சருமத்துக்கான எந்த அழகு சாதனத்தை வாங்கினாலும் அதில் non&comedogen-c எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறதா எனப் பார்க்க வேண்டும். அத்தகைய பொருட்கள்தான் சருமத் துவாரங்களை அடைக்காது. சருமத் துவாரங்கள் அடைபட்டால் அது பருக்களாக வெளிக்கிளம்பும் வாய்ப்புகள் அதிகம்.

★ தினம் இருவேளைகள் மிதமான கிளென்சர் உபயோகித்து முகம் கழுவ வேண்டும்.

★ கிளென்சர் உள்ளிட்ட எந்த அழகு சாதனமும் சொரசொரப்புத் தன்மை கொண்டதாகவோ, ஸ்க்ரப்பிங் துகள்கள் கொண்டதாகவோ இருக்கக்கூடாது. அவை பருக்களை அதிகப்படுத்தும்.

★ பருக்களைக் கிள்ளவோ, அழுத்தி எடுக்கவோ கூடாது. இது பருக்களை அதிகப்படுத்துவதுடன், தழும்புகளையும் உருவாக்கும்.

★ பருக்கள் இருப்பவர்கள் அதிக மசாஜ் தேவைப்படுகிற ஃபேஷியல்கள் செய்வதைத் தவிர்க்க வேண்டும். பருக்கள் உள்ளவர்களுக்கான பிரத்யேக ஃபேஷியல்கள் பற்றிக் கேட்டறிந்து அவற்றைச் செய்து கொள்வதே சிறந்தது.

## வீட்டு சிகிச்சைகள்

★ முதல் நாள் இரவே ஊற வைத்த வெந்தயத்தை மறுநாள் அரைத்து தலையில் தடவி, அரை மணி நேரம் ஊறி, மிதமான ஷாம்புவால் அலசினால் பொடுகும், அதனால் வரும் பருக்களும் கட்டுப்படும்.

★ ஐஸ் கட்டிகளை ஒரு சுத்தமான துணியில் கட்டி, பருக்களின் மேல் ஒற்றி ஒற்றி எடுக்கலாம். அது பருக்களால் சருமத்தில் ஏற்பட்ட சிவப்பை மாற்றி, அந்த இடத்தில் ரத்தஓட்டத்துக்கும் உதவும்.

★ ஒரு டேபிள் ஸ்பூன் கற்றாழை ஜெல்லுடன், சில துளிகள் டீ ட்ரீ ஆயில் கலந்து பருக்களின் மேல் தடவி, 20 நிமிடங்கள் கழித்து சுத்தமான தண்ணீரில் அலசலாம்.

★ ஒரு டீஸ்பூன் ஆப்பிள் சிடர் வினிகரை 4 டீஸ்பூன் தண்ணீருடன் கலந்து, அதில் பஞ்சைத் தொட்டு, முகம் முழுக்க ஒற்றி எடுக்கவும். இது பருக்களைச் சுற்றியுள்ள பாக்டீரியா தொற்றினை உடனடியாக சுத்தம் செய்யும்.

★ முல்தானி மிட்டி 2 டீஸ்பூன், வேப்பிலை பவுடர் அரை டீஸ்பூன், பன்னீர் சிறிது - இவை மூன்றையும் குழைத்து முகத்தில் தடவி, 10 நிமிடங்கள் காய்ந்ததும், குளிர்ந்த தண்ணீரில் கழுவவும். வாரம் 2 முறைகள் இப்படிச் செய்யலாம். ஜாதிக்காயை அரைத்து, பருக்களின் மேல் மட்டும் படும்படி போடலாம்.

★ 4 டீஸ்பூன் ரத்த சந்தனப் பொடியுடன், சீரகத்தை வேக வைத்த தண்ணீர் 3 டீஸ்பூன், 1 டீஸ்பூன் கடலை மாவு சேர்த்து பேஸ்ட் போலச் செய்து முகத்தில் தடவி, 15 நிமிடங்கள் கழித்துக் கழுவினால், பருக்களால் உண்டான தழும்புகள் மறையும்.

முகத்தைக் கழுவுகிறேன் என்கிற பெயரில் அழுத்தித் தேய்க்கக் கூடாது. அது பருக்களையும் அதிகப்படுத்தும். சருமத்துக்கும் நல்லதல்ல.

# புருவத்தையும் காப்போம்!



பெண்களுக்கு முதன்மையான அழகு கண்கள் தான். கண்களை மட்டும் நன்றாக அலங்கரித்து விட்டால் பாதி அழகு வந்துவிடும். அந்த கண்களின் அழகை பிரதிபலிக்க உதவுவது புருவங்கள். அழகிய புருவம் கொண்ட பெண்கள் முகம் எப்போதும் பளிச் சென்று எடுப்பாக தெரியும். புருவங்களை பராமரிக்க எளிமையான டிப்ஸ் இதோ.

புருவங்களின் முடி வளர்ச்சிக்கு விளக் கெண்ணெய் மிகவும் முக்கியம். அதனுடன் சமஅளவு பாதாம் எண்ணெயும், ஆலிவ் எண்ணெய் அல்லது அரோமா எண்ணெய் கலந்து மசாஜ் செய்யலாம். இது புருவங்களில் உள்ள ரோம வளர்ச்சிக்கு உதவுவதுடன் அப்பகுதியில் ரத்த ஓட்டத்தையும் சீராக்குகிறது. எண்ணெய் தடவி மசாஜ் செய்வதற்கு முன்பாக இரண்டு, மூன்று முறை கிள்ளி விடுவது போல் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

மசாஜ் செய்வதால் முடி அடர்த்தியாகவும், கருமையாகவும் வளர உதவிசெய்கிறது. தினசரி குளிக்க செல்லும் முன்பு புருவங்கள் மேல் எண்ணெய் தடவி ஊறிய பின்பு குளிக்கலாம். இது புருவங்களை அழகு படுத்துகிறது. புருவங்களை எப்போதும் திரெடிங் முறையில் அகற்றுவதே நல்லது. சில பெண்கள் வாக்சிங் முறையில் புருவங்களில் உள்ள முடிகளை அகற்றுகின்றனர் இது தவறானது.

இவ்வாறு செய்வதால் தசைகள் சுருங்கி தொய்ந்து போகிறது. பிளேடு பயன்படுத்தி சிலர் புருவ முடிகளை சேப் செய்கின்றனர். இது மிகவும் ஆபத்தானது. அவ்வாறு அகற்றுபவர்களுக்கு புருவங்களில் முடி விரைவாக வளரும். அதுதவிர வளரும் முடிகள் மிகவும் திக்காகவும், தாறுமாறாகவும் முறையற்றும் வளரும். புருவங்களில் நரைமுடி இருப்பின் மஸ்காரா பயன்படுத்தி கருமையாக்கலாம்.

மஸ்காரா பிரஷ்சை காயவைத்து லேசாக நரை முடிகளில் தடவலாம். ஐ ப்ரோ பென்சில் பயன்படுத்துவதை காட்டிலும் இதுபோன்று செய்வது அழகாவும், இயற்கையாகவும் இருக்கும். கண்களுக்கு அடிக்கடி ஐ பேட் உபயோகிக்கலாம் இதன் மூலம் கண்கள் குளிர்ச்சி அடைவதுடன் புருவங்களும் நன்கு வளரும்.



# புலிமேகமும் மான்மேகமும்

மாலை நேரம். சூரியன் மேற்கை நோக்கிச் சரிந்துகொண்டிருந்தது. நீல வானில் மேகங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மிதந்துகொண்டிருந்தன. மேற்கே மிதந்து கொண்டிருந்த மேகம் ஒன்று, சூரியக்கதிர் பட்டு பொன் நிறத்தில் காட்சியளித்தது. தங்கம்போல் ஜொலிக்கும் தன் உடலைப் பார்த்து அதற்குப் பெருமை தாங்கவில்லை!

சற்றுத் தூரத்தில் காற்றில் மிதந்துகொண்டிருந்த வெண்மேகத்தைப் பார்த்து, என்னைப் பார்த்தியா? தங்கம் மாதிரி தகதகன்னு மின்னிக்கிட்டு இருக்கேன்! என்றது.

சற்று நேரம் அதையே பார்த்துக்கொண்டிருந்த வெண்மேகத்துக்குப் பொறாமையாக இருந்தது. இதெல்லாம் கொஞ்ச நேரத்துக்குத்தான். சூரியன் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இறங்கும்போது உன்னோட சாயம் வெளுத்துடும்! என்றது.

அது கூறியதுபோல் சில நிமிடங்களில் சூரியன் இன்னும் சற்றுக் கீழே இறங்கியவுடன் பொன்நிற மேகத்தின் சாயம் வெளுத்தது. தன்னுடைய இயல்பு நிறமான வெண்மைக்கு மாறியது. அதைப் பார்த்து மீண்டும் கேலியாகச் சிரித்த வெண்மேகம், சொன்னேன்ல இப்ப நீ எந்த உருவமுமில்லாம நெளிஞ்சு போன தகரடப்பா மாதிரி தெரியற. என்னைப் பார்த்தியா என் உருவத்தைப் பார்த்தியா புலி பாய்ஞ்சு ஓடுற மாதிரி இருக்கு! என்று கூறிவிட்டு, வீரத்துடன் புலி பாய்வதுபோல் பாவனை செய்தது.

சற்றுத் தள்ளி மிதந்துகொண்டிருந்த இன்னொரு மேகம் தொண்டையைச் செருமியது. உன்னைப் பார்த்தால் எல்லோரும் பயப்படுவாங்க. ஆனா, என்னைப் பாரு! எவ்வளவு அழகா மான்போல் இருக்கேன்! என்று தன்னைத் தானே பெருமையுடன் ஒருமுறை பார்த்துக்கொண்டு, மான் துள்ளுவதுபோல் பாவனை செய்தது.

திரும்பிப் பார்த்த புலி மேகம், நீ மான் போல இருக்கலாம். ஆனால் நான் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து உன்னைக் கடிச்சுத் தின்னுடுவேன் என்றது.

அதுக்குள்ள நான் துள்ளி ஓடிடுவேன். என்னைப் பிடிக்க முடியாதே! என்று சிரித்தது மான் மேகம்.

எங்கே ஓடிப் போய் ஒளிவே? எப்படியிருந்தாலும் இங்கதானே நீ சுத்தணும்? என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே பெரிய கருத்த மேகங்கள் அருகில்வந்தன.

அங்கே பாரு! கருகருன்னு மேகங்கள் வந்துகிட்டிருக்குதுங்க என்று சிரித்தது புலி மேகம்.


கரு மேகங்களே நில்லுங்க. எங்கே இவ்வளவு அவசரமா போறீங்க? என்று கேட்டது மான் மேகம்.

எங்களுக்குப் பேச நேரமில்லை. நாங்க காற்றுக்காகக் காத்திருக்கோம். அது எந்தப் பக்கம் எங்களைத் தள்ளிட்டுப் போகுதோ, அங்கே போய் எங்களோட கடமையைச் செய்யணும் என்றன கருமேகங்கள்.

உங்களோட கடமையா அது என்ன?

பூமியில் உள்ள சகல ஜீவராசிகளும் வாழறதுக்கு மழையைக் கொடுக்கறதுதான் எங்களோட கடமை! உங்ககிட்ட வெட்டிப் பேச்சு பேச நேரமில்லை. அதோ காற்று வந்துடுச்சு நாங்க புறப்படுறோம் என்று கூறிவிட்டு, அந்த இடத்தை விட்டு வேகமாகச் சென்றன கருமேகங்கள்.

அதே நேரத்தில் பலமாக வீசிய காற்றால் புலி மேகமும் மான் மேகமும் தங்கள் உருவங்களைத் தொலைத்துக்கொண்டிருந்தன.




# இடதுகைப் பழக்கம் நல்லதா?

இடது கைப் பழக்கம் தவறானது என்ற எண்ணம் நம்மிடம் அதிகமாக இருக்கிறது. அதனால்தான் இந்தப் பழக்கத்தை மாற்ற நினைக்கிறார்கள். இயற்கையாக யார் யாருக்கு எந்தக் கையால் எழுதவும் வேலை செய்யவும் முடிகிறதோ, அந்தக் கையைப் பயன்படுத்துவதுதான் சிறந்தது.

கைகளில் என்ன பாகுபாடு? ஒருவரின் பழக்கத்தைக் கட்டாயப்படுத்தி மாற்றும்போது, அது அந்த நபருக்குத் தீங்காக முடியலாம்

இடது கைப் பழக்கக்காரர்கள் மிகவும் புத்திசாலிகளாக இருப்பார்கள். ஆல்பர்ட் ஐன்ஸ்டைன், ஐசக் நியூட்டன், மகா அலெக்சாண்டர், பில்கேட்ஸ், பராக் ஒபாமா, சச்சின் டெண்டுல்கர், அமிதாப் பச்சன் என்று இடது கைப் பழக்கக்காரர்களின் பட்டியல் நீண்டுகொண்டே இருக்கிறது.

அதனால் தயக்கம் இன்றிஇடது கைப் பழக்கதை அங்கீகரியுங்கள்

# சராசரி கடல் மட்டம் என்றால் என்ன?

தெரு ஓரத்தில் கற்கள் ஒரு குவியலாகக் கிடக்கும். ஆனால் அருகே ஒரு குழியில் தேங்கியுள்ள நீர் இப்படிக் குவியலாக இருக்காது. குழியோ, நீச்சல் குளமோ, ஏரியோ, கடலோ எதுவாக இருந்தாலும் தண்ணீரானது எப்போதும் ஒரு மட்டத்தில் காணப்படும். திரவப் பொருட்கள் அனைத்தும் இப்படித்தான் இருக்கும்.

இது பல வகைகளிலும் நமக்கு வசதியாக இருக்கிறது. கட்டிடத் தொழிலாளர்கள் கட்டுமானப் பணியின்போது கட்டுமானம் ஒரே மட்டத்தில் உள்ளதா என்று அவ்வப்போது சோதிக்க நீண்ட மெல்லிய பிளாஸ்டிக் குழாய்களில் தண்ணீரை ஊற்றி அதைப் பயன்படுத்துகின்றனர். ரச மட்டம் எனப்படும் கருவியும் உண்டு.

ஓர் இடத்தின் உயரத்தைக் குறிப்பிட நாம் கடல் நீரின் மட்டத்தை அடிப்படையாகப் பயன்படுத்துகிறோம்.

ஆனால் நடைமுறையில் பூமியில் கடல் நீர் மட்டம் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பது இல்லை. அத்துடன் எல்லா நேரங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பதால் நாமாக சராசரி கடல் மட்டம் என ஒன்றை நிர்ணயித்து அதைப் பயன்படுத்துகிறோம்.

எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 8,848 மீட்டர். இவ்வாறு கூறுவது எவரெஸ்ட் சிகரம் சராசரி கடல் மட்டத்திலிருந்து அவ்வளவு உயரத்தில் உள்ளது என்பதைக் குறிக்கிறது. உங்கள் ஊர் எவ்வளவு உயரத்தில் உள்ளது என்பதும் இப்படித்தான் குறிப்பிடப்படுகிறது, சரி, உங்கள் ஊர் எவ்வளவு உயரத்தில் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?


உங்கள் ஊரில் ரயில் நிலையம் இருக்குமானால் நடைபாதையின் கோடியில் உள்ள பெயர்ப் பலகையைப் பார்த்தால் போதும். அதன் அடிப்புறத்தில் above 245 MSL என்று எழுதப்பட்டிருந்தால் உங்கள் ஊரானது சராசரி கடல் மட்டத்திலிருந்து 245 மீட்டர் உயரத்தில் உள்ளது என்பதை அது காட்டும். MSL என்பது சராசரி கடல் மட்டம் (Mean Sea Level) என்பதைக் குறிப்பதாகும்..

சராசரி கடல் மட்டம் என்று கூறுவதற்குக் காரணம உள்ளது. நீச்சல் குளத்தில் அல்லது ஓர் ஏரியில் நீர் மட்டம் சலனமற்று இருக்கலாம். மாறாக, கடல்களில் எப்போதும் அலைகள் உண்டு. சில சமயங்களில் பெரிய அலைகளும் இருக்கும். இதற்கு காரணம் பூமி மீது சந்திரன் செலுத்தும் ஈர்ப்பு சக்தி. காற்றும் ஒரு காரணமே.

கடல்களில் வேலையேற்றம் வேலையிறக்கம் என உண்டு. (வேலை என்றால் கடல் என்று பொருள்) குறிப்பாகத் துறைமுகப் பகுதிகளில் இது நன்கு புலப்படும். அதாவது ஒரு சமயம் கடல் நீரானது துறைமுகத்துக்குள் வெள்ளம் போலப் பாயும். அது வேலையேற்றம். இன்னொரு சமயம் வெள்ளம் போன்று துறைமுகத்திலிருந்து கடல் நீர் வெளியேறும். இது வேலையிறக்கம். இப்படியாகக் கடல் நீரின் மட்டம் மாறிக் கொண்டே இருக்கிறது.

இது போதாதென சூரியனிடமிருந்து கடல்கள் பெறும் வெப்பம் காரணமாக நீர் விரிவடைந்து கடல்களில் சில இடங்களில் கடல் நீர் 'மேடு'போல அமைந்திருக்கும். இப்படி 'மேடு' போல உள்ள இடங்களிலிருந்து கடல் நீர் வேறு பகுதிக்கு நதிபோல ஓடும். இதைக் கடல் நீரோட்டம் என்று கூறுவார்கள். கடல் நீரோட்டம் பல ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் செல்வதாக இருக்கலாம். உலகில் பல இடங்களில் கடல் நீரோட்டங்கள் உள்ளன.

தவிர, வட அமெரிக்கக் கண்டத்தையும் தென் அமெரிக்கக் கண்டத்தையும் இணைக்கும் நிலப் பகுதியில் மேற்கே உள்ள பசிபிக் கடலின் நீர் மட்டமானது அட்லாண்டிக் கடலின் நீர் மட்டத்தை விட சுமார் 20 சென்டிமீட்டர் உயரமாக உள்ளது.




கடந்த நூற்றாண்டில் நடந்த ஆய்வுப்படி விசாகப்பட்டினத்தில் அதாவது வங்கக் கடலின் நீர் மட்டம் மும்பையில் அதாவது அரபிக் கடலின் நீர் மட்டத்தை விட 30 சென்டிமீட்டர் உயரமாக உள்ளது. காற்றின் போக்கு, கடலில் கலந்துள்ள உப்பு அளவு போன்றவை இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

பிரச்சினை இத்துடன் நிற்கவில்லை. பூமியின் சராசரி வெப்பம் அதிகரித்து வருவதால் வட, தென் துருவப் பகுதிகளில் பனிப் பாளங்கள் மெல்ல உருகிவருவதால் கடலின் நீர் மட்டம் ஆண்டுக்குச் சராசரியாக 3.2 மில்லி மீட்டர் வீதம் உயர்ந்து வருகிறது. இவையெல்லாம் கடல் மட்டம் என்பது நிலையான ஒன்று அல்ல என்பதைக் காட்டுகிறன.

கடல் மட்ட நிலைமைகளை ஆராய்வதற்கென்றே பல ஆய்வு செயற்கைக்கோள்கள் உயரே செலுத்தப்பட்டுள்ளன. இவையும் கடல் மட்டம் மெல்ல உயர்ந்துவருவதை உறுதிப்படுத்தியுள்ளன.

இத்தனை அம்சங்களையும் கணக்கில் கொண்டுதான் சராசரி கடல் மட்டம் கணக்கிடப்பட்டு, அது பயனில் உள்ளது.




## பொன்மொழிகள்

தன்னை அறிந்தவன் ஆசை பட மாட்டான்,
உலகை அறிந்தவன் கோப ப்பட மாட்டான்,
இந்த இரண்டையும் உணர்ந்தவன் துன்ப பட மாட்டான்

**பகவத் கீதை**

யார் என்ன சொன்னாலும், உன் கொள்கையை மாற்றி கொள்ளாதே
ஒரு சமயம் நீ மாற்றினால்
ஒவ்வொரு முறையும் நீ மாற வேண்டிஇருக்கும்..

**கண்ணதாசன்**

வாழ்கையில் வெற்றி பெற வேண்டுமானால்,
நல்ல நண்பர்கள் தேவை, வாழ்நாள் முழுவதும்
வெற்றி பெற வேண்டுமானால் ஒரு எதிரியாவது தேவை

**அப்துல்கலாம்**

ஜெயிப்பது எப்படி என்று யோசிப்பதை விட,
தோற்பது எப்படி என்று யோசித்து பார்
நீ ஜெயித்து விடுவாய்

**ஹிட்லர்**

தோல்வி உன்னை துரத்துகிறது என்றால்
வெற்றியை நீ நெருங்குகிறாய் என்று அர்த்தம்

**நெப்போலியன்**

கோபம் என்பது பிறர் செய்யும் தவறுக்கு
உனக்கு நீயே கொடுத்து கொள்ளும் தண்டனை

**புத்தர்**

நீ பட்ட துன்பத்தை விட
அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது

**விவேகானந்தர்**

தோல்விக்கு இரண்டு காரணம் ஒன்று யோசிக்காமல் செய்வது,
இரண்டு யோசித்த பின்னும் செய்யாமல் இருப்பது

**ஸ்ரீ கிருஷ்ணர்**

# இந்தியாவின் மிகப்பெரிய பள்ளத்தாக்கு



கிராண்ட் கேன்யன் என்றால் மிகப் பெரிய பள்ளத்தாக்கு என்று பொருள். உலகிலேயே மிகப் பெரிய பள்ளத்தாக்கு அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் இருக்கிறது. பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் உருவானது இந்தப் பள்ளத்தாக்கு. கொலரோடா என்ற மிகப் பெரிய நதியின் ஓட்டத்தாலும் அழுத்தத்தாலும் பாறைகள் அரிக்கப்பட்டுகின்றன. காலப்போக்கில் இப்படிப் பள்ளத்தாக்கை உருவாக்கிவிடுகின்றன. பூமியின் மீதுள்ள டெக்டோனிக் தகடுகளின் செயல்பாடுகளும் பள்ளத்தாக்கு ஏற்பட உதவுகின்றன.

கொலரோடா நதி பாறைகளைப் பிளந்து 446 கி.மீ. நீளமும் 29 கி.மீ. அகலமும், 1800 மீட்டர் ஆழமும் உடைய மிகப் பெரிய பள்ளத்தாக்கை உருவாக்கியிருக்கிறது. நிலவியலாளர்கள் கிராண்ட் கேன்யன் உருவாகி சுமார் 7 கோடி ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்கிறார்கள். இது ஏழு இயற்கை அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இதுபோன்ற மிகப் பெரிய பள்ளத்தாக்கு இந்தியாவிலும் இருக்கிறது. ஆந்திரப் பிரதேசத்தின் கடப்பா மாவட்டத்தில் இருக்கும் கந்திகோட்டா என்ற சிறிய கிராமத்துக்குச் சென்றால் இதைப் பார்த்துவிடலாம். 'கந்தி' என்றால் தெலுங்கில் பள்ளத்தாக்கு என்று பொருள். அமெரிக்கப் பள்ளத்தாக்கு அளவுக்குப் பெரியதாக இல்லாவிட்டாலும் மிக அற்புதமான, அனைவரும் கண்டுகளிக்கக்கூடிய இடங்களில் இதுவும் ஒன்று.

பென்னாறு நதி எர்ராமலையின் குறுக்கே ஓடுவதால் இந்தப் பள்ளத்தாக்கு ஏற்பட்டுள்ளது. பாறைகளை வெட்டி, அவற்றைக் கைகளால் அடுக்கிவைத்ததுபோல் உள்ளது! சிவப்பும் மஞ்சளும் பழுப்புமாகப் பல்வேறு வண்ணங்களில் பாறைகள் மிக அழகாகக் காணப்படுகின்றன. இரண்டு பக்கமும் உள்ள பாறை அடுக்குகளுக்கு நடுவே பென்னாறு ஓடுவது அவ்வளவு அற்புதமாக இருக்கும்! இந்தியாவில் மறைந்திருக்கும் அதிசயங்களில் கந்திகோட்டா பள்ளத்தாக்கும் ஒன்று.

இங்கே மிகப் பெரிய கோட்டை ஒன்றும் கட்டப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந்தக் கோட்டைச் சிதிலமடைந்த நிலையில் காணப்படுகிறது.ஐந்து கி.மீ. சுற்றளவில் இந்தக் கோட்டையின் மதில் சுவர் அமைந்துள்ளது. 20 அடி உயரத்தில் கோட்டையின் நுழைவாயில் உள்ளது.

கோட்டை வளாகத்தில் உள்ள ரங்கநாதர் கோயில் மிகவும் பழமையானதாகவும் அழகான கட்டிடக்கலையுடனும் காட்சியளிக்கிறது. இங்குள்ள மாதவ சுவாமி கோயிலின் கட்டிடக்கலை ஹம்பிக்கு ஈடாக இருக்கிறது. வெளிப்புற அமைப்பை விட உட்புறம் மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜாமியா மசூதியை ஒட்டி மிகப் பெரிய தானியக் கிடங்கு ஒன்றும் உள்ளது. இந்தக் கோட்டைக்கு அரணாக இந்தக் கந்திகோட்டா பள்ளத்தாக்கு அமைந்துள்ளது.

## விடுகதைகளும் விடைகளும்

1. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?
2. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன?
3. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்- அது என்ன?
4. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது- அவர்கள் யார்?
5. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம்- நான் யார்?

**விடைகள்**

1. சைக்கிள்
2. பட்டாசு
3. தராசு
4. எறும்புக் கூட்டம்
5. அஞ்சல் பெட்டி.

## நிறந்தீட்டுவோம்



## இவ்வார இராசி பலன்கள்

**ஜோதிடர் த.சத்தியதாஸன்**




இவ்வாரம் சப்தம , களத்திர பாவத்தில் சுபர்கள் சஞ்சரிப்பதால் களத்திர சுகம், இல்லறம் நலம் உண்டாகும். புத்திரர்களுடன் அன்பு பாசம் நிலவும். செய்தொழில் விருத்தி உண்டு. ஈடுபடும் கருமகாரியங்களில் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகள், விவசாயிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய முன்னேற்றம் காண்பர்.




சத்துரு பாவத்தில் சுபர் சஞ்சாரம் செய்வதால் சத்துரு ஜெயம், ரோக நிவர்த்தி உண்டு. சிவில் வழக்கு விடயங்களில் வெற்றி கிடைக்கும். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் புதிய முதலீடுகளை தொடங்கலாம். விவசாயிகளுக்கு அரச மாணியம் உரிய வேளையில் வந்து சேரும். விவசாயப் பண்ணைகளில் இலாபம் முன்னேற்றம் ஏற்படும். வெள்ளி சுகத்தால் கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைக்கூடி திருமணப் பேச்சுக்கள் தொடரும்.




மாதுரு பாவத்தில் குஜன், வெள்ளி சஞ்சரிப்பதால் மாதா நலம், கல்வி விருத்தி, வாகன சுகம், மனை நலம், குடும்ப சேமம் முதலியன உண்டாகும். உத்தியோகத்தர் அதிகாரிகளின் பாராட்;டையும், ஊக்குவிப்பையும் பெறுவர். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். விவசாயிகளுக்கு மழை அதிகரிப்பால் பயிர் விளைச்சல் கூடும். ஆசிரியர், மாணவர் உறவு வலுக்கும்.




இவ்வாரம் தனம், பொருள், மனை, வாகன , குடும்பம் அபிவிருத்தியடையும். செய்யும் தொழிலால் விருத்தி, இலாபம் , சேமிப்பு கிட்டும். ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தர் அதிகாரம் கொள்வர். பதவி சிறப்படைவர். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் புது உத்வேகம் அடைந்து ஏற்றம் காண்பர். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயமளிக்கும். மாணவர்களின் பரீட்சை சித்திகள் மன நிறைவைக் கொடுக்கும்.




இவ்வாரம் தன பாவத்தில் குஜன் சஞ்சரிப்பதாலும் தன அதிபதி புதன் ஜீவன பாவத்தை நோக்குவதனாலும் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன, குடும்ப அபிவிருத்தி அடையும். வெளிநாட்டு நிதிவசதிகள் கிட்டும். உத்தியோகத்தர் தம் பணிகளில் புது உத்வேகம் அடைந்து ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும், கொள்முதல்களையும் தொடங்கலாம். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு நடைபெறும்.




தன பாவத்தில் தனாதிபதி வெள்ளி ஆட்சியுடன் குரு சஞ்சரிப்பதால் தனவரவுண்டு. வெளிநாட்டு பணம் வந்து சேரும். தொழிலால் வருமானம், நிதி வசதிகள் , வங்கி இருப்புக்கள் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு பதவி ஏற்றம், சம்பள அதிகரிப்பு, இடமாற்றம் முதலியவற்றுக்கு உயர் அதிகாரிகளின் சிபாரிசுகள் ஏற்படும். வியாபாரிகளுக்கு தம் முதலுக்கேற்ற ஆதாய முன்னேற்றம் கிட்டும். ஆசிரியர், மாணவர். பெற்றோர் உறவு சீராகும்.




ஜென்மத்து வியாழன் ரவி வெள்ளி தோஷமும், ஏழரைச் சனி கடைக்கூறு, கண்டக ராகு, கேது தோஷமும் இருப்பதால் இவ்வாரம் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மையுண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமையும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் தங்கள் முதலீடுகளை மட்டுபடுத்தல் வேண்டும். பழைய கடன்கள் யாவும் வசூலாவதில் தாமதம் ஏற்படும். ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவு சீராகவே இருக்கும்.




இவ்வாரம் ஜென்மத்து சனி ( ஏழரைக் கடைக்கூறு) , விரய வியாழ ரவி தோஷம் இருப்பதால் வரவுக்கு மிஞ்சிய செலவு உண்டாகும். சிலருக்கு தேவையற்ற பயணம், அலைச்சல், மன உழைச்சல் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு கணிசமான வேலைச்சுமையும் , மேலதிக வேலையும் கிடைக்கும். புருஷன், மனைவி இடையே கருத்து மோதல்கள் தோன்றி மறையும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமும், விடாமுயற்சியும் அடைவர்.




ஜீவன தொழில் பாவத்தில் குஜன் சஞ்சரிப்பதால் தொழிலால் இலாபம், மேன்மை, வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். உத்தியோகத்தர் தம் பணிகளில் புது உத்வேகம் அடைவர். இலாப பாவத்தில் சுபர் சஞ்சரிப்பதால் வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் இலாப முன்னேற்றமடைவர். நிதிவசதிகள், வங்கி இருப்புக்கள் அதிகரிக்கும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் புத்திரர் உதவியுடன் திறம்பட நடைபெறும்.




ஜீவன பாவத்தில் ரவி, சுக்கிரன் குரு சஞ்சரிப்பதால் தொழிலால் விருத்தி, முன்னேற்றம் கிட்டும். செய்யும் கரும காரியங்கள் யாவும் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர் பதவி சிறப்பும், உத்தியோக அதிகாரமும் கொள்வர். உத்தியோகப் பெண்களும் ஏற்றம் காண்பர். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் நன்மை தரும். பழைய நிலுவைகள் வசூலாகும். விவசாயிகளுக்கு மழை அதிகரிப்பால் பயிர் உற்பத்தி அதிகரிக்கும். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு நடைபெறும்.




தர்ம, புண்ணிய ஸ்தானத்தில் சுபர் சஞ்சரிப்பதால் தர்ம காரியங்களில் ஆர்வம், ஈடுபாடு, நோன்பு விரதம் அனுஷ்டித்தல், பிதா வழி உதவி, சொத்து சேர்கையுண்டு. உத்தியோகத்தர் அதிகாரிகளின் ஊக்குவிப்பையும், பாராட்டையும் பெறமுடியும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு பயிர் உற்பத்திகளை பெருக்கலாம். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு நடைபெறும்.




இவ்வாரம் சப்தம பாவத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதால் புருஷன், மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். அஷ்டமத்தில் சுபர் இருப்பதால் ஆயுட்பலம் உண்டு. உத்தியோகத்தர் தம் பணிகளில் புது உத்வேகம் கொள்வர். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் நல்ல இலாபத்தை ஈட்டிக் கொடுக்கும். விவசாயிகளுக்கு அரச மாணியம் உரிய வேளையில் வந்து சேரும். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு அமையும்.

# நலம் தரும் கந்த சஷ்டி விரதம்

அறிவு வளர்ச்சிக்கு விஞ்ஞானம் உதவுவதைப் போன்று மன வளர்ச்சிக்கு சமயம் அடிகோலுகின்றது. இறைவன் ஒருவன், அவன் மக்களின் தந்தை என்றெல்லாம் போதிப்பதன் மூலம் அன்பு, சகோதரத்துவம் போன்ற ஜீவ ஊற்றுகளை அருளி மக்களின் வாழ்வு நலம் பெறச் சமயம் உதவுகின்றது. நல்லவர்களைப் பாதுகாக்கவும் தீயவர்களை அடக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும் யுகந்தோறும் இறைவன் அவதாரம் செய்தருளுகின்றான்.

சஷ்டி விரதம் ஐப்பசி மாத தீபாவளி அமாவாசையின் பின் அதாவது வளர்பிறை பிரதமை முதல் ஆரம்பித்து, ஆறாம்/ஐந்தாம் நாளான சஷ்டி திதி வரையான ஆறு தினங்களும் நோற்கப்படும் முருகப்பெருமானுடைய சிறப்பான நோன்பாகும்.

குழந்தை பாக்கியம் வேண்டுபவர்கள் கந்தசஷ்டி விரதம் இருந்தால் முருகனே குழந்தையாக அவதாரம் செய்வார் என்பது அசைக்கமுடியாத நம்பிக்கை.இதைத் தான் சஷ்டியில் இருந்தால் அகப்பை(கருப்பை) யில் வரும் என்ற பழமொழியாக கூறுவார்கள். முசுகுந்தச் சக்கரவர்த்தி, வசிஷ்ட முனிவரிடம் இவ்விரதம் பற்றிக் கேட்டறிந்து கடைப்பிடித்து பெரும் பயன் அடைந்தாராம். முனிவர்கள், தேவர்கள் உள்ளிட்ட பலரும் கடைப்பிடித்த விரதம் இது.

முருகன் கோயில் உள்ள எல்லா இடங்களிலும் கந்த சஷ்டி விரதம் ஒரு பெருவிழாவாக நடக்கும். ஆறுபடை வீடுகளான திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழனி, சுவாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலையிலும், இலங்கையில் நல்லூர், சன்னிதி, கதிரமலை(கதிர்காமம் ),மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்களிலும் மிகவும் சிறப்பாக இவ்விழா நடைபெற்று வருகின்றது.

அறியாமை என்னும் அஞ்ஞான இருளை அகற்றி, மெய்ஞானமாகி மிளிர்கின்ற பரம்பொருளின் முக்திப் பேரருளை அடைவதற்காகச் சைவப் பெருமக்களால் அனுஷ்டிக்கப்படும் விரதங்களுள் தலையாயது கந்தசஷ்டி விரதம். முருகனுக்குரிய விரதங்கள் மூன்று. அவையாவன வெள்ளிக்கிழமை (வாரம்) விரதம், கார்த்திகை (நட்சத்திரம்) விரதம், கந்த சஷ்டி (திதி) விரதம் என்பனவாம். வல்வினை நீக்கி, வரும் வினை போக்கி, செல்வமும் செல்வாக்கும் தந்து; அழகும், அறிவும் தந்திடும் வள்ளி மணாளனை, வடிவேலனை வழிபடும் விரதங்களில் மிகவும் சிறந்தது இந்தக் கந்தசஷ்டி விரதமாகும்.

கந்த சஷ்டியாகிய ஐப்பசி மாத சுக்கில பட்ச சஷ்டி முதல் அந்த ஆண்டு முழுவதும் வரும் 24 சஷ்டிகளிலும் இவ்விரதம் கடைபிடிக்கப்பட வேண்டும். கந்த சஷ்டி தினத்துக்கு முன் வரும் பிரதமை முதல் ஆறு நாட்களும் உமிழ் நீரும் உள்ளே விழுங்காதவாறு நோன்பிருந்து இவ்விரதத்தை இருப்பது ஒருமுறை.

என்.ஹரன்

அவ்வாறு இயலாதவர்கள் அந்நாட்களில் ஒருமுறை வீதம் ஆறு மிளகையும் ஆறு கை நீரையும் அருந்தலாம். உயிர் உணர்ச்சி வளர்க்கும் விரதம் இது. எனவே உப்பு நீர், எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, இளநீர் முதலியவற்றை கந்த சஷ்டி விரதம் இருப்பவர்கள் அருந்தக்கூடாது.

விரத நாட்களில் அதிகாலையில் எழுந்திருந்து, நாட்கடன்களை முடித்து, திருநீறணிந்து முருகவேளைத் தியானித்துப் பின் நீராடி, தோய்த்துலர்ந்த இரு ஆடைகளை அணிந்து, தம்பத்திலும், விம்பத்திலும், கும்பத்திலும் முருகவேளை வழிபட்டு இரவில் நெய்யில் சமைத்த மோதகத்தை நிவேதித்துப் பூசிக்க வேண்டும்.

ஏழாம் நாள் காலை விதிப்படிப் பூசித்துக் கந்தன் அடியார்களுடன் அமர்ந்து பாரணை செய்தல் வேண்டும் என்று கந்த புராணம் விதிக்கின்றது. கந்தவேள் சூரபத்மனை வெற்றி கொண்ட நாளே கந்த சஷ்டி. நமது உள்ளத்தில் ஆட்சி செய்து வாழும் காமம் முதலிய சூரபதுமனை முருகவேளின் ஞான வேலினால் அழித்து, பேரின்பம் எய்தும் குறிப்பே சூரசம்ஹாரத்தின் பொருளாகும்.

தனு, கரண, புவன, போகங்கள் அனைத்தையும் படைத்தலும், காத்தலும், அழித்தலும் இறைவனது இடையறாத திருவிளையாடல்கள். இறைவனை உணர்ந்து அவனைச் சரணடைந்தால் அழிவில்லாத பேரின்பம் அடையலாம் என்பது சமயங்கள் காட்டும் பேருண்மை. இறைவனது திவ்ய அவதாரத்தையும் செயலையும் யாரொருவர் உள்ளபடி அறிகின்றார்களோ அவர்கள் மீண்டும் பிறவாமல் இறைவனையே அடைந்து விடுகிறார்கள் என்று கீதையில் கிருஷ்ணபகவான் கூறியுள்ளார்.

தெய்வ அவதாரங்களில் தீய சக்திகளை அடக்கி நல்லவர்களைக் காத்தார்கள் என்றால் இச்செயல்கள் தீமைகளை நீக்கி நன்மைகளையே செய்து மக்கள் உய்ய வேண்டும் என்று போதிப்பதற்கே நிகழ்ந்தன என உணர்ந்து பக்தியுடன் வாழ்ந்து இகபர நலன்களை அடைய முயலவேண்டும். இத்தகைய அவதார இரகசியத்தை விளக்கி மக்கள் உய்வதற்கு உகந்த பெருவழிகளை விளக்கிக் காட்டுவதே ஆறுமுகப்பெருமானின் அவதாரம்.

வசிட்ட மாமுனிவர் முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு சஷ்டி விரத மகிமையையும் வரலாற்றையும் விதிமுறைகளையும் உபதேசித்த பெருமையையுடையது. அரசர்கள், தேவர்கள், முனிவர்கள் பலரும் இந்த விரதம் அனுஷ்டித்து வேண்டிய வரங்களைப் பெற்றதோடு, இம்மை இன்பம், மறுமை இன்பம் ஆகியவற்றை பெற்றனர்.

இவ்விரதம் தொடர்பான 'புராணக் கதை'

பிரம்மாவிற்கு தக்கன், காசிபன் என்னும் இரு புதல்வர்கள் இருந்தனர். இவர்களுள் தக்கன் சிவனை நோக்கித் கடுந்தவம் புரிந்து பல வரங்களைப் பெற்றிருந்த போதிலும் இறுதியில் சிவனால் தோற்றுவிக்கப் பெற்ற வீரபத்திரக் கடவுளால் கொல்லப்பட்டார். காசிபனும் கடுந்தவம் புரிந்து சிவனிடம் இருந்து மேலான சக்தியைப் பெற்றான்.



ஒரு நாள் அசுரர்களின் குருவாகிய சுக்கிரனால் (நவக்கிரகங்களுள் வெள்ளியாக கணிக்கப்படுபவர்) ஏவப்பட்ட மாயை என்னும் பெண்ணின் அழகில் மயங்கி தான் பெற்ற தவ வலிமை எல்லாவற்றையும் இழந்தான். இதனைத் தொடர்ந்து காசிபனும் மாயை என்னும் அசுரப் பெண்ணும் முதலாம் சாமத்தில் மனித உருவத்தில் இணைந்து மனித தலையுடன் கூடிய சூரனும், இரண்டாம் சாமத்தில் சிங்க உருவில் இருவரும் இணைந்து சிங்க முகத்துடன் கூடிய சிங்கனும், மூன்றாம் சாமத்தில் யானை உருவில் இணைந்து யானை முகத்துடன் கூடியதாரகனும், நான்காம் சாமத்தில் ஆட்டின் உருவத்தில் இருவரும் இணைந்து ஆட்டுத் தலையுடன் கூடிய அசமுகி என்னும் அசுரப் பெண்ணும் பிறந்தனர்.

மாயை காரணமாக தோன்றிய இந் நால்வரும் ஆணவ மிகுதியால் அகங்கார மமகாரம் (செருக்கு) கொண்டு காணப்பட்டனர். இவர்களுள் சூரபதுமன் சிவனை நோக்கி கடுந் தவம் புரிந்து; 108 யுகம் உயிர்வாழவும் 1008 அண்டம் அரசாளும் வரத்தையும், இந்திரஞாலம் எனும் தேரையும், சிவன் சக்தி அன்றி வேறு ஒரு சக்தியாலும் அழிக்க முடியாது எனும் வரத்தையும் பெற்றிருந்தான். இவ்வரத்தினைப் பெற்ற சூரன் முதலானோர் தம்மைப் போல் பலரை உருவாக்கி அண்ட சராசரங்கள் எல்லாவற்றையும் ஆண்டு இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களையும் சிறையிலிட்டு சொல்லொணா துன்பங்களைக் கொடுத்து அதர்ம வழியில் ஆட்சி செய்தனர்.

அசுரர்களின் இக்கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் கைலாயம் சென்று சிவனிடம் முறையிட்டனர். இறைவனும் அவர்கள்மேல் திருவுளம் கொண்டு அவர்களை அந்த துன்பத்தில் இருந்து காப்பாற்றும் நோக்குடன் தனது (6) நெற்றிக் கண்களையும் திறக்க (சிவபெருமானுக்கு ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகிய ஐந்து முகங்கள் உண்டு. இவை தவிர ஞானிகளுக்கு மட்டுமே தெரியக்கூடிய 'அதோமுகம்' (மனம்) என்ற ஆறாவது முகமும் உண்டு) அவைகளிலிருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளையும் வாயுபகவான் ஏந்திச் சென்று; வண்ண மீனினம் துள்ளி விளையாடும் தண்மலர் நிரம்பிய சரவணப்பொய்கையில் தாமரை மலர்களின் மீது சேர்க்கப்பெற்றன.

அந்த தீப்பொறிகள் ஆறும் உலகின் பொன்னெல்லாம் உருக்கி வார்த்ததென ஆறு குழந்தைகள் தோன்றின. அந்த ஆறு குழந்தைகளையும் ஆறு கார்த்திகைப் பெண்கள் சீராட்டி பாலூட்டி வளர்த்து வரும் வேளை;அகிலலோக நாயகி பார்வதி தன் மைந்தர்களை அன்புடன் கட்டியணைத்திட அவையாவும் ஒரு திருமேனியாக வடிவங் கொண்டு ஆறுமுகங்களும் பன்னிரு திருக் கரங்களும் உடைய ஒரு திரு முருகனாக தோன்றினன் உலகமுய்ய. ஆறுமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் உடைய திருவுருவை பெற்றமையால் ''ஆறுமுக சுவாமி'' எனப் பெயர் பெற்றார்.

இந்த ஆறு திருமுகங்களும் ஞானம், ஐஸ்வர்யம், அழகு, வீரியம், வைராக்கியம், புகழ் என்னும் ஆறு குணங்களையும் குறிக்கின்றன. பிரணவ சொரூபியான முருகப் பெருமானிடம் காக்கும் கடவுளான முகுந்தன், அழிக்கும் கடவுளான ருத்ரன், படைக்கும் தெய்வமான கமலோற்பவன் ஆகிய மும்மூர்த்திகளும் அடக்கம். ஆறுமுகன் சிவாக்னியில் தோன்றியவன். அதனால் 'ஆறுமுகமே சிவம்; சிவமே ஆறுமுகம்' எனப்படுகிறது.

முருகப்பெருமான் அசுரர்களான சூரபத்மாதியரை அழிக்கப் போர் புரிந்த திருவிளையாடலையே நாம் கந்தசஷ்டி விழாவாகக் கொண்டாடுகிறோம். சூரபத்மனின் ஒரு பாதி ''நான்'' என்கிற அகங்காரம்; மற்றொரு பாதி 'எனது' என்கிற மமகாரம்.

பன்னிரண்டு கைகளுடன் ஆறு திருமுகமும் கூடிய அழகின் அழகாய் தேவ சேனாதிபதியாய், தேவரும் முனிவரும் வாழ்த்த சர்வ சத்தியாம் பார்வதி தந்த தனிப்பெரும் ஞான வேலை சக்தியாகக் கொண்டு சூரபன்மனைச் சம்ஹாரம் செய்யப் புறப்பட்டு சென்றார். அவர்களுடன் முருகப் பெருமான் மேற்கொண்ட போர் ஐப்பசித் திங்கள் வளர்பிறையில் பத்து நாட்கள் நடைபெற்றது. முதல் நான்கு நாட்களில் சூர பத்மனைச் சேர்ந்த வீரர்களை அழித்து அவனது பலத்தை துவம்சம் செய்தார்.

தாரகனையும் அவனுக்குத் துணை நின்ற கிரௌஞ்சத்தையும் பிளந்து, சிங்கமுகனை அழித்து பின் சூரனின் சேனை அழிந்த போதும் சூரபதுமனின் ஆணவம் அழிய இல்லை. அதனால் முருகன் தன் திருப்பெரு வடிவம் (விஸ்வரூபம்) காட்டி, எல்லாம் வல்ல பரம்பொருள் தாமே என பரமேசுர வடிவம் காட்டி, சிவனும் அவன் மகனும் மணியும் ஒலியும் போல ஒருவரே என்றுணர்த்தியும், தன் தன்மை மாறாது மாயைகள் பல புரிந்து போர் செயலானான்.

கடைசியாக; நடுக்கடலடியில் மாமரமாய் நின்ற சூரபத்மனைத் முருகன்; தன் வேலாயுதத்தால் இரு கூறாக்கினார். ஆணவம் அழியப் பெற்ற சூரன் தம் தவறை உணர்ந்து தன்னை மன்னித்து, ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடி வேண்டி நிற்க (ஈருடலும் ஓர்ருயுருமய் இருந்த சூரபதுமன்) அவை இரண்டையும் முருகன் தன் அருளால் சேவலாகவும் மயிலாகவும் மாற்றி, மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியிலும் தன்னுடன் பிணைத்துக் கொண்டார்.

ஞானசக்தியான வேலின் தாக்கத்தால் ஆணவ மலம் வலியிழந்து ஆன்ம பரம் பொருளின் திருவடி அடைந்ததெனும் மறைபொருளை உணர்த்த அனுஷ்டிக்கப் படும் விரதமே கந்தர் சஷ்டி விரதம். இந்த அருட்பெருங்கருணைச் செயலை வியந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசி மாத வளர்பிறை முதலாறு நாட்களையும் விரத நாட்களாகக் கொண்டு முனிவரும் தேவரும் நோற்று வந்தனர். இதுவே ஸ்கந்தசஷ்டி என்ற நாமத்தோடு நாம் அநுஷ்டிக்கும் விரதமாகும்.

ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் இவ்விரதத்தை தம் உடல் நிலைக்குத் தக்கதாக கடைப்பிடிப்பர். சிலர் ஆறு நாட்களும் எவ்வித அன்ன ஆகாரமின்றியும், சிலர் பானம் மட்டும் அருந்தியும், பலர் முதல் ஐந்து நாட்களும் ஒரு நேரம் உணவு உண்டு (பாலும் பழமும்) கடைசி நாளான ஆறாம் நாள் முழு உபவாசத்துடன் நித்திரை விழித்திருந்தும் ஏழாம் நாள் காலை முருகனை வழிபட்ட பின் பாரணை மூலம் விரதத்தைப் பூர்த்தி செய்வர்.

கந்த சஷ்டி விரதத்தில் படிக்க வேண்டியவை

இவ்விரதத்தின் போது, தினமும் கந்த சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், கச்சியப்ப சுவாமிகளின் கந்த புராணம் ஆகியவற்றைப் படித்தால், என்னவென்று சொல்ல முடியாத மனஅமைதி நிலவும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பர்.

விரத அனுஷ்டானங்களும், விதிமுறைகளும்:

நாம் ஆறுமுகநாவலரின் 'விரதம்' என்பதற்கான வரைவிலக்கணத்தை நோக்கின் 'மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் இறை அன்போடு, கடவுளை விதிப்படி வழிபடல்' என்கிறார். அவ்வாறான கட்டுப்பாடுகளினூடாக ஐம்புலனடக்கி மன அடக்கத்தை கந்த சஷ்டி விரதம் நமக்கு உணர்த்துகிறது.

இவ்விரதம் ஆறு வருடங்கள் தொடர்ந்து கைக்கொள்ளப்பட வேண்டும் (கார்த்திகை விரதம் பன்னிரெண்டு வருடங்களும், வெள்ளிக்கிழமை விரதம் மூன்று வருடங்களும் அனுஷ்டிக்கப்படுகின்றது). உபவாசம் அல்லது ஒரே நேர உணவு என்பது உணவு நியதி ஆறு வருடமும் அல்லது பன்னிரண்டு வருடங்களும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். முறைப்படி சங்கல்பபூர்வமாக ஆரம்பித்து கடைசி வருடம் விரத முடிவில் விரதோத்யாபனம் செய்து (நிறுத்தி) பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

கந்த சஷ்டி என்னும் போது அதற்கென சில விரத நியதிகள் தனித்துவம் பெற்றுத் திகழ்கின்றன. இவ்விரதம் அனுஷ்டிக்க விரும்புவோர் விரத நாட்களில் வைகறையில் துயில் எழுந்து சந்தியாவந்தனம் முதலிய காலைக்கடன்களை முடித்து, ஆற்றில் இறங்கி நீரோட்டத்தின் எதிர்முகமாக நின்று, தண்ணீரில் ஷட்கோணம் வரைந்து, அதில் சடாக்ஷர மந்திரத்தை எழுத வேண்டும். ''ஓம்'' என்ற பிரணவ மந்திரத்தையும் நடுவில் எழுதி, முருகனை மனதில் இருத்தி; நீரில் மூழ்கி எழ வேண்டும்.

கிணறு, குளம் போன்ற நீர்நிலைகளில் நீராடுபவர்கள் வடதிசை நோக்கி நின்று மேற்கூறியவாறு தூய நீராடி, தோய்த்துலர்ந்த ஆடையணிந்து அமைதியான இடத்திலோ அல்லது ஆலயத்திலோ அமர்ந்து அல்லல் தீர்க்கும் ஆறுமுகப் பெருமானை நினைந்து தியானம் செய்ய வேண்டும். தியானத்துடன் நில்லாது மனம் பொறிவழிச் செல்லாது இறையருளை நாடி வேறு சிந்தனையின்றி களிப்புற வேண்டும். விரத காலங்களில் மனம் வேறு எண்ணங்களில் ஈடுபடாதிருக்க கந்தசஷ்டி கவசம், கந்தரலங்காரம், கந்தரனு பூதி, கந்தர் கலிவெண்பா போன்ற நூல்களைப் படிக்க வேண்டும். முருகனாலயங்களில் இவ்விரத நாட்களில் கந்தபுராண படனம் நடைபெறும். இதை

31 ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கையின் கலைத்திட்டத்தில் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

உலகலாவிய ரீதியில் கல்வியானது ஓர் மகத்தான விடயமாகக் காணப்படுகிறது. இன்றைய 21ம் நூற்றாண்டில் வாழும் எமக்கு கல்விசார் கொள்கைகளும் நடைமுறைகளும் உலகலாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவதனால் மாற்றங்களுக்கும், சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. கல்வித்துறையில் கலைத்திட்டம் முக்கிய இடம் பிடிக்கின்றது. கலைத்திட்டம் என்பது கற்றலுக்காக பயன்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் கலைத்திட்டம் எனப்படுகிறது. முன்பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம் வரையான, முறைசார்ந்த, முறைசார வகையில் கல்வியை வழங்குகின்ற சகல தாபனங்களும் கற்றல் கற்பித்தல் செயன்முறை தொடர்பாக முறையான கலைத்திட்டம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கைப் பாடசாலைகளில் அமுலாக்கப்படும் கலைத்திட்டம் தொடர்பான போதிய விளக்கம் கொண்டிருத்தல் மாத்திரமின்றி கலைத்திட்டம் தொடர்பான விளக்கத்தையும் பெற்றிருத்தல் அவசியமாகின்றது. ஏனெனில் கலைத்திட்டத்தை செயற்படுத்தும் முகவர்களாக ஆசிரியர்கள் விளங்குகின்றனர். இலங்கையில் தேசிய கல்வி அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழு போன்றவற்றின் ஒத்துழைப்புடன் தேசிய கல்வி நிறுவகத்தால் உருவாக்கப்படுகின்ற கலைத்திட்டத்தை பாடசாலையில் செயற்படுத்தும் போது மாணவர்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர்.

இலங்கையின் கலைத்திட்டத்தில் பல விடயங்கள் விமர்சிக்கதக்க வகையிலே காணப்படுகிறது. ஏனெனில் நம்நாட்டு கல்வியானது பல நடைமுறைச் சிக்கல்களுக்கு உள்வாங்கப்பட்டுள்ள ஏட்டுக் கல்வி முறையாகவே திகழ்கின்றது. கல்விக் கொள்கைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பினும் அது பல வேலையில்லா பட்டதாரிகளைக் உருவாக்கும் வகையிலே அமைந்துள்ளது. மாணவர்களின் தொழில் நோக்கை அடிப்படையாகக் கொண்டு தற்கால கல்வி அமைக்கப்படாமையினால் மாணவர்கள் பட்டப்படிப்பை முடித்தும் உரிய காலத்தில் வேலை கிடைக்காததால் பாட்டாளி மக்கள் போல் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையின் கலைத்திட்டமானது மாணவர்களின் நாளாந்த வாழ்வுடனும், பிரச்சனைகளுடனும் தொடர்புபட்டதாக இல்லை. மாறாக கல்வியானது தத்துவமாக அமைந்து காணப்படுகிறது. அதாவது கடந்த காலங்களில் இடம்பெற்ற விடயங்களை மாணவர்களுக்கு கோட்பாடு ரீதியாக போதிக்கும் கல்வியாக இலங்கை கல்வி முறையானது அமைந்து காணப்படுகிறது.

அமெரிக்க நாட்டு அறிஞர் ஜோன்டூயி குறிப்பிடுகையில் நடைமுறை சூழலுக்கு எது பயனுள்ளதோ அதுவே சிறந்த கல்வி என்பதற்கு அமைய இலங்கையின் கலைத்திட்டம் காணப்படாமையே அமெரிக்கா மற்றும் பிற நாடுகளில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் கல்வி விருத்தி போன்று இலங்கையில் கல்வி விருத்தி ஏற்படாமைக்கு காரணம் ஆகும். உதாரணமாக, மாணவர்களின் புத்தாக்கம், இணைப்பாடவிதான செயற்பாடு, மற்றும் ஏனைய திறன்களை வெளிக்காட்டும் விடயங்கள் போன்றன இலங்கையின் கலைத்திட்டத்தில் குறைவாகவே காணப்படுவதாலும் மாணவர்கள் சவால்களை எதிர்நோக்கி கொண்டு வருகின்றனர்.



இலங்கையின் கலைத்திட்டத்தின் படி கல்வியின் படிநிலைகளை ஆரம்பக்கல்வி (6-11வயது), இடைநிலைக்கல்வி (12-18வயது), உயர்கல்வி என மூன்றாக பிரிக்கலாம். முறைசார், முறைசாரா நிறுவனங்களின் மூலம் மாணவர்கள் கல்வியினைப் பெற்று வருகின்றனர். நம்நாட்டு அரசாங்கம் கல்வியை இலவசமாக வழங்கினாலும் சமகாலத்தில் ஓரிரு மாணவர்களுக்கு மட்டுமே பயனுள்ளதாக விளங்குகின்றது. இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வை சிதைத்து ஒருசிலரை மட்டுமே உருவாக்கி காட்டும் அடிப்படைக் கண்ணோட்டத்துடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கல்வி கற்போரில் பல்கலைக்கழக அனுமதி பெறுவோர் அண்ணளவாக 0.82% ஆகும். இதில் பொறியியலாளர், வைத்தியர் மிகச் சிறிய அளவினராக காணப்படுகின்றனர். அதாவது 0.12% சதவீதமாகும். இன்றைய காலத்தில் உயர்தர பரீட்சையில் 41% மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றவராக காணப்பட்டாலும் அவற்றில் 4.7% மாணவர்களுக்கே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. ஏனைய மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். தான் 13 வருடங்களாக கற்ற கல்விக்கு பயனில்லை என எண்ணும் அளவிற்கு மாணவர்களை கலைத்திட்டம் கொண்டு செல்கின்றது. இவர்களுக்கு மரபு வழி கல்வியே போதிக்கப்பட்டமையால் நவீன தொழில் துறையோடு போட்டியிட முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதனால் சமூகத்தில் பல பிரச்சனைகளை ணதிர்கொண்டு வருகின்றனர்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு திறமை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இவர்களின் திறமைகளுக்கு ஏற்ப இலங்கையின் கலைத்திட்டம் சீரமைக்கப்பட வேண்டும். உதாரணமாக விளையாட்டுத் துறையில் அதீத திறமை காட்டும் மாணவர்களை அத்துறையில் மாத்திரமே பங்குபெறச் செய்து எதிர்காலத்தில் அதனுடாக பயனடையக் கூடிய வகையில் அம்மாணவர்களை சிறுவயதிலிருந்து வளப்படுத்தி மாற்றியமைப்பதே சிறந்ததாகும்.

இலங்கையானது கடலால் சூழப்பட்ட தீவாகும். அதனை மையமாகக் கொண்டே கலைத்திட்டமும் அமையப் பெற்றிருக்க வேண்டும். மீன்பிடித் துறை, விவசாயத்துறை தொடர்பான திட்டங்களை ஊக்குவிப்பு செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும் வகையில் கலைத்திட்டம் அமைந்திருத்தல் வேண்டும். இவ்வாறு பல துறை சார்ந்து கவனம் செலுத்தும் போது இலங்கையில் வேலையில்லாப் பிரச்சனைகளை நீக்குவதற்கு ஓர் அடித்தளமாக அமைவதோடு நாட்டையும் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப முடியும்.

இலங்கையின் கலைத்திட்டமானது பெருந்தொகையான மாணவர்கள் மத்தியில் பல சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் வளப்பற்றாக்குறை, முகாமைத்துவமின்மை, உரிய முறையில் கல்வி வழங்கப்படாமை மற்றும் கோட்பாட்டு கல்வியின் பிரயோகம் போன்றவற்றால் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களின் தொகையானது குறைவடைந்து தற்காலத்தில் வேலையில்லா பிரச்சனைகளையும் உருவாக்கியதோடு படித்தவர்களிடம் ஆங்கிலம் பேசக் கூடிய தகமையின்மை, உலக பொது அறிவின்மை போன்ற காரணங்களால் இலங்கையின் கலைத்திட்டத்தை விமர்சனத்திற்கு உள்ளாக்கி மாணவர்களின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

நம்நாட்டு கல்வியானது பெரும்பாலும் தத்துவமாக காணப்படுவதால் மாணவர்களின் அறிவுப் பெருக்கத்திற்கும், ஊக்குவிப்புக்கும் தடையாக உள்ளது. மனனம் செய்து பரீட்சையை சித்தி அடையச் செய்வதால் புதிய விடயங்களை சிந்திக்க தவிர்க்கின்றது. உதாரணமாக சமயம், தமிழ், வரலாறு, போன்றன இடைநிலையில் கற்பிக்கப் படுவதால் பாடங்களையே மனனம் செய்யும் விடயங்களை உள்ளடக்கியிருப்பதால் வாழ்வை முன்னெடுத்துச் செல்ல மாணவர்களுக்கு முடியாமல் போகின்றது.

தற்காலத்தில் இலங்கையின் கலைத்திட்டத்தில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், வாழ்க்கைத் தேர்ச்சி, மனைப்பொருளியல் போன்ற தொழிற்சார் கற்கை நெறிகள் சேர்க்கப்பட்டிருப்பினும் அவற்றின் செயற்பாட்டுத் தன்மை குறைவாகவே காணப்படுகிறது. ஏனெனில் அவை பரீட்சையை நோக்காக கொண்டு எழுத்து வடிவிலே அதிகம் கற்பிக்கப்படுகிறது. ஆனால் செயன்முறை ரீதியில் கற்பிக்கப்படுவதில்லை. இது தொழில் நிபுணர்கள் உருவாகுவதை தடுக்கின்றது. உதாரணமாக, தொழிற்சார் கல்வி 12மூ ஆகவும் நூல்கல்வி 16மூ ஆகவும் காணப்படுகிறது.

இலங்கையின் கல்வி முறையானது அனைவருக்கும் கல்வி என அமையப் பெற்றாலும் பிரதேசத்தில் வர்க்க வேறுபாட்டைக் கொண்டு வருகின்றது. நகரங்களில் கல்வியின் தரம் உயர்த்தப்பட்டு மாணவர்கள் கற்கும் தரம் அதிகமாக இருப்பதால் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பும் அதிகமாக இடம்பெறுகின்றது. ஆனால் கிராமப்புறங்களில் மாணவர்கள் கல்வி கற்கும் திறன் குறைவாகவே காணப்படுகிறது.

கிராமத்தில் இருக்கும் மாணவர்கள் இடைவிலகுவதற்கும், சிறுவயதில் வேலைகள் செல்வதற்கும், இளவயது திருமணம் செய்யவும் காரணமாக அமைகின்றது. இது தற்காலத்தில் கிராமங்களில் பாரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. ஆகவே இவ்வாறான சிக்கல்களிலிருந்து விடுபட கலைத்திட்டங்களை உரியமுறையில் அமைத்தல் வேண்டும். எனவே நம்நாட்டில் எதிர்காலத்தில் நல்ல அறிவாற்றல் மிக்க திறன்மிக்க மாணவர்களை உருவாக்கும் வகையில் கலைத்திட்டம் அமைக்கப்பட்டு மாணர்கள் மத்தியில் எழும் வேலையில்லா பிரச்சனைகளையும் தீர்ப்பதற்குரிய வகையில் கல்வி சீரமைப்பானது கலைத்திட்டத்தில் கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறு கொண்டுவரப்படுவதால் மாத்திரமே நம்நாடானது ஏனைய நாடுகளைப் போன்று கல்வியிலும், பொருளாதாரத்திலும் முன்னேற்றம் அடைய முடியும்.

**க.ரக்ஷனா**
**2ம் வருடம் சிறப்புக்கற்கை**
**கல்வி, பிள்ளை நலத்துறை**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

## நலம்...

**30 ஆம் பக்கத் தொடர்ச்சி**

தவறாது கேட்டல் மிகவும் ஆன்மிக நன்மை பயக்கும்.

தண்ணீர் கூட அருந்தாது ஆலயத்தில் வழங்கப்படும் பானகம் (தீர்த்தம்) மட்டும் அருந்தியிருத்தல் உத்தமோத்தமமான விரதமாகும். பானகமென்பது சர்க்கரை, தேசிக்காய், இளநீர், முதலியன கலந்து தயாரிக்கப்படும் ஒரு நீராகாரம் ஆகும். பட்டினி கிடக்கும் வயிற்றினுள் வெளிப்படும் அதிக சக்திமிக்க வெப்பம், வாய்வு, பித்தம், இவற்றைத் தணித்து உடற்சமநிலையைப் பேணுவதற்கும், பசி, தாகம், இவற்றை ஓரளவு தணிக்கவும் இது உதவுகிறது.

கந்தசஷ்டி விரத நாட்களில், ஆன்மா மும்மலங்களையும் நீக்குவதற்குரிய பக்குவமான மனதுடன் நாம் இருக்க வேண்டும். உணவையும் உறக்கத்தையும் தவிர்த்து, தனித்திருந்து செய்யும் தவமே கந்தசஷ்டி விரதம். அதற்குரிய பலன் மும்மலம் நீங்கி ஆன்மா முக்தியைப் பெறுவதே ஆகும்.

இந்த ஆறு நாட்களும் பூரண உபவாசம் இருப்பது அதி உத்தமம் எனக் கருதப்படுகின்றது. மிளகுகளை விழுங்கி, பழம் மட்டும் சாப்பிட்டு, தீர்த்தம் குடித்து, இளநீர் குடித்து ஒரு நேர உணவு மட்டும் உண்டு அவரவர் தேக நிலைக்கேற்ப 'கந்தசஷ்டி' விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆறாவது நாளான கந்தசஷ்டியன்று பூரண உபவாசம் இருத்தல் வேண்டும். விரதம் ஆரம்பமான தினத்தில் ஆலயம் சென்று சங்கர்ப்பம் செய்து காப்புக் கட்டி விரதத்தைத் தொடங்கவேண்டும்.

ஒரு விரதத்தை ஆரம்பிக்கும் முன் இன்ன நோக்கத்துக்காக இன்னமுறைப்படி இவ்வளவு காலம் அனுஷ்டிக்கப் போகின்றேன் என்று உறுதியாகத் தீர்மானம் செய்து (சங்கல்பம் செய்து) ஆலயம் சென்று சங்கல்ப்பபூர்வமாக அர்ச்சினை வழிபாடுகள் செய்து ஆரம்பிக்க வேண்டும். குறிப்பிட்ட கால எல்லை வரை மாற்றமின்றி அவ்விரதத்தை ஒழுங்காகக்கைக் கொள்ளவேண்டும்.

உரிய காலம் முடிந்ததும் விரத உத்தியாபனம் செய்து விரதத்தை நிறுத்த வேண்டும். விரதத்துக்குரிய மூர்த்தியின் வடிவத்தைப் பொன் பிரதிமையாகச் செய்து வீட்டிலே வைத்து முறைப்படி கும்பங்கள் ஸ்தாபித்து சங்கல்ப பூர்வமாகப் புண்ணியாகவாசனம் முதலிய பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பித்து சமஸ்தோபசார பூசைகளையும் செய்துமுடித்து அன்று முழுவதும் உபவாசமாயிருத்தல் வேண்டும். மறுநாள் அதிகாலையில் நீராடி நித்திய கர்மாநுஷ்டானங்கள் செய்து மறுபடியும் அவற்றுக்குப் பூசைகள் நடத்திய பின் கும்பப் பொருட்கள் பொன் பிரதிமையும் மற்றும் தானப் பொருட்கள் யாவும் சேர்த்து வேட்டி, சால்வை, அரிசி, காய்கறி, தாம்பூலதஷிணைகள் பூசைகளைச் செய்வித்த குருவுக்கு வழங்கி முறைப்படி நான் கைக்கொண்ட இந்த விரதத்தை இன்று உத்தியாபனம் செய்து முடிக்கின்றேன். சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட படி இவ் விரதத்திற்குரிய பலன்களைத் தந்தருள வேண்டும் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும் தம்பதிபூசை, சுமங்கலி பூசை முதலியன குறித்து விரதத்துக்கு சொல்லப்பட்டிருந்தால் அவற்றையும் செய்து முடிந்த பின் மாஹேஸ்வர பூசை செய்து வீடடுப் பாரணை பண்ண வேண்டும். பாரணை காலை எட்டரை மணிக்கு முன்செய்து முடிக்க வேண்டும் என்பது விதி. சிலர் உதயத்திற்கு முன் விரதத்திற்குரிய பாரணையை முடித்துவிடுவதுண்டு. ஆனால் சூரிய உதயத்திற்கு முன் பாரணை செய்தல் விதியன்று.

உரிய நேரத்தில் பாரணை பண்ணுவதற்குத் தடைகள் ஏற்பட்டால் பாரணைக்காக சமைத்த உணவைச் சாமிப்படத்திற்கு முன்படைத்து அதனை இந்த உரிய நேரத்தில் முகர்ந்து விடுதல் போதுமானது. பின்னர் இயன்ற பொழுதில் சாப்பிடலாம்.

சமையல் தயாரிப்பதிலும் தாமதம் ஏற்படின் சாமிபடத்திற்கு முன் ஒரு சிறு பாத்திரத்தில் நீரெடுத்து வைத்து அதில் துளசியை இரண்டு அடியிலைகளுடன் கூடிய கதிராக எடுத்து அந்த நீரை உரிய காலத்தில் அருந்தி பாரணையை நிறைவு செய்யலாம். பின்னர் வசதியான போது சாப்பிடலாம்.

ஒரு விரதத்தின் முடிவில் அதாவது பாரணை நாளில் இன்னொரு விரதம் வந்தால் இந்த முறையையே கடைப்பிடிக்க வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இரண்டாவது விரதமும் , உபவாசமாக இருந்தால் முதலாவது விரத்தின் பாரணையைத் துளசி, தீர்;த்தம் அருந்தி நிறைவேற்றி விட்டு இரண்டாவது விரதத்தை முறைப்படி உபவாசமாக அனுட்டித்து அதற்கு மறுநாள் பாரணை செய்ய வேண்டும்.

பெரும்பாலும் கேதாரகௌரி நோன்பின் மறுநாள் கந்தசஷ்டி விரதாரம்பம் அல்லது கந்தசஷ்டி விரத முடிவில் அதாவது பாரணையன்று சோமவார விரதம் வருவதுண்டு, இச் சந்தர்ப்பத்தில் முதலில் நாம் பார்த்தவாறு தான் விதிமுறையைக் கைக் கொள்ள வேண்டும்.

விரத நியமனங்களை ஆரம்பத்திலேயே அளவுடன் கைக்கொள்வது நன்று கடுமையான முறையில் ஆரம்பித்து பின்னர் அரைகுறையாக நிறுத்துவது கூடாது. விரதத்தை கிரமப்படி அனுசரிக்க முடியாதவர்கள் தம்மாலியன்றளவு அனுசரிப்பதே தகுதி தம்மளவுக்கு மீறி உடலை வருத்த நேரிடின் விரதத்தில் வெறுப்பு தோன்றும் இதனால் விரத பலன் இல்லாமல் போய்விடும்.

ஆலயங்களில் ஆரம்பதினத்திலேயே தர்ப்பையணிந்து காப்புகட்டி, சங்கல்பித்து ஆறு நாளும் நோன்பிருத்தல் முறை, இறுதி நாளில் கர்ப்பை அவிழ்த்துத் தர்ப்பையுடன் சேர்த்துத் தாம்பூல தஷிணைகளுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிப்பர்.

ஏழாம் நாள் அதிகாலையில் நீராடி நித்திய கர்மாநுஷ்டானங்களை நிறைவேற்றிப் பாரணைப் ப+ஜை என்று நடைபெறும் விசேஷ பூஜையையும் கண்டு வழிபட்டபின் மாஹேஸ்வர பூசை செய்து (அடியார்களுக்கு அன்னமிட்டு) பாரணை செய்ய வேண்டும்.

இவ்விதம் கடும் விரதம் அநுஷ்டிக்க முடியாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் இரவு ஒரு பொழுது பால்பழம் அல்லது பலகாரம் உண்டு இறுதி நாள் உபவாசம் இருக்கலாம். அதுவும் முடியாவதவர்கள் முதல் ஐந்து நாட்களும் பகல் ஒரு பொழுது அன்னமும் ஆறாம் நாள் இரவு பாலப்பழம் அல்லது பலகாரமும் உண்டு விரதமிருக்கலாம்.

ஆறாம் நாள் ஷஷ்டித்திதியில் சூரசம்ஹாரம் முடிந்த அன்றிரவு முழுவதும் விழித்திருந்து முருகன் பெருமைகளையே பேசியும், வழிபட்டிருக்கமாறு பழம் நூல்கள் விதிக்கின்றன. சிவபிராணுக்குரிய சிவராத்திரியும், மஹாவிஷ்ணுக்குரிய வைகுண்ட ஏகாதசியும் போல முருகப்பெருமானுக்குரிய ஸ்கந்த சஷ்டியும் மிகவிஷேஷமான தினமாதலால் துயில் நீத்தல் (விளித்திருத்தல்) பொருத்தமானதே. ஆயினும் அனைவராலும் இது கைக்கொள்ளப்படுவதில்லை. இயன்றவர்கள் கைக்கொள்க.

விரதோயாபனத்தின் போது முருகன் ஆலயம் சென்று விரத பூர்த்தி சமயத்தில் விரதத்துக்குரிய பலன்கள் எனக்குச் சிந்திக்க வேண்டும் என்பதற்காக இந்த விசேச பூஜையை செய்கின்றேன் என்று சங்கல்பித்து விஷேஷ அபிஷேகம் பூஜை, ஷண்முகார்ச்சனை அல்லது சஹஸ்ர நாமார்ச்சனை முதலியவற்றைச் செய்வித்து காப்பு தர்ப்பை இவற்றுடன் தாம்பூலம் தஷிணை, வேட்டி, சால்வை, அரிசி, காய்கறி முதலிய தானங்களையும் சேர்த்து அர்ச்சகரிடம் சமர்ப்பித்து மகிழ்ச்சியுடன் இந்தத் தானத்தை வழங்குகின்றேன். சாஸ்திரங்களில் சொல்லியிருப்பது போல இந்த விரதபலன்கள் எனக்கு உண்டாகட்டும் என்று பிரார்த்திக்க வேண்டும்.

விரதங்கள் மக்களின் மன வலிமை அதிகமாகவும், நம்பிக்கைகளின் அடிப்படையில், அவர்களது வாழ்வில் வளமும், நலமும், மிகுவதற்கு பயன்படுகின்றன. ஏனைய விரத அனுட்டானங்களைப் போலன்றி கந்த சஷ்டி விரதானுஷ்டானத்தை ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் கடைப்பிடிக்கின்றார்கள். மாணவர்கள் படிப்பிற்கும், குடும்பப் பெண்கள் குடும்ப நன்மைக்கும், கன்னிப் பெண்கள் நல்ல கணவனை வாழக்கைத் துணையாக அடைய வேண்டியும், குழந்தை இல்லாதோர் குழந்தை வேண்டியும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

இங்கு குறிப்பிட்ட விதத்தில் வீட்டிலே பூசைகளைச் செய்வதும் பொன் பிரதிமைகளைச் செய்து தானம் கொடுப்பதும் யாவருக்கும் எளிதானதன்று இதனால் உத்தியாயனமே செய்யாது விடுவதும் முறையன்று எனவே உரிய காலத்தில் ஆலயம் சென்று விரத உத்தியாபனம் செய்யப் போகின்றேன் என்று குருமுகமாகச் சங்கல்பம் செய்து இயன்ற வகையில் விசேஷ அபிஷேகம் பூசை அர்ச்சனை வழிபாடுகளைச் செய்து குருவுக்கு தாம்பூல தட்சணைகளும், தானங்களும் இயன்றவரையும் வழங்கி விரதத்தை மனநிறைவோடு முடித்து இறைவனிடம் சமர்ப்பிக்கலாம்.

உடலின் சுமை குறைவதால் மிகக் கடுமையான நோய்களைக்கூட உண்ணாநோன்பின் மூலம் நீக்கி விட முடியும். உண்ணா நோன்பின் போது, உடலில் நோயுற்ற திசுக்களே முதலில் கரைக்கப்படுகின்றன. கொழுத்த உடல் கொண்ட மனிதன், உண்ணா நோன்பின்போது மறைமுகமாக உண்டு கொண்டே இருக்கிறார். உள்ளுருப்புக்களை வீணாகச் சுற்றியிருந்த பகுதிகள் கரைக்கப்படுகின்றன. உண்ணா நோன்பு மிகவும் எளிய, ஆனால் சிறப்பான ஊட்டச்செயலாக அமைந்து, உடலைக் காக்கிறது.

உண்ணா நோன்பின்போது, உடல் ஓய்வடைகிறது. எல்லா உறுப்புக்களுக்கும் அமைதி கிட்டுகிறது. நரம்புகள் தளர்ச்சி நீங்குகின்றன. வெப்பநிலை மாறி தண்மை ஏற்படுகிறது. கழிவுப்பொருள்களை உடலிலிருந்து வெளியேற்ற இயற்கை கொள்ளும் வழிகளில் உண்ணா நோன்பு மிகவும் சிறந்ததாக அமைந்திருக்கிறது. இரத்தமும் நிணநீரும் தூய்மையாக்கப்படுகின்றன. காம உணர்வு தணிகிறது. தூய நினைவுகள் வளர்கின்றன. மனதின் சக்தி, பகுத்தறிகின்ற ஆய்வுநிலை, நினைவு கூறும் சக்தி, இணைத்துக்காணும் அறிவு அதிகமாகின்றது. உண்ணா நோன்பினால் இளையவரும், முதியவரும் புதுப்பிக்கப்படுகிறார்கள். உடல் உறுப்புக்களில் மாத்திரம் அல்லாமல், உடலியல் செயல்களிலும் இது நிகழ்கிறது.

கந்தசஷ்டி விரதத்தின் பலன்

குடும்பத்தில் துன்பங்கள் நீங்கவும், வேலை வாய்ப்பு, கடன் தொல்லை நீங்கவும் இவ்விரதத்தை கடைப்பிடிப்பது நன்று.'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்பது பழமொழி. இதன் உண்மையான பொருள், சஷ்டியில் விரதமிருந்தால் கருப்பையில் குழந்தை உண்டாகும் என்பதாகும். எனவே குழந்தை வரம் வேண்டும் பெண்களுக்கு இது மிகவும் சிறந்த விரதமாகும். சுருக்கமாகச் சொன்னால் இவ் விரதத்தை கடைப்பிடித்து விரும்பிய பலனைப் பெறலாம்.

எந்த வினையானாலும், கந்தன் அருள் இருந்தால் வந்த வழி ஓடும் என்பது ஆன்றோர் வாக்கு. அந்த ஆறுமுகனுக்கு உரிய விரதங்களுள் மிக முக்கியமானதாகச் சொல்லப்படுவது, கந்தசஷ்டி விரதம்






மட்டக்களப்பு வின்சன்ட் மகளீர் உயர்தர தேசிய பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா திருமதி. கரனிகா சுபாகரன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம அதிதி கிழக்கு பல்கலைகழக வேந்தர் வைத்திய காலாநிதி வி.விவேகானந்தராஜா, கௌரவ அதிதி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்த், மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சிரேஷ்ட எந்திரி திருமதி து.தர்மரெட்ணம் உள்ளிட்டோர் வரவேற்கப்படுவதையும், மாணவிகளின் நடன நிகழ்வையும், மாணவிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதையும் காணலாம்.

படம்: க.விஜயரெத்தினம்





உணவு தயாரித்தல் தொடர்பான டெலண்ட் ஹப்ஸ் வருடாந்த கண்காட்சி டெலண்ட் ஹப்ஸின் பணிப்பாளரும் பயிற்றுவிப்பாளருமான பஸ்லியா றமீஸ் தலைமையில் மாளிகாவத்தை செரண்டிப் வரவேற்பு மண்டபத்தில் சிறப்பாக இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக றொபின் டேனியல் மற்றும் திருமதி பியற்றிஸ் டேனியல் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

படம்: ஏ.எஸ்.எம்.ஜாவித்





வினைத்திறன் மிகுந்த சேவைகள் மக்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும் என்கிற நோக்கத்துடன் கிழக்கு மாகாண ஆளணி மற்றும் பயிற்சி அலுவலகம், உள்ளூராட்சி திணைக்களம் ஆகிய இணைந்து மக்கள் பிரதிநிதிகளுக்கு தமிழ் மொழி மூலம் நிபுணத்துவம் பெற்ற வளவாளர்களை கொண்டு விசேட பயிற்சி செயலமர்வுகளை நடாத்தி வருகின்றன.இச்செயல் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களுக்கான செயலமர்வு நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றபோது, வளவாளர் உரையாற்றுவதையும் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

படம்: கல்முனை நிருபர்






மஸ்கெலியா சிங்கர் பிளஸ் காட்சியறையில் கடந்த வாரம் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டி, தையல் கலை பயிற்சி மற்றும் சமையலியல் வகுப்புகள் நடைபெற்றது.இந்நிகழ்வில் மஸ்கெலியா பிரதேசத்தை அண்மித்த பாலர் பாடசாலை மாணவர்கள்,ஆசிரியர்கள் மற்றும் இல்லத்தரசிகள் கலந்து கொண்டனர்.வர்ணம் தீட்டும் போட்டியில் பங்குபற்றிய பாலர் பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் பரிசில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

படம்: மஸ்கெலியா நிருபர்






'மகாவலி அபிவிருத்தித் திட்டமும் முல்லைத்தீவு நில ஆக்கிரமிப்பும்' என்ற தலைப்பில் கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமைப் பேரவையின் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடலின் காட்சிகள்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 11.11.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.